கனடா-காரை கலாச்சார மன்றம்
வழங்கும்

# காரைவசந்தம்

## 2015



கனடா காரை
CKCA
கலாச்சார மன்றம்
WORKING TOGETHER IS SUCCESS

டிசம்பர் 19, 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பல் வைத்தியர்

## அவசர பல் சிகிச்சை நிலையம்



- கிளிப் போடுதல்
- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- பற்களை வெண்மையாக்கல்
- கட்டுப்பற்கள்
- ஞானப்பல் எடுத்தல்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்
- **Implant**

## OPEN 7 DAYS A WEEK

பிரபல பல் வைத்திய நிபுணர்

## DR. ஆதிகணபதி சோமசுந்தரம்

## 416-750-9969

**2191 Warden Ave.(Warden & Sheppard)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா - காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர் வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும் கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மை நகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னரகம்!

பாரிற் புகழொடு பஞ்சரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை –கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

ஆக்கம்: தமிழருவி ஆசிரியமணி த. சிவகுமாரன்
இசையமைப்பு
குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி
வயலின்: அளவையூர் இசைஞானபூபதி கேசவமூர்த்தி
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா-காரை கலாச்சார மன்ற நிர்வாக சபை (2015-2016)



**அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து:**
கனகசபை குமரேசன் (உப-தலைவர்), சுதாகரன் பஞ்சாட்சரக் குருக்கள் (விழா இணைப்பாளர்), திருவாதர் தர்மராஜா (கணக்காய்வாளர்), ரவி ரவீந்திரன்(தலைவர்), திருக்குமரன் கணேசன் (போசகர் சபை உறுப்பினர்)

**நிற்பவர்கள் இடமிருந்து:**
மலர் குழந்தைவேலு (உதவிப் பொருளாளர்), மயூரன் வேலாயுதம்பிள்ளை (உறுப்பினர்), தவராசா சங்கரப்பிள்ளை (உதவிச் செயலாளர்), அரியரத்தினம் மனோகரன் (உறுப்பினர்), பாலசுப்பிரமணியம் கணேசன்(செயலாளர்), நடனசபேசன் பொன்னம்பலம் (உறுப்பினர்), தர்மலிங்கம் பரமசிவம் (பொருளாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## நிர்வாக சபை
## (2015 - 2016)

| | |
|---|---|
| *தலைவர்:* | திரு. இரவி இரவீந்திரன் |
| *உப-தலைவர்:* | திரு. கனகசபை குமரேசன் |
| *செயலாளர்:* | திரு. கணேசன் பாலசுப்பிரமணியம் (பாலன்) |
| *உதவிச் செயலாளர்:* | திரு. சங்கரப்பிள்ளை தவராஜா |
| *பொருளாளர்:* | திரு. தர்மலிங்கம் பரமசிவம் (துரை) |
| *உதவிப் பொருளாளர்:* | திருமதி மலர் குழந்தைவேலு |
| *நிர்வாக சபை உறுப்பினர்கள்:* | திரு. திருநாவுக்கரசு பேரின்பராஜா |
| | திரு. பொன்னம்பலம் நடனசபேசன் (ரூபன்) |
| | திரு. வேலாயுதம்பிள்ளை மயூரன் |
| | திரு. அரியரத்தினம் மனோகரன் |
| | திரு. தம்பையா உருத்திரலிங்கம் |
| *கணக்காய்வாளர்:* | திரு. திருவாதர் தர்மராஜா |
| *திட்டமிடல் போசகர் சபை* | |
| *உறுப்பினர்கள்:* | திரு. மயில்வாகனம் சிவராஜா(இணைப்பாளர்) |
| | திரு. கணேசன் திருக்குமரன் |
| | திரு. கந்தப்பு அம்பலவாணர் |
| *இணையத்தளப் பராமரிப்பு:* | மயூரன் வேலாயுதம்பிள்ளை |
| | ஜெயச்சந்திரன் தம்பிராசா |
| *இணையத்தள தொழில்நுட்ப* | |
| *ஆலோசனை:* | திரு. குலசேகரம் விமலராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-காரை கலாச்சார மன்றம்
# வழங்கும்
# காரை வசந்தம் 2015

## நிகழ்ச்சி நிரல்

***தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசியப் பண்:*** காரைச் சிறார்கள்

***மங்கள விளக்கேற்றல்***

***அக வணக்கம்***

***வரவேற்புரை:*** கனடா–காரை கலாச்சார மன்றத்தின்
உப–தலைவர் திரு.கனகசபை குமரேசன்

***"காரை வசந்தம் 2015" சிறப்பு மலரின் வெளியீடு***

***லயபிருந்தம்:*** லயபிருந்தம் நுண்கலைக் கூடம் அதிபர் மிருதங்க கலாவித்தகர்
ரதிருபன் பரஞ்சோதி அவர்களின் உருவாக்கம்

***பட்டிமன்றம்:*** காரைச் சிறார்கள்
குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படக் காரணம்
"பெற்றோர்களா? பிள்ளைகளா?"

***கண்ணன் நடனம்:*** அபிநயாலயா நாட்டியாலயம் அதிபர்
ஸ்ரீமதி ரஜனி சக்திருபன் அவர்களின் உருவாக்கம்

***நகைச்சுவை***

***நாடகம் - பாகம் 1:*** விகடம் குழுவினர் வழங்கும் "நாங்களும் கனடாதான்"

***இசை நிகழ்ச்சி:*** திரையிசை அதிர்வு

***பிரதம விருந்தினரின் உரை:*** மருத்துவ கலாநிதி சிவதேவி பாலசிங்கம்

***நடனம்: திண்ணபுரத்தான் தரிசனம்*** பால விமல நர்த்தனாலயம் அதிபர்
ஸ்ரீமதி சித்ரா தர்மலிங்கம் அவர்களின் உருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-காரை கலாச்சார மன்றம்
# வழங்கும்
# காரை வசந்தம் 2015

## நிகழ்ச்சி நிரல்

***நடன நாடகம்***

***"கனடா To காரைநகர்"*** வானொலி தொலைக்காட்சிக் கலைஞர்
***P.S.***சுதாகரன் அவர்களின் உருவாக்கம்

***நடனம்:*** ***Prima Dance School, Video Footage: KK Electronics.***

***கனடா-காரை கலாச்சார மன்றத் தலைவரின் உரை:*** திரு. இரவி இரவீந்திரன்

***Fusion நடனம்:*** கலை அருவி கலைக் கல்லூரி அதிபர்
ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் அவர்களின் உருவாக்கம்

***இசை நிகழ்ச்சி:*** திரையிசை அதிர்வு

***விருது வழங்கல்:*** தமிழ்மொழித்திறன், பண்ணிசை ஆகிய போட்டிகளில்
வெற்றிபெற்றவர்களிற்கும் பங்குபற்றியவர்களிற்கும்

***நகைச்சுவை நாடகம்***

***- பாகம் 2:*** விகடம் குழுவினர் வழங்கும் "நாங்களும் கனடாதான்"

***நன்றியுரை:*** கனடா–காரை கலாச்சார மன்றத்தின் செயலாளர்
கணேசன் பாலசுப்பிரமணியம்

***இசை நிகழ்ச்சி:*** திரையிசை அதிர்வு

***நிகழ்ச்சிகளின் நிறைவு***

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு**

***CMR & TVI*** **கலைஞர்**

***P.S.*** **சுதாகரன்**

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

***CMR*** **செய்தி வாசிப்பாளர்**

**திருமதி. கிருஸ்ணவேணி சோதிநாதன்**

***CTR*** **அறிவிப்பாளர்** ***T.S.*****கோகுலன்**

**சங்கரப்பிள்ளை தவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OLYMPIC
WOOD WORK INC.

www.olympicwoodwork.com

Kitchen is a best place where we satisfy our needs,olympic wood work forward-thinking kitchen design specialized in creating extraordinary kitchen and bath spaces. As a division of Design , our talented team, with background in both architecture and interior design, is experienced in designing kitchens and bathrooms that not only suit your lifestyle, but also based on a holistic approach to design.

- Kitchen
- Closets
- Cabinets
- Counter Tops
- Store Fixtures
- Windows / Doors



## OLYMPIC WOOD WORK INC.

1680 midland road, Unit 14, Scarborough, ON. M1P 3C4
Tel : 416-483- 3700 , Cell : 416-827-9290
Fax: 416-752-2700




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழுவின் எண்ண வாசல்

காரை மாதா பெற்றெடுத்த அன்பு நெஞ்சங்களே!

16வது இதழ் விரித்து மலர்ந்த "காரை வசந்தம் 2015" மலரின் வாசனையை நுகர்ந்து அனுபவிக்கும் பொருட்டு அதனை உங்கள் கைகளில் சமர்ப்பிப்பதில் மலர்க்குழு பெரு மகிழ்வடைகின்றது.

"காரை வசந்தம்" கலை விழா 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொழுது குறைந்த பக்கங்களுடன் சிறிய அளவில் வெளிவர ஆரம்பித்த இச்சஞ்சிகையானது இன்று அதிக பக்கங்களுடன் பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி தொடர்ச்சியாக 15ஆண்டுகளைக் கடந்து 16வது ஆண்டாகவும் வெளிவருகிறது என்றால் அத்தகைய சாதனையில் பங்கு கொண்டு பெருமையடைபவர்கள் காரைநகர் மக்களும் ஆக்கங்களை வழங்கிவருகின்ற படைப்பாளிகளும் நல்லுள்ளம் படைத்த விளம்பரதாரர்களும் ஆவர்.

தனித்துவம் மிக்க காரை மண்ணின் கலை, கலாசாரம், கல்வி, சமயம், மொழி, இலக்கியம், சம்பிரதாயம், தொழில் போன்றனவற்றினை பிரகாசித்து ஒளிர்விட வைக்கின்ற இலக்கில் "காரை வசந்தம்" சஞ்சிகையின் பங்களிப்பு என்பது வரலாற்றுப் பதிவாக அமையக் கூடியது. இதையிட்டு கனடா-காரை கலாச்சார மன்றம் பெருமையடைகிறது. காலத்தால் மறைந்தவையும் மறந்தவையும் மாற்றமடைந்தவையும் இச்சஞ்சிகையில் பதிவாகி வருகின்றமை நிச்சயமாக எதிர்காலச் சந்ததிக்கு பயனுடையதாக அமையும் என்பது மட்டுமல்லாது அக்கிராமத்தின் மகிமையை உணரவைத்து சிந்தனை மாற்றத்தையும் எம்மத்தியில் ஏற்படுத்த வழிகோலும்.

உங்கள் கைகளில் தவழும் இம்மலர் எமது தாய் மண் சார்ந்து முக்கியமானதும் வியந்து பேருவகையடையத்தக்கதுமான பல தரவுகளையும் தகவல்களையும் தடங்களையும் உள்ளடக்கி பயனுள்ளதும் சுவையானதுமான ஆக்கங்களைக் கொண்ட கனதியான ஒரு மலராக மலர்ந்துள்ளது.

மண்ணின்மைந்தன் இளையதம்பி தயானந்தா ஆராய்ந்து எழுதிய 'எழுதி மறைந்தவர்களும் நாம் எழுத மறந்தவர்களும், என்ற ஆக்கம் இம்மலரிற்கு சிறப்புச் சேர்க்கின்றது. அதேபோன்று கலாபூசணம் பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் எழுதிய 'காரை மண்ணில் மலர்ந்த மலர்கள்' என்ற ஆக்கம், காரைநகர் தந்த மகான் அருணாசல உபாத்தியாயர் குறித்து பேராசிரியர் சேரன் எழுதிய கட்டுரை என்பன இம்மலரின் சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளன. எம்மண்ணின் மூத்த படைப்பாளிகளுடன் ஆற்றல் மிக்க பல இளம் படைப்பாளிகள் இதனூடாக அறிமுகமாகின்றனர். அவர்களது தரமான ஆக்கங்கள் உங்களிற்கு நல்விருந்தாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்க அருந்தொண்டாற்றிய அமரர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள், ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர் அமரர் சிவசரவணபவன்(சிற்பி) ஆகியோர் நினைவுகூரப்பட்டுள்ளனர். பல தேடல்களையும் தொடர்பாடல்களையும் மேற்கொண்டு உணர்வோடு செயலாற்றி தமது படைப்புக்களை வழங்கி உதவிய அனைவரையும், வாழ்த்துச் செய்திகள் வழங்கி ஊக்கிவித்த அமைப்புக்களையும், என்றும்போல விளம்பரங்களைத் தந்து ஆதரவளித்த வர்த்தக நல்லுள்ளங்களையும் மனதாரப் பாராட்டி நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம். இம்மலரின் வெளியீட்டில் ஆலோசனைகள் வழங்கியும் ஆக்கங்களை பெறுவதற்கு உதவியும் இன்னும் பல்லாற்றாலும் உதவி ஊக்கிவித்த அனைத்து உள்ளங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து நன்றி கூறுகின்றோம்.

குறுகிய கால அவகாசத்தில் அச்சுப் பதிவினை அழகுறச் செய்து தந்த பிறைற்சண் அச்சக நிறுவன அதிபர் ரவி அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுளோம்.

மலர்க்குழு
கனக சிவகுமாரன், இரவி இரவீந்திரன்(மன்றத் தலைவர்)
மா.கனகசபாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை வசந்தம் - 2015 பொலிவுபெற்று விளங்க வாழ்த்துகிறோம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா – காரை கலாச்சார மன்றம்
Canada - Karai Cultural Association
A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492
PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912
E-mail: karainagar@gmail.com www.karainagar.com



## தலைவர் தகவுரை

கனடாவாழ் காரை மக்களால் கால் நூற்றாண்டுக்கு முன்னர் (1989) ஆரம்பிக்கப்பட்ட எமது அமைப்பானது 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் " காரை வசந்தம்" விழாவை சிறப்பாக நடாத்தி வருகின்றது.

இவ்விழாவின் சிறப்பிற்கும் வெற்றிக்கும் அயராது உழைத்த மன்ற உறுப்பினர்கள், விழாக்குழு உறுப்பினர்கள், அனுசரனையாளர்கள், மற்றும் விளம்பரம் தந்துதவியவர்கள் அனைவருக்கும் கனடா காரை கலாச்சார மன்றம் சார்பாக எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்மிடையே பல்வேறு கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ஓர் சமூகமாக ஒற்றுமையாக விழித்தெழுவோம். தனித் தனிக் குழுக்களாக அன்றி ஓர் சமூகமாக முடிவெடுப்போம்.

மன்றம் என்ற அச்சாணியின் ஜனநாயகப் பண்புகளைப் பேணுவோம்.உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், கருத்துக்களையும் எமக்கு அறியத்தந்து இம் மன்றம் மேன்மேலும் வளர்ச்சியடைய ஊக்குவித்து உதவும் வண்ணம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

நன்றி,

**இராசதுரை இரவீந்திரன்**
தலைவர்
கனடா காரை கலாச்சார மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா–காரை கலாச்சார மன்றத்தின் அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக கலந்து கொண்டு காரைநகர் மக்களை பெருமைப்படுத்திய

மருத்துவகலாநிதி.திருமதி.சிவதேவி பாலசிங்கம்
MBBS, LRCP MRCP(UK), DCH(UK), MCFP(Canada)

காரைநகரில் பிறந்து கொழும்பில் வளர்ந்து கல்வி கற்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவாகி 1980 ஆம் ஆண்டு மருத்துவகலாநிதி பட்டத்தைப்பெற்றார். சிலகாலம் கொழும்பில் மருத்துவராகச் சேவையாற்றிக்கொண்டிருந்தபோது பெற்றோரினால் திருமணம் நிச்சயிக்கப்பட்டு சாவகச்சேரியைச் சேர்ந்த மருத்துவகலாநிதி வேலுப்பிள்ளை பாலசிங்கம் அவர்களை மணம் முடித்தார். அவர் தற்பொழுது வெளிநாட்டில் இருப்பதனால் இவ்விழாவிற்கு வருகை தரமுடியவில்லை.

பின்னர் 1983 இல் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக இந்த மருத்துவத் தம்பதிகள் பிருத்தானியாவிற்கு புலம்பெயர நேரிட்டது. அங்கு குழந்தை மருத்துவத்துறையில் பட்ட மேற்படிப்பை முடித்த மருத்துவகலாநிதி. திருமதி. சிவதேவி பாலசிங்கம் அவர்கள் குழந்தை மருத்துவ நிபுணத்துவப்பிரிவில் பணியாற்றினார். பொது சுகாதார மருத்துவராகப் பணியாற்றிய பின்னர் 2010 ஆம் ஆண்டில் கனடாவின் சஸ்கெச்சுவான் மாகாணத்திற்கு குடிபெயர்ந்து அங்கே பொது சுகாதார மருத்துவராகப் பணியாற்றினார். கடந்த ஆண்டில் ரொறன்ரோ பெரும்பாகத்திற்கு குடிபெயர்ந்து மிசிசாகா நகரத்தில் தனது சொந்த குடும்பநல மருத்துவ நிலையத்தை ஆரம்பித்து சேவையாற்றி வருகின்றார்.

இவருக்கு இரண்டு பிள்ளைகள். மகன் மருத்துவகலாநிதி சதீஸ்குமார் பாலசிங்கம் சுவீடன் நாட்டில் மருத்துவராக சேவையாற்றி வருகின்றார். மகள் செல்வி சங்கீதா பாலசிங்கம் இந்தியாவில் மருத்துவத்துறையில் கல்வி கற்றுவருகின்றார். அத்துடன் கலையார்வம் கொண்ட செல்வி சங்கீதா பரதநாட்டியத்தை முறைப்படி பயின்று அரங்கேற்றம் கண்ட பின் நிதிசேர் நடன நிகழ்வுகளை நடத்தி தொண்டு நிறுவனங்களுக்கு உதவிவருகின்றார். இவர் 2006 ஆம் ஆண்டில் பிருத்தானியாவில் Wandsworth நகரசபையினால் வழங்கப்படும் 'Best Young Performer of the Year Award' உட்பட இளம் நடனக் கலைஞருக்கான பல விருதுகளைப் பெற்றமையும் மகாராணியாரின் நிதிசேர் நிகழ்விற்குத் தெரிவு செய்யப்பட்ட இளம்கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது செல்வி சங்கீதா தனது மருத்துவ பட்டப்படிப்புடன் இந்தியாவில் பரதக்கலாஞ்சலி நடனக்கல்லூரி அதிபர் நாட்டியாச்சாரியார் ஸ்ரீ V.P. தனஞ்சயன் ஸ்ரீமதி சாந்தா தனஞ்சயன் தம்பதிகளிடம் மேலதிக பயிற்சிகளைப் பெற்று வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமத விருந்தினர்
# மருத்துவ கலாநிதி
# திருமதி சிவதேவி பாலசிங்கம்

MBBS, LRCP MRCP(UK), DCH(UK), MCFP(Canada)

## அவர்கள்
## வழங்கிய வாழ்த்துச் செய்தி



கனடாவில் வாழுகின்ற காரைநகர் மக்கள் வருடாந்தம் கொண்டாடி மகிழ்ந்து வருகின்ற காரைக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் 'காரை வசந்தம்' கலை விழா குறித்து அறியும்போது நான் பேருவகை அடைகின்றேன். பிறந்த மண்ணை மறவாது அம்மண்ணின் உறவுகளிற்கு கனடா-காரை கலாச்சார மன்றம் தொடர்ந்து வழங்கிவருகின்ற உதவிகள் குறித்து அறியும்போதும் மகிழ்ச்சியாகவுள்ளது என்பதுடன் இதற்காக கடினமாக உழைத்து வருகின்ற மன்ற உறுப்பினர்களின் விடா முயற்சியினைப் பாராட்டுகின்றேன். இவர்கள் பிரதி பலனை எதிர்பாராது ஒன்று கூடி கூட்டுமுயற்சியின் அடிப்படையில் கடந்த 26 ஆண்டுகளாக பிறந்த மண்ணின் மக்களுக்கு பெரும் உதவிகளை வழங்கி தமது வரலாற்றுக் கடமைகளை நிறைவு செய்து வருகின்றமையையிட்டும் இங்குள்ள இளம் சிறார்களை பல துறைகளிலும் ஊக்கிவித்து அவர்களையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதையிட்டும் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது மனமார்ந்த ஆசிகளையும் நல் வாழ்த்துக்களையும் மன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதுடன் 16வது ஆண்டாக நடைபெறும் 'காரை வசந்தம்' கலை விழாவும் வெளியிடப்படவுள்ள மலரும் சிறப்புற்று விளங்கவும் மன்றம் உறவுகளிற்கான சேவையில் தொடர்ந்து ஈடுபடவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவதேவி பாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா - காரை கலாச்சார மன்றம்

## Canada - Karai Cultural Association

A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492
PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912
E-mail: karainagar@gmail.com www.karainagar.com

## செயலாளரின் செயல் மனத்திலிருந்து ......



உறவுகளே வணக்கம்,

மார்கழித் திங்களில் காரை வசந்தம் காண வந்திருக்கும் உங்கள் அனைவரையும் காரை வசந்த மலரினூடாக அன்போடு வரவேற்கின்றேன்!

கண்டங்கள் தாண்டி, கடல்கள் தாண்டி, நம்பிக்கையை மட்டும் விதைத்து, விடியலுக்காய் தவம் கிடக்கும் மக்கள் கூட்டமே நாங்கள். காரைநகர் என்னும் எம் வேர் நிலம் தாண்டிப், பனி வயல் காட்டில் எம் எதிர்காலத்தைப் பதியம் இட்டு, நம்பிக்கையோடு நடக்கின்ற தமிழர் நாம்.

எம் ஊரை விட்டு உலகத் திசையெங்கும் அகதி அடையாளம் கொண்டு அலைந்தோம். இன்றும் அலைகின்றோம். வரட்சியான வாழ்க்கை என்றாலும், எம் தாயக நினைவோடு நிமிர்கின்றோம். எம் ஊரின் நினைவோடு அதன் உயர்வுக்காய், கனடா – காரை கலாச்சார மன்றம் அமைத்து கடந்த 26 ஆண்டுகளாய் உழைக்கின்றோம்.

ஊருக்காக, அங்கு வாழும் மக்களுக்காக உதவ வேண்டும் என, உழைக்கும் எம்மவர் உழைப்பில்தான் எமது மன்றம் வளர்கிறது. மக்களுக்கான கடமையிலிருந்து எமது மன்றம் எப்போதும் மாறாது.

ஊரில் வாழும் மக்கள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் அதே வேளையில், புலம்பெயர்ந்து வாழும் எங்களின் குழந்தைகளின் வாழ்விலும் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். குடும்பத்தில் அன்பானவனே சமூகத்திற்காகச் சிந்திப்பான். சமூகம் பற்றிய கவலை கொண்டவனே ஊர் மீது பற்றாயிருப்பான். ஊரை நேசிக்கும் உறவுகள்தான் தாயகத்தின் மீதும் உயிராய் இருப்பார்கள். அவ்வாறான தமிழராய் எமது குழந்தைகளை வளர்த்தெடுப்போம். தமிழர் என்ற அடையாளமே அவர்களின் இருப்பை வலிமைப்படுத்தும். காரைநகர் என்னும் வேரைக் காக்கும் விழுதுகளாய் எமது பிள்ளைகளை வளர்த்தெடுப்போம். விழுதுகளின் வலிமையில் வேரைக் காப்போம்.

கனடாவில் வாழும் எமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் காத்திரமாகக் கட்டியெழுப்புவோம். மொழியே எமது அடையாளம். அந்த அடையாளத்தைத் தவற விட்டோமானால், மேற்கிந்தியத் தீவுகளில், தென் அமெரிக்காவில் வாழுகின்ற அடையாளம் தொலைத்த தமிழராய் எமது குழந்தைகளும் ஆகிவிடக் கூடும்.

எமது

ஊரின் காற்றை.....
கடற்கரையை.....
வயல்வெளியை.....
எம் வரவுக்காய் காத்திருக்கும் பனைமரத் தோப்புகளை.....
எம்மைத் தாலாட்டி உறங்க வைத்த தமிழை.....
விடியலுக்காய் உதிர்ந்த உறவுகளின் கதைகளை.......

அவர்களுக்கு எடுத்துக் கூறுவோம். என் தந்தையர் நாடு, என் தாயின் மொழி, நீண்ட பண்பாட்டு வரலாற்றின் தொடர்ச்சி நான் என பெருமைப்படும் வகையில் அடுத்த எம் தலைமுறையை வளர்த்தெடுப்போம். இனிவரும் காலங்களில் இம்மன்றத்தை அவர்களிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் தலைமையேற்று நடத்த வழிகாட்ட வேண்டும்.

நன்றி.

பாலசுப்பிரமணியம் கணேசன் (பாலன்)
செயலாளர்
**12.15.2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா – காரை கலாச்சார மன்றம்
Canada - Karai Cultural Association
A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492
PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912
E-mail: karainagar@gmail.com www.karainagar.com



## பொருளாளரின் எண்ணவோட்டம்

காரை வசந்தம் 2015வது இதழுடன் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எமது மன்றமானது காரைநகர் மக்களின் கலை, கலாச்சாரத்தை கட்டிக்காத்து வளர்த்து வருகின்றது. கனடாவில் உள்ள அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கனடாவில் உள்ள ஒரே ஒரு மன்றம் கனடா காரை கலாச்சார மன்றமேயாகும். இதற்கு அமைவாக அனைத்து கனடா வாழ் காரைநகர் மக்களும் எமது மன்றத்திற்கு தொடர்ச்சியான ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம். எமது மன்றம் காரைநகரிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிற்கும் வைத்தியசாலைக்கும் தொடர்ச்சியான உதவிகளை வழங்கி வருவது மட்டுமன்றி கனடாவில் வாழும் காரைச் சிறார்களையும் முதியவர்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டிலும் ஈடுபடவுள்ளது என்பதனைப் பெருமையுடன் தெரியப்படுத்துகின்றோம்.

“அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்ற பழமொழிக்கு அமைவாக நாம் பல குழுக்களாகப் பிரிந்து செயற்படாமல் ஒரு மன்றத்தின் தலைமையின் கீழ் அனைத்து காரைநகர் மக்களும் கனடாவில் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு”

**தர்மா பரமசிவம்**
பொருளாளர், கனடா-காரை கலாச்சார மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் அபிவிருத்திச் சபை

புதிய வீதி (சிவன் கோவில் வீதி) காரைநகர், இலங்கை

**KARAINAGAR DEVELOPMENT SOCIETY**

New Road (Sivan kovil Veethy) Karainagar, Sri Lanka

Regd No : KR/AGA/SS/NGO/2006/02 Tel : 021 221 1757 E-Mali : kas20131@gmail.com



**போஷகர்**
திரு.தி.பரமேஸ்வரன்

**தலைவர்**
திரு.ப.விக்கினேஸ்வரன்

**உப தலைவர்**
திரு.மு.சு.வேலாயுதபிள்ளை

**செயலாளர்**
திரு.இ.திருப்புகலூர்சிங்கம்

**உபசெயலாளர்**
திரு.கை.நாகராஜா

**பொருளாளர்**
திரு.க.பாலச்சந்திரன்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**
திரு.வே.சபாலிங்கம்
திரு.ந.பாரதி
திரு.இ.சிவசுப்பிரமணியம்
Dr.சு.நடராசா
திரு.இ.ஜெயராமன்
திரு.சி.கபிலன்
திரு.மு.பரந்தில்லைராசா
திரு.நா.பாலகிருஸ்ணன்
திரு.சி.குமாரசேகரன்
திரு.வே.முருகமூர்த்தி

**உள்ளகக் கணக்காய்வாளர்**
திரு.சு.அகிலன்


## வாழ்த்துச் செய்தி



கனடா - காரை கலாச்சார மன்றம் வருடந்தோறும் நடாத்தும் ‘காரை வசந்தம்’ நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் எமது உறவுகள் தங்களுக்குள் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவதுடன் பிறந்த மண்ணையும் நேசித்து அதன் மேம்பாட்டிற்காக தம்மாலான பங்களிப்பினையும் பற்றிச் சிந்திக்கும் நல்ல நாளாக இந்நாள் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் தங்களது பங்களிப்பு தாயகத்தில் பல வளர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் தங்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுகிறேன்.

என்னால் புதிய நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

15வது ‘காரை வசந்தம்’ விழா ஒற்றுமையுடன் அதிக மக்களின் பங்களிப்புடன் சிறப்பாக நடந்தேறவும் காரை வசந்தம் - 2015 மலர் நல்ல மணம் வீசவும் காரைநகர் அபிவிருத்திச் சபையின் சார்பில் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கிறேன்

30-11-2015

ப.விக்னேஸ்வரன்
தலைவர், காரை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Karai Welfare Society(UK)
காரை நலன் புரிச்சங்கம்(UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

கனடா காரை கலாச்சார மன்றம்,
கனடா.
16/12/2015.

## "வசந்தம் வீச வாழ்த்துக்கள்"

புலம்பெயர் காரை மன்றங்களில் 25 ஆண்டுகளிற்கு மேலாக எம் மக்களிற்கு அளப்பெரிய சேவைகளை ஆற்றிவரும் எமது சகோதர மன்றமான கனடா காரை கலாச்சார மன்றம் வரும் 19/12/2015 முன்னெடுக்கும் வருடாந்த விழாவான 'காரை வசந்தம்' 2015 இற்கு எமது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் பிரித்தானியா வாழ் காரைமக்கள் சார்பிலும், எமது நிர்வாகத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனிவரும் காலங்களிலும் மென்மேலும் வளர்ச்சிபெற்று கனடா வாழ் எம்மக்களுக்கும் எமது ஊரிற்கும் உங்கள் மன்றம் பெரும் சேவையாற்றும் என்பதில் ஐயமில்லை. இன்றும்போல் நாம் என்றென்றும் இணைந்து சேவையாற்றவும், தங்கள் வசந்தம் விழா என்றும்போல் நறுமணம் வீசவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நன்றி,
காரை நலன்புரிச்சங்கம்

President: Mr S .Konesalingam 07944232014
Secretary: Mr P Sivanantharasa 07737121187
Treasurer: Mr B Kajendran 07951993073



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக் கல்லூரி

# SRI CHITHAMPARESHWARAR ARTS COLLEGE

காரைமத்தி. காரைநகர்.

பதிவு இலக்கம் - வடமா/கஅ/பண்/யாழ்/காரை/2015/01

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக்கல்லூரி
காரை மத்தி, காரைநகர்
பதிவு இல.வடமா/கஅ/பண்/யாழ்/காரை/2015/01
12.12.2014

தலைவர்/செயலாளர்

கனடா காரை கலாசார மன்றம்,

கனடா,

மதிப்பிற்குரிய கனடா வாழ் உறவுகளே!

தங்களது கலாசார மன்றத்தினால் வருடாவருடம் காரை வசந்தம் விழாவானது வெகுவிமர்சையாக முன்னெடுக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அவ்விழாவானது இவ்வருடம் சிறப்பாக நடைபெறுவதற்கும் அவ்விழாவில் நடைபெறும் கலைநிகழ்வுகள் மற்றும் கலாசார தடங்கள் என்பன சிறப்பாக நடைபெறுவதற்கும் எல்லாம் வல்ல சிதம்பரேஸ்வரப் பெருமானையும், மணற்காடு முத்துமாரி அம்மனையும் வேண்டி நிற்பதோடு எமது ஸ்ரீசிதம்பரேஸ்வரர் கலைக்கல்லூரி சார்பாகவும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சார்பாகவும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தக் கொள்கின்றோம்.

நன்றி

T.KIRISHANTHAN
Administrator -
- of Sri Chithampareswarar Arts College

இங்ஙனம்

நிர்வாகம்

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர்

கலைக்கல்லூரி

உபசெயலாளர்

பொருளாளர்

தலைவர்

செயலாளர்


பொருளாளர்

கிராம சேவையாளர் ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகருக்கு பெரும் புகழ் சேர்த்த சிவஸ்ரீ அமரர் வைத்தீஸ்வரக் குருக்கள்



சைவமும் தமிழும் தளைத்தோங்க இறுதி மூச்சுவரை தொண்டாற்றிய மூதறிஞர் சிவத்தமிழ் வித்தகர் பண்டிதர் தத்துவகலாநிதி அமரர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் காரைநகரும், ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுகின்ற காரைநகர்ச் சிவன் கோயிலும் உலகில் பெயர்பெற்று விளங்க அளவற்ற தொண்டாற்றியவர். உயர்ந்த பக்தியும் நிறைந்த புலமையும் ஒழுக்க சீலமும் மிக்க குருக்கள் அவர்கள் பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களை பதிப்பித்து வெளியிட்டதுடன் பல நூல்களை தொகுத்தும் வெளியிட்டவர். இவர் பதிப்பித்த நூல்களுள் 'ஈழத்துச் சிதம்பர புராணம்' மதிப்பும் பெறுமதியும் மிக்க முதன்மை நூலாக விளங்குகிறது. யோகர் சுவாமிகளின் ஆசியுடன் காரைநகர் மணி-வாசகர் சபையினை 1940ஆம் ஆண்டு தோற்றுவித்ததுடன் அதன் வளர்ச்சியில் 75ஆண்டுகளாக அயராது உழைத்தவர். இச்சபையூடாக ஈழத்திலும் தென்னிந்தியாவிலுமுள்ள சைவ அறிஞர்களைக்கொண்டு திருவாசகத்தின் பெருமையை உணரவைத்து அனைவரையும் இன்புறச்செய்தவர். அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிற்கு பெருமையும் புகழும் சேர்த்த 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற விருதினை வழங்கி சிறப்புச் செய்தவர். இவர் தம் வாழ்நாளில் சேகரித்து வைத்திருந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் வியாவில் ஐயனார் கோயிலடியில் அமைந்துள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூல் நியைத்தில் வைக்கப்பட்டுள்ளமை பெரும் பயனுடையதாகவுள்ளது. இவரது சேவையைப் பாராட்டி யாழ் பல்கலைக்கழகம் 'தத்துவ கலாநிதி' என்ற விருதையும் இலங்கை கம்பன் கழகம் 'மூதறிஞர்' என்ற விருதையும் கனடா சைவ சித்தாந்த மன்றம் 'சிவத்தமிழ் வித்தகர்' என்ற விருதையும் வழங்கி மதிப்பளித்திருந்தன.

குருக்கள் அவர்கள் தமது 99வது வயதில் அண்மையில் இறைபதம் அடைந்தபோது காரைநகர், யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, பிரித்தானியா, சுவிற்சலாந்து ஆகிய இடங்களிலெல்லாம் அஞ்சலிக் கூட்டங்கள் வைத்து அன்னாரது அளப்பரிய பணிகள் நினைவு கூரப்பட்டிருந்தன. குருக்கள் அவர்களது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சிவகாமி சமேத நடேசப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

கனடா-காரை கலாச்சார மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகருக்கு பெருமை சேர்த்த ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர்

# அமரர் சி. சிவசரவணபவன் (சிற்பி)



ஈழத்தின் மூத்த முன்னணி எழுத்தாளரான சி.சிவசரவணபவன் அவர்கள் அண்மையில் சுன்னாகம் கந்தரோடையில் காலமானார். 1933ல் காரைநகரில் பிறந்த இவர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரி ஆகியவற்றின் புகழ் பூத்த அதிபராக விளங்கியவர்.

சிற்பி என்ற புனை பெயரோடு எழுத்துத் துறையில் ஈடுபட்ட இவர் ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர். சிறுகதையாசிரியர் நாவலாசிரியர் சஞ்சிகையாசிரியர் எனப் பல தளங்களிலும் செயற்பட்டவர். பலரை இலக்கியத் துறைக்குள் ஈடுபடுத்தியவர். 1958இல் வெளிவர ஆரம்பித்த பிரபல சஞ்சிகையான 'கலைச்செல்வி' மற்றும் 'இந்து சாதனம்' சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர். நாவல்கள் சிறுகதைகள் என பல படைப்புக்களை ஆக்கி வெளியிட்டவர். பல முக்கியமான நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். பரிசுகள் பதக்கங்கள் விருதுகள் என பல பாராட்டுக்களையும் கௌரவங்களையும் பெற்றுக்கொண்ட சிறப்புக்குரியவர். காரைநகர் கலை கலாசாரப் பேரவை வழங்கிய 'கலைச்சுடர்' என்ற கௌரவப் பட்டத்தினையும் (2008) வடமாகாண ஆளுனர் விருதினையும் (2002) குறிப்பிடமுடியும்.

வடமாகாண அதிபர் சங்கத்தின் பொருளாளர, யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைச் செயலாளர், அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைச் செயலாளர், இலங்கை சாகித்திய மண்டல மொழிபெயர்ப்புப் பிரிவு உறுப்பினர, யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவர் என இவருடைய பொதுப் பணி ஈடுபாடு அமைந்திருந்தது.

ஈழத்துச் சிதம்பரத்தின் பிரதம சிவாச்சாரியாராக சிவப் பணியாற்றிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் பேரனே அமரர் சிவசரவணபவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


ஈழத்து தமிழ் இலக்கிய உலகின் முன்னோடி எழுத்தாளராக விளங்கி காரை மண்ணிற்குப் பெருமை சேர்த்து மறைந்த அமரர் சிவ. சரவணபவன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர நடேசப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**கனடா காரை கலாச்சார மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரும், நாடக ஆசிரியரும், இதழியலாளருமாகிய பேராசிரியர் உருத்திரமூர்த்தி சேரன் அவர்கள் கனடா வின்சர் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்துறைப் பட்டதாரியான இவர் தனது கலாநிதிப் பட்டத்தை ரொறன்ரோ யோர்க் பல்கலைக் கழகத்தில் பெற்றார். பல சமூகவிஞ்ஞான அரசியல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பேராசிரியர் சேரன் அவர்கள் இலங்கையில் சுதந்திர ஊடக இயக்கத்தை நிறுவியவர்களில் ஒருவராவார். கனடா ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் வருடாந்த தமிழ்மொழி கல்வி மாநாட்டை உருவாக்கியவர்களில் ஒருவருமாவர். ABC வெளியீட்டகத்தினால் பிருத்தானியாவில் வெளியிடப்பட்ட இவரின் ஆங்கில மொழியாக்கத்திலான "In the Time of Burning." என்ற கவிதை நூல் கருத்துச் சுதந்திரத்திற்கான 2014 ஆம் ஆண்டின் PEN விருதினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# காலனித்துவ எதிர்ப்பாகக் கல்வி: அருணாசலம் உபாத்தியாயரின் கதை

கவிஞர் பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி, வின்சர் பல்கலைக்கழகம், கனடா

ஆங்கிலக் காலனித்துவ காலத்தில் விடாப்பிடியாகத் தமிழ்க் கல்வியையும் தமிழ் மக்களின் அடையாளங்களையும் சுயநிர்ணயத்தையும் பேணுவதற்காகப் போராடியதன் மூலம் காலனித்துவ எதிர்ப்பாளர்களாக மிளிர்ந்தவர்கள் பலரை நாம் இன்று பெரிதும் மறந்து விட்டோம். காலனித்துவம் எங்களது அரசியல், புவியியல், மொழி அடையாளங்களை மட்டுமல்ல பண்பாட்டு, கல்வியியல் அடையாளங்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சிதைத்தது.

போர் முடிந்த பிற்பாடு சிங்கள பௌத்த மேலாதிக்கம் புதிய காலனித்துவ சக்திகளின் உதவியோடு தீவிரமாகத் தமிழ் மக்களின் இருப்பின் வேர்களுக்கு வெந்நீர் ஊற்றும் வேலையைச் செய்து வரும் இவ்வேளையில், நமது முன்னோர் சிலர் எத்தகைய நெருக்கடியான நிலையிலும் நமது கல்விச் சுயநிர்ணயம், தனித்துவம் போன்றவற்றிற்காகப் போராடினர்கள் என்பதை நினைவு கொள்வது, இன்றைய சூழலில் நெருக்கடிகளையும் மீறி எவ்வாறு சாதுரியமாகவும் நீண்டகால நோக்கோடும் நாம் பணிபுரியலாம் என்பதை எமக்கு உணர்த்தும். கல்விச் சுயநிர்ணய உரிமையைப் பேணிப் பாதுகாக்கப் போராடிய வரலாறே யாழ்ப்பாணக் கல்வி மரபின் முக்கியமான கூறாகும்.

அந்தவகையில் காரைநகர்ப் பெரியார் ச. அருணாசலம் உபாத்தியாயரையும் அவர்களின் இணையற்ற கல்விப் பணிகளையும் பற்றி 1971ல் வெளியான முக்கியமான நூலொன்றைக் கனடா சைவ சித்தாந்த மன்றம் ஜூலை மாதம்(2015) மீள வெளியிட்டுள்ளது. வல்வைச் சிவகுரு வித்தியாசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஐயர் அவர்களால் தொகுக்கப்பட்டது இந்த நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலம் உபாத்தியாயர் (1864-1920) ஆங்கில மிஷனரிக் கல்வியைப் பெற்றவர். எனினும் கிறித்தவராக மதம் மாற மறுத்த படியால் எவ்வித சான்றிதழ்களும் இன்றி வெளியேறினார். ஆங்கில, அமெரிக்க கல்விப் பண்பாட்டு மேலாதிக்கமும் ஏகாதிபத்தியமும் கோலோச்சிய அந்தக்காலத்தில் கிறித்தவர்களாக மாறாவிட்டால் எவருமே அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக வரமுடியாது என்ற நிலை நிலவியது. ஆங்கிலக் காலனித்துவ அரசாங்கத்தின் இறுக்கமான கொள்கை அது.

இதனை எதிர்த்துப் போராட அருணாசலம் உபாத்தியாயர் கண்ட உபாயம் என்னவெனில், தமிழ்ப் பாடசாலைகளை நிறுவுவது மட்டுமன்றி காலனித்துவ அரசாங்கத்தில் தங்கியிராத ஓர் ஆசிரியர் கலாசாலையையும் நிறுவுவதுமாகும். காரைநகரின் குட்டிப்புலம் சுப்பிரமணிய வித்தியாசாலையையும்(1885), வியாவில் சைவ வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளையும் இப்போது காரைநகர் இந்துக் கல்லூரி என வழங்கப்படும் பாடசாலையையும் (1889) அவர் நிறுவினார். வேறும் பத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகளை வடபகுதி எங்கும் நிறுவுவதில் அவர் பெரும் பங்கு வகித்தார்.

தமிழ்ப் பாடசாலைகளை நிறுவுவது என்பது அந்தக் காலத்தில் அசாத்தியமான துணிச்சலைக் கோரி நிற்பது. அருணாசலம் உபாத்தியாயரோடு வைத்து எண்ணத்தக்க இன்னொரு பெரியவரும் இருந்தார். அவர் தான் தேவரையாளி கா. சூரன். சூரன் அவர்கள் பாடசாலையை உருவாக்கப்பட்ட அல்லல்கள் பற்றியும் பாடசாலையை உருவாக்கியமை பற்றியும் தனது அனுபவங்களை நூலாக எழுதினார். அது ராஜசிறீகாந்தனால் பதிப்பிக்கப்பட்டு நூலாகவும் வெளி வந்துள்ளது. ஆனால், ஏனைய பலரின் முயற்சிகள் பற்றிய பதிவுகளும் ஆவணங்களும் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஆறுமுகநாவலர், 'இந்து போர்ட்' ராஜரத்தினம் ஆகியோரின் பணிகளும் முயற்சிகளும் பெருமளவுக்குத் தெரிந்தாலும் வடபுலத்தின் கல்வி மரபு, கல்விச் சுயநிர்ணயம் தொடர்பான போராட்டங்கள், இத்தகைய கல்வி மரபின் அரசியல் முக்கியத்துவம், குறைபாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய விரிவான புரிதலும் தகவல்களும் எமக்கு வேண்டும்.

தனது வாழ்நாள் இலட்சியமாக அருணாசலம் உபாத்தியார் அவர்கள் வரித்துக் கொண்டது, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை உருவாக்குவதாகும். இது ஒரு முன்னோடி முயற்சி. அவர் காரைநகரில் நிறுவிய முதல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயில்வோருக்கு இலவசமாக உறைவிடம், உணவு வழங்கப்பட்டது. எனினும் மிஷனரிமாரின் கடும் எதிர்ப்பாலும் காலனித்துவ அரசின் எதிர்ப்பாலும் தமிழ் ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டது. பின்பு கீரிமலையில் ஒரு கலாசாலையை நிறுவினார். அதற்கும் அரசு அனுமதி வழங்கவில்லை. முயற்சியைக் கைவிடாது 1915ல் மூன்றாம் முறையாகவும் வண்ணார்பண்ணையில் நாவலர் பாடசாலையில் நிறுவினார். சுன்னாகம் குமாரசாமிப் புலவர் போன்ற அறிஞர்கள் அங்கே பணியாற்றினர். எனினும் அரசு அதற்கும் அனுமதி வழங்காமல் நிறுத்திவிட்டது. பின்னர் கோப்பாயில் இயங்கி வந்த அரசினரின் கலாசாலையில் ஒரு பகுதியாகச் செயல்பட அனுமதி பெறப்பட்டது. இது சுருக்கமான வரலாறு.

தன்னுடைய சொத்துக்கள், நிலம் எல்லாவற்றையும் விற்றும் ஈடு வைத்துமே இத்தகைய பணிகளை அருணாசலம் உபாத்தியாயர் ஆற்றினார். ஆசிரியர் கலாசாலைக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஊர் ஊராக நடந்து திரிந்தார். புரவலரிடம் பணம் பெறுவதற்காகக் காரைநகரிலிருந்து கொழும்பு வரை நடந்து சென்றதாக அவருடைய மகன் சிவபாதம் குறிப்பிடுகிறார்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, அருணாசலம் உபாத்தியாயரைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:

"பிள்ளைகளைத் தேடுவதற்கு மகான் அருணாசலம் நாய்படாப் பாடுபட்டார். என்னிற் கூட ஒரு கண் வைத்தவர் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். யாழ்ப்பாணம் முழுவதும் திரிந்தார். வடமாகாணம் எங்கும் அலைந்தார். மட்டக்களப்புக்கும் ஓடினார்".

ஆங்கில மோகமும் காலனித்துவ அரசின் வேலை வாய்ப்புக்களைப் பெரிதென மதிக்கும் மனோபாவமும் மதமாற்றம் ஏற்படுத்தி வந்த பாரிய தாக்கங்களும் மேலோங்கியிருந்த சூழலில் தமிழ்க் கல்விக்கும் தமிழாசிரியர் கல்விக்கும் மாணவர்களைச் சேர்ப்பதென்பது எவ்வளவு கடினம் என்பது சொல்லாமலே விளங்கக் கூடியதுதான். எனினும், அருணாசலம் உபாத்தியாயர் தனது முயற்சியைத் தளர விட்டாரில்லை.

1920ல் அவர் காலமான பிற்பாடு உதவி செய்த தொகை மட்டுமே அந்தக் காலத்தில் இருபத்தையாயிரம் ரூபா. அதற்கு முன்பு அருணாசலம் உபாத்தியாயர் வழங்கிய தொகை இன்னும் பல மடங்கு அதிகம். அருணாசலம் உபாத்தியாயர் காலமாகி ஐம்பது ஆண்டுகளின் பின்பும் கடன்தொல்லை நீங்கியபாடில்லை என்று நூலில் உள்ள தன்னுடைய கட்டுரையில் எழுதுகிறார் அவருடைய மகன் சிவபாதம்.

அருணாசலம் உபாத்தியார் காலமான பின்னர் தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் ஒரு முக்கியமான மாற்றம் எற்பட்டது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்னும் மிகவும் முற்போக்கான இளைஞர் அணியொன்று தோற்றம் பெற்றது. இலங்கையின் வரலாற்றிலேயே சமத்துவம், விடுதலை, அனைவருக்கும் கல்வி, போன்ற உன்னத இலட்சியங்களோடு எழுந்த வாலிபர் காங்கிரஸில் அருணாசலம் உபாத்தியாயரின் சிந்தனைகளை ஒத்தவர்களும் கல்விக்காகக் கிறித்தவர்களாக மாறினாலும் சுதந்திரம், சமத்துவம், முற்போக்கு விழுமியங்களை உயர்த்திப் பிடித்த பல இளைஞர்களும் ஒன்றிணைந்தனர். முற்போக்கான ஈழத் தமிழ்த் தேசியவாதத்தின் சிறப்பான ஊற்றுக்கண் என இதனை நாம் கொண்டாட முடியும். இத்தகைய போக்கின் ஆழமான தொடர்ச்சிதான் அரசியலிலும் அறிவிலும் விடுதலைப் போராட்டத்திலும் எமக்கு அவசியமானது.

எங்களுக்கு இப்போது தேர்தல் காலம். தேசியம், சுய நிர்ணயம், தாயகம் என்று எல்லாத் தமிழ்க் கட்சிக்காரரும் அலறத் தொடங்கி விட்டார்கள். தேசிய சுயநிர்ணயத்தின் முக்கியமான மையங்களில் ஒன்று எமக்கான தனித்துவமான கல்விச் சுயநிர்ணயமும் கல்விக் கோட்பாடுகளும் கல்வி நிறுவனங்களுமாகும்.


இதனை எமது அரசியலாளர்கள் இன்னும் உணரவில்லை. பல ஆண்டுகளாக நடந்த போரும் நமது கல்வி விழுமியங்களையும் நிறுவனங்களையும் சீர்குலைத்துள்ளது. எமது கல்விக்கான சுயநிர்ணயத்தையும் இலங்கை அரசே வைத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டங்களையும் அதுவே சிங்கள மொழியில் எழுதுகிறது. பின்னர் அத்திட்டங்கள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படுகின்றன. பாட நூல்களும் அவ்வாறே.

இந்தச் சூழலில் அருணாசலம் உபாத்தியாயரின் வாழ்விலிருந்து நாங்கள் பாடம் படிக்க முடியும். எம்மிடம் குறிப்பாகப் புலம் பெயர்ந்து வாழ்கிறவர்கள் எவ்வித அரசியல்வாதிகளையும் நம்பாமல் நமக்கான கல்வி நிறுவனங்களையும், கற்றல் கூடங்களையும் களத்திலும் புலத்திலும் சாமர்த்தியமாகவும் சாதுரியமாகவும் உருவாக்குவதும் ஏற்கெனவே இருப்பவற்றைத் திட்டமிட்ட முறையில் பேணுவதும் எங்கள் கல்விச் சுயநிர்ணயத்துக்கு அவசியம். இத்தகைய நடவடிக்கைகள் வடக்கு, கிழக்குப் பகுதி எங்கணும் பிரதேச, மதச், சாதியப் பாகுபாடுகளின்றி முன்னெடுக்கப்பட வேண்டும். அதுதான் அருணாசலம் உபாத்தியாருக்கு அவருடைய ஊரவரும் உற்றவரும் தமிழ் மக்களும் செய்யும் உயரிய நன்றிக் கடனாக அமையும்.






அருணாசல உபாத்தியாயரின் பேரன்களான திரு. சிவானந்தரத்தினம், பேராசிரியர் பரமசிவம் ஆகியோருடன் நூலை மறுபதிப்புச் செய்து வெளியிட்ட கனடா சைவ சித்தாந்த மன்ற தலைவர் சிவநெறிச் செல்வர் தி. விசுவலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தா பொருளாதாரத்தில் இளமாணிப் பட்டத்தை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பெற்றவர். பூவரசங்குளம், யாழ்ற்ரன் கல்லூரி, காரை. இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பொருளியல் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இதழியல் துறையில் டிப்ளோமாப் பட்டம் பெற்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை பகுதி நேர விரிவுரையாளராகவும் யாழ் பல்கலைக் கழகத்தில் இதழியல் துறை ஆரம்பிக்கப்பட்டபோது ஆரம்பகட்ட விரிவுரையாளராகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றியிருந்தார். 1993இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்தில் இணைந்து 11 ஆண்டுகள் அங்கு பணியாற்றி அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், கட்டுப்பாட்டாளர் எனப் பரிணமித்து இன்று சர்வதேச வானொலியாகிய இலண்டன் தமிழோசை வானொலியின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்ற உயர்நிலையைப் பெற்று இவரது வளம் மிக்க கம்பீரமான குரல் சர்வதேசமெங்கும் ஒலிக்க வழிகோலியது. ஐரோப்பிய தொலைக்காட்சியான வெக்டோனின் தமிழ்ப் பிரிவு பொறுப்பாளராக செயற்பட்டவர். இலங்கையில் வெளிவந்த 'வியூகம்', 'இருக்கிறம்" ஆகிய இதழ்களின் பிரதம ஆசிரியர். 'வானலைகளின் வரிகள்' என்ற தனது நேர்காணல்களின் தொகுப்பு நூலை வெளியிட்டவர். கல்வியாளர், ஒலிபரப்பாளர், ஊடகவியலாளர், எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர் என பன்முகத் திறமைகளைப் பெற்று காரை மண்ணுக்கு பெருமை சேர்த்து வரும் தயானந்தா காரை மண்சார்ந்த பணிகளில் அக்கறையுடன் செயற்படுபவர். சிறந்த வைத்தியப் பணிமூலம் 'அப்போதிக்கரி' இளையதம்பி என காரைநகர் மக்களால் நன்கறியப்பட்டு அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்த அமரர் இளையதம்பி இராஜேஸ்வரி தம்பதிகளின புதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எழுதி மறைந்தவர்களும், நாம் எழுத மறந்தவர்களும் என் மண்ணின் பத்திரிகையாளர்கள் குறித்த ஒரு சிறு குறிப்பு

இளையதம்பி தயானந்தா

எங்கள் காரைநகர் மண்ணையும் அதற்குப் பெருமை சேர்த்த பத்திரிகையாளர்களையும் முடியுமானவரை என்னளவில் பதிவு செய்யும் முயற்சி இது. எல்லோரையும் போல, எனக்குள்ளும் இருக்கும் "மறதி" என்ற எம் இனத்தின் தேசிய நோய்க்குள் சிக்கிப் போய், இங்கு எழுதாது விட்ட அனைத்து மூத்த பத்திரிகையாளர்களும் இந்தச் சின்னவனை மன்னிக்க வேண்டும். மறதி சில சந்தர்ப்பங்களில் பலம், பல சந்தர்ப்பங்களில் அதுவே பலகீனம். எமது நேற்றைய துன்பங்களை மறதியால் புறம்தள்ளிப் போவது பலம். அதேவேளை நேற்றைய எம் உன்னதமான இருப்பையும், அதை அர்த்தப்படுத்திய மனிதர்களையும் கால ஓட்டத்தில் மறந்துவிடுவது பலவீனம். எம்மையும் எம் சமூகத்தையும், அது பின்தள்ளி விடுகிறது. எமது நாளைகளை அதுவே அர்த்தமற்றதும் ஆக்குகிறது. அர்த்தமற்றுவிடக் கூடிய அவற்றை அர்த்தப்படுத்த நான் எடுக்கும் சிறு முயற்சி இது.

என் தாய்க் கிராமத்தின் கடந்த காலங்களை, ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்க்கிறேன். இலங்கையின் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் பத்து சதுர மைலுக்குள் அடங்கிப் போகிற ஒரு சின்னஞ் சிறு தீவு அது. சில ஆயிரம் பேர் குடிவாழ்ந்த அந்த மண்ணில், எத்தனை மாமனிதர்கள் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தார்கள் என எண்ணிப் பார்க்கிறேன். தான் சட்டப்படி அளித்த மரண தண்டனைத் தீர்ப்பால், தனக்குள் எழுந்த மன உளைச்சலில் உயிரை விட்ட ஒரு உச்ச நீதிமன்ற நீதவானாக நடராஜா என்ற மனிதனைப் பார்க்கிறோம். அமெரிக்க மிஷனரிமாரிடம், தான் பெற்ற சின்னதொரு தொலைநோக்கியின் துணையோடு, 1910 இல் தோன்றிய வால் நட்சத்திரம், அதன்பின்னர் எப்போது தோன்றும் என்ற தன் ஆய்வுகளைச் சொல்லி, 1922 இல் பிரித்தானிய F.R.A.S சங்கத்தின் மகிமை அங்கத்துவத்தைப் பெற்ற முதலாம் இலங்கையனான அல்லின் ஏபிரகாம் என்ற அம்பலவாணர் அங்குதான் பிறக்கிறார். அடுத்து "ஆறுமுக நாவலருக்குப் பிறகு அவர் தான்" என்று போற்றப்படுகிற ஒரு மாமனிதர். அவர் கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிகளில் இருந்து சைவர்களைத் தப்புவிப்பதற்காக தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்த "காரைதீவு அருணாசல உபாத்தியாயர்" என்ற மகான். அவரின் பிறப்பிடம் எனது மண்தான். கல்விச்சாலைகளையும் சைவ உபாத்தியாயர்களையும் தோற்றுவித்த அருணாசலம் அவர்களைப் போல, இன்னுமொரு கல்வியாளனை இந்த மண் மலேசியாவிற்கு தந்தது. மலேசியாவில் பிறந்து, மலேசியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த Dato Sir E.E.C துரைசிங்கம் (Dato Sir Ernest Emmanuel Clough Thuraisingham 1898-1979) என்ற காரைநகருக்குப் பெருமை சேர்த்த இன்னொரு மனிதர். இவர்களைத் தாண்டி தென் இலங்கைச் சிங்கள நகரங்களைத் தங்கள் பட்டப் பெயர்களாகக் கொண்ட, எண்ணற்ற வர்த்தக முயற்சியாளர்கள் வரிசை கட்டுகிறார்கள். அவர்களைத் தாண்டி, கல்விமான்கள், வள்ளல்கள், நீதவான்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், பேராசான்கள், எழுத்தாளர்கள், ஆன்மீக வாதிகள் எனப் பல்வேறு துறைகளில் புகழ்பூத்தவர்களாக எம்மவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் என் மண்ணின் மூத்த பத்திரிகையாளர்களை இங்கே தேட முயல்கிறேன்.

அன்றைய காரைநகரில் எல்லாருக்கும் பெயர் இருந்ததோ இல்லையோ, பட்டப் பெயர்கள் மட்டும் இருந்தன. பட்டம், பரவணி, கோத்திரம், பரம்பரை என்று ஏதோ ஒன்றுதான் ஒருவனை, அவன் யார்? என்று அறிமுகம் செய்தது. அந்த வகையில் ஊடகம் சார்ந்து மூன்றுபேர் நினைவில் வருகிறார்கள். ஒருவர் "பேப்பர்" சாமியார், அடுத்து "ரைம்ஸ்" சங்கரப்பிள்ளை, மூன்றாவதாக "ரேடியோ சிலோன்" தியாகர். இந்த மூவரில் "ரைம்ஸ்" சங்கரப்பிள்ளை ஒரு ஊடகவியலாளர் அல்ல. அவர் ஒரு பிரபல வர்த்தகர். இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சிறைச்சாலைகளுக்கான கொந்தராத்துக்களைச் செய்தவர். அதனால் இவர் "கொந்தராத்துச்" சங்கரப்பிள்ளை என்றும் அழைக்கப்பட்டவர். மகா தேசாதிபதியாக இருந்த ஒலிவர் குணதிலக்கவின் நண்பர். மகாராணி இரண்டாம் எலிசபெத் இலங்கை வந்தபோது, மகாராணி அழைத்த விருந்தினர்களில் ஒருவராக இருந்து கௌரவம் பெற்றவர். இவர் 1947 ஆம் ஆண்டு Times of Ceylon ஸ்தாபனத்தை வாங்கினார். அன்று கொழும்பில் இருந்த மிகப் பெரிய கட்டடமாக Times of Ceylon இருந்தது. அதிக செலவில் பிரித்தானியரிடம் இருந்து ரைம்ஸ் கட்டடத்தை வாங்கினார் என்பதால், அவரின் பெயரோடு "ரைம்ஸ்" ஒட்டிக் கொண்டது.


அடுத்து "பேப்பர் சாமியார்". இவரை காரைதீவின் ஒரு சன்னியாசியாயும், ஞானியாராயும் மட்டுமே எல்லோரும் அறிந்து வைத்திருக்கிறோம். கோவளம் என்ற குறிச்சி அவரின் இருப்பாலும், நட்டுப்பாளி அவரது ஆசிரமத்தாலும் பெருமை பெற்றது. 1901 ஆம் ஆண்டு வீரவாகு வேலுப்பிள்ளையின் மகனாகப் பிறந்த அவரின் இயற்பெயர் முருகேசு. காரைநகரிலும், சுளிபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்றவர் இவர். தனது முப்பதாவது வயதில் இவர் சன்னியாசம் பூண்டவர். 1975 ஆம் ஆண்டு வைகாசி பரணியில் தான் சமாதி அடையும் வரை, அவரது ஆசிரமம் அறிவாலயமாகவும், ஆற்றுப் படுத்தும் ஒன்றாகவும் விளங்கியது. காரைநகரின் தனித்த ஒரு ஆங்கில பீடமாகவும் அந்த ஆசிரமம் இருந்தது என்றும் கூடச் சொல்லலாம். அவர் சன்னியாசம் பூண்ட முப்பது வயதுக்கு உடபட்ட காலத்திலேயே அவரது லௌகீக வாழ்வும் பத்திரிகைப் பணிகளும் அமைந்தன. இலங்கையில் தோற்றம் பெற்ற Ceylon Independent என்ற பத்திரிகையின் நிருபர் அல்லது செய்தியாளராக ஆரம்பத்தில் அவர் பணியாற்றினார். இலங்கையின் ஆரம்ப காலப் பத்திரிகைகளில் ஒன்றான Times of Ceylon பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் அவர் கடமையாற்றினார். உலக யுத்தமும் சர்வதேச அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்த அந்தக் காலங்களில், இவரது சர்வதேச அரசியல் விவகாரங்கள் அடங்கிய பல ஆங்கில ஆக்கங்கள் Hindustan Times of India உள்ளிட்ட பல அயல் நாட்டு ஊடகங்களில் வெளிவந்தன. இறுதிக் காலம் வரையிலும் உலக விவகாரங்கள் மீதான தேடல்களும் தகவல்களும் இவரை வந்தடைந்தன. Times சஞ்சிகை நிருபர்கள் ஒருமுறை இவரை ஆசிரமத்தில் சந்தித்து உரையாடி விடைபெற்றபோது, இவர் அவர்களிடம் கேட்டுக் கொண்ட ஒரே விடயம் "என்னைப் பற்றி சிலாகித்தோ, பிரஸ்தாபித்தோ எதையும் பத்திரிகையில் எழுதி விடாதீர்கள" என்பதுதான். தன்னை முன்னிறுத்தாத ஒரு மகானாக வாழ்ந்து மறைந்தவர் "பேப்பர்" சுவாமியார்.

எம் மண்ணின் பத்திரிகையாளர்களை 1971 இல் வித்வான் F.X.C. நடராஜா அவர்களால் எழுதப்பட்ட "காரைநகர் மான்மியம்" என்ற நூலில் தேடியபோது, அதன் "வகையும் தொகையும்" என்ற தொகுப்பில் சபாரத்தின ஐயர் அவர்களை மட்டுமே பத்திரிகை ஆசிரியராக அது குறிப்பிட்டிருக்கிறது. இவர் தவிர நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் என்ற வகையில் பத்துப் பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பத்திரிகை ஆசிரியராகக் குறிப்பிடப்படும் சபாரத்தின ஐயர் 1920 களில் வெளியான "கலிகால தீபம்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி இருக்கிறார். இப்பத்திரிகை குறித்த மேலதிக தகவலாக, 1927 இல் மலேசியாவில் வெளிவந்த "சாம்பசிவம் - ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்" என்ற நூலுக்கு இது 18/02/1928 இல் மதிப்புரை வழங்கியிருக்கிறது.


சாம்பசிவம்-ஞானாமிர்தம்
அல்லது
நன்னெறிக் களஞ்சியம்

(All Rights Reserved.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நூலின் மூலம் இன்னொரு பத்திரிகை மனிதன் எம் கண்களுக்குத் தெரிகிறார். “சாம்பசிவம் - ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்“ என்ற அந்த நூலின் எழுத்தாளரை “இஃது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரையம்பதி அ.நாகலிங்கம் இயற்றியது” என்று அது அறிமுகம் செய்கிறது. ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்தவர்களின் முதல் இலக்கியப் படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும், இந்தத் தமிழ்ப் புதின நூலை எழுதியவர் காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த அருணாசலம் நாகலிங்கம் அவர்கள் (1901-1979). காரைநகர் மருதடிப் பிள்ளையார் கோவிலின் திருக் குளத்தை பழுதுபார்க்க நிதி ஈட்டும் நோக்கில் இந்த நூல் எழுதப்பட்டிருந்தது. திரு. அருணாசலம் நாகலிங்கம் அவர்கள் மலேசியாவின் “தமிழ் நேசன்” பத்திரிகைக்கும், யாழ்ப்பாணம் இந்து சாசனம் பத்திரிகைக்கும் ஆக்கங்கள் அளித்து வந்த மூத்த பத்திரிகையாளர். 1962 இல் “யாழ்ப்பாணம் - மலாயா இலங்கையர் சங்கம்” வெளியிட்ட வெள்ளி விழா மலரின் இணை ஆசிரியராக அவர் செயற்பட்டவர். மலேசியாவில் கோலா பில்லா இந்து ஆலயத்தின் செயலாளராகவும். தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியவர். மலேசியாவில் இருந்து காரைநகர் திரும்பிய பின்னர், சமூக சேவகராக இருந்த நாகலிங்கம் அவர்கள், காரைநகர் சைவ மகாசபையின் செயலாளராகவும் துணைத் தலைவராகவும் செயற்பட்ட ஒரு பெரியார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.



அடுத்து 1866 இல் பிறந்து 1923 இல் மறைந்து போன சுப்பிரமணியர் அம்பலவாணர் என்ற எம்மூரின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் பற்றிச் சொல்ல வேண்டும். பத்திரிகையாளராகவோ அல்லது பத்தி எழுத்தாளரகாவோ (Columnist) அறியப்படாத அந்த மனிதரை வான சாஸ்திரவியாலாளனாக அல்லது யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதப் பேராசானாக மட்டுமே நாம் அறிந்து வைத்திருக்கிறோம். சுப்பிரமணியர் அம்பலவாணர் என்பதை விட, மத மாற்றத்தை ஏற்காத அருணாசலம் உபாத்தியாயரின் சம காலத்தில் கற்று, கல்விக்காக மதம் மாறிய அவரின் பெயரான அல்லின் ஏப்ரஹாம் என்பதே அதிகம் அறியப்பட்டது. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராக இவர் செயற்பட்டார் என்பது அதிகம் பேசப்படவில்லை. ஆங்கிலேயர்களை ஆசிரியர்களாகக் கொண்ட பத்திரிகைகளே அன்று வெளிவந்தன. முதன் முதலில் இலங்கையர்களை ஆசிரியர்களாகக் கொண்ட பத்திரிகையாயும், யாழ்ப்பாணத்தின் முதலாவது செய்திப் பத்திரிகையாயும் அறியப்படும் உதயதாரகையின் ஆசிரியராக அல்லின் ஏப்ரஹாம் இருந்தார் என்பது அதிகமானவர்களால் அறியப்படவில்லை. 1841 இல் அமெரிக்க மிஷனரிமாரால் தோற்றிவிக்கப் பட்ட இப்பத்திரிகையின் தொடக்க ஆசிரியர்களாக ஹென்றி மார்ட்டின், சேத் பேசன் ஆகியோர் செயற்பட்டனர். மார்ட்டினும் பேசனும் ஈழத் தமிழர்கள் என்பதைக் அழுத்தமாக இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவர்களை அடுத்து இப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவரும், பாவலர் சரித்திர தீபகம் என்ற முக்கிய நூலைத் தந்தவருமான ஆணல்ட் சதாசிவம்பிள்ளை அல்லது J.R.Arnold என்றறியப்பட்ட தெல்லிப்பளை அருணாசலம் சதாசிவம்பிள்ளை அவர்கள். 1896 இல் இவர் மறைந்ததை அடுத்து உதயதாரகையின் ஆசிரியராக அல்லின் ஏப்ரஹாம் 1899 வரை பணியாற்றினார். “வானாதிசயங்கள்” என்ற நூலையும், மது விலக்கை வலியுறுத்தி “மது விலக்குக் கும்மி” என்ற நூலையும் இவர் படைத்தார். இவர் ஆக்கியதாகக் கூறப்படும் கிறீஸ்தவ தேவாரங்கள் மற்றும் கீர்த்தனைகளையும், கணித மற்றும் வானியல் ஆய்வு ஆக்கக்கங்களையும் ஏனைய பத்திகளையும் நாம்தான் தேடியாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனியொரு சட்டத்தரணி பற்றிச் சொல்லவேண்டும். பிரபல சட்டத்தரணியாயும், அரசியல்வாதியாயும் அறியப்பட்ட முக்கியமான பத்திரிகையாளரான திரு. A.V.குலசிங்கம் (1890-1978) என்றறியப்படும் ஐயாத்துரை வர்ணகுலசிங்கம் குலசிங்கம் பற்றி எழுதியாக வேண்டும். அவரை சட்டத் தரணியாக மட்டுமே அதிகம் பேர் அறிந்திருக்கிறோம். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரபல முன்னணிச் சட்டத்தரணியாகவும் முடிக்குரிய சட்டத் தரணியாகவும் செயற்பட்டு புகழ் சேர்த்த அவரின் ஆங்கில புலமைத்துவமும் ஆழுமை மிக்க வாதமும் அன்றைய நாட்களில் பலராலும் சிலாகிக்கப்பட்டது. இன்றும் நினைவு கொள்ளப்படுகிறது.

இவர் காரைநகரிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்றவர். அதன்பின், தனது சட்டப் படிப்பை கொழும்பில் மேற்கொண்டார். சட்ட மாணவனாக இருந்த வேளையிலேயே Morning Star பத்திரிகைக்கும் Times of Ceylon இற்கும் எழுத ஆரம்பித்தார். 1925 இல் Ceylon Daily News இன் ஆசிரியராகப் பணியாற்றி காரை மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். Hindu Organ இதழின் ஆசிரியராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். அதேவேளை Manchester Guardian இன் சிறப்பு நிருபராகவும் செயல்பட்டவர்.

இலங்கைப் பத்திரிகைத்துறை பிதாமகர்களில் ஒருவரும் இன்றைய Lake House பத்திரிகை இல்லத்தின் ஸ்தாபகருமான D.R.விஜயவர்த்தன எழுதிய “செய்திப் பத்திரிகை ஒன்றின் பிறப்பு” (The birth of a Newspaper) என்ற ஆக்கத்தில், தன் பத்திரிகைத் துறையின் ஆரம்ப இருப்பின் தூண்களில் ஒருவராக A.V.குலசிங்கம் அவர்களைக் குறிப்பிடுகிறார். 1918 ஜனவரியில் D.R.விஜயவர்த்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட Ceylon Daily News இன் இற்றைவரையான இருப்பின் ஆரம்பத் தளத்தில் F.A.Martinus, S.J.K.Crowther, H.D.Jant, E.T. de Silva ஆகிய ஜாம்பவான்களுக்கு இணையான ஆசிரியராக A.V.குலசிங்கமும் இருந்தார் என்பது எம் மண்ணின் பெருமை. Ceylon Daily News ஆசிரியராக செயற்பட வருமாறு A.V.குலசிங்கம் அவர்களை, நான் அழைத்தபோது அவர் Ceylonese பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார் என்கிறார் விஜயவர்த்தன. இன்றைய ஏரிக்கரைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் ஆரம்ப படிகளில் என் கிராமத்து மனிதனின் தடங்களும் இருகின்றன என்பது, ஊடகத் துறையில் பயிலும் எனக்கல்ல எம் எல்லோருக்குமான பெருமை.

காரைநகர் மான்மியம் எழுதிய F.X.C.நடராஜா (1911-1997) அவர்கள் பற்றி அடுத்து இங்கே குறிப்பிட வேண்டும். இலங்கையும், தமிழ் உலகும் கண்ட மரபுவழித் தமிழ் அறிஞரான இவர், கணபதிப்பிள்ளை செல்லையா - சிவாகாமிப்பிள்ளையின் மகனாக காரைநகர் மண்ணில் பிறந்தவர். அப்புத்துரைப் பள்ளிக்கூடம், காரைநகர் களபூமி அமெரிக்கன் மிசியோன் பாடசாலை, வியாவில் ஆங்கில தமிழ் பாடசாலை, சயம்பர் பாடசாலை, விக்ரோறியா கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். ஆசிரிய பயிற்சி மாணாக்கராக 1931-1933 இல் மட்டக்களப்பு புனித அகுத்தினார் பயிற்சிப் பாடசாலையில் பயிற்றுவிக்கப்பட்டவர். பின்னர் சுவாமி விபுலானந்தரைக் குருவாகக் கொண்டு பால பண்டிதம் கற்று, 1947 -1950 இல் வித்துவான் பயிற்சியை கொழும்புப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டவர். 1929 முதல் 1952 வரை ஆசிரியப் பணி ஆற்றியவர். காரைநகர் வியாவிலில் ஆசிரியராக இருந்த அவர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். 1952 இல் அரச கரும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள் திணைக்கள உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தராக இணைந்தார். 1971 இல் அரச கரும மொழிகள் திணைக்களமொழிபெயர்ப்பு அத்தியட்சகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். தனது 26 ஆம் வயதுமுதல் எழுத ஆரம்பித்த மகாவித்வானின் அதிக ஆக்கங்களும் படைப்புக்களும் 1952 இற்கு பின்னரே வெளிவந்தன. 21 நூல்களை எழுதிய இவரின் இருநூற்றுக்கு மேற்பட்ட ஆக்கங்கள் பத்திரிகைகளிலும் மலர்களிலும் வெளி வந்துள்ளன. நாட்டாரியலில் வியக்கத்தக்க ஈடுப்பாட்டை காட்டிய இவர், இலக்கிய விமர்சனத்திலும், பாடபேத ஆய்விலும் அதிக அக்கறை காட்டியவர். மட்டக்களப்பு தமிழகத்தின் வாழ்வையும், பண்பையும் அதன் சரித்திரத்தையும் தன் படைப்புக்களால் வெளி உலகுக்கு அதிகம் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர். இவரின் “மட்டக்களப்பு மான்மியம்” என்ற நூல் சாகித்திய விருது பெற்ற ஒன்றாகும். குறிப்பிடத் தக்க இவரின் நூல்களாக எண்ணெய்ச் சிந்து, ஈழமும் தமிழும், இலங்கைச் சரித்திரம் - மூன்று பாகம், மொழிபெயர்ப்பு மரபு, ஈழத்து நாடோடிப் பாடல்கள், ஈழத்து தமிழ் நூல் வரலாறு, ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் (சொல்லதிகாரம்), தி.த.கனகசுந்தரம்பிள்ளை, போசராச பண்டிதர் சரசோதி மாலை, கண்ணகி வழக்குரை (வரம்பெறும் காதை) , நாவலர் பெருமான் வாழ்க்கைக் குறிப்புகள், ஹீமத் சுவாமி விபுலானந்தஜீ , விபுலானந்தர் மீட்சிப் பத்து, நன்னூல் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்வும் என்பன குறிப்பிடத்தக்கன. இவரது ஆரம்ப எழுத்துக்கள் மட்டக்களப்பு வித்தியாசமாசாரம் என்ற சஞ்சிகையில் வெளிவர ஆரம்பித்தன. இவரது பத்திரிகை ஆக்கங்கள் பலவும் தினகரனில் வெளிவந்தன. திரு நாதன் அவர்கள் தினகரன் ஆசிரியராக இருந்த காலத்தில் அவரின் ஊக்கத்தால் பல ஆக்கங்களை F.X.C. அவர்கள் அப் பத்திரிகைக்கு எழுதினார். தன் பெயரில் மட்டுமன்றி புலியூரான், பிரம்மா, ஆடகமணி, கலைமுத்து, செ.ந.கலையரசு, ஆடவல்லான், கூத்தபிரான் ஆகிய புனை பெயர்களிலும் அவரால் ஆக்கங்கள் எழுதப்பட்டன. இவரது மேலும் பல கட்டுரைகளை வீரகேசரி, தொண்டன், கலைச்செல்வி, தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளும் தமிழகத்தின் செந்தமிழ், தமிழ்ப் பொழில் ஆகிய சஞ்சிகைகளும் இலங்கையின் பல பருவகால இதழ்கள் மற்றும் மலர்களும் தாங்கி வந்தன. ஈழத்தில் சி.கணேசையருக்கு பின்னர் மகாவித்வான் என்றால் நினைவிற்கு வருகிற F.X.C.நடராஜா அவர்களை உலகுக்களித்த பெருமை எமது ஊருக்கு உண்டு.

இன்னுமொரு பத்திரிகையாளனை நான் இங்கு பதியாமல் போனால், காரைநகர் மக்கள் அல்ல, அவரிடம் கற்ற அன்றைய மாணவர்கள் கோபித்துக் கொள்வார்கள். மாணவர்களைக் கூட தவிர்த்துவிடலாம், இன்னலுற்ற ஒரு காலத்தில் தம் குரலாய் ஒலித்த பத்திரிகையாளனை எழுத மறந்தேன் என்று தமிழர்கள்கூடக் கோபிக்கலாம். இரண்டு பாடசாலை அதிபர்களை காரைநகர் மறப்பதில்லை. கல்விப் பணிகளைத் தாண்டி சமூகப் பணிகளில் தம்மை நிறுவியவர்கள் இவர்கள். ஒருவர் 1916 இல் பிறந்து, அதிபராய் வாழ்ந்து, அரசியல்வாதியாய் உயர்ந்து 1981 இல் அகாலமாய் எமைவிட்டுப் பிரிந்த ஆ.தியாகராஜா அவர்கள். அடுத்து ஆ.தியாகராஜா அதிபராய் இருந்த அதே காரைநகர் இந்துக் கல்லூரியின் துணை அதிபராய் சில காலமும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் துணை அதிபராயும் செயற்பட்ட அமரர் ந.சபாரட்ணம் அவர்கள். 1962 முதல் 1971 இல் ஓய்வு பெறும்வரை யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியவர்.

ஓய்வின் பின்னரான அவரின் பொது வாழ்வு அவரை ஒரு பத்திரிகையாளனாக உருவாக்கியது. யாழ்ப்பாணத்தின் யுத்தச் சூழல் நிலவிய 1980 களில் துணிச்சல் மிக்கதொரு பத்திரிகையாளனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் செயற்பட்டார். யாழ்ப்பாணத்தின் முதலாவது பிராந்தியத் தினசரியாக 1961இல் ஆரமிக்கப்பட்ட பத்திரிகை ஈழநாடு. ஈழப் போரின் ஆரம்ப காலங்களில் எரியூட்டலுக்கும், குண்டுத்தாகுதலுக்கும் இலக்காகி, எமக்கான வரலாற்று ஆவணமாக இருந்த பத்திரிகை அது. அதன் பிரதம ஆசிரியராக இன்னல் மிக்க நாளில் பணியாற்றியவர் ந. சபாரட்ணம் அவர்கள். அன்றைய செய்தித் தணிக்கைகள், அச்சுறுத்தல்கள், பொருளாதார நெருக்கடிகள் எல்லாவற்றையும் தாண்டி உண்மைகளை துணிச்சலுடன் பதிவு செய்தார். அவரின் சமூகப் பிரக்ஞையும், ஆன்மபலமும் உண்மைகளை உயர்த்திப் பிடிக்க அவருக்கு உதவியது. அவரின் அன்றைய ஆசிரிய தலையங்கங்க்கள் 80 களிலான எமது வரலாற்றுப் பதிவுகளாக அமைந்தன. அதை உணர்ந்த கலாநிதி பொ.இரகுபதி அவர்கள், 1984 ஆம் ஆண்டு எழுதப்பட்ட அவரின் ஆசிரிய தலையங்கங்களின் தேர்வு செய்யப்பட்ட தொகுப்பொன்றை ஊரடங்கு வாழ்வு என்ற பெயரில் 1985 இல் நூலாக வெளிக் கொணர்ந்தார்.

இவர் National Education, நமது நோக்கு, Corridors of Peace ஆகிய நூல்களை எழுதியுள்ளார். காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும், யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

தென்கிழக்காசிய வரலாற்றிலும், மிகக் குறிப்பாக இந்திய சரித்திரத்திலும் நிபுணத்துவம் மிக்க ஒரு சரித்திரவியலாளன் பற்றி அடுத்து இங்கு பேச வேண்டும். தென்னிந்திய அல்லது தமிழகத்தின் பிரிதானியர் ஆட்சிக்கால அரசியலை ஆய்வு செய்கிற எந்த ஒருவராலும் தவிர்த்துவிட முடியாத Politics and Nationalist Awakening in South Asia 1852 -1891 என்ற நூலைத் தந்த பேராசான் Dr.R.சுந்தரலிங்கம். இவர் சரித்திரப் பேராசானாயும் ஆய்வுப் பத்திரிகையாளனாயும் மலேசியாவில் வாழ்ந்து மறைந்த ஒரு காரை மண்ணின் பிள்ளை. அன்றைய நாட்களில் காரைநகரில் இருந்து மலேசியா சென்றவர்களில் சுப்ரமணியம் இராமனாதனும் ஒருவர். மலேசிய பஹாங் (Pahang) மானிலத்தில் வழ்ந்த இராமநாதனுக்கு 1936 இல் மகனாகப் பிறந்தார் சுந்தரலிங்கம். பத்திரிகையாளனாக அல்லது ஆய்வாளனாக இவரை பேசுவதானால், இவர் Journal of Southeast Asian History இன் பிரதம ஆசிரியராக 1967 இல் பணியாற்றியவர். அந்த இதழை மேலும் ஆழமும் விரிவுமாக்கி 1970 இல் இன்று நாம் காணும் Journal of Southeast Asian Studies ஐ தோற்றுவித்தவர். Dr.R.சுந்தரலிங்கம் என்ற எம் ஊரின் பேராசான் பற்றிய மேலும் சில குறிப்புக்கள். இவர் தன் பள்ளிப்படிப்பை பஹாங் இல் உள்ள மஃமூட் பாடசாலையிலும், கோலாலம்பூரின் Victoria Institution இலும் கற்றவர். சிங்கப்பூரில் உள்ள மலேயா பல்கலைக்கழகத்தில் சரித்திர பாடத்திலான சிறப்புப் பட்டத்தை 1956 இல் முதலாம் தரத்தில் பெற்றார். அப் பல்கலைக்கழக சரித்திர பீடத்தில்1960 இல் இணைந்து கொண்ட சுந்தரலிங்கம் தனது முதுமானிப் பட்டத்தை 1962 இல் பெற்றார். 1960 முதல்1975 வரையிலும் குறித்த இப்பல்கலைக்கழகத்திலும், 1975 முதல் அவர் ஓய்வு பெற்ற 1991 வரையிலும் மலேசியாவின் செயின்ஸ் பல்கலைக் கழகத்திலும் (University Sains Malaysia) சரித்திரப் பேராசானாகப் பணியாற்றினார். மலேயா மொழியில் மேலும் புலமை பெற அவருக்கு செய்ன்ஸ் பல்கலைக்கழகம் உதவியது. இது அவரின் கற்பித்தலுக்கும் எழுத்துக்கும் பெரும் உதவியாய் அமைந்தன. மலேய மொழியில் அவர் 1985 இலும் 1987 இலும் ஆக்கிய பல்கலைக்கழக் பாட நெறிக்கான இரண்டு சரித்திரப் பாட நூல்கள் இதற்கு சாட்சியமளிக்கின்றன. Dr.சுந்தரா என்று அனைவராலும் அறியப்பட்ட இவரின் ஆரம்ப ஆய்வுகள் சுமத்ரா குறித்து மேற்கொள்ளப் பட்டிருந்தது. ஆனாலும் இவரது முழுமையான ஈடுபாடும் தேடலும் தென்கிழக்காசிய சரித்திரத்திலேயே மையம் கொண்டிருந்தன. அதேவேளை ஆழமான தனது அறிவுத் தேடலை இந்திய சரித்திரத்தில் விரிவாக்கி இருந்தார். அதன் பலனாக தென்னிந்திய தேசியவாதம் (Nationalism in South India) என்ற ஆய்வு ஏட்டை தனது கலாநிதிப் பட்டத்திற்காக இலண்டன் பல்கலைக் கழகத்திற்கு அவர் சமர்ப்பித்தார். அவருக்கு மிகப்பெரிய அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்த நூலாக இதுவே பின்னாளில் உருப்பெற்றது. “1852 இற்கும் 1891 இற்கும் இடையே தென்னாசியாவில் எழுந்த அரசியல் தேசியவாத விழிப்புணர்வு“ (Politics and Nationalist Awakening in South Asia 1852 -1891) என்ற பெயரில் இன் நூல் 1974 இல் வெளியானது. 1998 இல் தனது 61 ஆவது வயதில் சரித்திரத் தேடலை மட்டுமே தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த அந்தக் காரை மகனான னுச. இராமநாதன் சுந்தரலிங்கம் எமக்காக விட்டுச் சென்றவற்றுள் சில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள்

1. Politics and Nationalist Awakening in South India 1852 - 1891 - (1974)
2. Indian Nationalism: An Historical Analysis - (1983)
3. Pengenalan kepeda Sejarah (Introduction to History) - 1985
4. Pensejarahan Barat (Western Historiography) - 1987



நிறைவாக ஊராரும், காரைநகரின் இன்றைய பத்திரிகை மற்றும் மின்மவியல் துறை சார்ந்தவர்களில் பலரும் அதிகம் அறியாத, எம் மண்ணில் பிறந்த ஒரு அற்புதமான படைப்பாளியை இங்கு பதிவு செய்ய வேண்டும். அந்த மனிதன் 1915 இல் பிறந்து 1973 இல் மறைந்து போனான். ஒரு சிறுகதையாளனாயும், பத்திரிகையாளனாயும் அறிமுகம் செய்யதாக வேண்டிய மறக்கமுடியாத சிருஷ்டிகர்த்தா அவர். பத்திரிகையை விடுங்கள், கதை எழுதத் தெரிந்தவன் எம் ஊரவன் என்றால் அவனை எப்படி நாங்கள் அறியாமல் போனோம்? என்று எம்மில் பலர் வியப்படையலாம். பாவம் அவன் எழுதியதெல்லாம் ஆங்கிலத்தில். ஆங்கில இலக்கியத் துறையில் உலகப் புகழ் பெற்ற எம் கிராமத்துப் படைப்பாளியின் பெயர் "அழகு சுப்பிரமணியம்". ஊரின் பாணியில் சொல்வதானால், இராமர்-அம்பலவாணர்-சுப்பிரமணியம்-அழகு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலத்தில் பி.ஏ பட்டம் பெற்று, சட்டக் கல்லூரியில் அப்புக்காத்து பட்டம் பெற்று, திருகோணமலையில் மாவட்ட நீதிபதியாக இருந்து, 1961 இல் மறைந்த சுப்ரமணியம் என்பவரின் மகன் அழகு. இலண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற அழகு, சட்டத்தை விட இலக்கியத்திலேயே அதிக ஆர்வம் கொண்டவராய் இருந்தார். "அழகு சுப்பிரமணியத்தின் சில கதைகள், ஆங்கிலேய வாழ்க்கைப் பகைப் புலத்தில், ஆங்கிலேயர்களுக்கே சவால் விடக் கூடிய முறையில் படைக்கப் பட்டுள்ளன" என்ற வார்த்தைகளைச் சொன்னது நானல்ல, The English Novel: a Short Critical History (1951) என்ற நூலின் மூலம் ஆங்கில இலக்கிய உலகு நன்கு அறிந்த ஆங்கில இலக்கிய விமர்சகரும், நாவலாசிரியருமான வால்டர் அலன் (Walter Allen).

இரண்டாம் போர்க் காலத்தில் இங்கிலாந்தில் இருந்து வெளியான 'Indian Writings' என்ற இதழின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அதன் ஆசிரியராகவும் அழகு சுப்பிரமணியம் பணியாற்றினார். 1940 இல் ஆரம்பித்த 'Indian Writings' என்ற இதழானது ஓர் இலக்கிய இதழாக அறியப்பட்டாலும், அதுவே காலனித்துவ ஆட்சிக்கு எதிரானவர்களினதும், அன்றைய தென்னாசிய மாக்சீய செயற்பாட்டாளர்களினதும் இயங்கு தளமாகவும் இருந்தது. 1945 வரை இந்த இதழ் வெளிவந்தது. இவ் இதழின் ஆசிரியர்களாய் இருந்த அழகுவின் நண்பர்களான மல்க்ராஜ் அனந்தும், இக்பால் சிங்கும் 1946 இல் வெளியிட்ட இந்தியச் சிறுகதைகளின் தொகுப்பில் அழகுவின் சிறுகதைகள் இடம் பிடித்தன. தவிரவும் "உலக இலக்கியத்தின் உன்னதச் சிறுகதைகள்" என்ற தலைப்பில் ஹைடல்பெர்க் நகரில் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பில் அழகுவின் The Mathematician என்ற சிறுகதை வெளியானது. 'Indian Writings' என்ற இதழ் தவிர்ந்த, இங்கிலாந்தின் ஆங்கில இதழ்களிலும், Illustrated Weekly இலும் இவரின் சிறுகதைகள் வெளியாகின. அழகு சுப்பிரமணியத்தின் The big girl and other stories என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பானது Universal Printers இனால் 1964 இல் வெளியிடப்பட்டது. இங்கிலாந்தில் இருந்து இலங்கை மீண்டு பின்னாட்களில் வாழ்ந்த அழகு, நோய்வாய்ப் பட்ட இறுதி நாட்களில் தனது நண்பரான ஏ.ஜே.கனகரட்னாவிடம் சொன்ன வார்த்தைகள் "எனக்குக் குழந்தைகளில்லை, "பெரிய பிள்ளை" என்ற எனது முதலாவது சிறுகதைத் தொகுதிதான் எனது மூத்த பிள்ளை, இரண்டாவது குழந்தையும், சீக்கிரம் கிடைக்க இருக்கிறது" என்பதுதான். உண்மையில் அவரது இரண்டாவது குழந்தையான Glossing Times and Other Stories என்ற சிறுகதைத் தொகுப்பானது அவர் இல்லாத காலத்தில் அவரது மனைவியான திருமதி செல்லக்கண்டு அழகுவினால் வெளியிடப்பட்டது. அவர் எழுதிய ஒரே நாவல் Mr.Moon. துரதிஸ்டவசமாக அதன் ஆங்கில மூலப் பிரதி எம்மிடம் இல்லை. அல்லது தேடவேண்டும். ஆனால் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு மல்லிகையில் வெளிவந்தது. அழகுவை இனம் கண்ட மல்லிகையை இங்கு குறிப்பிட வேண்டும். மார்ச் 1973 இல் வெளியான மல்லிகை அழகுவின் மறைவிற்கான இரங்கல் கட்டுரைகளை வெளியிட்டது. அதேபோல் மார்ச் 1971 இன் மல்லிகை, அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியத்தை இதழட்டையில் வெளியிட்டு அவரை கௌரவித்தது. அழகுவின் ஆங்கில சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பை முன்னாள் தினகரன் ஆசிரியரான மறைந்த ராஜ சிறீகாந்தனால் தொடராக மல்லிகை வெளியிட்டது. அழகு சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்புக்களை திரு.ராஜ சிறீகாந்தன் "நீதிபதியின் மகன்" என்ற பெயரில் 1999 இல் வெளியிட்டார். அழகுவின் சிறுகதைகள் ஜேர்மன், பிரென்ஸ் மற்றும் ரஷ்யன் மொழிகளிலும் பல இந்திய மொழிகளிலும் வெளியிடப்பட்டன.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு பதிவு செய்ய வேண்டும். கடந்த ஆண்டு கனடாவில் காலமான பேராசிரியர் செல்வா கனக நாயகம் அவர்கள் தனது முதுமானிப் பட்ட ஆய்விற்கு எடுத்துக் கொண்டது அழகு சுப்பிரமணியத்தின் கதைகளைத் தான்.

அழகு சுப்பிரமணியத்தின் The Mathematician என்ற சிறுகதை ஒரு விடயத்தைச் சொல்கிறது. "கிராம வாழ்வின் சிறந்த தன்மை ஒவ்வொருவரும் மனிதனாகக் கணிக்கப்படுவது. நகரத்திலோ, ஒரு சில்லில் உள்ள ஆணி போல யாரும் கவனிக்கப்படுவதில்லை" என்பதுதான். ஆணிகளே!! இதை எப்போது நாம் உணர்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Over 8 Years Experience Full Time Professional Realtor
Multi Awarded – Excellence Service.

# Find Out What Homes In Your Neighborhood Are Selling For...

## FREE SERVICE FOR EVERYONE.

You can Receive a FREE computerized printout of recent home sales & current Listings anywhere in GTA mailed to you at NO Cost or Obligation.

You don't have to talk to anyone. Just call my 24/hr hotline below and leave a message indicating which streets you would like to have information on. You will receive by mail, a computerized printout on each active property for sale or recently sold. Including the address and photo of the home, a description of key features, along with the list price.



This information will give you a good idea of what your home might sell for if you were to put it up for sale in today's market.

To Receive a Free Computerized Area Home Sales Report Call :

**1 – 800 – 884 – 0478**



Find Out What Your Home Is Worth On – Line. For a Free, Quick On –Line Home Evaluation Visit
**WWW.VTCRANJSON.COM**
For your investment Visit **WWW.TORONTOCONDOVIP.COM**

**HomeLife/Future Realty Inc.,**
Brokerage* Independently Owned and Operated, Realtor
Off : (905) 201-9977 Fax : (905) 201-9229
205-7 Eastvale Drive., Markham, Ont, L3S 4N8

**RANJSON KANAPATHIPPILLAI**
Sales Representative
**647-406-6352**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைச் சிதம்பரமும் ஈழத்துச் சிதம்பரமும்

## அருளும் அற்புதமும் மிக்க நிகழ்வு ஒன்று

பல்லாண்டுகளுக்கு முன்புவரை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்வதற்கு யாருக்கும் எவ்விதமான தடைகளோ கட்டுப்பாடுகளோ இருக்கவில்லை. தென்னிந்தியாவிலுள்ள பாடல்பெற்ற திருத்தலங்களுக்குச் சென்று, சுவாமி தரிசனம் செய்து வருவதை வழக்கமாகக் கொண்ட பலர், யாழ்ப்பாணத்தில் இருந்தனர். பூலோக கைலாயம் எனச் சொல்லப்படும் தில்லைச் சிதம்பரத்துக்குத் திருவெம்பாவைக் காலத்திலும், ஆறுமுகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கும் முதன் முதலிலே நேருக்கு நேர் போர் நடைபெற்ற திருச்செந்தூருக்குக் கந்தச'டி காலத்திலும் சென்று வந்தோர் அவர்களுட் பலர்.



தில்லைச் சிதம்பரத்திலே, அருள் கொழிக்கும் ஆயிரங்கால் மண்டபத்திலே ஆயிரமாயிரம் அடியார்களின் முன்னிலையிலே ஆடல் வல்லானுக்கும், அம்பாள் சிவகாமசௌந்தரிக்கும் நடைபெறும் அற்புதமான ஆர்த்ராபிஷேகத்தைக் கண்குளிரக் கண்டு, மனம் குளிர வணங்க வேண்டும் என்ற தன்னுடைய நீண்ட நாளைய ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்கில், அதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளை ஒரு தடைவை மேற்கொண்டார் யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த திரு.சி.குமாரசாமி. தான் வகித்த உயர் பதவி காரணமாகத் தன்னுடைய ஆவல் இலகுவில் நிறைவேறும், இனிதே நிறைவேறும் என்று நம்பியிருந்த அவருக்கு அவருடைய அந்த உயர் பதவியே தடையாக அமைந்துவிட்டது. முக்கியமான சில கடமைகளை உடனடியாகச் செய்துமுடிக்க வேண்டியிருந்ததால், நாட்டை விட்டு வெளியேற முடியாத நிர்ப்பந்தம் - உயர் பதவிகளில் இருப்பவர்கள் அடிக்கடி எதிர்நோக்கும் பிரச்சினைதான்!

கடமையைப் புறக்கணிக்கவும் முடியாமல், தன் நீண்ட நாளைய ஆவலைத் துறக்கவும் முடியாமல், மனம் குழம்பிய நிலையில் நித்திரைக்குச் சென்ற அவருக்குத் தெரிந்தது ஓர் அதியசயக் கனவுக் காட்சி: அதனுடன் இணைந்தது ஓர் அசரீரிக்குரல்.

நீண்ட தூரம் யாத்திரை செய்துதான் என்னை நீ தரிசிக்க வேண்டுமா? அண்மையிலுள்ள திண்ணபுரத்துக்கு வா. உன் எண்ணம் நிறைவேறும்.

அரச அதிபர் என்ற நினைவைத் துறந்து, சாதாரண அடியாராகவே காரைநகர் திண்ணபுரத் திருத்தலத்துக்கு அவர் சென்றார். எனினும் அங்குள்ள மூல மூர்த்திகட்குப் பின்னிரவில் நடைபெற்ற அபிே'கத்தையும், அதையடுத்து வசந்த மண்டபத்தில் நடராஜப் பெருமானுக்கும் சிவகாமி அம்பாளுக்கும் மிக நீண்டநேரம் நடைபெற்ற ஆர்த்தராபிஷேகத்தையும் மிகமிக அண்மையில் நின்று பார்க்கும் பெரும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. முன்னர் தான் கேட்ட அசரீரிக் குரலுக்கு உரியவன் தில்லைக் கூத்தன்தான் என்பதையும், இங்குள்ள அடியார்களுக்கு அருள் புரிவதற்காகத் திண்ணபுரத்தில், அதே கோலத்தில் எழுந்தருளியிருப்பவனும் 'அவன்' தான் என்பதையும் ஆர்த்ராபிஷேகத்தைப் பார்த்த பரவச நிலையில் அவரால் உணரமுடிந்தது.

இவரைப்போன்று ஆயிரமாயிரம் அடியவர்களை இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வெளிநாடுகள் பலவற்றிலுமிருந்தும் திருவெம்பாவைக் காலத்தில் தன்பால் ஈர்த்துக்கொண்டிருக்கின்றது இந்தத் தலம்.

(16-12-2009 இல் வெளிவந்திருந்த சைவ பரிபாலன சபையின் வெளியீடான இந்து சாதனம் சஞ்சிகையில் **சிவா-சரணன்** என்பவரால் எழுதப்பட்ட ஈழத்துச் சிதம்பரம் என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று புலவர், B.O.L. ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டவர். ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் செய்தி ஆசிரியராகப் பதவி வகித்து சில ஆண்டுகள் பணியாற்றிய இவர் ஆசிரியர் சேவையில் இணைந்து கலாநிதி ஆ.தியாகராசா மகாவித்தியாலயத்தில் பணிபுரிந்தார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பயிற்றப்பட்ட ஆசிரியையுமானவர். கொழும்பு இராமகிருஷ்ணமிசன் அறநெறிப்பாடசாலையில் ஆசிரியையாகவும் சேவை புரிந்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட பல தமிழ் சமய சேவை அமைப்புக்களில் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்து தொண்டாற்றியவர். பல சஞ்சிகைகளிலும் கவிதைகள் கட்டுரைகள் என்பனவற்றை எழுதி வருவதுடன் சமய இலக்கியச் சொற்பொழிவுகளையும் செய்து வருபவர். சில நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

# காரைநகர் மக்கள் பெரும் பாக்கியசாலிகள்

புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன்

நமது மண்ணில் தோன்றிய ஞானிகள், யோகிகள் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை எப்பொழுதும் மனதால் நினைக்கவும், வாயால் அவன் புகழ்பாடவும், உடம்பால் வழிபடவும் பல திருக்கோயில்களை அமைத்துள்ளனர். பன்னிரண்டு மாதமும் பண்டிகைகளை ஏற்படுத்தியுள்ளனர். வீட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை சமய விழாவாகவே நடைபெறச் செய்துள்ளனர்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனப் பல ஆலயங்கள் தெய்வீக பூமியாகிய காரைநகரில் அமைந்துள்ளன. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகளுடனும், பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் வீட்டுக்கிரியைகளுடனும் சமயம் கலந்துள்ளது.

போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்னரே ஈழயனார் கோவில், மணற்காடு மாரிஅம்மன் கோவில் சமயப்பணி செய்ததை வரலாறு கூறுகிறது. ஆண்டி முனிவரின் உள்ளொளியால் திண்ணபுரத்தில் ஈழயனார் தென்பட்டார். சமயப் பெரியார்கள் அதனை ஆலயமாக அமைத்தனர். நாளடைவில் ஈழயனார் சிவன் ஆலயம் கோபுரங்களுடன் அமைக்கப்பட்டது. தெய்வீகப் பொலிவு நிறைந்த இந்த ஆலய வழிபாடுகள் தில்லைச் சிதம்பர பாரம்பரியத்தை பின்பற்றி நடைபெறுகிறது. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் இத்தல அம்பல ஆடலரசனின் இனிமையை உட்புகுந்து உணர்ந்தவர் பிறப்பற்றார் என்ற உண்மையைப் பின்வரும் பாடல் அழகாக உணர்த்துகிறது.

"ஓங்காரமே நல்திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்
ஆங்காரம் அற்றார் அறிவர் அணிஅம்பலத்தான்"

ஓங்காரத் திருவாசியுடனும் ஐம்பத்தொரு சுடருடனும், மிக உயர்ந்த பொருத்தமாக, அமைந்த நடராச மூர்த்தியை திருமுருககிருபானந்தவாரியார், சித்தாந்தச் செல்வர் கூ.வைத்தியேஸ்வர முதலியார், செஞ்சொற் கொண்டல் வித்துவான் சிங்காரவேலன் முதலானோர் சிறப்பாகப் போற்றியுள்ளனர். பேரறிஞர் தொண்டைமான் பாஸ்கரன் அழகிய பதஞ்சலி வியாக்கிர பாதரோடு கூடிய அழகிய அமைப்புடைய மூர்த்தத்தைப் பெற்ற காரைநகர் மக்களும் ஈழத்திலுள்ள பெருமக்களும் பெரும் பாக்கியசாலிகள் என வாழ்த்தியுள்ளார்.

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளும் இத்தலத்தை வழிபட்டுள்ளார். அவர் கோவிலைச் சுட்டிக் காட்டி இவ் ஆலயம் பிரபல்யமான ஆலயம். இதனைக் கூத்துக் கொட்டகை ஆக்கி விடாதீர்கள் என்று ஆணை யிட்டுள்ளார். இந்த ஆணை இன்றும் பின்பற்றப்படுகிறது. எல்லாம் வல்ல ஆடல் வல்லானுக்கு அமைந்த அணியுடை 39 அடி உடைய ஆதிரைத் தேர் சிற்பம் நிறைந்த சிவதத்துவம் மிக்க திருத்தேராகும். இத்திருத்தேர் பஞ்சதளங்களிலும் சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றது.

மகேஸ்வர வடிவங்கள் இருபத்து ஐந்தும், சிவதாண்டவங்கள் நூற்றெட்டும், நாயன்மார்கள் வரலாறு கொண்ட அறுபத்து மூன்று சிற்பங்களும் ஆலய வரலாறும் மிகவும் தத்துவரூபமாக பொறிக்கப்பட்டிருக்கின்றன. இத்தேர் வேறு எங்கும் காணக் கிடையாத சிறப்பை உடையது. ஆண்டுதோறும் ஐயனாருக்கும் அழகான தேர் அமைக்கப்பட்டுள்ளது. ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையம் அடியார்க்கு அன்னதானம் வழங்கிடவும், தங்கி இருக்கவும் சகல வசதிகளையும் அளிக்கிறது. இவை ஈழத்துச் சிதம்பர நடராஜப் பெருமான் சிவகாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமேதராய் அருள்பாலிக்க அமரர் மகேஸ்வரனால் உருவாக்கப்பட்ட செயற்கரும் பணிகளாகும்.

ஈழத்துச் சிதம்பரம் பெரும் சிறப்பைக் கொண்டது. மூன்று முறை தேர் உற்சவம் நடைபெறுகிறது. பங்குனி உத்தரம், ஆடிப்பூரம், மார்கழித் திருவாதிரை நாட்களை ஒட்டி ஆண்டிற்கு மூன்று முறை தேர் உற்சவம் நடைபெறுகிறது. சிதம்பரக் கோயிலைப் பின்பற்றிவரும் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி பங்குனியில் பஞ்சரத தேர் பவனியும் ஆடியில் அம்பாள் தேர் பவனியும் நடைபெறுகிறது.

மெய்கண்டதேவர் சிவஞானபோதத்தில் "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என அருளியபடி ஈழத்துச் சிதம்பரம் முதலாக பல கோயில்கள் காரைநகரில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. இத்திருக்கோவில்களில் நடைபெறும் உற்சவங்கள் மிகச் சிறப்புடையன. மேலான படைப்புத் தொழிலைக் குறிக்கும் திருவிழாக்கள் மக்களை நல்வழிப்படுத்த எல்லாக் கோவில்களிலும் நடைபெறுகின்றன. கருவறையில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குத்தான் சிறப்பாக காரைநகரில் உற்சவ விழாக்கள் நடைபெறுகிறது. சமய உணர்வுடன் மக்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டு அந்தந்த மூலமூர்த்திகளுக்கு நடைபெறும் திருவிழாக்களில் கலந்து இறை அருளைப் பெறுவர்.

வெப்பத்தால் வரும் பெரு வேதனையான நோய்களைச் சுகம் செய்பவள் முத்துமாரி அம்மனாகும். 1505ல் இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயர் மணற்காடு மாரி அம்மன் கோவிலை இடிக்க வந்தனர். அவர்களுக்கு பெரிய அம்மைநோய் ஏற்பட அம்மனை வழிபட்டுப் பின்வாங்கினர். அன்று முதல் இன்றுவரை கொடூர ஆட்சி செய்யும் அரசாங்கப் படைகள் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு வந்து சிறு இடையூறுகளும் செய்யாது வந்தனர். அம்மனை அவர்கள் பயபக்தியுடன் பூசை செய்து வழிபட்டு பிரசாதம் பெற்றுச் சென்றனர். மக்களை வெப்பு நோய்கள் தீண்டாவண்ணம் திருவிழாக் காலங்களில் படையலாக, நீர்ச்சோறே முதலிடத்தைப் பெறுகிறது. முதுவேனிற் காலத்திலேயே அம்மனின் திருவிழா உற்சவம் நடைபெறுகிறது. அதனால் பழங்கல் அரிசிச் சோற்றுடன் தயிர் வெங்காயம் பச்சை மிளகாய் தேசிக்காய்ச்சாறு கலந்து கலவையாகச் செய்யும் அமுதமே நீர்ச் சோறாகும். சைவசமயிகளின் இறைவணக்கம் உள்ளத்தை பக்குவப்படுத்துவதோடு உடலையும் பக்குவம் செய்கிறது. நவராத்திரி, பௌர்ணமி, ஆடிப்பூரம், மாதப்பிறப்பு ஆகிய தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் அங்கே இடம்பெறுகின்றன. முப்பெரும் சக்திகளாகிய காளி, இலக்குமி, கலைமகளுக்கு நவராத்திரி விசேட விழாவாக ஒன்பது இரவுகளும் நடைபெற்று மாநோன்புடன் நிறைவு பெறுகிறது.

காரைநகர் ஐயனார் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. பிரமாண்டமான கோயிலாகத் திகழ்ந்த ஆலயம் ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டது. பின் மீண்டும் அழகாக ஆலயம் அமைக்கப்பட்டு உற்சவ திருவிழாக்களும் விசேட பூசைகளும் நியமமாக நடைபெறுகின்றன. கலைநிதிவாரம் நூல்நிலையம் பலருக்கு அறிவுப் பசிக்கு விருந்தாகிறது. அறங்காவலரால் பல சமூகப் பணிகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன.

வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் கோபுரங்களுடனும் விசேட சிற்பங்களுடனும் அமைக்கப் பட்டுள்ளது. பிள்ளையார் கோவில் கொடியேற்றத் திருவிழாவுடன் தொடங்கி ஒன்பதாம் நாள் வருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுகிறது.

காரைநகர் திக்கரை முருகன் ஆலயம், பாலாவோடை அம்மன் ஆலயம் எல்லாம் அழகாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டு திருவிழா உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

சமய சீலர்களாக வாழும் காரை மக்கள் கோவில் வழிபாட்டைப் போலவே பண்டிகைகளைக் கொண்டாடுவதிலும் சமய உணர்வுடன் ஈடுபடுகிறார்கள். தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு பண்டிகைகள் காரைநகர் மக்களின் சமயத்துடனும் வாழ்க்கையுடனும் பின்னிப் பிணைந்தவை.

பெரும்பாலான காரைநகர் மக்கள் கமத் தொழிலிலேயே ஈடுபட்டனர். சூரியபகவான் அவர்கள் வேளாண்மை விளைச்சலை அதிகரிக்கப் பெரும் துணை செய்கிறார். விளைச்சல் கிடைத்து வந்ததும் உழவன் வீடு செல்வம் நிறைந்த வீடாக நிறைகிறது. உழவனது தொழிலிற்கு காரைநகரில் உள்ள எல்லாச் சமூகத்தினரும் உதவி செய்கின்றனர். பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்ச கவ்வியங்களைத் தரும் பசுவும், பசளையாக எருவைத் தந்தும் வயலை உழுதும், வண்டி இழுத்தும், சூடு மிதித்தும் பேருதவிசெய்யும் எருதும் உழவனின் உற்ற நண்பர்களாக விளங்கினர்.

சைவசமயப் பண்புகள் மிளிரும் காரைநகர் மக்கள் இறைபுணர்வு மிக்கவர்கள், செய்நன்றி மறவாதவர்கள், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை முதன்மையாகக் கொண்டவர்கள் மன்னுயிர்களையும் தன்னுயிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பவர்கள். இருந்தோம்பி இல்வாழ்வது விருந்தினரை உபசரிப்பதற்கே என வாழ்பவர்கள். இவையே சைவத்தமிழ் மக்களின் பண்டைய பண்பாட்டு நாகரிகமாகும். இது தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வருகிறது.

சைவத்தமிழ் மக்களின் பண்புகளைத் தைப்பொங்கல் படம் போட்டுக் காட்டுகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் பொங்கல் நாள் மலர்கிறது. சாணத்தினால் மெழுகிய முற்றத்தில் அரிசிமாக் கோலமிட்டு புதிதாகத் தயாரிக்கப்பட்ட மண் அடுப்பில், மாவிலை இஞ்சியிலை கட்டப்பட்டு விபூதி திரிபுண்டமாகப் பூசப்பட்டு, மஞ்சள் குங்குமம் சாத்திய பொங்கல் பானை பொங்க ஆயத்தமாகும். பொங்கல் பொங்கியதும் வைக்கோல் பரப்பி அதில் வாழை இலைகள் ஒற்றையாக ஒன்று, மூன்று ஐந்து என பரப்புவார்கள். சிறப்பாக காரைநகரிலே, அறுசுவைக் கறிகளுடன், பொங்கல் செங்கதிரோனுக்குப் படைக்கப்படும். பலவித பழங்களும் இளநீரும் பொங்கலுடன் படைக்கப்படும். வீட்டார் மும்முறை படையலை வலம் வந்து கற்பூர தீபம் காட்டி செங்கதிரோனுக்கு சிவந்த பூக்களை அர்ச்சித்து வீழ்ந்து வணங்குவர்.

இந்த உழவனின் பொங்கல் எல்லாச் சமூகத்தினரின் இல்லங்களிலும் நடைபெறும். பலர் உழைப்பாலும் விளைந்த செந்நெல்லைத் தனக்கென வைக்காது அனைவருக்கும் உழவன் பங்கிட்டு அனைவரையும் பொங்க வைக்கிறான். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என அவனது வாழ்க்கை அமைகிறது. தைப்பொங்கல் தின அந்தி வேளையில் குல தெய்வத்திற்கு பொங்கல் படையல் உழவனாலும் ஊர் மக்களாலும் செய்யப்படுகிறது. விளைச்சலை பெருக்கி வீடுவரத் தோன்றாத் துணையாக நின்ற குல தெய்வத்திற்கு பொங்கல் செய்யப்படுகின்றது.

கடின உழைப்பை நல்கிக் கஷ்டப்பட்ட மாடுகளுக்கு அடுத்த நாள் பட்டிப் பொங்கல் நடைபெறுகிறது. காரைநகர் மக்கள் மன்னுயிர்களையும் தன்னுயிராக மதிப்பவர்கள் என்பதை மாட்டுப் பொங்கல் காட்டுகிறது. மாடுகள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு மக்களுக்குப் பேருதவி செய்தன. செய்நன்றி மறவாச் செம்மலாக செங்கதிரோனுக்கு பொங்கல் வைத்ததுபோல உழவன் தன் செல்வமான மாடுகளுக்கும் பட்டிப் பொங்கல் பொங்கி நன்றியுணர்வை வெளிப்படுத்துகிறான். பட்டிப் பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி விபூதி பூசி சந்தன குங்குமப் பொட்டிட்டு, வழிபட்டுப் பொங்கல் பொங்குகிறான். பொங்கலை மாட்டுக்குக் கொடுத்து பின் தானும் உண்கிறான்.

சித்திரை வருடக் கொண்டாட்டமும் கலை கலாச்சாரங்களுக்கு முதன்மை அளிக்கிறது. காரை மக்கள் முதல் விநாயகரை வணங்கி பொங்கல், பூசை, இறை வழிபாடு, உற்றார் உறவினர் விருந்து, குப்பை எருக்கொட்டல், கைவிசேடம் பரிமாறல் ஆகியவற்றில் ஈடுபடுவர்.

விஷுபுண்ணிய காலத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடுவர். புத்தாடை அணிவார்கள். ஆலய தரிசனம் செய்து விட்டுப் பொங்கல் செய்வார்கள். வயாவிக் கற்பகவிநாயகர் ஆலயத் தேர் தரிசனத்திற்குச் செல்வார்கள். பிள்ளையார் தரிசனமும் உற்றார், உறவினர், நண்பர்கள் சந்திப்பும் அங்கே இடம்பெறும்.

வேளாண்மைப் பெருவிளைச்சலில் கண்ணும் கருத்துமாக இருக்கும் மக்கள் வயலில் குப்பை எருக்கொட்டலில் கவனம் செலுத்துவார்கள். பஞ்சாங்கத்தில் நல்லநாள் பார்த்து குப்பை எருக்கொட்டுவார்கள். உழவன் வீட்டில் அது ஒரு விழாவாகவே நடைபெறும். நீராடித் தூய ஆடை அணிந்து புது வருடமன்று முற்றத்தில் கோலமிட்டு வைத்த நிறைகுடத்துடன் குத்து விளக்கு ஏற்றுவர். பின் புதிய கடகத்தில் மண்வெட்டியால் குப்பையில் உள்ள மாட்டுச் சாணத்தை அள்ளி வருவர்.

மண்வெட்டி, குப்பை எருவுடன் கும்பத்தை மூன்றுமுறை சுற்றி வந்து கற்பூரத்தை வணங்கி மூன்று ஐந்து என வயலிற்குச் செல்வர். நல்ல நேரத்தில் வயலை ஏரால் உழுவார்கள். வீட்டிலும் ஓலை சாற்றி வேலி அடைப்பார்கள். உரலில் நெல் குத்துவார்கள். அறுசுவையுடன் உணவு சமைத்து உற்றார் உறவினருடன் விருந்து உண்பார்கள். குடும்பத் தலைவன், வீட்டில் உள்ள அனைவருக்கும். உதவி செய்கின்ற தொழிலாளர்களுக்கும் வெற்றிலை பாக்கு மஞ்சள் நெல்லுடன் பணம் வைத்து கைவிசேடம் கொடுப்பார். கடைக்குச் சென்று நல்லநேரத்தில் உப்பு, மஞ்சள், மங்கலப் பொருட்கள் வாங்கி வருவார். அதன் பின்னர் நிறைகுடநீர் பூமரத்திற்கு ஊற்றப்படும். ஊற்றிய பின் நிறைகுடத்தை எடுப்பார்கள்.

கோயில்கள், பண்டிகைகள் போல காரைநகரில் நடைபெறும் விசேட வைபவங்களும் தனித்துவமானவை. அங்கு பழைய மரபு பேணுதல், நேரம் கணித்து சுபவேளையில் காரியம் செய்தல், சமயக்கிரியைகளிற்கு முக்கியத்துவம் கொடுத்தல், வரும் விருந்தினர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை பாக்கு வரும் போதே கொடுத்து அகமுமலர்ச்சியுடன் வரவேற்றல் விருந்தினர்களுக்கு மங்கலகரமான உணவுகளை உரிமையாளர்களே இன்முகத்துடன் பரிமாறல் அவர்கள் வீடு திரும்பும் போது வெற்றிலை பாக்கு தேசிக்காய் வழங்கல் போன்ற பல நிகழ்வுகள் நடைபெறும்.

திருமணவீட்டுக்கு மாப்பிள்ளை பெண்வீடு செல்லும் போது மாப்பிள்ளைத் தோழி பித்தளைப் பெரிய தட்டத்தில் கூறைத்தாலி, மஞ்சள், பழங்கள், பச்சை அரிசி எல்லாம் போட்டு தூய வெள்ளைத் துணியில் பொதியாகக் கட்டி தலையில் பக்குவமாகச் சுமந்து செல்வார். வெளியூர்களில் இருந்து வரும் நண்பர்கள் இதனைப் புதுமையாகப் பார்ப்பார்கள். திருமணத்திற்கு உரிய பொருளான முக்கிய பொருட்களை பக்குவமாக உரிய இடத்திற்கு உரித்துடைய சகோதரியே கொண்டு செல்வது தனித்துவமானது. மேலை ஆடம்பரங்கள் நாகரிகங்களுக்கு காரைநகர் மக்கள் பின்செல்வதில்லை.

மணமக்களுக்கு திருமணம் முடிந்த பின்னர் பரிமாறும் சோறு கறிகள் பிரத்தியேகமாகச் சமைக்கப்படும், பொன்னுருக்கு நடந்தவுடன் நாளுக்கு பானையில் நெல் அவித்தல் ஒரு மரபாகும். நல்லநாள் அவித்த புழுங்கல் அரிசிச் சோறே மணமக்கள் சாப்பிட சமைக்கப்படும். மணமக்கள் இரு வீடுகளிலும் சுபவேளையில் சோறு சாப்பிடுவார்கள். விசேடமாகச் சமைக்கும் சாப்பாட்டை பூதாக்களைப் பணிதல் எனவும் காரைநகரில் அழைப்பார்கள்.

இறைபக்தி, சமயஉணர்வு, இயற்கை வழிபாடு. மன்னுயிர்களையும் தன்னுயிராக மதித்தல், பரோபகார சிந்தனை, செய்நன்றி மறவாமை, விருந்தோம்பல் நிலையாமையை உணர்தல் எல்லாம் இறைமயம் என்ற உணர்வு. இவைகளே காரைநகர் மக்களின் தனித்துவமான செயற்பாட்டிற்குரிய விழுமியங்களாகும்.




**ROGERS MOTORS**

*Service & Repairs*



**Rajah**

**Class Lic. Automotive Master Technician**

45 Munham Gate, Unit # 7
Tel: 416-755-1846

Scarborough, ON. M1P 2B3
Fax: 416-755-9476




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் ஆலடியைச் சேர்ந்த கலாபூரணம் பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் பேராதனை பல்கலைக் கழகத்தின் இளமாணிப் பட்டமும் யாழ். பல்கலைக்கழகத்தின் டிப்ளோமா பட்டமும் பெற்றுக்கொண்டவர். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பண்டிதையான இவர் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், வளவாளர், பகுதிநேர விரிவுரையாளர் என கல்விச் சேவையில் பல பதவிகளை வகித்து சேவையாற்றினார். நூற்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை சஞ்சிகைகளுக்கு எழுதியுள்ள இவர் சொற்பொழிவுகள் செய்து வருவதுடன் கவியரங்கம் பட்டிமன்றம் வழக்காடு மன்றம் என்பவற்றிலும் பங்கு பற்றி சிறந்த பேச்சாளர் என்ற பெயரைப் பெற்றவர். வடமாகாண சபையால் வழங்கப்பட்ட முதலமைச்சர் விருது உள்ளிட்ட பல விருதுகளின் சொந்தக்காரரான செல்வி யோகலட்சுமியின் சேவையைப் பாராட்டி இலங்கை அரசினால் வழங்கப்பட்ட 'கலாபூஷணம்' என்ற விருதே உயரியதாகக் கருதப்படுகிறது. பலவேறு ஆக்கங்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.


# காரை மண்ணில் மலர்ந்த மலர்கள்

கலாபூரணம் பண்டிதை செல்வி யோ.சோமசுந்தரம்

இலக்கியம் மனித உணர்வுகளுக்கும், சிந்தனைக்கும் விருந்தாக அமைவது. மனிதனை மனிதனாக வாழும் ஆற்றலுடையது. பழமைக் கவர்ச்சி நிறைந்தது.

மொழியின் தொன்மையைப் பறைசாற்றும் ஒரு சொற்கோவை. சொல்நயம், பொருள்நயம் மிகுந்தது. கவர்ச்சி மிகு பழமங்களைக் கொண்டது. இதனால் சான்றோர்கள் இலக்கியங்களோடு சொல் விளையாட்டு நடாத்தினர் களித்தனர்.

ஒரு நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் ஓர் உரைகல்லே இலக்கியம். மிகச்சிறிய நிலப்பரப்பைக் (2295) கொண்ட ஒரு தீவாக இருந்த போதும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகவே நமது கிராமம் இலக்கியத் துறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பது வரலாற்று உண்மை.

வசதிகள் வாய்ப்புக்கள் குறைவாக இருந்த போதும் எம்மவர் பண்பாட்டு நல்ல திசையை நோக்கிப் பயணித்தமைக்கு சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் மிக்க மனித வளம் சிறப்பாக இருந்தமையே காரணம்.

சமயத்தையும் சோதிடத்தையும் தம் உயிரென மதித்த மக்கள் அவை சார்ந்த கவிதைகளைப் புனைந்து அவற்றின் மூலம் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

ஆலயங்களை மையமாகக் கொண்டு நான்மணி மாலை, இரட்டை மணிமாலை, குறவஞ்சி, அந்தாதி, வெண்பா, யமகம், சிட்டுக்கவி, ஊஞ்சல், தும்பி, அடைக்கலப்பத்து எனப்பல பிரபந்தங்கள் எழுந்தன. கவிதை புனையும் ஆற்றல் அக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் சிறப்பியல்பாகக் காணப்பட்டது.

அவ்வாறு கவிதை புனைந்தவர்களையும் அவர்களது இலக்கிய ஆக்கங்கள் பற்றியும் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்

இலக்கியத் துறையின் முன்னோடியாக **அருணப்பநாவலர்** (1680-1720) விளங்கினார். காரைநகரில் பிறந்து தெல்லிப்பளையில் வாழ்ந்தவர்.

1. திருச்செல்வர் காவியம் (1896 பெருங்காவியம்)
2. சந்தியோகுமையூர் அம்மானை

என்பன இவரால் பாடப்பட்ட ஆக்கங்கள் இவரது இயற்பெயர் **'பூலோக சிங்க முதலியார்'** கத்தோலிக்க மதத்தைத் தழுவி **'அருணப்ப நாவலர்'** என்று தனது பெயரையும் மாற்றிக் கொண்டார்.

தமிழ், தெலுங்கு, ஆரியம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும் சங்கீத சாகித்தியத்தில் மிக்க பாண்டித்தியம் உடையவராகவும் விளங்கியவர் **'சங்கீத கப்பையர்'** (1744 - 1795). இவர் ஒரு வைதீகப் பிராமணர்.

1. நல்லை நாயகி நான்மணி மாலை
2. காரைக் குறவஞ்சி

என்பன இவரது படைப்புக்கள்.

கப்பையரின் பேரன் **முருகேசையர்** (1785 - 1870) இவர் ஒரு பெரும் புலவர். முத்தமிழ் வித்தகர்.

1. தன்னை யமக அந்தாதி
2. திக்கை அந்தாதி
3. மாவிந்தம்
4. குருக்கேத்திரன் போர்

பாரதக் கதையில் மாவிந்தப் பகுதியை மையமாகக் கொண்டு மாவிந்தம் என்ற நூலும் (400 செய்) குருக்கேத்திரன் போர் என்ற நாடக நூலும் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசையர் மகன் **கார்த்திகேயப் புலவர்** (1819 - 1898) இவர் ஒரு வரகவி. தமது பதினெட்டாவது வயதில் 'புலவர்' என்ற பட்டம் பெற்றார். கங்கா சாஸ்திரியார் இப்பட்டம் வழங்கினார்.

சங்கீத மொழியிலும் தமிழ் மொழியிலும் வல்லவர். சுவாமிநாத தேசிகரிடம் சங்கீத மொழியையும் தந்தையாரிடம் ஆத்திசூடி முதலான நீதி நூல்களையும் நிகண்டு, நைடதம், புராணம் முதலாம் பிரபந்தங்களையும் கற்றார். இவர்.

1. திருப்போசை வெண்பா
2. நகுலேஸ்வரி யமக அந்தாதி
3. வண்ணைத் திரிபந்தாதி
4. திண்ணபுரத் திரிபந்தாதி

ஆகிய பிரபந்தங்களையும் தந்தையார் எழுதிய 'குருக்கேத்திரன் போர்' என்ற நூலைத் திருத்தியும் புதுக்கியும்,

5. குருக்கேத்திரன் நாடகம் - (1811ல் அரங்கேற்றம்)
6. சூரபத்மன் நாடகம்
7. சந்திரவண்ணன் நாடகம்

ஆகிய நாடக நூல்களையும் சிதம்பரத்தில் தங்கியிருந்த போது

8. திருத்தில்லைப் பல்சந்தமாலை என்ற பிரபந்தத்தையும் இயற்றினார். அத்துடன்
9. கிறிஸ்து மத குடாரம் என்ற கண்டன நூலையும்
10. விதான மாலை என்ற சோதிட நூலையும்

இயற்றி தமது பல்துறை ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

1886ல் இலண்டன் மாநகரில் நடைபெற்ற சர்வ பொருட்காட்சிச் சாலைக்கு, ஏட்டுச் சுவடிகளாக இவரது, திருக்குறள், நாலடியார், நிகண்டு ஆகியன அனுப்பி வைக்கப்பட்டமை இவரது புலமையின் வெளிப்பாடு. சிலேடை, யமகம், மடக்கு பாடுவதில் வல்லவர். இலங்கை நேசன், உதயபாநு, விஞ்ஞான வர்த்தினி ஆகிய பத்திரிகைகளின் தொடக்க விழாவிற்கு வாழ்த்துக் கவிகள் வழங்கியவர்.

தட்சண கைலாச புராணம் (1887ல்) என்ற நூலையும் பதிப்பித்தார் இவ்வாறு பல்துறை ஆற்றல் நிறைந்தவர் கார்த்திகேயப் புலவர்.

**வித்துவான் சிவசிதம்பர ஐயர்** கார்த்திகேயப் புலவரின் இரண்டாவது மகன் மதுரைத் தமிழ் சங்க வித்துவான்.

1. காவிக் கதிரேசர் அடைக்கலப் பத்து (1887)
2. தில்லை நாயகர் மும்மணி மாலை (1882)
3. கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908)

ஆகிய நூல்களை எழுதியவர்

4. கந்தபுராணம் - மகேந்திர காண்டத்துக்கு உரை எழுதியவர் (மகன் மகேச சர்மாவினால் 1908 ல் அச்சில் பதிக்கப்பட்டது)
5. தட்சிண கைலாச புராணத்தை 1887 ல் பதிப்பித்தார்
6. விதான மாலை என்ற சோதிட நூலை இரண்டாம் பதிப்பும் செய்தவர்.

இவ்வாறு இலக்கியவாதிகள் பலரும் பல்துறை ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினர்.

**நாகமுத்துப் புலவர் (1857 - 1939)** காரைநகரில் தனுக்கோடிப் பிள்ளைக்கும் சேதுநாயகி அம்மாளுக்கும் தவப் புதல்வனாகப் பிறந்தார்.

ஆசிரியராக முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சேவை செய்தார். நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார்.

1. திருமங்கல வாழ்த்துச்சீட்டுக் கவித்திரட்டு - 1914
2. காரைநகர்த் திண்ணபுரம் சுந்தரேசர் திருப்பதிகம், திருவூஞ்சல், எச்சரிக்கை, பராக்கு
3. சுந்தரேசர் பத்திரசக் கீர்த்தனைகள்
4. பயிரிக்கூடல் சுப்பிரமணியர் திருவூஞ்சல்
5. கலிகால வேடிக்கைக் கும்மி
6. மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி

என்னும் நூல்களை இயற்றி பெரும் புகழ் படைத்தவர்.

**அருணாசல உபாத்தியாயர்** (1864 - 1920)
ஆறுமுக நாவலருக்கு அடுத்ததாக வைத்துப் போற்றப்படுபவர். நாவலரின் மறைவுக்குப் பின்னர் சைவப் பாடசாலைகளையும் சைவ ஆசிரியர்களையும் தோற்றுவித்து சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்க பெருந்தொண்டாற்றி காரைநகருக்கு பெருமை சேர்த்தவர்.
நீதி வெண்பா உரை(1904) இவரால் எழுதப்பட்டதாகும்.

**அம்பலவாணர் (அலன் ஆபிரகாம் 1865-1922)**

காரைநகரில் பிறந்து கத்தோலிக்க மதத்தைத் தழுவி தெல்லிப்பளையில் வாழ்ந்த வான சாத்திர நிபுணர்.

இலக்கியத் துறையிலும் இவர் தமது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

1. வான அதிசயங்கள்
2. மதுவிலக்கு கும்மி - என்பன இவரால் எழுதப்பட்ட நூல்கள்.

**வித்துவான் சபாரத்தின ஐயர் (1880 - 1935)** வடமொழி தென்மொழிகளில் வல்லவர் 'கலிகால தீபம்' என்ற பத்திரிகையை நடாத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சிதம்பரம் - சுந்தரேசப் பெருமான் மீது திருவூஞ்சல் (1910) பாட அதனை கணபதீசுவரக் குருக்கள் (1923) பதிப்பித்தார்.

புராணபடன விரிவுரை ஆலயங்கள் தோறும் செய்தவர்

**பண்டிதர் சி.சுப்பிரமணிய தேசிகர் (1885 - 1970)** பருத்தித்துறை அல்வாய் வடக்கைச் சேர்ந்தவர் காரைநகரில் மணம்முடித்து வாழ்ந்தவர்.

1907ல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் ஆனார். ஆசிரியர் - திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி. சுப்பிரமணிய வித்தியாசாலை

ஆலய புனருத்தாரணக் கிரியைகள், அபரக் கிரியைகளைச் செய்யும் சைவக் குருக்கள் மரபினர்.

1. திருவெம்பாவை உரை
2. திருப்பள்ளியெழுச்சி உரை
3. அல்வாய் சித்தி விநாயகர் தல வரலாறு
4. திருப்பொன்னூஞ்சல்
5. சைவக் கிரியைகள்

என்ற நூல்களை எழுதியதுடன்

6. கந்தபுராண படனம்
7. பெரியபுராண படனம்
8. திருவிளையாடற் புராண படனம்

என ஆலயங்கள் தோறும் புராண படனமும் விரிவுரையும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியதுடன்,

9. கந்தபுராணம் - காட்சிப்படலம் விளக்க உரை - நீந்தனைப்படலம்
10. திண்ணைபுரச் சுந்தரேசர் ஆலய வரலாறு

என்ற நூல்களையும் இயற்றி இலக்கியத் துறைக்கு பெரும் பணி புரிந்தவர்.

**சிவஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் (1888 - 1967)** வேத. ஆகமங்களிலும், உபநிடதம், திருவாசகம், ஆகியவற்றிலும் மிகுந்த பயிற்சி உள்ளவர். கிரியைகளைச் செய்வதில் பாராட்டுப் பெற்றவர்.

1. ஈழத்துச் சிதம்பரம் - 1962
2. ஆத்ம யாத்திரை - 1965
3. ஆன்ம தரிசனம் - 1967

ஆகிய நூல்களை இயற்றியவர்.

4. அகில இலங்கைச் சைவகுருமார் சபையின் தலைவர்
5. அகில இலங்கைச் சைவபிராமணர் சங்கம்
6. அகில இலங்கைக் குருப்பிராம்ம வித்தியார்த்தி சபா
7. ஈழத்துச் சிதம்பரம் - திருப்பணிச்சபை
8. காரைநகர் மணிவாசகர் சபை

ஆகியவற்றின் காப்பாளர்.

'வேதாகம கிரியா பூஷணம்' (1962) என்ற பட்டம் வழங்கி மிகச் சிறப்பாக கௌரவிக்கப் பெற்றவர்.

**க.சண்முகம்** - உலகபூமி சாத்திரம் என்ற நூலை எழுதினார்.

**பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள் (1889 - 1953)** நாவலர் காவியப் பாடசாலையில் கற்றுப் பண்டிதர் ஆனார். வடமொழியிலும், தமிழ்மொழியிலும் புலமை உள்ளவர்.

1. திண்ணபுர வெண்பா (1945)
2. வலந்தலை மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை (1931)
3. விநாயகர் அகவல், விநாயகர் கவசம் - பதவுரை (1947)
4. கொழும்பு சித்தி விநாயகப் பெருமான் - திருப்பதிகம், திருவூஞ்சல்- (1948)

ஆகியன இவரால் எழுதப்பட்ட நூல்கள்.

அத்துடன் ஆலயங்கள் தோறும் புராணபடன விரிவுரைகளும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்திப் பெருமை சேர்த்தார்.

**மூ. சு. சுப்பிரமணியம்**

1. திருக்குறட் பாடம் - அறத்துப்பால்(1938)
2. கடவுளுடன் ஐக்கியப்படும் நேர நிகழ்ச்சிகள்(1960)
3. பக்தி நெறி(1963)
4. தாயுமானவர் திருவாக்கு(1967)

ஆகிய நூல்களை எழுதினார்.

**வே.கணபதிப்பிள்ளை**

மாணவர் தமிழ் வாசகங்கள் - பாலர் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரைக்குமானது.
SriLanka Reader – Primer, Book One,Book Two, Book Three, Book Four.

என்ற நூல்களின் ஆசிரியர்.

**அருணாசலம் நாகலிங்கம்** (1901 - 1979) - மலேசியாவில் அரச பதவி வகித்தவர். ஈழத்துச் சிதம்பர திருப்பணிச் சபையில் அங்கம் வகித்து தொண்டாற்றியவர்.

**சாம்பசிவம் ஞானாமிர்தம்** என்ற நாவல் இவரால் எழுதப்பட்டதாகும்.

நாகமுத்துப் புலவர் உள்ளிட்டு ஈழத்து தென்னிந்திய அறிஞர்கள பலரும் இவரது நாவலுக்கு மதிப்புரை வழங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சங்கநூற் செல்வர்'**
**பண்டிதர் சு. அருளம்பலம்** (1910 - 1966)
மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சையில் 1936ல் திறமைச் சித்தி பெற்றவர்.

ஆசிரியராகவும், அதிபராகவும் புத்தளம், கொட்டாஞ்சேனை, காலி, களுத்துறை ஆகிய இடங்களில் கடமை புரிந்தவர்.

1. பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை (1960) சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. 'சங்கநூற் செல்வர்' என்ற பட்டமுடன் காரைநகர் மக்கள் பொற்கிழி வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் 'பண்டிதமணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
2. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை
3. திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை என சங்க ஆராய்ச்சி உரைகளை எழுதியவர்.
4. திருவாசகம் ஆராய்ச்சி உரை பகுதி I பகுதி II (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவை) இவ்வாறு சிறந்த உரையாசிரியராக விளங்கி பெரும் புகழும் பெற்றவர்.

**ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்**
மெய்கண்டார் ஆதீனத்தினை நிறுவி சைவ சமய வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர். சிறந்த சமய விரிவுரையாளர்.
1. சிவஞான விளக்கம்(1974)
2. ஸ்ரீபஞ்சாட்சர விளக்கம் என்பன இவரால் எழுதப்பட்டவை.

**வெற்றிவேலு ஐயம்பிள்ளை** (1914 -1977)
திருக்குறள் அனைத்துப் பாடலையும் மனனம் செய்து வைத்திருந்த இவர் தமது உரையாடல்களின்போது திருக்குறளை எடுத்துக்காட்டி உரையாடும் வழமையைக் கொண்டிருந்ததால் 'திருக்குறள் ஐயம்பிள்ளை' எனவும் அழைக்கப்பட்டவர். ஆசிரியப் பணியாற்றியவர்.
இவர் எழுதிய நூல்
வள்ளுவர் வாய்மொழி மாண்பு (1956) ஆகும்.

**ஐயம்பிள்ளை சிவலிங்கபிள்ளை**
1. சிவபுராண உரை(1965)
2. பிடித்த பத்து உரை(1967)
3. கோயில் திருப்பதிக உரை
4. அடைக்கலப்பத்து உரை(1970)
5. திருவெம்பாவை உரை(1975)
6. கோயில் மூத்த திருப்பதிக உரை(1976)
ஆகிய உரைகளை எழுதியவர்.

**க. சுப்பிரமணியம்** - உலக சரித்திர வினா விடை என்பது இவரது நூல்.

**வே.சிவகுரு B.Sc.(Hons.)**
1. சக்தியின் தோற்றமும் மாற்றமும்(1967)
2. திருவெம்பாவை உரை(1968) என்பன இவரது ஆக்கங்கள்

**இ.வைத்திலிங்கம்**
திண்ணபுர மான்மியம் (1960) என்ற நூலை எழுதினார்.

**மகாவித்துவான் F.X.C நடராசா (1911)**
காரைநகரில் பிறந்தவர்.
1. வியாவில் சைவப் பாடசாலை (1931- 33)
2. மட்டக்களப்பு சிசிலியா ஆங்கிலப் பாடசாலை
3. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

ஆகியவற்றில் சேவையாற்றி கொழும்பு பல்கலைக் கழகத்தில் (1947 - 50) **'வித்துவான்'** விருது பெற்றவர்.
1952 - இலங்கை அரசகரும மொழித் திணைக்கள ஆராய்ச்சி உதவியாளராகவும், அத்தியட்சகராகவும், இருந்தவர்.

இவர் எழுதிய நூல்கள்,

1. சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த இலக்கிய இலக்கண நூல்கள் (21)
2. எண்ணெய்ச் சிந்து - 1958
3. ஈழமும் தமிழும் - 1956
4. மொழிபெயர்ப்பு மரபு - 1956
5. இலங்கைச் சரித்திரம் -1956
6. ஈழத்து நாடோடிப் பாடல்கள் - 1962
7. காரைநகர் மான்மியம் - 1965
8. கண்ணகி வழக்குரை - 1965
9. நாவலர் பெருமான் வாழ்க்கைக் குறிப்புக்கள் - 1979
10. நன்னூற் காண்டிகையுரையும் நாவலர் பெருமானும் - 1982
11. சரஸ்வதி மாலை - 1988
12. விபுலானந்தர் மீட்சிப் பத்து -1990
13. மட்டக்களப்பு மான்மியம் - 1962 (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது) என்பன.

மட்டக்களப்பு கலாச்சாரப் பேரவை மகாவித்துவான் (1991ல்) என்ற விருதும் 1991 ல் சாகித்திய விழாவில் 'இலக்கிய செம்மல்' என்ற விருதும் இலங்கைத் தேசிய வீரர் தினத்தில் 'கலாசூரி' என்ற விருதும் வழங்கி கௌரவித்தனர். இவ்வாறு இலக்கியத் துறைக்கு மிகப் பெரும் பங்காற்றியவர் F.X.C நடராசா ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தப்பு சுப்பிரமணியம் (K.K.)**

ஈழத்துச் சிதம்பரத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் தொண்டாற்றியவர். நாதஸ்வர தவில் கலைஞர்களை ஊக்குவித்தவர்.

1.ஈழத்துச் சிதம்பரத்தின் சுருக்க வரலாறு (1972)

2. காரைநகர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களின் திருத்தொண்டு பரவும் மலர் (2002) ஆகியன இவரது ஆக்கங்கள்.

**வித்துவான் முருகேசனார் (1916 - 1988)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர்.

1. இலங்கை வானொலியில் - நற்சிந்தனைகள்
2. தமிழ் விடுதூது - பிரபந்தம்
3. இயல், இசை, நாடகம் - பேச்சு, கவிதை, நாடகம் என்ற முத்தமிழிலும் வல்லவர். இதனால் **'முத்தமிழ் மணி'** என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**பண்டிதர் வைத்தீசுவரக் குருக்கள் (1916 - 2015)**

சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சேர்ந்து சமஸ்கிருதம், வேதம் சாஸ்திரங்களையும், மகாவித்துவான் கணேசையரிடம் தமிழையும் படித்துப் பாலபண்டிதர் பரீட்சையிற் சித்தி பெற்று பரமேஸ்வர பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பண்டிதரும் பயிற்சி பெற்ற ஆசிரியருமாய் (1936 - 39) ஆனார்.

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் நியமனம் பெற்று 35 ஆண்டுகள் சேவை செய்தார்.

1. ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்
2. தொடர் மொழிக்கு ஒரு மொழி
3. எதிர்ச் சொற் கோவை
4. உரைநடையாக்கம்
5. பாரத காப்பியத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு
6. பெரியபுராணம் - திருநகரப்படல உரை
7. காரைநகரிற் சைவசமய வளர்ச்சி
8. தமிழ்மொழி - மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவை
9. திருவாதிரை மலர்கள் (5)

என்பன இவரது ஆக்கங்கள்.

1. நாவலர் பிள்ளைத் தமிழ்
2. திருமுறைப் பெருமை
3. நன்னூற் காண்டிகையுரையும் நாவலர் பெருமானும்
4. திண்ணபுர அந்தாதி உரை
5. அருள்நெறித் திரட்டு - தொகுப்பு
6. திக்கையந்தாதி உரை
7. தன்னை அந்தாதி உரை
8. திருவெழுகூற்றிருக்கை உரை
9. சீறாப்புராணம் - சில செய்யுள்கள் - உரை
10. திருப்போசை வெண்பா உரை
11. ஈழத்துச் சிதம்பர புராணம் - உரை
12. கார்த்திகேயப்புலவர் நினைவு மலர்
13. புதுமுறைக் கட்டுரைக் கோவைகள் (2)

ஆகிய இவரால் பதிப்பிக்கப்பெற்ற பதிப்புக்களில் ஈழத்துச் சிதம்பர புராணம் (1971) இல் சிறந்த பதிப்பு என அரசு சான்றிதழ் வழங்கியது.

காரைநகர் சைவ மகாசபை பொன்விழா மலர், வெள்ளிவிழா மலர், திருவாதிரை மலர்கள் வியாவில் ஐயனார் கும்பாபிசேக மலர் ஆகியவற்றின் ஆசிரியர்.

சைவசமயபாடப் பரீட்சைக் குழுவில் ஒருவர் பத்திரிகைச் செய்தியாளர். எனப் பற்பல சேவைகள் புரிந்து 99 வயது வரை தமிழ்மொழிக்கும் சமயத்திற்கும் அளப்பெரும் தொண்டுகள் புரிந்து **'கலாநிதி'** பட்டம் பெற்ற பெருமைக்கு உரியவர்.

**வித்துவான் மு.சபாரத்தினம் (1924 - 1989)**

தமிழகம், தஞ்சாவூர், சென்னைப் பல்கலைக்கழகங்களிற் கற்று 'வித்துவான்' பட்டம் பெற்றவர் சொல்வன்மை மிக்கவர் 'செஞ்சொல் வாரிதி' என்ற பட்டம் பெற்றவர்.

தொடர் சொற்பொழிவுகள் பேச்சுக்கள் மூலம் **'சைவமணி'**, 'சித்தாந்தச் செம்மல்' என்று விருதுகள் பெற்றவர். சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களிலும் பிரசங்கங்கள் செய்தவர்.

**ஆண்டிகேணி ஐயனார்** (1987) என்ற நூலை எழுதியவர். ஆசிரியராக இருந்து அரும்பெரும் பணி ஆற்றியவர்.

**சிவசுப்பிரமணியக் குருக்கள் சிவசரவணபவன்** (1933 - 2015)

காரைநகரில் பிறந்தவர். கந்தரோடை சுன்னாகத்தில் வசித்தவர். **'சிற்பி'** என்ற புனை பெயருடன் எழுத்துத் துறையில் ஈடுபட்டவர். சென்னை பல்கலைக் கழக இளமாணிப் பட்டத்தினையும் இலங்கை பல்கலைக் கழக பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினையும் பெற்றவர். அத்துடன் யாழ் பல்கலைக் கழக முதுமாணிப் பட்டத்தினையும் உடையவர். அதிபராகவும் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் பேரனாவார்.

1. நிலவும் நினைவும் (சிறு கதைத் தொகுதி)
2. உனக்காகக் கண்ணே (நாவல்)
3. சத்திய தரிசனம் (சிறு கதைத் தொகுதி)
4. நினைவுகள் மடிவதில்லை (சிறு கதைத் தொகுதி)

என்பன இவரது ஆக்கங்கள் என்பதுடன் பல ஆக்கங்களின் பதிப்பாசிரியராகவும் பணியாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலைச் செல்வி', 'இந்து சாதனம்' ஆகிய இதழ்கள் உள்ளிட்ட பல இதழ்களின் ஆசிரியராக விளங்கினார். வாசாகரண ஆளுநர் விருது (2002) வழங்கப் பட்டதுடன் பல கௌரவ விருதுகளையும் பாராட்டு விருதுகளையும் பெற்றவர்.

**கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை (1938)**

இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டமும் (1960) கொழும்பு பல்கலைக்கழக கலாநிதிப் பட்டமும் (1938)ல் யாழ் பல்கலைக் கழக நாடகத் துறையில் கலாநிதிப் பட்டமும் (1990 ல்) இலங்கைப் பல்கலைக்கழக டிப்ளோமா பரீட்சையில் 1976 ல் நாடகம், அரங்கியல் துறையில் பட்டமும் பெற்றவர்.

ஆசிரியராகவும், அதிபராகவும், விரிவுரையாளராகவும் கடமை ஆற்றியவர்.

1. நேனாறு - கவிதைத் தொகுதி (1971 ல்)
2. பாவை மாறிய போது - காவியம் (1986)
3. நாடக தீபம் - (1989 ல்)
4. இசை நாடக வரலாறு - (1990 ல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)
5. காவேரி - காவியம் (1993 ல்)

ஆகியன இவரது ஆக்கங்கள்.

அகில இலங்கை ரீதியில் கவிதைப் போட்டியில் தங்கப் பதக்கங்களும் 3 முறை சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றவர்.

ஆட்டக் கூத்து - **'பாஞ்சாலி சபதம்'** மேடை ஏற்றி சிறந்த வெற்றிப் படைப்பு என்ற பாராட்டுப் பெற்றது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். சிறந்த பல்துறை ஆற்றல் பெற்றவர்.

**சிவநெறிச்செல்வர் தி. விசுவலிங்கம்**

முன்னாள் ஆசிரியர், கலை மலைத் சித்தாந்த மன்றம் என்ற அமைப்பினை நிறுவி அதன் தலைவராகப் பணியாற்றுபவர்.

'அன்பு நெறி' மாதாந்த சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர்.

1. டாக்டர் என். தி. சம்பந்தன் நினைவு மலர்.
2. என். சபாரத்தினம் நினைவு மலர்.
3. வைத்தீஸ்வரர் மலர்

ஆகிய நூல்களின் ஆசிரியர்.

1. திண்ணபுர அந்தாதி (கார்த்திகேயப் புலவர்)
2. சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம் (சி. கணபதிப்பிள்ளை ஐயர்) ஆகிய நூல்களை பதிப்பித்துச் செய்தவர்.

**ஐ. தி. சம்பந்தன்**

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் செயலாளர்.

'புதிய காரை ஒளி' இதழின் ஆசிரியர்

1. கறுப்பு யூலை 83 குற்றச்சாட்டு
2. தமிழ்ப் புலவர் திருமுருக பகீரதன்வரன் ஆகியோர் வாழ்வும் தமிழர் பிரச்சினையும்
3. நீங்காத நினைவுகள்

ஆகிய நூல்களை ஆக்கியவர்

**புலவர் பூரணம் ஏனாதிநாதன் (1940)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்.

1. 'பசுந்தமிழ்ச் சோலை'- 'ஈழநாடு' வாரமலரில் சங்ககாலம் முதல் - 1969 வரையான தொடர் கட்டுரைகள் எழுதியவர்.
2. உரைச் சித்திரங்கள் - இலங்கை வானொலியில் (1964 - 1969)
3. சொற்பொழிவுகள் (1964 - 1969)
4. நாடகவியின் பெருமை வளர் கட்டுரைக் கனிகள் (அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு)
5. நமது இலக்கியச் சொத்து

என்பன இவரது ஆக்கங்களாகும்.

செய்தி ஆசிரியர் ஈழநாடு (நாளிதழ்), உதவி ஆசிரியர், எனப் பல பணிகள் புரிந்த பெருமைக்கு உரியவர்.

**கலாபூசணம் பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்**

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரி (1979)

யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா (1991)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க தமிழ்ப் பண்டிதை (1970)

ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், வளவாளர், பகுதி நேர விரிவுரையாளர் எனப்பல பதவிகள் வகித்தவர்.

1. பொதுக்கலைத் தேர்வு - முதற்கலைத் தேர்வுக்கான இலக்கண வினா விடைகள் (2007)
2. 25 கட்டுரைகள் க.பொ.த (உயர்தர) (2008)
3. மொழிவரலாறும் இலக்கண மரபுகளும் (2008)
4. இலக்கிய வரலாறு வினாவிடை (2008) (சோழர் காலம் - இருபதாம் நூற்றாண்டு வரை)
5. இலக்கண மரபுகளும் மொழிவரலாறும் (2014)

ஆகியன இவரது ஆக்கங்கள்.

சைவப் புலவர் வகுப்புக்கள், தர்மாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்கள். அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் ஆகியவற்றை நடாத்துதல். புராணபடனம், கந்தபுராணம், பெரியபுராணம் படலம் பயன் சொல்லுதல், திருவாசகம் முற்றோதல் (ஆலயங்களில்) அபிராமி அந்தாதி படிப்பு, பிள்ளையார் கதைப் படிப்பு, சித்திரா புத்திரனார் கதைப் படிப்பு கும்பாபிஷேக மலர்கள், சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுதல் (இதுவரை 100க்கு மேற்பட்ட ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.) சொற்பொழிவுகள், கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், 63 நாயன்மார்களின் குருபூசைகளில் பேச்சு, வெளிவாரிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களை இலவசமாகக் கற்பித்தல் ஆகியன இவரது பணிகள் ஆகும்.

இவரது சேவையைப் பாராட்டி **'கலாபூஷணம்'** 2014 (அரச விருது) முதலமைச்சர் விருது (2014 வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு), கலைஒளி (2010), கலைச்சுடர் (2010), செம்மொழிச் செல்வி (2010), சிவநெறிப் பிரசாரகர் (2010), தமிழ்த் திலகம் (2010) அருள்மொழிச் செல்வி (2012), அருள்ஞான வித்தகி(2014), இயற்றமிழ்ச் செல்வர் (2014), செந்தமிழ்ச் சுடர் ஒளி (2015) ஆகிய விருதுகள் வழங்கப் பட்டுள்ளன..

**ச. ஆ. பாலேந்திரா**

கொழும்பு கம்பன் கழகத்தின் பொருளாளர்

1. காரைநகர் வன்மையும் தொன்மையும்
2. பாலாவோடை அம்மன் கோயில் கும்பாபிஷேக மலர்
3. பாலாவோடை அம்மன் கோயில் சித்திரத் தேர் வெள்ளோட்ட மலர் என்பன இவரது ஆக்கங்களாகும்.

**பேராசிரியர் கலாநிதி பொன்னம்பலம் ரகுபதி**

இவர் ஒரு தொல்லியலாளர், வரலாற்றாய்வாளர், பேராசிரியர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். காரைநகர் களபூமி சத்திரந்தையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியை வைத்து

Earley Settlements in Jaffna

Tamil Social Formation in SriLanka a Historical Outline

பெருங்கற்கால யாழ்ப்பாணம்

ஆகிய நூல்களை ஆக்கியவர்

ஈழநாடு பத்திராதிபர் என். சபாரத்தினம் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களைத் தொகுத்து 'ஊரடங்கு வாழ்வு' என்ற பெயரில் நூல் வெளியிட்டவர்.

**பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை**

இவர் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் பட்டம் பெற்றவர். ஆசிரியர், அதிபர் (காரை இந்துக் கல்லூரி) மணிவாசகர் சபைத் தலைவர், செயலாளர், எழுத்தாளர்.

சிறந்த பேச்சாளர் கவிஞர் இன்றும் காரைநகரில் மணிவாசகர் சபை போன்ற பல்வேறு நிறுவனங்களிலும், ஆலயங்களிலும் உறுப்பினராக இருந்து தொடர்ந்து தொண்டாற்றி வருகின்ற பெருமைக்கு உரியவர்.

1. சக்தி தோத்திர பாமாலை
2. சகல கலாவல்லி மாலை - உரை
3. நாவலர் பழுத்தப் புலவர் வரலாறு

என்பன இவர் எழுதிய ஆக்கங்களாகும்.

'அருணாசல உபாத்தியாயர்' வரலாறு பற்றிய வாழ்த்துரையும் இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

**கவிஞர் . சி . பொன்னம்பலம் (M.A) அவர்கள்**

ஒரு கவிஞர், எழுத்தாளர், பட்டதாரி. யாழ்ப்பாண பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டமும் பெற்றவர்.

1. ஆண்டி கேணி ஐயனார் அற்புத வரலாறு
2. ஆண்டி முனிவர் புராணம்
3. திண்ணபுரத் திருச்சதகம் - முதலாம் 40

ஆகிய நூல்களின் ஆசிரியர்

1. தில்லைச் சிதம்பரமும் ஈழத்துச் சிதம்பரமும் (2010 ல் ) தொகுப்பாக்கம்

(2015) இவ்வாண்டிற்குரிய வடமாகாண முதலமைச்சர் விருதும் பெற்றவர். காரைநகரின் இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் நினைவு கூரப்பட வேண்டியவர்.

**தமிழருவி த சிவகுமாரன்**

ஒரு பட்டதாரி, சிறந்த பேச்சாளர். இலங்கையில் மட்டுமன்றி இலண்டன், சுவிஸ், மலேசியா, சிங்கப்பூர், போன்ற இடங்களிலும் தொடர் சொற்பொழிவுகள், கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம் முதலியவற்றை நடாத்தியும் பங்கு பற்றியும் வருபவர். சஞ்சிகைகள், கும்பாபிஷேக மலர்களுக்கு ஆக்கங்கள் எழுதுதல், நூல் நயவுரை, கவிதை விமர்சனம் செய்தல், ஆலயங்களில் தேர்த்திருவிழா நேர்முக வர்ணனை என்பன இவரது பணிகளாகும். வவுனியா தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இயக்குனர். அகில இலங்கைக் கம்பன் கழக உறுப்பினர். பல்வேறு கௌரவ விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர்.

**காரை எம்.பி. அருளானந்தம்**
சிறந்த கவிஞர், பேச்சாளர், நேர்முக வர்ணனையாளர். சகல ஆலயங்களிலும் தொடர் நேர்முக வர்ணனை செய்து வருபவர். இவரது கவிதைகள் பத்திரிகைகளில் தொடர்ந்து வெளி வருகின்றன.

**இளையதம்பி தயானந்தா**
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிறந்த ஒலிபரப்பாளராக இருந்தவர். பேச்சாளர். எழுத்தாளர். இவரது ஆக்கங்கள் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இலண்டன் B.B.C. தமிழோசை வானொலியில் ஒலிபரப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

வானலையின் வரிகள் என்கின்ற நூல் இவரால் எழுதி வெளியிடப்பட்டதாகும்.
2006, 2007 க்களில் வெளிவந்திருந்த
வியூகம்
இருக்கிறம்
ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்.
அத்துடன் பேச்சாளர் எழுத்தாளர்.

**கவிஞர் வே.குமாரசாமி**
சிறந்த கவிஞர். இவரது கவிதைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவருகின்றன.

**கந்தையா பத்மானந்தன்** - ஒரு விஞ்ஞானப் பட்டதாரி **M.Phil** பட்டம் பெற்றர். அதே நேரம் சித்தாந்த பண்டிதர், சித்தாந்த வகுப்புக்கள் பலவற்றின் பங்குபற்றியுள்ளார்.
1. நீறிருக்கப் பயமேன் (2015)
2. தமிழர் வாழ்வியல்
3. தெய்வத்தின் குரல்
4. திருவாசகம் எல்லாம் அன்புத் தேன் அச்சில்
5. கவிதைகள்

ஆகியன இவரது ஆக்கங்கள்

**முருகேசு ரவீந்திரன்**
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் பிராந்திய சேவையின் கட்டுப்பாட்டாளராக பணிபுரிபவர். ஒலிபரப்புத்துறையுடன் எழுத்துத் துறையிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருபவர்.

1.நிலவு நீரிலும் தெரியும் - சிறு கதைத் தொகுதி (2014ஆம் ஆண்டின் சிறந்த சிறு கதைத் தொகுதி என வடமாகாண சபையால் தெரிவானது)
2.வாழ்க்கைப் பயணம் (சிறு கதைத் தொகுதி)
3.அனைத்தும் - படைப்பிலக்கியம் பற்றிய பார்வை
ஆகியன இவரது ஆக்கங்களாகும்.

**இவ்வாறு காரைநகரின் இலக்கியத் துறையில் பங்காற்றியவர்கள் பலர். வரலாறுகளைத் தேடிப் பெறுவது கடினம். இது ஒரு ஆரம்ப முயற்சி. தனி ஒரு புத்தகமாக வெளியிடுவதற்கான தகவல்கள் நிறைய உள்ளன. எனவே தேடிப் பெற்று மீள்பிரசுரம் செய்ய உதவுக.**

பழம்பெரும் பாரம்பரியப் பண்பாட்டைக் கொண்ட காரை மண்ணில் தமிழ் இலக்கியத் துறை மட்டுமன்றி ஆங்கில இலக்கியத் துறையும் பெரிதும் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆங்கில இலக்கியத் துறையில் காரைநகர் பயிரிக் கூடலைச் சேர்ந்த ஏடன் வைத்தியலிங்கம் என்பவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக இருந்தவர். சேர்.பொன்இராமநாதன் அவர்கள் பற்றிய வரலாற்றை இரண்டு பகுதிகளாக வெளியிட்டவர்.
Sir . Pon . Ramanathan Part I + II

காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த திரு. என். சபாரத்தினம் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபரும் ஈழநாடு பத்திரிகையின் பத்திராதிபருமாக இருந்தவர்.
1. National Education – It's Concepts & Content
2. Corridor of Peace
3. மறைந்த வாழ்வு

என்பன இவரது ஆக்கங்கள்.

**கலாநிதி. ஆ. தியாகராசா M.A.M.Lit**
சிறந்த கல்விமான், காரை இந்துக் கல்லூரியின் அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய பற்பல பணிகள் புரிந்தவர்.
1. Economic Development of Ceylon
2. Sri Lanka & South Asian Economics Cooperation
3. India & Indhira Lesson to Learn

என்பன இவரது ஆக்கங்கள்.

**திரு.த.விஜயரத்தினம்** - முதன் முதலில் காரைநகரில் ஆங்கிலத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர். சிறந்த பேச்சாளர், கவிஞர். அமெரிக்க ஜனாதிபதி கென்னடி பதவி ஏற்ற போது ஆங்கிலத்தில் வாழ்த்துக் கவிதை (Poem) அனுப்பியவர். சிறந்த ஆங்கிலப் புலமை மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.திருநீலகண்டசிவம்**

உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், கொத்தணி அதிபராகவும், ஆசிரியராகவும் கடமை ஆற்றியவர். பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஆங்கிலச் சொற்பொழிவுகள் நடாத்தி தங்கப் பதக்கம் பெற்றவர்.

இவ்வாறு காரை மண் வளம் நிறைந்த மண். எண்ணற்ற தமிழ், ஆங்கில எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், இலக்கியவாதிகளையும் உருவாக்கிய மண் என்பதில் அளவற்ற பெருமையும் இறும்பூதும் அடைகின்றோம்.

வாழ்க தாய்த் திருநாடு
தாய்த் திருநாடு தன்னைப்
பெற்ற தாய் என்று போற்றிடுவோம்

உசாத்துணை நூல்கள் : -
1. காரைநகர் மான்மியம் - F.X.C நடராசா
2. தமிழறிஞர் சரித்திரம் - வட்டுக்கோட்டைத் தொகுதி
3. மணிவாசகர் சபை வெள்ளி விழா மலர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா காரை கலாச்சார மன்றம் டிசெம்பர் 13, 2015இல் நடாத்திய தமிழ்மொழித்திறன் போட்டியில் பங்குபெற்றோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| டினோஜன் அருள்செல்வன் | இலக்கியா விஜயகுமார் | ருக்ஷியா விமலரூபன் | சுபாங்கி மகாராஜா |
|  |  |  |  |
| மயூரா சோதீஸ்வரன் | ஆரணி ராஜமோகன் | மனோஜன் தயாபரன் | அபீஷ்னன் சிவானந்தன் |
|  |  |  |  |
| ராகவி சிவானந்தன் | தயானி நடனசபேசன் | ராகவி உருத்திரேஸ்வரன் | சுபிகா வசந்தகுமார் |
|  |  |  |  |
| அபிஷன் அருள்செல்வன் | மலரவன் விஜயகுமார் | அபிவர்சி பாலசுப்பிரமணியம் | ஆதிரை ராஜமோகன் |
|  |  |  |  |
| அஞ்ஞனன் சிவகுமார் | அர்வின் சிவகுமார் | ஜானகி சகாதேவன் | தியானா தர்மலிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| அனக்ஷன் நந்தகுமார் | வாரணன் பஞ்சலிங்கம் | பைரவி சிவராசா | நமிகா வசந்தகுமார் |
|  |  |  |  |
| துர்க்கா சிவகுமார் | சயந்தன் கணேசலிங்கம் | தருணிகா பாலசுப்பிரமணியம் | அஞ்சனா சற்குணராஜா |
|  |  |  |  |
| மாதங்கி மகாராஜா | நிந்துஜா மோகனேந்திரன் | அருஷன் சுதாகரன் | மலரோன் ஜெயக்குமார் |
|  |  |  |  |
| துளசி தவராஜா | அபிஷன் நந்தகுமார் | அஷ்வினி சண்முகரட்ணம் | வர்ணவி பஞ்சலிங்கம் |
|  |  |  |  |
| பிரணவி பஞ்சலிங்கம் | கிருஜானி நடனசபேசன் | ராகவி சிவராசா | சுருதி உருத்திரேஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| அனந் சற்குணராஜா | பவிஷா மோகனேந்திரன் | சேயோன் ஜெயக்குமார் | தீபிகா பிரேமேந்திரதீசன் |
|  |  |  |  |
| மிதுசா சிறிவர்ணசூரியா | மீரா சிறிவர்ணசூரியா | தனுஷன் மகாராஜா | ஆரபி ராஜமோகன் |
|  |  |  |  |
| அனோஜன் சுதாகரன் | விஷ்வா பிரேமேந்திரதீசன் | லக்ஷிகா மோகனேந்திரன் | மாதுமை யோகராஜா |



பிரவின் பிரமேந்திரதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா காரை கலாச்சார மன்றம் டிசெம்பர் 13, 2015இல் நடாத்திய தமிழ்மொழித்திறன் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

### பேச்சு

பாலர் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| இலக்கியா விஜயகுமார் | அபிஷ்னன் சிவானந்தன் | தயாளி நடனசபேசன் |

கீழ்ப் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| தியானா தர்மலிங்கம் | அர்வின் சிவகுமார் | அஞ்சனன் சிவகுமார் |

மத்திய பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| கிருஜானி நடனசபேசன் | நிந்துஜா மோகனேந்திரன் | துளசி தவராஜா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் பிரிவு

| முதலாம் இடம் |
|---|
|  |
| பவிஷா மோகனேந்திரன் |

அதிமேற் பிரிவு


| முதலாம் இடம் |
|---|
|  |
| ஆரபி ராஜமோகன் |

# வாசிப்பு

பாலர் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| ஆரணி ராஜமோகன் | தயானி நடனசபேசன் | அபிஷ்னன் சிவானந்தன் |

கீழ்ப்பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
|  |  |  |  |
| ஆதிரை ராஜமோகன் | மலரவன் விஜயகுமார் | அர்வின் சிவகுமார் | அஞ்சனன் சிவகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மத்திய பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| துளசி துரைராஜா | விருஜானி நடனபாலேசன் | நிந்துஜா மோகனேந்திரன் |

மேல் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| பவிஷா மோகனேந்திரன் | லேயோன் ஜெயக்குமார் | அனுஜ் சற்குணராஜா |

அதிமேற் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| அருபி ராஜமோகன் | தனுஜன் மகாராஜா | விஷ்வா பிரேமேந்திரநேசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|
|  |  |
| லக்ஷிகா மோகனேந்திரன் | மாதுமை யோகராஜா |

## பண்ணிசை

பாலர் பிரிவு


| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| அபிஷ்னன் சிவானந்தன | தயானி நடனசபேசன் | ருக்ஷியா விமலரூபன் |

கீழ்ப்பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| ஆதிரை ராஜமோகன் | சுபிகா வசந்தகுமார் | வைரவி சிவராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மூன்றாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|
|  |  |
| அஞ்சனன் சிவகுமார் | அர்வின் சிவகுமார் |

மத்திய பிரிவு

| முதலாம் இடம் | முதலாம் இடம் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|---|---|
|  |  |  |  |
| துளசி தவராஜா | வர்ணவி பஞ்சலிங்கம் | நிந்துஜா மோகனேந்திரன் | நிமிகா வசந்தகுமார் |
| இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | மூன்றாம் இடம் | |
|  |  |  | |
| கிருஜானி நடனசபேசன் | அஞ்சனா சற்குணராஜா | பிரணவி பஞ்சலிங்கம் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் பிரிவு

| முதலாம் இடம் | திரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| பவிஷா மோகனேந்திரன் | அனந் சற்குணராஜா | சேயோன் ஜெயக்குமார் |

அதிமேற் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|---|
|  |  |  |
| ஆரபி ராஜமோகன் | அனோஜன் சுதாகரன் | மிதுசா சிறிவர்ணசூரியா |

உயர்பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|
|  |  |
| பாதுமை யோகராஜா | லக்ஷ்சிகா மோகனேந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த செலவில் சிறந்த பயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு, வரிக் கழிவு பெற்ற சேமிப்பு, ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக் கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
- 20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி
- Disability Insurance
- Final Expense Insurance
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

**உங்கள் தேவை எதுவாக இருந்தாலும், உங்கள் வசதிக்கு ஏற்ற சரியான காப்புறுதியை, அதிகளவு பயன்பாடுகளுடன் பெறுவதற்கு, அனுபவம் வாய்ந்த என்னிடம் ஆலோசனை பெறுங்கள்.**

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின், உங்கள் திட்டத்தை இரத்துச் செய்யாமல் அதில் மாற்றங்களை இலவசமாகச் செய்ய என்னை அழையுங்கள்.

சாரதி அனுமதிப் பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு, காப்புறுதி செய்ய முடியாமல் இருப்பவர்களுக்கும் வைத்திய பரிசோதனை இன்றி காப்புறுதி பெற்றுத் தர முடியும்.

**Investments**
- **RRSP**
- **RESP**
- **TFSA**

RBC Insurance · Manulife · Industrial Alliance · LaCapitale · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

**Your Referrals are Rewarded!**



## Thana Manickavasagar
Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Non-Medical Insurance • Travel Insurance
• Super Visa Medical Coverage • Drug and Dental Plan • RRSP • RESP • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147
80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்



**கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா...!**



**58 ஆண்டுகள்**
**வர்த்தகத்துறையில் முன்னோடிகள்**

**25 வருடங்களாக துரித பணமாற்று சேவையில்**
**கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில்**
**நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பை**
**பெற்ற ஒரே ஸ்தாபனம்**

# M.KASIPPILLAI & SONS INC

**Tel: 416 267 8221**

**3228 Eglinton Ave. E, Suite #3 Scarborough, Ont. M1J 2H6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் போசகர்களுள் ஒருவராகப் பணியாற்றிவரும் பரமநாதர் தவராசா அச்சங்கத்தின் தலைவராக நான்கு ஆண்டுகள் பதவிவகித்து ஊருக்கான அளப்பரிய பணிகளை முன்னெடுத்து பாராட்டுப்பெற்றவர். ஆளுமையும், செயற் திறனும், துடிப்பும் மிக்க இவர் சங்கத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்கு வகிப்பவர். காரை இளையோரை முன்னிலைப்படுத்தி அவர்களையும் ஊருக்கான பணிகளில் ஈடுபட ஊக்கிவித்து ஆர்வத்துடன் செயற்படுபவர். சர்வதேச கிரிஜா பாபாஜி யோகா சங்கத்தின் உப-தலைவராகவும் பணிபுரிந்து வருகின்றார்.



# குறைநிறைகள் – புலம்பெயர்வில் எம்மிளையோர்.

**பரமநாதர் தவராசா**

பிறந்த இனம், பேசும் மொழி, கற்ற கல்வி, வாழ நேர்ந்த சூழல், புகுத்திய சமயம், சொல்லிக்கொடுத்த கலை, நம்பிய கலாச்சாரம், புரியும் தொழில், உண்ணும் உணவு இவையனைத்தும் உருவாக்கிய நம் மனம் கொடுக்கும் தோற்றங்களே நாம் பார்க்கும் உலகம். இதில் முதல் மூன்றும் இறைவன் கிருபையால் புலம்பெயர் எம்முறவுகளுக்கு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. நான்காவது, அதாவது நாம் வாழ நேர்ந்த சூழல், அதன் கலை கலாச்சாரம் என்பவை எமது புலம்பெயர்வாழ் உறவுகளிடத்தே மிகப்பெரிய, பாரிய நன்மை தீமைகளை வாழ்க்கை நடைமுறையில் உருவாக்கியுள்ளது. நன்மைகள் எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்வது மனித இயல்பு. ஆனால் தீமைகள் என்பது நாம் விரும்பாவிட்டாலும் இனிப்பில் தோய்த்த பாகக்காய் போல, எம்மை அண்டுவது தெரியாது.

இன்றைய புலம்பெயர் எம் உறவுகளிடத்து பலவகையிலும் பிரச்சனைகளை எதிர்நோக்குபவர்கள் எம் இளம் சந்ததியினரே. மேலே கூறிய இனம், மொழி, கல்வி, சூழல், சமயம், கலை, கலாச்சாரம், எல்லாமே இவர்களைப் பொறுத்த மட்டில் இரண்டு. இது யதார்த்தமான உண்மை. இதில் எதிலுமே முழுமையான அடிப்படை அறிவு, அனுபவம் இல்லாமல் காலத்தின் கட்டாயத்தாலும், பெற்றோர்களின் பாசமிகு கண்டிப்புடனும், தங்களுக்கென கனவுகள் இன்றி, முடிவுக் கம்பம் எதுவுமின்றி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எமது மொழி, சமயம், கலை, கலாச்சாரம் பற்றிய தெளிவான விளக்கத்தை அவர்களுக்கு நாம் எங்குமே கொடுப்பதில்லை. கோவில் திருவிழாக்களில் இறுதிநாட்களில் ஏன் தேர் இழுப்பதென்று எமக்கே சரியாக தெரியாத போது, நாம் எப்படி அவர்களுக்கு கற்றுத்தருவது. நாள் நட்சத்திரம் தேதி பார்த்து நடக்கவேண்டிய விழா, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பிரதிபலிப்பது, எம் சுயனலத்திற்காக நாம் நம் கடவுளையும் விட்டுவைக்கவில்லை என்பதற்கு நற்சான்று. சமஷ்கிருதத்தில் பூஜை, அர்ச்சனை !!! தமிழில் மட்டும் ஏன் “உண்டியல்” ? நாலுகலர் அர்ச்சனைச் சீட்டில், பெரிய சீட்டில் என்பெயர் நட்சத்திரத்தை அர்ச்சகர் வாசித்தபின் தான் நான் அங்கு பிரசன்னமாகி இருக்கின்றேன் என்று என்னைப்படைத்த ஆண்டவன் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன??

அர்த்தம் புரிந்து வழிபாடு செய்தால் ஒவொருநாளும் தேர்த்திருவிழாத்தானே எமக்கு. (சிவபுராணத்தில் கூறுவதுபோல் - “சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்”).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்கள் தங்கள் பகல் கனவுகளை நனவாக்க, பிள்ளைகளின் அபிலாசைகளை கேட்க மறக்கிறார்கள் என்பதைவிட மறுக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

எம் இளம்சந்ததியினரின் கல்விமுறைச முதாய ஒப்பீட்டுக்கும், சம்பாத்தியத்திற்கும்,சமுதாயத்தில தன்மானப் பிரதிநிதித்துவத்திற்கும், என்ற நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருகின்றதோ என்ற ஒரு அச்சம். இதைத்தாண்டி இது ஒரு நிதி முதலீடாகவும் கருதும் ஒரு வர்க்கம். மனிதகுலம் புரியும் அனைத்து தொழில்களுமே அவன் சம்பாத்தியத்திற்குத்தான், இதில் கல்வியை மட்டும் ஏன் நம் முன்னோர்கள் முதன்நிலைப்படுத்தினார்கள் என்று நாம் கொஞ்சம் சிந்தித்தால், ஒரு மனிதனுக்கு கல்வி என்பது அவனை சமுதாயத்தில் ஒப்பீட்டளவில் அடையாளம் காட்டுவதற்கு அல்ல , தான் கற்ற கல்வியை நடைமுறையில் தன் வாழ்க்கைக்கும், தான்சார்ந்த சமூகத்தை நெறிப்படுத்துவதற்கும், உலக நன்மைக்கும் உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்காகவே . அப்பொழுதே அவன் கற்ற கல்வி சிறப்புற்று, பயனடைந்தது எனலாம். தன்னையும் தன்சார் சமூகத்தையும் கலை, கலாச்சாரம், மொழி, சமயம் என்ற வாழ்க்கையின் புறக்காரணிகளின் உயர்வுக்கு ஊற்றாக வேண்டும். இவற்றையெல்லாம் இவர்கள் சாதிப்பதற்கு பெற்றோர்கள் எம்மிளம் சந்ததியினரின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு தன்முனைப்பில் ( Ego ) இருந்து வெளிவரவேண்டும்.

நாம் வாழும் குறுகிய வட்டத்துக்குள், பழகும் சமுதாயத்துக்குள் எமது இளம் சமூகத்தின் கல்வியை ஒப்பீடுசெய்து பெருமைப்படுகின்றோமே தவிர, நம்மில் ஒருசில குறிப்பிட்டளவு விகிதாசாரமான பெற்றோர்களே பிள்ளைகளின் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களை அவர்கள் விரும்பும், அல்லது அவர்கள் தங்களால் தாங்கள் தேர்ந்தெடுக்கும் துறையில்சாதனை படைக்க முடியும் என தேர்ந்தெடுக்கும் துறைகளுக்கு அனுமதிக்கிறார்கள். மூன்று தசாப்தம் , நான்கு தசாப்தம் வளர்ந்த நாடுகளில் முகவரியுடன் வாழ்கின்றோம் என்று மார்புதட்டி மயக்கத்தில் வாழும் நாம், எம் இளம் சந்ததியினரை இணைக்க ஏன்தயங்குகின்றோம் தவறுகின்றோம். இது இவர்கள் எதிர்காலத்தை இருளாக்கும் என்பதை நாம் ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றோம்? புலம்பெயர்வில் மட்டுமல்ல, புலத்திலும் கூட ஒரு பிள்ளை தப்பான பாதையில் போகின்றான் என்றால், நிச்சயம் அதன் காரணி பெற்றோர்களாகத்தான் இருக்க முடியும். சமுதாயத்தில் தங்கள் பெயர்களை தக்க வைப்பதற்கு இளம் சந்ததியினரின் எதிர்காலத்தை விலையாகக் கொடுக்கின்றார்கள் என்பதே உண்மை.

டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள் "சிதம்பர சக்கரம்" எனும் நூலில் எழுதிய கதை ஒன்றை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளாலாம் என விரும்புகின்றேன்.

கதையின் தலைப்பு "அரைகுறைகள்"

கதை இதுதான் ...

வெளிநாடுகளில் வாழும் ஆசிய இனத்தவர்களில் மிக அதிகமானோர் அவர்களின் இள வயதிலேயே மாரடைப்பால் இறப்பதற்கு அவர்களின் உணவு வகைகளே காரணம் என படித்தவர்கள் பலர் பணிபுரியும் அமெரிக்காவின் மிகப் பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கூறுகின்றது. இதை மனதார நம்பும் படித்தவர்கள் பலரில் பொறியியலாளர் பாஸ்கரனும் ஒருவர்.

கடந்த இருபது வருடங்களாக இலண்டனில் வசிக்கும் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்கரனுக்கு மருத்துவ விஞ்ஞானத்தில் அபார நம்பிக்கை. உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக மருத்துவ விஞ்ஞானம் கூறும் சகல விதிமுறைகளையும் தவறாது கடைப்பிடிப்பவர் பாஸ்கரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் புகை பிடிப்பதில்லை - புற்று நோயிலிருந்து தப்புவதற்காக, மது அருந்துவதில்லை - இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருப்பதற்காக, மாமிசம் புசிப்பதில்லை - எடையைக் கட்டுப்பாட்டுடன் பாதுகாப்பதற்காக, இனிப்பு பதார்த்தங்களைத் தொடுவதில்லை - நீரிழிவு நோயை விரட்டுவதற்காக, இப்படி எதை எதையோ தியாகம் செய்து தனக்குத்தானே அவர் அன்றாடம் விதித்துக்கொண்ட கட்டுப்பாடுகள் , நெறிமுறைகள் ஏராளம், ஏராளம். ஆண்டுதோறும் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைகள் கூட அவரது உடல் நிலை ஆகா!! ஓகோ!! என்று இருப்பதாக ஊர்கிதம் செய்தன.

ஒருநாள் , திருமணம் ஆகாத பதினாறு வயதுடைய அவருடைய ஒரே மகள் ஒரு ஆபிரிக்க இனத்தவனின் கருவை வயிற்றில் சுமப்பதாக அறிந்த போது மாரடைப்பால் இறந்து போனார் பாஸ்கரன்! இறக்கும் போது பாஸ்கரனுக்கு வயது நாற்பத்தி ஐந்து!.

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற (அவர் மகளின் நிலை தெரியாத ) அவரது படித்த நண்பர்களும் முன்னைவிட அதிக உஷாராக இருக்கிறார்கள்! அவர்கள் கொழுப்புச்சத்து நிறைந்த பதார்த்தங்களை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்வதில்லை, அன்றாடம் உள்ளெடுக்கும் கடலோரிகளை தவறாது கணக்கில் வைத்துக்கொள்கிறார்கள், தங்கள் வயது, உயரம், எடை இவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளை அடக்கடி சோதனை செய்து கொள்கிறார்கள்.

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற (அவர் மகள் நிலை தெரிந்த அவரது படித்த நண்பர்களும் உறவினர்களும் இப்பொழுது தங்கள் பிள்ளைகளை தாங்களே தினமும் பாடசாலைக்கு காரில் அழைத்துச் செல்கிறார்கள் - காரணம், அவர்கள் தனியே செல்வதை தடுப்பதற்காக. வெள்ளிக்கிழமைகளில் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள் - காரணம், பக்தி வளர்வதற்காக. வார விடுமுறைகளில் திருக்குறள், பரத நாட்டியம் , கர்நாடக சங்கீதம் போன்றவற்றை கற்க வைத்து அவர்களை மிகுந்த கலாச்சாரத்துடன் வளர்க்கிறார்கள் - காரணம், காப்பிய பாத்திரங்களைப் போல.

கதை முற்று.

வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும்,யதார்த்தமான அனுபவத்தையும் புரியும்வகையில் இளம் சந்ததிக்கு பெற்றோர்களாகிய நாம் வழங்கத்தவறின், அது அவர்கள் எதிர்காலத்தையே அளித்துவிடுமென்பதையே இக்கதை எமக்கு உணர்த்துகின்றது.

ஆணிவேருடன் அடிமரத்தையே பெயர்த்து அந்நிய நாட்டில் நட்டுவைத்துள்ளோம், அதில் ஒருசிறு பகுதி கிளையையாவது, ஊர்ப்பக்கம் உறவுப்பக்கம் வளரவிடுங்கள், உங்களுக்கு பிற்காலத்தில் ஆறியிருப்பதற்கு உதவும். இதுவும் சுயநலத்துடன் கூடிய பொதுநலம் தான்!!!!

குயில்கள் கூவட்டும் விடுங்கள்!!! கரையவைப்பதற்கு முயற்சிக்க வேண்டாம்!!!

இனிவரும் காலங்களில் எம் இளம் சந்ததியினரை முதன்மைப்படுத்த முயற்சிப்போம்.

நன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ கலாநிதி மகேசன் இராசநாதன் அவர்களும் அவரது துணைவியார் வாரிவளவைச் சேர்ந்த ஆசிரியர்களான அமரர் விநாசித்தம்பி தம்பதிகளின் மகளான மருத்துவ கலாநிதி சாரதாதேவி அவர்களும் 1970களில் நியூசிலாந்தில் குடியேறி கலை, சமய, சமூகப் பணிகளை மேற்கொண்டு வருபவர்கள். மருத்துவ கலாநிதி மகேசன் இராசநாதன் அவர்கள் உலகப் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பு உறுப்பினரும் அதன் தலைவராக நீண்ட காலம் சேவையாற்றியவரும் தொடர்ந்தும் ஆர்வத்துடன் அவ்வமைப்புடன் செயலாற்றி வருபவரும் ஆவார். சிறந்த எழுத்தாளரான மருத்துவ கலாநிதி மகேசன் இராசநாதன் அவர்கள் எழுதிய நூல்களான **"அறிவுக்களஞ்சியம்"** என்ற சிறுவர்களுக்கான நூல் 1969 ஆம் ஆண்டு இலங்கையிலும் **"தமிழா தமிழைக் காத்திடு"** என்ற நூல் 2001 ஆம் ஆண்டிலும் **"சிவபுராண விளக்கம்"** என்ற நூல் 2009 ஆம் ஆண்டிலும் **"ஔவையாரின் நான்கு நூல்கள்"** என்ற நூல் 2012 ஆம் ஆண்டிலும் நியூசிலாந்தில் வெளியிடப்பட்டது. இவருடன் இவரது துணைவியார் மருத்துவ கலாநிதி சாரதா-தேவி அவர்களும் இணைந்து நியூசிலாந்தில் **"மஞ்சரி"** என்ற சமூக சஞ்சிகையையும் **"சைவநீதி"** என்ற சமய சஞ்சிகையையும் வெளியிட்டு வருவதுடன் உலகப் பண்பாட்டுக் கழகத்தின் **"வலம்புரி"** என்ற சமூக வானொலியையும் வாரந்தோறும் நடத்தி வருகின்றனர்.

# தமிழர் வாழ்வில் கோயில்கள்

**மருத்துவ கலாநிதி. மகேசன் இராசநாதன், நியூசிலாந்து**

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனப் பாடினார் அதிவீரராம பாண்டியர். இந்தப் பொன்மொழி அவர் பாடிய உலகநீதியில் காணப்படுகிறது. இதே கருத்தைக் கொன்றை வேந்தனில் மூன்றாம் ஔவையார், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என எடுத்துக் கூறினார். பண்டைய தமிழர் கோயிலுக்கு அத்தகைய முக்கியத்துவம் அளித்தனர். அந்நாளில் கோயிலை மையமாக வைத்துத் தான் பல ஊர்கள் அமைக்கப்பட்டன. தமிழகத்தில் காணப்படும் கோயில்களுக்கு அளவு கிடையாது. அங்கு இன்றும் ஒவ்வாரு பத்துப் பதினைந்து கிலோமீட்டர் துாரத்துக்கு ஒரு கோயில் இருப்பதைக் காணலாம். பல பெருமை வாய்ந்த கோயில்கள் இன்று பராமரிப்பற்று, கவனிப்பாரற்று அழிவதைக் காணும்போது பெரும் மனத்துன்பம் ஏற்படுகிறது. தமிழ் ஈழத்திலும் இவ்வாறு பல கோயில்கள் இருப்பதைக் காணலாம்.

பண்டைய காலத்தில் கோயில்கள் இறை வழிபாட்டுக்கு மட்டும் பயன்படவில்லை. இறை வழிபாடு தான் கோயிலின் முக்கிய குறிக்கோளாக இருந்தாலும் பல்வேறு செயல்பாடுகள் அங்கு நடைபெற்றன. கோயில்கள் தமிழர்கள் வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் வகித்தன என்பதைப் பேராசிரியர் கலைக்கோவன் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். அவர் திருச்சியில் உள்ள இராசமாணிக்கர் சரித்திர ஆராய்ச்சி நிலையத்தில் இயக்குநராகப் பணியாற்றியவர். அவர் கூறியதின் தமிழாக்கம் பின்வருமாறு:-

"சமய நிறுவனங்களாக இருந்தாலும், கோயில்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைந்திருந்தன. இயல்பான சமுதாயம் முழுவதின் அடிப்படை கோயில்களைச் சுற்றிக் கட்டப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டது. மேலும் கோயில்கள் சிற்பம், நடனம், சித்திரம், இலக்கியம், கட்டிடம், இசை, மருத்துவம் போன்ற பல கலைகளை ஆதரித்தன."

(மூலம்- "Though religious institutions, these temples once were the fulcrum of life and the entire fabric of contemporary society was built and developed around temples. They also fostered the arts of architecture, sculpture, painting, literature, dance, music, medicine and such like." – Dr.R.Kalaikovan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்களில் நடந்த நடவடிக்கைகள் சிலவற்றை ஆராய்வோம்:–**

**அ) கலை நிகழ்ச்சிகள்:** அந்நாளில் கலை நிகழ்ச்சிகள், அரங்கேற்றங்கள் போன்றவை கோயில்களில் தான் நடைபெற்றன. எடுத்துக்காட்டாக பேரரசன் இராசராச சோழனின் மகள் குந்தவையின் பரத நாட்டிய அரங்கேற்றம் தஞ்சைப் பெரிய கோயிலில் தான் நடைபெற்றது. மேலும் சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்தின் அரங்கேற்றம் தஞ்சைக் கோயிலில் தான் இடம் பெற்றது.

**ஆ) பண்பாட்டு நிகழ்ச்சிகள்:** பட்டிமன்றங்கள், கதாப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் போன்ற பண்பாட்டு நிகழ்ச்சிகள் யாவும் கோயில்களில் தான் நடந்தன.

**இ) ஒன்றுகூடல்கள்:** கோயில்கள் உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து அளவளாவப் பெரிதும் உதவி புரிந்தன. அதே போல் இன்றைய இயந்திர வாழ்க்கையில் கோயில்கள் இந்த அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

**ஈ) பாதுகாப்பு மையங்கள்:** கோயில்கள் போர் நடக்கும் போது பாதுகாப்பு மையங்களாக மாற்றப்பட்டன. எடுத்துக்காட்டாக பெரிய கோயில் அமைந்திருக்கும் தஞ்சாவூர் கோட்டைக்குள் அவசர காலத்தில் ஆயிரக்கணக்கானோர் வாழக் கூடிய வசதிகள் இருந்தன. அரசன், அவனது குடும்பம், மந்திரிகள், முக்கியமான பிரமுகர்கள், சேனையின் பகுதிகளும் கோட்டைக்குள் வந்ததும், கோட்டைச் சுவர் மூடப்பட்டு எதிரிகளைக் கோட்டைக்குள் இருந்தும், வெளியே இருந்தும் தாக்கினார்கள்.

**உ) கட்டிடக்கலை, ஓவியக்கலை:** தமிழர்களின் ஒப்பற்ற கட்டிடக் கலைக்கும், ஓவியக் கலைக்கும் கோயில்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இந்தக் கலைகளின் வல்லுநர்கள் தமிழர் கோயில்களில் வந்து பல நாட்கள் ஆராய்ச்சி செய்து அரிய நூல்களை எழுதியிருக்கிறார்கள். பி.பி.சி. செய்தி நிறுவனம்(B.B.C.) தமிழகத்தில் உள்ள பிரமாண்டமான கோயில்களை "உலகின் மிகவும் பிரமிக்கத்தக்க கட்டிடங்கள்" என வர்ணித்திருக்கிறது. (The B.B.C. has described the Tamil Nadu temples as "some of the most amazing buildings in the world")

**ஊ) சரித்திர ஆராய்ச்சி:** பண்டைய தமிழகத்தின் கோயில்களில் காணப்படும் தமிழில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் தமிழரின் சரித்திரத்தை மிகவும் விளக்கமாக எடுத்துரைக்கின்றன. தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள கல்வெட்டுகள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பேரரசன் இராசராச சோழனுடைய கல்வெட்டுகள் பல உண்மைகளை எமக்குத் தெரிவிக்கின்றன.

மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள், கோயில்கள் பண்டைய தமிழர் வாழ்வின் மையமாக இருந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. எம்மில் பலர் கோயில் உள்ள ஊரில் பிறந்து, வாழ்ந்திருக்கிறோம். ஆதலால் கோயில் எமது வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாகிவிட்டது. கோயிலுக்குச் செல்வதின் முக்கிய பலன், பலருடன் சேர்ந்து, மனதை ஒருமைப்படுத்தி இறைவனைத் தியானம் செய்வதாகும். மனக் குரங்கை அடக்குவது முக்கியமானது. கோயிலுக்குப் போகும் போது மனம், வாக்கு. காயம் தூய்மையாக இருத்தல் அவசியம். வீண்பேச்சிலும், கேளிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு விருப்பமானால் சரியை, கிரியை ஆகிய தொண்டுகளில் ஈடுபடலாம். இவற்றைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதைப் போலவே சைவசமயம் கட்டாயம் கோயிலுக்குப் போக வேண்டும் என்று சொல்லவில்லை. பயன்படுத்துவோருக்கு மிகவும் சாதகமான சமயம் சைவசமயம் ஆகும். பிற மதங்களைப் போல் எதனையும் சைவ சமயம் கட்டாயப்படுத்துவதில்லை.

இன்று உலகின் பல நாடுகளில் தமிழர் வாழ்கிறார்கள். அவர்களில் பலருக்கு கோயிலுக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. கோயிலுக்குப் போய்த்தான் கடவுளை வணங்க வேண்டும் என்ற நியதி சைவசமயத்தில் இல்லை. பலர் கோயிலுக்கு ஒழுங்காகப் போவார்கள். ஆனால் அதன்பின் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். இது பெரும் தவறு. "படிக்கிறது தேவாரம், இடிக்கிறது சிவன் கோயில்" என நடக்கக் கூடாது. இறைவன் கோயிலில் மட்டுமல்ல, எங்கும் நிறைந்திருக்கிறார், ஏன் எமது மனத்திலேயே இருக்கிறார் என்ற உண்மையை நாம் உணர வேண்டும். இதை விளக்க ஓர் அருமையான சம்பவத்தைக் கூறலாம். மூன்றாம் ஔவையார் ஒரு நாள் பல தூரம் நடந்து களைத்துப் போய் கோயில் ஒன்றை வந்தடைந்தார். அந்தக் கோயிலின் வாசலுக்குப் பக்கத்தில் இருந்த திண்ணையில் அமர்ந்தார். அவர் மூலஸ்தானத்தை நோக்கி காலை நீட்டிக் கொண்டு இளைப்பாறினார். அதைக் கண்டார் கோயில் குருக்கள். அவருக்கு ஔவையார் யார் எனத் தெரியாது. ஔவையாரை நோக்கி, "ஏய் கிழவி, காலை மடக்கிக் கொள். இறைவனை இப்படி அவமதிப்பதா?" எனச் சினந்து கூறினார். ஔவையார் குருக்களை நோக்கி, "ஐயா, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இறைவன் இல்லாத இடத்தைக் காட்டுங்கள். அந்தத் திசையில் நான் காலை நீட்டுகிறேன்," என்று பணிவுடன் சொன்னார். குருக்கள் வெட்கித் தலை குனிந்தார். ஔவையாரிடம் பல முறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

சைவசமயத் தத்துவங்களின்படி இறை வழிபாட்டில் மூன்று படிகள் உள்ளன. அவை பின்வருமாறு:-

**அ) விக்கிரக வழிபாடு:** இதுவே முதல் படி. எமது மனங்களை ஒருமைப் படுத்த விக்கிரக வழிபாட்டில் ஈடுபடுகிறோம். இல்லாவிட்டால் பண்படாத எமது மனங்கள் அங்கும், இங்கும், எங்கும் ஓடிக் கொண்டிருக்கும்.

**ஆ) மனத்தியானம்:** இது விக்கிரக வழிபாட்டை விட உயர்ந்த படி. இதற்கு விக்கிரகம் தேவையில்லை. எல்லாவற்றையும் மறந்து, எண்ணங்களைத் துறந்து இறைவனைத் தியானம் செய்வதே உண்மையான மனத்தியானம் ஆகும். இதற்கு மௌனம் அத்தியாவசியம். முதலில் பேச்சை நிறுத்த வேண்டும். மௌனநிலையின் பின் எண்ணங்களைத் துறக்க வேண்டும். பேச்சு அற்ற, எண்ணங்கள் அற்ற நிலையை மோனம் என அழைக்கிறோம்.

**இ) முக்தி:** இது இறைவனை அடையும் மேன்மையான, இறுதியான நிலை. இதனால் பெறுவதற்கு அரிய பேரின்பம் அடைகிறோம். உலகில் வாழும் அதிகப்படியான மக்கள் முதல் படியான விக்கிரக வழிபாட்டைத் தாண்டி மேலே போவதில்லை. எனவே அவர்கள் கர்மவினையின் சுழற்சியில் அகப்பட்டு அது முடியும் வரை திரும்பத் திரும்பப் பிறந்து துன்பம் அடைகிறார்கள். தியானம் செய்வது எளிதல்ல. சாதாரண மனிதர்களான நாம் நல்லதைச் செய்து, தீமைகளைக் குறைத்தால் கர்மவினை நீங்கி, பிறவித் தொல்லை தீர்ந்து விரைவில் இறைவனை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் வாழ்வில் கோயில் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கிறது என்பதை ஆராய்ந்தோம். இறைவன் எங்கும் இருக்கிறார், ஏன் எமது மனதிலேயே இருக்கிறார் என்பதே மாபெரும் உண்மை.

திருமூலர் திருமந்திரத்தில் பாடிய ஒரு பாட்டு உடம்பிலே ஈசன் வாழ்கிறான் என்பதைக் காட்டுகிறது.

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்.**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே**

பொருள்: உடம்பைக் குற்றமுள்ள பொருளாக எண்ணியிருந்தேன். பின் அதற்குள்ளே சிறந்த பொருள் இருப்பதை அறிந்தேன். உடம்பிலே சிறந்தவனாகிய இறைவன் கோயில் கொண்டு இருக்கிறான் என்பதை உணர்ந்து அதைக் கவனமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


YORK
WELLNESS
CENTRE

PHYSIOTHERAPY ACUPUNCTURE MASSAGE CHIROPRACTOR

905.472.9119
905.471.1422
WWW.YORKWELLNESSCENTRE.COM
6605 HWY 7 E, UNIT 8, MARKHAM ON L3P 7P1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி விமலா பாலசுந்தரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சிறப்புக்கலைப் பட்டதாரியாவார். வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தில் நூலகவியலில் பட்டப்பின் தராதரச் சான்றிதழும் (Postgraduate Diploma), மற்றும் இலங்கை நூலகச் சங்கத்தின் தேர்வுகளிலும் சித்தியடைந்ததோடு, இங்கிலாந்து சென்று, University of Sheffield இல் நூலகவியல் தகவல் முகாமைத்துவத்தில் M.A. பட்டமும் பெற்றவர். வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகவும், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பணிபுரிந்த காலப் பகுதியில் (1984-1994), இலங்கை நூலகச் சங்கத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமை ஆற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இவர் எழுதிய 'நூலகவியலில் பட்டியலாக்கம்' (1992) என்ற நூலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும், 'கல்வி நிறுவன நூலகங்கள்', 'நூலகவியற் கலைச்சொற்றொகுதி' என்பனவும் இவரது நூல்களாகும்

# தாயகத்தில் பொதுசன நூலக சேவை

**விமலா பாலசுந்தரம்,** M.A.
முன்னாள் சிரேஷ்ட உதவி நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈழத்தமிழரின் அழியாச்சொத்து கல்வியாகும். இவர்கள் தாயகத்திலும், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமது பிள்ளைகள் கல்வியறிவிற் சிறந்தவர்களாக முன்னேறி சாதனைகள் பல படைத்துச் சமூகத்திற் சிறப்புடன் வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்படுபவர்கள்.

இந்த அடிப்படையில் பாடசாலை, பல்கலைக்கழகம் முதலான கல்வி நிறுவனங்களுக்கு அப்பால், ஒரு சமூகத்தின் அறிவு சார்ந்த தேவைகளுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து பண்பட்ட சமுதாயத்தை உருவாக்கும் நோக்கோடு பணியாற்றி வருவன நூலகங்களேயாகும். நூலகங்களில் உள்ள நூல்கள், ஆவணங்கள், நூலகத்தில் இருக்கக் கூடிய சேவைமுறைகள், அந்த நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர், நூலகத்தின் நிர்வாகம் முதலான விடயங்களின் அடிப்படையில் நூலகங்களைப் பொதுசன நூலகம், தேசிய நூலகம், பாடசாலை நூலகம், பல்கலைக்கழக நூலகம், விசேட நூலகம் என வகைப்படுத்தலாம். இவற்றிற் பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் விசேட நூலகம் ஆகியன சிறப்பாக அந்த நிறுவனங்களிற் பயிலும் மாணவர், ஆசிரியர், ஆய்வாளர், அலுவலர் ஆகியோருக்கே சேவை ஆற்றுகின்றன. ஒரு நாட்டில் உள்ள தேசிய நூலகத்தின் சேவையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைந்திருக்கும். பொதுசன நூலகமானது ஒரு நகரத்தில் அல்லது கிராமத்தில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அவர்களது வயது, இனம், மதம், மொழி, தொழில்நிலை, பொருளாதாரம், கல்வித்தகுதி அல்லது சமூக அந்தஸ்து என்ற வேறுபாடின்றித் தனது சேவையை வழங்குகின்றது.

கிராமத்திற் சேவையாற்றக் கூடிய ஒரு பொதுசன நூலகத்தில் இருக்க வேண்டிய நூல்கள் மற்றும் ஆவணங்கள், அவற்றைப் பயன்படுத்தும் வாசகரது தேவை, அந்தச் சமூகத்தின் முன்னேற்றத்தில் நூலகத்தின் பங்களிப்பு என்பனவற்றுடன் அந்நூலகத்தைப் பேணுவதற்கு அவ்வூர் மக்களும் வாசகரும் எவ்வாறு உதவலாம் என்பனபற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பொதுசன நூலகங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் பொதுசன நூலகம், நகரசபை நூலகங்கள், பிரதேசசபை நூலகங்கள், சமூக நிறுவன நூலகங்கள் என்ற நான்கு நிலையிலான நூலகங்கள் சேவை ஆற்றுகின்றன. நிர்வாக அடிப்படையில் இவ்வாறு வகுக்கப்பட்டிருப்பினும் அனைத்தும் பொதுசன நூலகங்களேயாகும். சமூக நிறுவன நூலகங்கள் கிராமங்களில் வாசிகசாலை என்ற பெயருடன் செயற்பட்டன. சமூக நிறுவனத்திற்குரிய சிறிய கட்டிடத்தின் ஒரு பகுதியில் நீண்ட ஒரு மேசையில் வாரந்தோறும் வெளியாகும் செய்தித்தாள்கள் வைக்கப்பட்டுக், கிராமத்தில் உள்ள முதியவர்கள் அங்கு சென்று அவற்றை வாசித்துப் பொழுதுபோக்கினர். காலப்போக்கிற் பல கிராமங்களிற் பொதுசன நூலகங்கள் தனித்துச் சிறு கட்டிடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டு அக்கிராமத்து மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. பொதுவாக இந்நூலகங்கள் சமூக நிறுவனத்திற்குரிய கட்டிடத்தில் ஒரு சிறிய அறையிலேயே அமைந்துள்ளன.

### கிராமிய நூலகங்களின் இன்றைய நிலை

கிராமிய மட்டத்தில் இயங்கி வரும் பொதுசன நூலகங்கள் அனேகமாக நூலக சேவையிற் பின் தங்கியவையாகவே காணப்படுகின்றன. இந்நூலகங்களிலே நூலக அபிவிருத்திக்கு வேண்டிய நிதி பற்றாக்குறை, இடவசதியின்மை, நூலகவியற் கல்வியும் அனுபவமும் உடைய நூலகர் இல்லாதிருத்தல் என்பன முக்கிய குறைபாடாக உள்ளன. இந் நூலகங்களில் உள்ள நூற் சேர்க்கையும் எண்ணிக்கையிலும், தரத்திலும் பின்தங்கியனவாகக் காணப்படுவதோடு, வாசகர் இலவசமாக பயன்படுத்துவதற்கான இணையத்தள வசதி மற்றும் நூலகக் கூட்டுறவுத்திட்டம் என்பன இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சில அரச சார்பற்ற நிறுவனங்களும், ஐக்கிய அமெரிக்க நிறுவனங்களும் வெளிநாட்டு நிதிஉதவித் திட்டங்களின்கீழ் உள்ளூர் நூலக சேவைகளை விரிவாக்குவதற்கு உதவும் பணியில் ஈடுபட்டதன்பயனாக ஒரிரு நூலகங்கள் தரமான நூல் சேகரிப்பைக் கொண்டுள்ளன. எனினும் பொதுவாக நோக்குகையில் இந்நூலகங்களின் வளர்ச்சியும் சேவையும் குன்றியனவாகவே உள்ளமை கவனத்திற்குரியதாகும்.

நூலகங்களின் வளர்ச்சிக்கு நிதி வசதியும், நூலகரும் மட்டும் இருந்தால் போதுமெனக் கருதுதல் பொருந்தாது. நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களிலும், நூலகங்களின் வளர்ச்சி பெரிதும் தங்கியுள்ளது. நூலகத்தைப் பயன்படுத்துவோரது தேவையும் எண்ணிக்கையும் அதிகரிக்கும்போது, நூலகர் இயல்பாகவே நூலகத்தின் அபிவிருத்தியிற் கவனம் செலுத்த வேண்டியவராகின்றார். வாசகருக்கு வேண்டிய புதிய நூல்களைப் பெறுதல், நூல்களையும் மற்றும் ஆவணங்களையும் சரியான முறையில் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து ஒழுங்குபடுத்திச் சேவை வழங்குதல் என்பவற்றிலும் நூலகர் கவனம் செலுத்த முயற்சிப்பார். எனவே நூலகர், வாசகர் ஆகிய இரு தரப்பினரதும் பங்களிப்பு நூலக வளர்ச்சிக்கு அவசியமாகிறது.

பொதுசன நூலகங்களை, அந்நூலகங்களை அண்மித்த பகுதியில் வாழும் மக்களே பொதுவாகப் பயன்படுத்துவர். கல்வியறிவற்ற நிலையில் கிராமியத் தொழில்முறைகளைச் செய்து வாழ்க்கை நடத்தியநிலை மாறி, இப்போது கிராமப்புறங்களிலும் படித்த சமுதாயம் உருவாகிக் கிராமியக் கைத்தொழில் வாய்ப்பும் வசதிகளும் பெருகி வருகின்றமை கண்கூடு. அத்தோடு நவீன பொதுசன ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, கணினி-இணையத்தளம் என்பனவற்றின் பாவனையும் கிராம மக்களின் அறிவு வளர்ச்சி மேலும் விருத்தி பெறவாய்ப்பாகவும் தூண்டுகோலாகவும் அமைகின்றன.

### நூல் ஈட்டல்

கிராம மக்களது தேவையை உணர்ந்து அவர்களது முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய நூல்களை இந்நூலகங்களிற் சேர்த்துக் கொள்ளுதல் நூலகரது கடமையாகும். நூலகத்திற்குக் கிடைக்கக்கூடிய நிதி உதவிக்கேற்ப இலக்கியம், சமயம், அறிவியல், உலக விவகாரம் முதலாகப் பல்துறை சார்ந்த நூல்கள், நாவல்கள், சிறுகதைகள் முதலான பொழுதுபோக்காக வாசிக்கக்கூடிய நூல்கள், உள்ளூர்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் வேண்டும். மாணவருக்கு உதவும் வகையிற் கல்விப் பொதுத்தராதர சாதாரண /உயர்தர வகுப்புக்களிற் கற்கும் மாணவருக்கான பாடப்புத்தகங்கள், பயிற்சி வினாத்தாள் கொத்துக்கள் என்பவற்றையும் இத்தகைய நூலகங்களிற் சேகரித்தல் பொருத்தமானது. அனேகமான பொதுசன நூலகங்களில் அக்கிராமங்களில் வாழும் அறிஞர் நன்கொடையாக வழங்கும் நூல்களும் முக்கிய இடம் பெறுகின்றன. வளர்முக நாடுகளில் நூலகங்களின் நூல் ஈட்டல் கொள்கையிற் கட்புல செவிப்புல ஆவணங்களும் முக்கிய இடம் பெறுவதோடு அவற்றிற்கெனத் தனியான சேவைப் பகுதியும் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். எமது பண்பாட்டை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட இறுவட்டுக்கள், ஒளியிழை நாடாக்கள் என்பனவும் பொதுசன நூலகத்திற் சேகரிக்கப்படுதல் மிகவும் பயனுடையதாகும்.

குறிப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் கிடைக்கக்கூடிய முக்கியமான வரலாற்றுக் குறிப்புக்கள், ஆலயங்கள் பற்றிய தகவல்கள் என்பன சேகரிக்கப்பட்டு நூலகத்தில் ஆவணப்படுத்தப்படுதல் மிகவும் முக்கியமானது. இவ்வாறு சேகரிக்கப்படும் முக்கிய ஆவணங்களை நூலகத்திற்கு வெளியில் எடுத்துச் செல்வது தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்தில் இயங்கும் நூலகமும் இவ்விடயத்திற் கவனம் செலுத்துதல் வரவேற்கத்தக்கதாகும். யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப் பட்டதன் பயனாக வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த ஆவணங்களை எமது சமூகம் இழந்துள்ளதை ஈண்டு நினைவுகொள்ளுதல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக சேவையும் வாசகர் எதிர்பார்ப்பும்

சிறியதொரு கட்டிடத்தில் அல்லது அறையில் இயங்கும் பொதுசன நூலகத்தினால் இன்றைய நவீன வசதிகளுடன் சேவையாற்றும் ஒரு நூலகத்தைப் போல பல்வேறு சேவைகளையும் தனது வாசகருக்குத் திருப்தியாக வழங்க முடியாது. அடிப்படைச் சேவை களான நூல் இரவல் வழங்கல் சேவை, உசாத்துணைச் சேவை என்பவற்றை ஆரம்பத்தில் வழங்கிப் படிப்படி யாகச் சேவையை விரிவுபடுத்துதல் பொருத்தமான தாகும்.

## நூலக சேவையில் தகவல் தொழில் நுட்பம்

வளர்முக நாடுகளில் நவீன தகவல் தொழில் நுட்பமானது நூலகங்களின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு வழங்குகின்றமை கண்கூடு. மின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நூலகச் செயற்பாடுகளைத் தன்னியக்க மயப்படுத்துவதனால், நூலக சேவைகளான சுழற்சி, தகவல் மீட்சி, தகவல் சேவை முதலானவற்றை விரைவாகச் செய்வதற்குப் பெரிதும் உதவுகின்றது. அத்தோடு வாசகர் நூலகத்தில் தமக்கு வேண்டிய நூல்களை இலகுவில் தேடிக் கொள்ளவும், இரவல் பெற்ற நூல்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் முடிகிறது.

நூலக சேவையினைத் திறம்படச் செய்வதற்கு நூலகங்களிடையே நூலகக் கூட்டுறவினை ஏற்படுத்திக் கொள்ளுதல் பயனளிப்பதாகும். அதன் தொடர்ச்சியாக நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நூலக வலைய அமைப்பினை உருவாக்குவதன் மூலம் குறிப்பிட்ட நூலகத்தில் வாசகருக்குத் தேவையான ஒரு நூல் இல்லாதபோது, நூலக வலைய அமைப்பிற் பங்குபற்றும் மற்றொரு நூலகத்தில் இருந்து அந்த நூலை மிக விரைவில் இரவல் பெற்று வாசகர் தேவையை நிறைவேற்ற முடியும். இவ்வாறு நூலக வலைய அமைப்பிற் பங்குபற்றும் நூலகங்களில் உள்ள நூலக வளங்கள் வாசகராற் பயன்படுத்தபடுவதோடு, நூலகர்கள் ஒன்றாக இணைந்து தமது பிரச்சனை களையும், கோரிக்கைகளையும் மேலிடங்களுக்கு முன்வைப்பதற்கும் இவ்வலைய அமைப்பு உதவுவ தாகும். தகவல் தொழில் நுட்பமானது நூல்கத்தில் இல்லாத மின்-சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றை வாசகர் இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது. எனவே தாயகத்தில் உள்ள பொதுசன நூலகங்கள் நூலக சேவையில் தகவல் தொழில் நுட்பத்தின் பயனையும், அவசியத்தையும் உணர்ந்து செயற்படுதல் நூலகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## சிறுவர் சேவை

கிராமத்திற் சேவையாற்றும் ஒரு பொதுசன நூலகத்தின் வாசகரை சிறுவர், மாணவர், வளர்ந்தோர், முதியோர் என வகைப்படுத்திக் கொள்ளலாம். பொதுசன நூலகங்களிற் சிறுவர்களுக்கான சேவை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. போதியளவு நூல்களையும், ஏனைய வாசிப்பு வளங்களையும் பெற்றுக்கொள்ள வசதி வாய்ப்பற்ற சிறாருக்கு இந்த நூலகத்தின் சிறுவர் நூலகசேவைப் பகுதியானது பெரிதும் உதவுகிறது. சிறுவர் சேவைப் பகுதியில் அவர்களது வாசிப்புத் திறனைத் தூண்டக்கூடிய சிறுவர் இலக்கியங்கள் சேகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். பொதுவாகப் பாடசாலை விடுமுறை காலத்திற் சிறுவரது வாசிப்புப் பழக்கம் குறைவடைகிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையிற் பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதி சேவையாற்றுதல் வேண்டும். விடுமுறை காலத்திலே நூலகத்திற் சிறுவர்கள் பெற்றுக்கொள்ளும் வாசிப்புப் பழக்கமானது தொடர்ந்தும் அவர்களது நாளாந்த வாழ்க்கையிற் பெரும்பகுதியை நூல்களுடன் செலவிட நெறிப்படுத்துகின்றது. அதேபோல முன்பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளுக்கான 'கதைநேரத்தையும்' நூலகத்தின் சிறுவர் பகுதியின் சேவையில் இணைத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

## மாணவர் சேவை

கிராமங்களில் உள்ள சிறு பாடசாலைகளிலே நூலக வசதிகள் இருப்பதில்லை. அப் பாடசாலைகளிற் கற்கும் மாணவருக்கும், ஆசிரியர்களுக்கும் பொதுசன நூலகத்தின் சேவை மிக அவசியமாகும். அப்பாட சாலைகள் பொதுசன நூலகத்துடன் தொடர்புகொண்டு தமது மாணவருக்கு மேலதிக சலுகைகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் வேண்டும். பாடசாலை மற்றும் பல்கலைக் கழக விடுமுறை காலங்களில் மாணவர் அமைதியாக இருந்து படிப்பதற்கும், இணையத் தளத்தினைப் பயன்படுத்தி வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குமுரிய வசதியினையும் கிராமத்தின் பொதுசன நூலகத்தால் மட்டுமே வழங்க முடியும்.

## வளர்ந்தோர் மற்றும் முதியோர் சேவை

கிராமங்களில் எல்லா வீடுகளிலும் கணினியைப் பயன்படுத்தக்கூடிய வசதிகள் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. பொதுசன நூலகத்தின் நிதி வசதிக்கேற்ப ஒரு கணினியையாவது கொள்வனவு செய்து வாசகர் பயன்பாட்டிற்காக சேவைப்படுத்துதல் வேண்டும். இதன்மூலம் வாசகர் இணையத்தளத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தித் தகவல்களை அறிதல், வேலை வாய்ப்புக்களைத் தேடுதல், விண்ணப்பித்தல் முதலான தமது தேவைகளை நிறைவேற்றி வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வாய்ப்பாகிறது. அத்தோடு கிராமங்களில் இருக்கும் மாற்றுத்திறானளிகளுக்கும் இத்தகைய வாய்ப்பினை வழங்கி அவர்களது முன்னேற்றத்திற்கு உதவுதலும் பொதுசன நூலகத்தின் கடமையாகிறது. முதியவர்கள் அமைதியாகவும். பாதுகாப்பாகவும் இருந்து நூல்கள், செய்தித்தாள்கள் என்பவற்றை வாசிப்பதோடு, இணையத்தளத்தையும் பயன்படுத்தித் தகவல்களை அறிந்து கொள்ளவும், மனம் நிறைவுகொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

**நிறைவாக,**

மேற்குறிப்பிட்ட அனைத்து சேவைகளையும் எமது கிராமங்களில் இயங்கும் பொதுசன நூலகங்களால் இப்போது வழங்கமுடியாதென்பது உண்மை. நூலகத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய நிதி வசதியும், இடவசதியும் வழங்கப்படும் நிலையில் நூலகவியற் கல்வியில் தேர்ச்சி பெற்ற நூலகரால் இத்தகைய சேவைகளை நூலகங்களில் அறிமுகப்படுத்தி வாசகரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நாம் எமது கிராமங்களின் முன்னேற்றத்திற்காக எத்தனையோ உதவிகளைச் செய்கின்றோம். ஒரு கிராமத்தின் வளமான, நலமான வாழ்க்கைக்குப் பாடசாலைகள், மருத்துவமனைகள் எத்துணை அவசியமோ, அதுபோன்றே மக்களுக்குச் சேவையாற்றத் தக்கதொரு நூலகமும் இன்றியமையாதது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்படுதல் காலத்தின் தேவையாகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.சு.வேலாயுதபிள்ளை ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கப் பண்டிதர். கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியராகப் பணியாற்றி பெயர்பெற்றவர். இடப்பெயர்வின் பின்னர் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் அதன் அதிபராகப் பொறுப்பேற்று இழந்த வளங்களைக் கட்டியெழுப்ப உழைத்தவர். காரைநகர் சைவமகா சபை, காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் தலைவராகவும் காரைநகர் அபிவிருத்திச் சபையின் உப-தலைவராகவும் பதவிகள் வகித்து சைவத் தமிழ்ப் பணியும் பொதுப் பணியும் ஆற்றுபவர். மாணவர் நூலகத்தின் முதல்வராகவும் செயற்படுகின்றார்.



# காரைநகர் மக்களுக்கு கலங்கரை விளக்காக மாணவர் நூலகம்

*பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை*

2013ஆம் ஆண்டு விஜயதசமியின் போது ஆரம்பிக்கப்பட்ட மாணவர் நூலகம் சிறந்த முறையில் இயங்கி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

நாடு அல்லது ஊர் பெருமை பெறவேண்டுமாயின் அவ்வூரில் வாழும் மக்கள் பண்பும் ஒழுக்க சீலராகவும் வாழவேண்டும். பண்பும் ஒழுக்கமும் உயர்வடைய வேண்டுமாயின் கல்விநலம் அவசியமாகும். கல்லூரி, பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கற்பதனால் பூரண அறிவைப் பெறமுடியாது. பரந்த அறிவைப்பெற நூல் நிலையமும் ஒன்றாக விளங்குகின்றது.

கப்பல்கள் திசைமாறிச் செல்லாது நேரிய வழியில் செல்ல கலங்கரை விளக்கம் வழிகாட்டியாக அமைவது போல மக்கள் நல்வாழ்வு வாழ நூலகங்கள் அறிவாலயமாக விளங்குகின்றது. "நூல் பல கல்", "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்றார் ஔவையார். வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது என்பதும் கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பதும் ஆன்றோர் வாக்கு.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத் தூறும் அறிவு"**

என்றார் வள்ளுவப் பெருமான். எனவே நூலகங்கள் ஊருக்கு அவசியமானதொன்றாகும். வைத்தியப் பணி புரிந்த சுப்பிரமணியம் நடராசா அவர்களின் உள்ளத்தில் பரிணமித்த மாணவர் நூலகம் படிப்படியாக செயல் உருப்பெற்று நூலகமாக எழுந்த பெருமை அவரைச் சார்ந்ததாகும். இவ் உன்னத திட்டத்தின் ஆரம்பக்கட்டத்தில் கனடாவில் இருந்து திரு. அமிர்தலிங்கம் மாஸ்ரர் அவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றிற்கும் மேலாக நிதி உதவியளித்த அன்பர்களினால் எமது ஊரிற்கான இந் நூலகத்திட்டம் சாத்தியமாகியுள்ளது. காரை அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் இந்நூலகம் பிரதான வீதியான மேற்கு வீதியில், சிவன்கோவில் வீதிச்சந்திக்கு அருகில் அமைந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் மிகப்பொருத்தமானதாகும். மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இரு பெரிய கல்லூரிகளுக்கு மத்தியில் தனியார் கல்வி நிலையங்கள் சூழ உள்ள பகுதியில் காற்றோட்டம், சூரியஒளி, மின்ஒளி நிறைந்த கட்டிடத்தில் அமைந்துள்ளதால் நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்த வசதிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்தஆண்டு (2014) 5662 பயனாளிகள் வாசிக்கும் செயற்பாட்டிலும், 6122 பயனாளிகள் இரவல் நூல் பெற்றும் பயனடைந்துள்ளனர். இந்நூலகத்தில் 295 மாணவர்களும் 85 ஏனையோர்களுமாக மொத்தமாக 380 பேர் அங்கத்தவராக உள்ளனர். இதுவரை 10264 நூல்களும், 310 சஞ்சிகைகளும், பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நூல்களும் சேகரிக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கான நூல்கள், பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள் (தரம் 1 – 13 வரை), பயிற்சி நூல்கள், பொது அறிவு நூல்கள், கலைக்களஞ்சிய நூல்கள், ஆங்கில தமிழ் அகராதிகள் என்பன நூலகத்தை வளம்படுத்துகின்றன.

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம், சுந்தரலிங்கம் கணநாதன் குயின்சி புத்தக நிலையம் (கொழும்பு), பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம், திரு முத்துலிங்கம், அவுஸ்திரேலியா காரை கலாச்சார மன்றம் கோமளா சச்சிதானந்தன் ஊடாகவும் மற்றும் தயானந்தன் ஊடாகவும், சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை, கனடா காரை கலாச்சார மன்றம், அம்பிகை புத்தக நிலையம் (யாழ்ப்பாணம்), ஐ.தி.சம்பந்தன் (இலண்டன்), ஜெயா புத்தக நிலையம் (கொழும்பு), சிவா மகேசன், சுப்பிரமணியம் நடராசா, க.பாலச்சந்திரன் (கோவளம்), பா.சோதிநாதன் (புதுறோட்), சி.கந்தையா போன்றவர்கள் பெருந்தொகையான நூல்களையும் ஏனைய தனிப்பட்டவர்கள் தம்மால் இயன்ற நூல்களையும் இந்த நூலகத்தின் வளர்ச்சிக்காக அன்பளிபாக வழங்கினார்கள். நூலகத்திற்கான தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கான நிதியுதவி பிரித்தானியா - காரை நலன்புரிச் சங்கத்தினாலும், IMHO நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டது. இவ் அன்பளிப்புகளைச் செய்த அனைவருக்கும் நூல் நிலையம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பூரணமான நூலகமாக ஊருக்கு அறிவு ஒளி பரப்பும் நூலகமாக விளங்க வேண்டுமாயின் பல தேவைகளை நூலகம் வேண்டி நிற்கின்றது. முதலில் நூலகத்திற்கென ஒரு யாப்பு அமைக்கப்பட்டு அபிவிருத்திச் சபையின் கீழ் தனித்து இயங்க வேண்டும். நூலகத்திற்கு நூலகப் பட்டம் பெற்ற ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவரின் கீழ் தற்போது இயங்கிவரும் பிள்ளைகள் மூவரும் துணை நூலகர்களாக நியமிக்கப்படவேண்டும். நவீன கற்றல் தொடர்பான கணினிகள் இன்றி அமையாதது. நூலக நிர்வாக செயற்பாட்டுக்கான கணினி, தொலைபேசி, போட்டோபிரதி எடுக்கும் இயந்திரம் போன்றன அத்தியாவசியமானதாகும். மேலும் மேல்மாடிக் கட்டிடமும் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். இவைகள் யாவும் பூர்த்தியடையும் போது நிறைவான நூலகமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

மாணவர் நூலகத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

01. ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரையான அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படக்கூடிய தரமான நூல்களையும் DVD, CD போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கற்றல் சாதனங்களையும் உள்ளடக்கிய பிரதான பிரிவு.

02. கணினிப் பிரிவு

03. படிப்படியாக அனைத்துப் பொதுமக்களும் பயன்படுத்தக்கூடிய முறையில் தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம், வரலாறு உள்ளிட்ட பல்துறைசார்ந்த நூல்களையும் உள்ளடக்கிய பிரிவு.

04. காரைநகரின் வரலாறு, இங்கு வாழ்ந்த பெரியார்கள், ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வரலாறு, என அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்து வைப்பதன் மூலம் வரலாற்று ஆவணக் காப்பகமாகவும் நூல்நிலையம் செயற்பட வழியேற்படுத்தப்படும்

05. மாணவர்களிற்கு வாசிப்புப் பழக்கத்தையும் நூலக பாவனையையும் ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

**நன்றி: பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் 25வது ஆண்டு விழா மலர் 'காரை தீபம்'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR INSURANCE NEEDS

- Life Insurance
- Travel Insurance
- Disability Insurance
- Estate Planning
- Non-Medical Insurance
- Mortage Insurance
- Dental & Drug Insurance
- RRSP
- Critical Illness Insurance
- Guaranteed Investments

MEGA Financial Group

**Kumaran** Nadarajah
Insurance Advisor
Dir : 647.403.4242
nkumaraninfo@gmail.com



RBC Insurance · Sun Life Financial · Industrial Alliance · Transamerica Life Canada · Equitable Life of Canada · Desjardins · Empire Life · Canada Life

# Buying Or Selling

*Please call me first and see the difference*

- FREE Market Evaluation
- FREE Professional Photography
- FREE Virtual Tour
- Home Staging
- Open House
- Maximum Advertising Until SOLD
- Negotiable Commission





**Kumaran** Nadarajah
Sales Representative
Dir : 647.403.4242
nkumaraninfo@gmail.com

HomeLife/Future Realty Inc.,
Off : (905) 201-9977

*"Honesty, Integrity and Services"*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kajanth Grocery

**Video - Vegetable - Money Transfer, Meat**

துரித பணமாற்றுச் சேவை, உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி, கோழி, ஆட்டு இறைச்சி,
கணவாய், இறால், மீன்
இன்னும் பல...........



S&Rentals of
Tamil Movies
Audios & CD's
Video Transfer
from any systems

**தமிழ்ப் படங்கள் ஓடியோக்கள், சீடிக்கள்**
**மற்றும் வீடியோ பிரதிமாற்றம்**

**KUMAR**
**Tel : 416-240-0039**

**1708 Kane St. Weston, Ont. M9N 2S4**
**(Jane & Lawrence)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கணித, பௌதீகவியல் ஆசிரியையாக பணியாற்றியவர். கனடாவிற்கு புலம் பெயர்ந்து வந்த இவர் இலத்திரனியல் பொறியியல்துறை தரக்கட்டுப்பாட்டு அலுவலராக தொழில் புரிந்தவர். சமூக அக்கறை கொண்ட இவரது பொதுப்பணி மற்றும் ஊருக்கான பணி ஈடுபாடு போற்றத்தக்கது. கனடா- காரை கலாச்சார மன்றத்தின் முதல் பெண் செயலாளர் என்ற பெருமையைப் பெற்றதுடன் முன்னுதாரணத்தையும் ஏற்படுத்தியவர். இவரது ஆளுமையுடன் கூடிய செயற்திறன் மன்றத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்றது. கலாநிதி. ஆ. தியாகராஜா ம. ம. வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடா கிளையினை நிறுவ முன்னின்று உழைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் என்பதுடன் சங்கத்தின் இணையத்தள நிர்வாகியாக செயற்படுபவர். கனடா பல்கலாச்சார வானொலியின் செய்தி வாசிப்பாளராக பணிபுரியும் இவர் அவ்வப்போது கட்டுரைகள் எழுதியும், கவிதைகள் புனைந்தும் வருபவர்.

# விண்மீன் கண்டு வியந்த விஞ்ஞானி எம்மண்ணின் அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் (1865–1922)

**-திருமதி.கிருஷ்ணவேணி சோதிநாதன்** B.Sc.

காரைநகரின் தலைசிறந்த மகான்கள் இருவரின் 150ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் காலம் இக்காலம் ஆகும். ஒருவர் 'அருணாசல உபாத்தியாயர்' என்றழைக்கப்படும் மகான் சிவத்திரு.சங்கரப்பிள்ளை அருணாசலம் (1864–1920). மற்றையவர் அல்லின் ஏபிரகாம் என்றழைக்கப்படும் சுப்பிரமணியர் அம்பலவாணர்(1865–1922). இவர்கள் இருவரும் விலைமதிப்பற்ற கல்விப்பணியை இருவெவ்வேறான திசைகளில் சென்று எமது சமூகத்திற்கு ஆற்றியுள்ளனர். மகான் ச.அருணாசல உபாத்தியாயர் காரைநகரிலும், யாழ்குடாநாட்டிலும் சைவப் பாரம்பரியம் மிக்க கல்விக்கூடங்களையும் ஆசிரியர் கலாசாலையையும் நிறுவி கல்விப்பயிர் வளர்த்தார். ஆனால் வானியல் மேதை அல்லின் ஏபிரகாம் கிறிஸ்தவராக மாறி உயர்கல்வி பெற்று வானியல் ஆராய்ச்சி செய்த அவரின் கண்டுபிடிப்புக்காக பிருத்தானிய வானியல் சங்கத்தின் F.R.A.S பட்டம் பெற்றார். தொடாந்து யாழ்ப்பாணக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து பல கல்வியாளர்களை உருவாக்கினார்.

சேர் ஐசக் நியூட்டனின் சமகாலத்தவரான எட்மன்ட் ஹாலி (Edmond Halley) என்ற வானியலாளர் தனது நண்பனான நியூட்டன் நிறுவிய இயக்க விதிகளைப் பிரயோகித்து ஒரு புதிய கண்டுபிடிப்பை நிலைநாட்டினார். அதாவது ஒரே ஒரு வால் நட்சத்திரம் தான் 1531, 1607, 1682 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் வானில் தோன்றிய வால் நட்சத்திரம் என்று கண்டுபிடித்தார். முன்னைய பதிவுகளை வைத்து ஹாலி இந்தக் கணிப்பீட்டை 1704 ஆம் ஆண்டில் நிரூபித்ததுடன் இந்த வால் வெள்ளி 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை வானில் தோன்றும் எனவும் அடுத்து 1758 ஆம் ஆண்டில் வானத்தில் தென்படும் என்றும் எதிர்வு கூறியிருந்தார். அவர் கூறியபடியே அந்த வால் வெள்ளி அந்த ஆண்டில் வானில் தோன்றியது. அப்போது ஹாலி உயிருடன் இருக்கவில்லை. ஆனால் அந்த வால் நட்சத்திரத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டு அது ஹாலி வால் நட்சத்திரம் (Halley's Comet) என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஹாலி நட்சத்திரம் அடுத்தடுத்து 1834, 1910 ஆம் ஆண்டுகளில் வானியலாளர்களினால் அவதானிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது காரைநகரைச் சேர்ந்த விண்ணியல் விஞ்ஞானி பேராசிரியர் அல்லின் ஏபிரகாம் அவர்களே 1910 ஆம் ஆண்டில் வானத்தில் தோன்றவிருக்கும் ஹாலி வால் வெள்ளி பற்றி மிகச்சரியாகக் கணிப்பிட்டு எதிர்வு கூறியவர் ஆவார். இவரின் சாதுரியமான கணிப்புக்காக பிருத்தானிய அரச வானியல் சங்கத்தின் கௌரவ உறுப்பினராக (Fellow of the Royal Astronomical Society) அல்லின் ஏபிரகாம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். பிருத்தானிய அரச வானியல் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் அல்லின் ஏபிரகாம் அவர்களே. F.R.A.S என்ற கௌரவம் பெற்ற முதலாவது இலங்கையர் அல்லின் ஏபிரகாம் என்பதனால் காரை மாதா மட்டுமல்ல இலங்கைத் தீவே மகிமை கொண்டு மகிழ்ச்சியடைந்தது.

காரைநகரில் பயிரிக்கூடல் என்னும் குறிச்சியில் கந்தப்பர் சுப்பிரமணியர், சுப்பிரமணியர் பார்வதி தம்பதிகளின் மூத்த மகனாக சுப்பிரமணியர் அம்பலவாணர் என்ற அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் 1865 ஆம் ஆண்டில் அவதரித்தார். இவருக்கு இரண்டு இளைய சகோதரரும், ஒரு சகோதரியும் இருந்தனர். 1876 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொலரா எனப்படும் கொள்ளை நோயினால் இவர் தம் பெற்றோரை இழக்க நேரிட்டது. இதனால் இந்த பிள்ளைகள் தமது பெரிய தந்தையான கந்தப்பர் சரவணமுத்து அவர்களுடன் வளர்ந்தனர். அந்தக் காலத்தில் அல்லின் ஏபிரகாம் அமரர் திருமதி. சேதி நாகமுத்து அவர்களின் திண்ணைப் பள்ளியில் அரிச்சுவடியையும் எளிய இலக்கிய இலக்கண நூல்களையும் கற்றார். அதன் பின் கார்த்திகேசு ஐயரிடம் கடினமான தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றார்.

1881 ஆம் ஆண்டில் உதவி நன்கொடை பெறும் மாணவராக தெல்லிப்பளை கிறிஸ்தவப் பாடசாலைக்குத் தெரிவாகிய அம்பலவாணர் அங்கே கிறிஸ்தவராக மதம் மாறியதுடன் தனது பெயரையும் அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் என மாற்றிக்கொண்டார். கல்வியில் சிறந்து விளங்கியமையால் அதே மிசனரிமாரின் ஆசிரிய பயிற்சிச்சாலையில் பயின்று கல்வி அதிபதியின் இரண்டாந்தரப் பத்திரம் பெற்று 1883 இல் வெளியேறினார். இவரின் கல்விப்புலமையை அறிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் இவரை பட்டப்படிப்பிற்காக யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ப்பித்தார். முதலாம் தரச் சித்தியுடன் 1888 ஆம் ஆண்டில் கலைமாணிப் பட்டதாரியான அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் அக்கல்லூரியிலேயே போதனாசிரியராகவும் நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் போதனாசிரியர் பதவி என்பது மிகவும் கீர்த்திமிகு பதவி என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டம் பெற்ற பின்னர் தாம் பயின்ற தெல்லிப்பளை ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். அல்லின் ஏபிரகாம் விரிவுரையாளராக நியமனம் பெற்று அக்கல்லூரிக்குச் சென்றபோது மகிழ்ச்சியடைந்த மாணவர்கள் அவருக்காக ஒரு பாடலை இயற்றி இசையமைத்துப் பாடி வரவேற்றனர். ஆனால் அம்மாணவர்களின் மகிழ்ச்சி சிலகாலமே நிலைத்திருக்க அல்லின் ஏபிரகாம் மீண்டும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ் துறைப் பேராசிரியராக 1891 இல் நியமனம் பெற்று சேவையாற்றத் தொடங்கினார். இக்காலப்பகுதியில் 1886 இல் உள்ளூர் முதுநிலைத் தேர்விலும், 1889 இல் சென்னை மெற்றிக்குலேசன் தேர்விலும் சித்தியெய்தினார். அதன் பின்னர் 1893



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் F.A பரீட்சையில் சித்தியெய்தி B.A பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே தோற்றினார். இப்பரீட்சையில் தனிச்சிறப்பான பெறுபேற்றைப் பெற்றார். அதே காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைந்த பல்கலைக்கழகமாக இயங்கத் தொடங்கியதுடன் அல்லின் ஏபிரகாம் அவர்கள் கணிதத்துறை, வானியல்துறைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியில் சுப்பர் சங்கரப்பிள்ளை என்பவரின் மகள் முத்தாச்சியை அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் திருமணம் முடித்தார். இவர்களுக்கு கனகசுந்தரம், அருளையா என்னும் இரு மகன்களும் ஜேன் நல்லம்மா, றோஸ் இராசம்மா என்னும் இரு மகள்களும் பிறந்தனர். தனது நாற்பதுகளில் மனைவியை இழந்தமையால் பொன்னையா தையமுத்து என்பவரை மறுமணம் முடித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் வானியல் விஞ்ஞானத்தை கற்ற அல்லின் ஏபிரகாம் தொடர்ந்து ஆர்வத்துடன் வானியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல கட்டுரைகளை எழுதினார். “The Place of Astronomy in Elementary School Education”, “Halley’s Comet”, “Tropical Heavens”, “Wonders of the Heavens”. என்பன அவற்றுள் சில கட்டுரைகளாகும்.

விண்ணியலில் மட்டுமன்றி தமிழ் மொழி, இசை, இலக்கியம், விவசாயம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்தார் பேராசான் அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் அவர்கள். இவர் இயற்றி இசையமைத்த வேதப்பாடல்களின் வரிகள் இன்றும் யாழ்ப்பாணத் தேவாலயங்களில் இறைவழிபாட்டின்போது இசைக்கப்படுகின்றன. சைவசமயத் தேவாரங்களையும் இசைக்கக்கூடியவரான அல்லின் ஏபிரகாம் ஒருமுறை சேர் பொன் இராமநாதன் காரைநகருக்கு வருகை தந்தபோது அவரின் உரை நிகழ்வதற்கு காலதாமதமாகவே, மக்கள் அமைதியின்றி இருக்க, அல்லின் ஏபிரகாம் தேவாரங்களைப் பண்ணுடன் இசைக்கத் தொடங்கினார். உடனே அமைதி நிலவவே அங்கே உரையாற்றத் தொடங்கிய சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அல்லின் ஏபிரகாம் தேவாரங்களை இசைத்த பாங்கினை வியந்து பாராட்டினார்.

தாய்மொழியாம் தமிழ் மொழியில் முதன்மைப் பற்றுடைய அல்லின் ஏபிரகாமை ஊரவர்கள் ‘பண்டிதர்’ என்றே செல்லமாக அழைப்பார்களாம். சுன்னாகம் குமாரசாமிப் புலவரைத் தலைவராகக் கொண்டிருந்த ‘ஆரிய திராவிட மொழிச் சங்கத்திலும்’ செயற்குழு உறுப்பினராக இருந்து செயற்பட்டு வந்தார். அத்துடன் இவர் இயற்றி இசையமைத்து வார இறுதிநாட்களில் எழுவைதீவிற்குச் செல்லும்போது பாடும் பாடல்கள் மக்களால் விரும்பி இசைக்கப்படும் பாடல்கள் ஆகும். வெளிநாட்டுக்காரர் ஒருவர் பேசும்போது, தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச் சிறந்த புலமை வாய்ந்த அல்லின் ஏபிரகாம் அவர்கள் மொழிபெயர்க்காவிட்டால் அந்தப் பேச்சு முழுமையடையாது.

சமூக அக்கறை கொண்ட அல்லின் ஏபிரகாம் அவர்கள் மது விலக்கு இயக்கத்தில் இணைந்து மதுவை ஒழிப்பதற்காகப் பாடுபட்டபோது ‘மதுவிலக்குக் கும்மி’ ஒன்றையும் பாடினார். எமது சமூகத்தில் தலைவிரித்தாடிய மதுப்பழக்கத்தை ஒழிப்பதில் அந்தக்காலத்தில் வெற்றியும் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய அல்லின் ஏபிரகாம் அவர்கள் தனது அன்றாடப் பணிகளை நேரம் தவறாமல் கிரமமாக ஆற்றுவார். மாலை நேரங்களில் தனது நெல் வயலில் வேலை செய்வதும் அப்போது சந்திக்கும் ஊரவர்களின் நலன் விசாரித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதும் இவரின் வழமையாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் இயக்குநர் சபை உறுப்பினராகவும், பாடசாலையில் வெளிவந்த Morning Star, Jaffna College Miscellany ஆகிய ஏடுகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார். கருணை கொண்ட மலர்ந்த முகமும், எளிமையும் அமைதியும் நிறைந்த தோற்றமும் உடைய அல்லின் ஏபிரகாம் அவர்கள் எப்போதும் வேட்டியும் மேலங்கியும் (Coat) அணிந்திருப்பார். தாம் எண்ணுவதை வெளிப்படையாகக் கூறும் சுபாவமும் தமக்கு சரியெனப்படுவதைத் துணிந்து செய்யும் குணமும் உடையவாராக ஏறத்தாழ முப்பது ஆண்டு காலம் தாம் கல்வி கற்ற பாடசாலைக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். கல்லூரியின் உபஅதிபரின் கடமைகளைச் செய்தபோதும் இவர் வெள்ளையரல்லாத காரணத்தினால் அந்தப்பதவியில் நியமிக்கப்படவில்லை என்பது துர்ப்பாக்கியமானதாகும். நோயுற்று சிலகாலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது 1922 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் விண்ணை நோக்கி விந்தைகள் செய்த எம் மண்ணின் மகிமைக்குரிய மைந்தன் அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் விண்ணுலகம் அடைந்தார். காரைநகரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்ற மரணச்சடங்கில் அப்போது யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகவிருந்த ஆங்கிலேயரான ஜோன் பிக்னல் பாதிரியார் ஆராதனை வழிபாடு செய்து இரங்கலுரை நிகழ்த்தினார். கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்கள் அல்லின் ஏபிரகாமின் புகழுடலை இடுகாடு வரை சுமந்துவாறு அணிவகுத்து சென்றனர்.

அல்லின் ஏபிராகம் இறந்தபின் 1986 ஆம் ஆண்டில் மீண்டும் தோன்றிய ஹாலி வால் நட்சத்திரத்தை கலாநிதி சிறில் பொன்னம்பெருமா தலைமையிலான வானியல் ஆராய்ச்சி நிபுணர் குழு இலங்கையில் அவதானித்தது. வளர்ச்சியடைந்த மேலை நாடுகளில் இவ்வாறான வால்வெள்ளிகளை அருகில் சென்று அவதானிக்கும் விண்கலன்களை அனுப்பும் இக்காலத்துடன் பார்க்கும் போது எந்த வசதிகளுமற்ற 1910 ஆம் ஆண்டில் எம்மூரவரான வானியல் ஆராய்ச்சியாளர் மதிநுட்பத்துடன் மிகச்சரியாகக் கணக்கிட்டு எதிர்வுகூறியிருந்தார் என்று அறியும் போது எமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கின்றது. இத்தகைய மகானை மதித்து நினைவுகூருவதற்காக காரைநகர் மக்கள் 'அல்லின் ஏபிராகம் அம்பலவாணர் சங்கம்' என்னும் ஒரு அமைப்பை நிறுவி அவர் வசித்த வீதிக்கு 'அல்லின் வீதி' என்னும் நாமம் சூட்டி அந்தப் பெயர்ப்பலகையை வீதியின் தொடக்கத்தில் நாட்டியுள்ளனர். எமது ஊருக்குப் பெருமை தேடித்தந்த இந்த மகாவிண்ணர், விண்ணியலின் விந்தைமிகு விஞ்ஞானி அல்லின் ஏபிராகம் அம்பலவாணர் அவர்களை காரைநகர் மைந்தர்கள் ஆகிய நாம் என்றும் போற்றி வாழ்த்துவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. எஸ்.கே சதாசிவம் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் காரை விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் கோல் காப்பாளர் என்ற நிலையில் அறிமுகமானவர். கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளின் பயிற்றுவிப்பாளர். தொழிற்சங்க அலுவலராகப் பணியாற்றியவர். கல்விக்கட்டமைப்பில் பல பதவிகளை வகித்தவர். ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பகத்தின் (German Technical Cooperation GTZ) வட-கிழக்கு மாகாண செயற்றிட்டங்களில் கடமையாற்றியவர். காரைநகர் அபிவிருத்தியில் சிறப்பாக கல்வி அபிவிருத்தியில் அக்கறையுடன் பணியாற்றி வரும் இவர் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான காரைநகரின் அபிவிருத்தி சார்ந்த கட்டுரைகளை எழுதிவருபவர்.



# கலங்கரைவிளக்கம், கோவளம் வெளிச்சவீடு, கோவளம்

## எஸ். கே. சதாசிவம்

கப்பல் திசை மாறாது வருவதற்காக துறைமுகத்தில் ஒரு குறிகாட்டியாக இருக்கும் வெளிச்சவீடானது பண்டைய காலத்தில் இருந்தமை பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் ‘இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பண்டைய காலத்தில் எவ்வாறு கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டன என கடியலூர் உருத்திரங் கண்ணனார் சிறப்பாகக் கூறியுள்ளார்.

“வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்தியை வேற்றருந் சென்னி
வின் பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலக்கு சுடர் நெகிழி
உரவு நீர் அழுவத்து ஒரு கலம் கரையும் துறை”.
(பெரும்பாண் 346 - 356)

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது கலங்கரை நிலையம் உயரமான கட்டடமாக இருந்தது. அது சாந்து பூசப்பட்டு தளவரிசை உள்ளதாய் இருந்தது மட்டுமல்லாமல் அதில் தீயிட்டு எரித்தனர் அல்லது உச்சியில் ஏறி விளக்கு வைப்பதற்கு ஏணிப்படிகள் இருந்தன என கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்ட விதம் கூறப்படுகின்றது.

வெளிச்சவீடுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் கலங்கரை விளக்கம், தீபஸ்தம்பம், கோரி எனப் பலவாறு அழைக்கப்பட்டது.

கலங்கரை விளக்கம் கடலை மூடிய இருள் படலத்தை கிழித்து எங்கும் பேரொளி பரப்பி கடலில் செல்லுகின்ற மரக்கலங்களுக்குத் துறைமுகம் இருக்கின்ற இடத்தையும் அவை செல்ல வேண்டிய வழியையும் காட்டுவன என ஈழத்துச் சிதம்பர புராணம் இயற்றிய புலவர்மணி சோ. இளமுருகனார் குறிப்பிட்டுள்ளார்.

- கலம் - மரக்கலம்,. கலங்கரை விளக்கம்:- கடலில் பயணம்செய்யும் மரக்கலங்களுக்கும் ஏனைய கப்பல்களுக்கும் கரையினைக் காட்டும் வெளிச்சம்.
- Light House: - A tower or other building that contains a strong light to warn and guide ships near the coast.

கடல் வழி அல்லது உள்ளூர் நீர் நிலைகளின் போக்குவரத்திற்கு உதவும் வகையில் அமைக்கப்படும் உயர்ந்த ஒடுங்கிய கோபுர (Tower) வடிவிலான அல்லது அது போன்ற அமைப்புடைய கட்டிடங்களின் உச்சியில் அமைக்கப்பட்ட விளக்குகள் (எரிவாயு, மின்சாரம், எண்ணெய் போன்றன ஒன்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இயக்கப்படுவது) வில்லைகள் மூலம் வெளிப்படும் ஒளி (Light) நீண்டதூரம் பிரகாசிக்கக்கூடிய வல்லமை உடையது. இவ்வாறு வெளிப்படும் வெளிச்சம் கடல்வழி அல்லது உள்ளூர் நீர்நிலைகளில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு பயணம் செய்யும் சரியான திசையைக் காட்டும் திறன் கொண்டவை. இவ்வாறான அம்சங்கள் பொருந்திய கட்டிடங்கள் வெளிச்சவீடுகள் என்று அழைக்கப்படும்.

வெளிச்சவீடுகள் ஆபத்தான கற்பாறைகள், கூட்டமாகச் செல்லும் பெரிய மீன் இனங்கள் என்பனவற்றைக் காட்டி கப்பல்கள் துறைமுகங்களுக்குள் நுழைய வழிகாட்டுவன. ஒருகாலத்தில் அதிகமாக பயன்பாட்டில் இருந்த வெளிச்சவீடுகள் பராமரிப்பதற்கான செலவீனங்கள் காரணமாகவும் மின் அணு முறையிலான கப்பல் செலுத்தும் முறைமை (Electronic Navigational Systems),புவிசார் இடமறியும் கருவி (Global Position System G.P.S) அறிமுகம் செய்யப்பட்டமையினாலும் வெளிச்சவீடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் குறைவடைந்தன. தற்போது வடபுல மீனவர்களும் புவிசார் இடமறியும் கருவியை (G.P.S) உபயோகித்து தம் தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வெளிச்சவீடுகள் ஆகாய விமானங்களுக்கும் சரியான திசைகாட்டுவதிலும் உதவியாக இருந்தன.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான வெளிச்சவீடுகள் கட்டப்பட்டன. இந்த வெளிச்சவீடுகள் இம்பீரியல் வெளிச்சவீட்டு சேவையினால் (Imperial Light House Service) இயக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்தன. சில வெளிச்ச வீடுகளைப் பார்த்துக்கொள்வதற்கான அலுவலர்கள் (Keepers) பணியாற்றினர். வரலாற்றில் காலனித்துவ ஆட்சியாளரின் குறியீடாக வெளிச்சவீடுகள் உள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் இலங்கைக் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட வெளிச்சவீடுகள் படிப்படியாக கையளிக்கப்பட்டு 1976இல் முழுமையான கையளிப்பு நிறைவு பெற்றது. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் (Sri Lanka Port Authority - SLPA) கட்டுப்பாட்டின் கீழ் பெரும்பாலான வெளிச்சவீடுகள் கொண்டுவரப்பட்ட போதிலும், மிகுதியான வெளிச்சவீடுகள் இலங்கைக் கடற்படையின் (Sri Lanka Navy) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இலங்கையில் 25 வெளிச்சவீடுகள் இருக்கின்ற போதிலும் 16 வெளிச்சவீடுகள் செயற்படும் நிலையில் உள்ளன. இவற்றில் நான்கு சர்வதேச வெளிச்சவீடுகள்.

### கோவளம் வெளிச்சவீடு

காரைநகரில் நீண்டு உயர்ந்து வரிசை வரிசையாக அமைந்த பயன்தரு தென்னை மரத் தோப்புக்கள் நிறைந்த கோவளம் எனப்படும் வளமான குறிச்சியில் கோவளம் வெளிச்சவீடு அமைந்துள்ளது. பார்ப்பவர்கள் பிரமிக்கத்தக்க கம்பீரமான தோற்றம் மிக்கது. கோவளம் வெளிச்சவீடு தொடர்பான ஆவணங்களில் Kovilan Point Light House is a Light House on the Island of Karaitivu in Northern Sri Lanka. எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவளம் வெளிச்சவீட்டிற்கான நிலையம் 1899ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1916 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கோவளம் வெளிச்சவீடு 30 மீற்றர் (98 அடி) உயரம் உடையது. சதுர வடிவிலான அடித் தளமும் உருளை வடிவிலான கோபுரமும் முருகைக் கற்களால் (Coral Stones) ஆனது. வெளிச்சவீட்டின் 15 அடி 6 அங்குலம் உடைய சதுர வடிவிலான அடித்தளத்தின் மீது 18 அடி உருளை வடிவிலான 69 அடி உயரமுடைய கோபுரத்தின் மேற்பகுதியில் கண்ணாடியில் வடிவமைக்கப்பட்ட விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளத்தில் இருந்து விளக்கு வரையிலான உயரம் 86 அடி 7 அங்குலம்.

வெளிச்சவீட்டின் கிழக்குவாயில் ஊடாகச் சென்று உட்பகுதியில் இரும்பினால் அமைக்கப்பட்டுள்ள ஏணிகள் மூலம் வெளிச்சவீட்டின் பலகணிக்குச் சென்று அடையலாம். வெளிச்சவீடு பாதுகாப்பாக செயற்படு நிலையில் இருந்தபொழுது மேலே ஏறிச் சென்று பார்வையிடக் கூடியதாக இருந்தது. வெளிச்சவீட்டின் உச்சியில் இருந்து கடற்பரப்பையும் காரைநகரையும் பார்வையிடக்கூடியதாகப் பலகணி (Open Gallery) அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 30 செக்கனுக்கு 2 வெள்ளை ஒளியைப் பாய்ச்சும் இவ் ஒளி 11 கடல் மைல் தூரத்திற்குச் செல்லும் (Range 11 Nautic miles) செல்லும் முதலாவது வெளிச்சம் காரைதீவின் வடமேற்கு மூலையில் இருந்து ஒரு கம்பத்தில் இருந்து காட்டப்பட்டது. வெளிச்சவீடு செயற்படு நிலையில் இருந்த போது எரிவாயுவின் மூலம் ஒளியூட்டப்பட்டது. இவ் வெளிச்சவீடு ஒளிரும் பொழுது கசூரினாக் கடற்கரையில் நின்று சிறப்பாக அவதானிக்க முடியும். வெளிச்சவீட்டுக்கு அருகாமையில் பாதுகாவலர்கள் (Keepers) கடமை நிமித்தம் வசித்த விடுதியும் காணப்படுகின்றது.

காரைநகர் வெளிச்சவீடு காரைநகரின் பழம் பெருமையின் சின்னமாக அல்லது வரலாற்று அடையாளமாக (Symbol of old glory or landmark) தொல் பொருள் பெறுமதிமிக்கதான (Archeological value) வரலாற்றுச் சிறப்பு மிக்க (Historical importance) கட்டுமானமாகும்.

இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கின்ற பாக்குடாவில் ஒரு முனையை இந்த வெளிச்சவீடு அடையாளப்படுத்தும். காரைநகரில் வெளிச்சவீடு அமைக்கப்பட்டமையால் பூகோள ரீதியில் நமது கிராமத்தின் கோவளம் முனை பெற்றுள்ள முக்கியத்துவத்தை அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள பலமான இலங்கைக் கடற்படையின் பிரசித்தமான கடல்வழிப்பாதையில் பெறுமதியான பெரிய அளவிலான வசிபாகத்தை காரைநகர், காங்கேசன்துறை, பருத்தித்துறை வெளிச்சவீடுகள் கொண்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரின் வடமேற்கு கடற்கரையில் வானுற உயர்ந்து பேரொளி உடையதாய் 'உயிர்களின் அறியாமையாகிய இருளை நீக்கி செல்கதி காட்டும் திருவருள் போல' ஆழ்கடலில் செல்லும் மரக்கலங்களுக்கெல்லாம் அடையும் துறைக்கு வழிகாட்டுவதாய் அமைந்திருக்கின்றது ஒரு கலங்கரை விளக்கம் என ஈழத்துச் சிதம்பரம் என்னும் நூலை எழுதிய சீகாழி கணபதீஸ்வரக் குருக்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தை இயற்றிய புலவர்மணி சோ. இளமுருகனார் காரை நாட்டின் வடமேற்குப் பக்கமாக கடலை அடுத்துள்ள பகுதி கோவளம் எனப்படும். கி.பி. 1284 இல் மார்க்கோப் போலோ சீனத்திலிருந்து மேலைத்தேசங்களுக்குப் போகும் வழியில், யாழ்ப்பாணத் துறைமுகம் ஒன்றிலே தாம் தங்கியதாகவும் அதன் பெயர் கோளம் என்றும் அங்கே சீனம் முதலிய தேசங்களிலிருந்து கப்பல்கள் வணிகம் செய்யும் பொருட்டு வந்துபோயின என்றும் கூறியுள்ளார். இவர் கூறிய கோளம் என்ற பெயரே கோவளம் என மாற்றமடைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இது உறுதிப்படுத்தப்படுமாயின் காரைநகர் கோவளம் கடற்கரையைக் குறிக்கும்.


கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஒளிபரப்பாது அமைதியாக ஒளிராது இருக்கும் காரைநகர் வெளிச்சவீட்டினை புனரமைப்பதற்கான பணிகள் வெற்றி பெற்று வெளிச்சவீடு கடல் பயணத்திற்கு ஒளிவீசுவது மாத்திரமன்றி காரைநகர் கால் நூற்றாண்டுக்கு முன் இருந்த நிலைமைக்கு மீண்டும் திரும்பிடவும் ஒளிபரப்ப வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.





## காங்கேசன்துறை வெளிச்சவீடு

காங்கேசன்துறை வெளிச்சவீடு 1893ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 22 மீற்றர் உயரமுடைய இவ் வெளிச்சவீடு கவனிப்பாரற்று உடைந்து விழும் நிலையில் காணப்பட்டது. எதிர்கால சந்ததியினர் யாழ்ப்பாணத்தின் பழம் பெருமையை அறிந்து கொள்வதற்கான அடையாளச் சின்னமான இவ் வெளிச்சவீட்டை இலங்கை காலாட்படையின் பொறியியலாளர்களும் (Sri Lanka Army Engineers) 5வது பொறியியல் சேவை படைப்பிரிவினரும் (5th Engineer Services Regiment of Sri Lanka Army) தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் புனருத்தாரணம் செய்தார்கள். வெளிச்சவீட்டின் மேலே திறந்த பலகணி (Open gallery) அமைக்கப்பட்டுள்ளது. விளக்கின் (Lantern) உச்சி தொப்பி போன்ற அமைப்பினாலான செம்பு கலந்த (Copper mixed) உலோகத்தால் மூடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் கடல்சார்ந்த செயற்பாட்டில் பிரித்தானிய கலைஞர்களினதும் பொறியியலாளர்களினதும் முயற்சிகளை நினைவு கொள்வனவாக இவ்வெளிச்சவீடு அமைந்துள்ளது.



கோவளம்

காரைநகரின் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வரலாற்றுச் சிறப்பு அம்சங்கள் கோவளம் பகுதியில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுத்துச் சிதம்பர புராணத்தை இயற்றிய புலவர்மணி சோ. இளமுருகனார் கோவளம் பற்றி பின்வரும் விபரங்களைக் குறிப்பிட்டுள்ளார் 'கரை மருங்கின் நெருங்கடர்ந்த நெடுங்காடு' கடற்கரையோரத்தில் தென்னைகள் நெருங்கி வளர்ந்த பெரிய தென்னந்தோட்டங்கள் நிறைந்த இடம் கோவளம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர், ஐரோப்பியர் போன்ற வெள்ளை இனத்தவர் பலர் குதிரை வண்டிகளில் வந்து கோவளம் கடற்கரைப் பகுதியில் சில நாட்கள் தங்கிச் சுகம் பெற்றுச் செல்வர் என்று அந்நாட்டவர் கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.





அந்தி மாலையில் வானம் செக்கர் படர்ந்து அழகான செவ்வானமாகக் காணப்படும். இக்காட்சியை மேற்குக் கடற்கரைகளில் காணலாம். ஞாயிறு சில காலம் மகரக்கோட்டிலும் (மார்கழி 21) சில காலம் கற்கடகக் கோட்டிலும் (ஆனி 21) நிற்றலாய் ஒரு தன்மையாய் காணமுடியாது. கோவளக் கடற்கரையில் இரண்டு காலங்களில் இக் காட்சியை காணக்கூடியதாக இருக்கும். இக்காட்சியை எக்காலத்திலும் ஒரே தன்மையிற் காணக்கூடியவாறு அழகு அழியாமல் உயிர்ப்புள்ள ஓவியமாக கோவளத்தின் மேற்கே உள்ள வானத்தில் பிரமதேவன் தீட்டிவைத்தான் எனக்குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் உயர் அந்தஸ்தைப் பெற்றவர்கள் தாங்கள் வாழும் காலப்பகுதியில் பிரபல்யம் பெற்ற வசதிகளைக் கொண்ட வீடுகளை அமைப்பது வழக்கம். ஒரு நூற்றாண்டுக்கு அண்மிய காலப்பகுதிக்குரிய பெரிய பல்வேறு அமைப்பினான வீடுகள் கோவளம் பகுதியில் காணப்படுகின்றன. அவ்வக் காலப் பகுதிக்குரியனவும், அவரவர் அந்தஸ்தை விளக்குவனவாகவும், அவரவர் குடும்பத்தின் வரலாற்றுப் பதிவுகளை கொண்ட பல வீடுகளைக் கண்ணுற்ற பொழுது காத்திரமான அப்பெரிய மனிதர்களின் சமூகப் பெறுமானத்தை உணரக்கூடியதாக இருக்கின்றது. பல எண்ணிக்கையான தென்னை மரங்கள், பனை மரங்கள், வேறு பயன்தரு மரங்களும் இல்லறைய மழை அலையில் செழிப்பாக மகிழ்வுடன் தங்கள் சொந்தக்காரர்களின் வருகைக்காக வழிமேல் விழிவைத்து காத்திருக்கின்றன.

## பேப்பர் சுவாமிகள்

காரைநகர் பற்றிக் குறிப்பாகக் கோவளம் குறிச்சி பற்றி எழுதும் போது பேப்பர் சுவாமிகளின் வரலாறு எழுதாவிடின் அவ்வெழுத்து முற்றுப்பெறாத ஒன்றாகவே அமையும். பேப்பர் சுவாமிகள் என மக்கள் மத்தியில் பிரபல்யம் மிக்க இவர் வீரபாகு வேலுப்பிள்ளை முருகேசு (V. V. முருகேசு) எனும் இயற் பெயர் கொண்டவர். கடலலைகள் தாலாட்டும் இயற்கை எழில் மிக்க அமைதியான சூழலில் ஆச்சிரமம் அமைத்து தவ வாழ்வு வாழ்ந்த ஞானி பேப்பர் சுவாமிகள் தன்னை நாடிவருபவர்களின் எண்ண ஓட்டங்களைச் சொல்லும் வல்லமை மிக்க ஞானம் கைவரப் பெற்றவர். தன் இறுதிக் காலத்தில் மண்டைப்பாழி எனும் குறிச்சியில் தவவாழ்வு வாழ்ந்து சமாதியானவர். ஞானியர் சித்தர் வரிசையில் தமது கிராமத்திற்குப் பெருமை சேர்த்தவர் வரிசையில் முதன்மையானவர்.

பாரத தேசத்தின் தேசபிதா மகாத்மா காந்தியின் மரணத்தை எதிர்வு கூறியதன் மூலம் இந்திய ஆட்சியாளர்களின் கவனத்தை தன்பால் ஈர்த்தவர். சுவாமிகள் அனுப்பிய தபால் அட்டை (Post Card) இந்தியாவிலுள்ள நூதன சாலை (Museum) ஒன்றில் பேணப்படுவதாகச் செய்திகள் இருந்த போதிலும் உறுதி செய்துகொள்ள முடியவில்லை. இலங்கையில் இந்தியாவின் உயர் ஸ்தானிகராகப் பணியாற்றிய திரு.V. V. கிரி தனது பதவிக்காலத்தில் பல தடவைகள் பேப்பர் சுவாமிகளின் தரிசனத்திற்காக வருகை தருபவர். பின்னர் இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் ஜனாதிபதியாகப் பணியாற்றியவர். பேப்பர் சுவாமிகளுக்கு சமஸ்கிருத மொழியில் இருந்த ஆர்வத்தை அறிந்த காஷ்மீர் முதலமைச்சர் சுவாமிகளுக்கு ஒரு தொகுதி சமஸ்கிருத நூல்களை அன்பளிப்புச் செய்தார்.

பாரத தேசத்தின் சுதந்திர போராட்ட வீரர் J.C. குமரப்பா நோயுற்ற வேளை சுவாமிகளின் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து ஆசி பெற்று குணமாகியவர். திரு குமரப்பா நோயின் நிமித்தம் தனியான குடிசையில் வசிக்க வேண்டிய தேவை இருந்தமையால் தனியாக குடிசையில் வசித்தார். அவர் வாழ்ந்த குடிசை ஆச்சிரமத்திற்கு அயலில் இருந்தது. அக்குடிசை குமரப்பா குடிசை என அழைக்கப்பட்டது. (Kumarappa Cottage)

யாழ்ப்பாணத்து சட்டத்தரணிகள், கல்விமான்கள் அரச அதிகாரிகள் எனப் பலதரப்பட்ட மனிதர்கள் சஞ்சலம் மிக்க வேளைகளில் சுவாமிகளின் ஆசி பெறுவதற்காக ஆச்சிரமத்துக்கு வருகை தருவது வழக்கம்.

இங்கிலாந்து தேசத்து நாளேடுகளில் நிருபராக, கட்டுரையாளராக பணியாற்றியவர். செழுமையும், புலமையும் மிக்க ஆங்கில எழுத்தாற்றல் பேப்பர் சுவாமிகளுக்கு அரசியல் வாதிகள் மத்தியிலும் உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தது.

அமெரிக்காவின் தாவரவியற் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் விஞ்ஞான பா செயலமர்வுக்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வருகை தந்த போது பேப்பர் சுவாமிகளை சந்திப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். பேப்பர் சுவாமிகளைத் தரிசித்த பின் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர் ஒருவருடன் பின்வருமாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதாக தெரிவித்தார் அவ்வாசிரியர்.

சுவாமிகள் தான் அறிந்திராத பல பத்திரிகைகள் பற்றி தன்னிடம் வினவியதாகவும் மேலும் பல முக்கியமான உலக விடயங்களைப் பற்றி தன்னிடம் தெரிவித்தமை தன்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியதாகவும் உங்கள் கிராமத்தில் மிகப்பெறுமதியான சுவாமிகள் வாழ்ந்து கொண்டிருப்பதையிட்டு நீங்கள் பெருமை அடையவேண்டும் எனக் குறிப்பிட்டதாக அவ்வாசிரியர் தெரிவித்தார்.

சுவாமிகளிடம் ஆங்கிலம், கணிதம் பயின்ற இளைஞர்கள் பிற்காலத்தில் அப்பாடங்களைத் திறமையாகக் கற்பித்து பெருமையடைந்தார்கள். ஒரு நாள் ஆச்சிரமத்தில் உணவுப் பொருட்கள் இல்லாமையை சுவாமிகளிடம் தெரிவிக்கத் தயங்கி நின்ற மாணவர்களைப் பார்த்து சுவாமிகள் உணவுப் பொருட்கள் பாதி வழிக்கு வந்துவிட்ட உணவைச் சமைப்பதற்கான பாத்திரங்களை தயார் செய்யுமாறு கூறினார். சிறிது நேரத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபரின் வாகனம் ஆச்சிரமத்திற்குத் தேவையான சமையல் பொருட்களுடன் வந்து சேர்ந்தது. சுவாமிகளின் அருட்பேற்றை ஏற்கனவே உணர்ந்திருந்த மாணவர்கள் இச்சம்பவத்தின் பின் மேலும் பக்திபூர்வமாக நடக்கலாயினர்.

ஆச்சிரமத்தில் அதிக எண்ணிக்கையான தோசைகள் சுடவேண்டிய தேவை இருந்தமையால் தோசை சுடுபவர் ஈரத்தன்மை மிக்க துணியை நெஞ்சில் கட்டி அடுப்பின் செம்மையில் இருந்து தன்னைப் பாதுகாப்பது வழக்கம்.

பேப்பர் சுவாமிகள் சமாதி அடைந்த பின்னர் 1990 வரை சுவாமிகளின் சமாதியை தரிசிக்க வருகை





பேப்பர் சுவாமிகளின் சமாதி அமைந்துள்ள நடைபாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்ற வலிகாமத்தைச் சேர்ந்த தியாகராஜ சுவாமிகள் பேப்பர் சுவாமிகளின் சமாதி காரைநகருக்கு பெரிய அனர்த்தங்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் சக்தி உடையது எனக் கூறினார்.

திரு. ஆ. தியாகராஜா அவர்கள் காலையில் அஞ்சல் அலுவலகத்திற்கு சென்று சுவாமிகளுக்கு உரிய கடிதங்களைப் பெற்று வந்து சுவாமிகளிடம் கையளித்த பின்னரே பாடசாலைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சுவாமிகள் நயினாதீவு நாகபூசணி அம்பாளை குலதெய்வமாக வணங்கியவர். அடிக்கடி நயினாதீவு சென்று அம்பாளை வழிபடும் வழக்கத்தைக் கொண்டவர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவீழிமிழலையில் வீற்றிருந்த இறைவன் புகழ்பாடி பதிகங்கள் பாடியவர். பேப்பர் சுவாமிகள் வாழ்ந்த ஆச்சிரமத்திலும் திருவீழி மரம் இருந்தது. திருவீழி மரத்தின் கீழ் இருந்து சுவாமிகள் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுவது வழமை. அவரின் சுற்றுத்துறையான்களின் கிருத்தவைகள் யாவும் இம்மரத்தின் கீழே நடைபெற்றது. இம்மரத்தின் கீழ் அமர்ந்து செயற்படுவதன் மூலம் ஆன்மீக இன்பத்தை அனுபவித்தார். ஆன்மீக உள்ளுணர்வுகள் வெளிப்படுவதற்கு இம்மர நிழல் சுவாமிகளுக்கு உந்து சக்தியாக அமைந்தது.

நான் பத்து வயது சிறுவனாக இருந்த போது தந்தையாருடன் பேப்பர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்குச் சென்றிருக்கின்றேன். அமைதியான சூழலில் இருந்த ஆச்சிரமம் நினைவில் இருக்கின்ற பொழுதும் எழுதுவதற்காக எதுவும் ஞாபகத்தில் இல்லை.

பேப்பர் சுவாமிகளின் காலத்தில் இளைஞர்களாக இருந்து இன்று வரலாற்றுப் பதிவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரியவர்களும் சுவாமிகளைப் பக்தி சிரத்தையுடன் நினைவில் வைத்திருக்கின்ற பெரியவர்களும் இன்றும் சுவாமிகளின் சமாதிக்குச் சென்று தரிசனம் பெற்றுக் கொண்டிருக்கின்ற பெரியவர்களும் மேற்கூறிய அனைத்தையும் தெரிவித்தமைக்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இப்பெரியார்களின் கருத்துக்கள் பெருமதிமிக்க பேப்பர் சுவாமிகளின் வரலாற்றை இன்றைய இளம் சமூகம் அறிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

பேப்பர் சுவாமிகளின் சமாதி அமைந்துள்ள நண்டுப்பாஞ்சி காரைநகரின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக பாதுகாக்கப்பட வேண்டிய இடம் என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

## இந்தியாவின் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள கோவளம்

இந்தியாவின் தென் மாகாணங்களில் ஒன்றான கேரள மாநிலத்தில் (State) திருவனந்தபுரத்திற்கு 17 கிலோமீற்றர் தொலைவில் கோவளம் எனும் கிராமம் அமைந்துள்ளது. அமைதியான மீன்பிடிக் கிராமமாகக் காணப்பட்ட கோவளம் பகுதி 1930 களில் சுற்றுலா மையமாக அறிமுகப்படுத்தப்பட்டு 1970 களில் சுற்றுலாத்துறையில் பிரபல்யமான இடத்தைப் பெற்றுக் கொண்டது. திருவாங்கூர் மேன்மை தங்கிய மகாராணி கோவளம் பகுதியில் உள்ள கற்பாறை ஒன்றின் அரண்மனை ஒன்றினை அமைத்ததன் மூலம் கோவளம் பிரபல்யம் பெற்றது.

இந்தியாவுக்கு வருகை தரும் மேற்கத்தைய நாட்டு சுற்றுலா பயணிகள் மத்தியில் கோவளம் கடற்கரை மிகவும் பிரசித்தி பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# CAP REIT

**Canadian Apartment Properties**
**Real Eatate Investment Trust**

**மிகவும் தரமான**
**வாடகைக் குடியிருப்பு**

Visit our website
www.capreit.net



WE HAVE YOU COVERED IN SCARBOROUGH

1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included
416-759 9977

10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included
416-289 7423

25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included
416-293 0924

215 Markham Road
(Markham & Eglinton)
1,2 Bedrooms form $880
Utilities Included
416-267 5223

30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,2,3 Bedrooms from $870
Utilities Included
416-281 5353

567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included
416-431 6994


1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included
416-438 3400

4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included
416-724 4040

370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included
416-266 7025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்மாஸ்டர் பல்கலைக்கழகத்திலுடைய ஓய்வுநிலைப் பேராசிரியரான கலாநிதி தில்லைநாதன் சிவகுமாரன் 1963ஆம் ஆண்டு கனடாவிற்கு புலம்பெயர்ந்து வந்திருந்தாலும் தாம் பிறந்த காரை மண்ணை மறவாது ஆழமாக நேசிப்பவர். கனடா வாழ் காரை மக்களின் 'அன்பையும் மதிப்பையும் பெற்றவராக விளங்கும் இவரை அவர்கள் தங்களது பல நிகழ்வுகளுக்கும் விருந்தினராக அழைத்து மகிழ்பவர்கள். தமிழ்பற்றும் இனப்பற்றும் ஊர்ப்பற்றும் மிகுந்த கலாநிதி சிவகுமாரன் கவிதை இயற்றுவதிலும் கட்டுரை எழுதுவதிலும் ஆர்வத்துடன் செயற்படுபவர். இவரால் எழுதப்பெற்ற கட்டுரைகள் கவிதைகள் பல 'காரை வசந்தம்' சஞ்சிகையிலும் கனடாவிலிருந்து வெளிவரும் 'தாயகதீபம்' பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன. 'தாயகதீபம்' பத்திரிகையில் வெளிவந்த கவிதை ஒன்று இங்கே எடுத்து வரப்பட்டுள்ளது.



# வாழ்க்கை அனுபவமும் கடமையும்

கருவாய் இருந்து காலம் செல்லவே
உருவம் பெற்று உலகில் பிறந்தேன்
அழுத வேளையே அன்புப் பெற்றோர்
முழுமனம் மகிழ்ச்சியில் மூழ்கு வென்றே

மழலை கேட்டு மகிழ்ந்தனர் மிகவே
வளர்ந்து வரவே பள்ளி அனுப்பினர்
கற்றும் கல்வி காலம் செல்லக்
பெற்றுக் கொடுக்கும் பெருவாழ் வென்றே

கல்வி கற்கக் கற்பித்த ஆசிரியர்
எல்லோரும் ஏணியை ஏற்றிய - நல்லோரே
நன்றி உடையவராய் நாமென்றும் நடந்தால்
என்றும் சிறக்கும் வாழ்க்கை

வாலிப வயது வந்திட வாழ்வில்
தாலி கட்டிக் தம்பதி களாக
இல்லற வாழ்வை இனிதாய் ஏற்பது
நல்லற வாழ்வின் நன்மைகள் புரியவே

வெற்றி அடைய விரும்புவோர் பலரே
பெற்ற வெற்றியோர் மிகவும் சிலரே
வேதனை இன்றி வெற்றி வராதே
சாதனை ஒருவரது தளரா உழைப்பே

நாடு சிறக்க நல்லதைச் செய்வோம்
வீடு சிறக்க விளக்கை ஏற்றுவோம்
கல்வியிற் சிறக்கக் கடையுங் கற்போம்
செல்வது வேண்டின் விடாது உழைப்போம்

அன்பு வர அழுக்காறு அகலும்
இன்பம் வந்தால் துன்பம் அகலும்
கதிரவன் வந்தால் காரிருள் அகலும்
மதியுடன் வாழ்ந்தால் விதியும் மாறும்

வாழ்க்கை நதியில் வெள்ளம் போலே
நாளும் கரைக்கு நம்மைச் சேர்க்குதே
சூழும் காற்றில் சுழன்றும் கவிழ்ந்தும்
வாழ்க்கையும் புயலில் வெள்ளம் ஆகலாம்

மதுவும் போதையும் வாழ்வைக் கெடுக்க
எதுவும் வேறு தேவை இல்லையே
மானம் இழந்தவர் மதுவால் பலரே
பானம் அருந்தின் பயனில் நீரே

எத்தனை நாளாய் இறைவனை வேண்டிப்
பெற்ற பிள்ளைகள் விட்டே வாழ்வதும்
ஒருவரும் எண்ணி உதவ இல்லையே
வருந்திக் கிடக்கும் வயோதிப காலமே

நாளும் எம்மை நன்றாய்ப் பார்த்து
வாழ்ந்த பெற்றோர் வயதாய் இருக்கும்
காலம் அவர்மேல் கவனம் செலுத்தல்
மானுடன் செய்யும் மக்கள் கடனே

கண்ணிலே தென்படும் காட்சிகள் யாவுமே
எண்ணி நிஜமென ஏற்காதே - உண்மையை
ஆராய்ந்த பின்பே அறிவாயே கானல்நீர்
நீராகப் பார்த்தால் நினைத்து

வாழும் பொழுது மனிதராய் வாழ்வோம்
தாழ்ந்து இறைவன் தாள்கள் பணிவோம்
காலம் முழுதும் கடமைகள் செய்வோம்
ஞாலம் போற்றும் நன்மைகள் செய்வோம்

ஆன்மா என்றும் அழிவது இல்லை
மானிட உடம்பு மட்டும் அழியுமே
பகைத் தீது பலரும் பாடமே
அகத்தில் எங்கள் அச்சம் நீங்கவே

கலாநிதி தி. சிவகுமாரன்
M.Sc.Ph.D., FRSC, FCACB, DABCC.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி கென்னடி விஜயரத்தினம் தற்போது எத்தியோப்பியாவில் மடவளபு பல்கலைக்கழகத்தில் ஆங்கில இணைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். நம்மூரின் முன்னாள் ஆங்கில ஆசிரியர்களான விஜயரத்தினம் - சிவயோகம் தம்பதிகளின் இளைய மகனான இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலவியலில் இளமாணி (1991) மற்றும் முதுமாணி (1993) பட்டங்களைப் பெற்றார். 1994 முதல் 2003 வரை கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றினார். 2003இல் கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக தமிழ்நாடு, திருநெல்வேலியில் மனோண்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் இணைந்து 2009இல் அறிஞர் (கலாநிதி) பட்டம் பெற்றார். அவ்வப்போது தமிழ்த் தேசிய அரசியல், தமிழர் அடையாளம், பண்பாடு தொடர்பான கட்டுரைகளும் கவிதைகளும் எழுதி வருபவர். இவர் 1990இல் பல்கலைக்கழக மட்டக் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்று அந்நாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியிடமிருந்து பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுவிஸ் - காரை அபிவிருத்திச் சபையின் ஐவர் கொண்ட மொழி, கல்வி மற்றும் கலை மேம்பாட்டுக் குழுவில் செயலாற்றுகிறார். இவரது ஆக்கங்கள் கடந்த 2007 காரை வசந்தம் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

# காரைநகர்ச் சிவன் அந்தாதி இருபது

- கலாநிதி. கென்னடி விஜயரத்தினம் -

திண்ணபுரத் தேனே என் திரவியமே உனைப் பிரிந்து
திண்ணையிலிப் பேரேறாய்ப் பொருள் முயங்கித் திரிகின்றேன்- என்
மண்ணை விடுத்தேகி மேற்குலகில் மலக்குற்றேன்! - நானோ
கண்ணையிழந்து கதறுகிறேன்! எப்போநின் கழலடிக்குத் திரும்புவதோ? 1

திரும்புவனோ பரிசில் பரிசில் வாழ்வறுத்து அடிக்
கரும்பன்ன காரைநகர்த் தாயின் மடிச் சுவர்க்கம்!
அரும் பொன்னையீந்து கரிவாங்கும் கண்ணிலியேன்!
திரும்பவுமோர் விதிசெய்வாய் திரும்பிடவே திருவூர்க்கே! 2

திருவூர்த் தொலைத்து தொரந்தோவிற் தியக்குற்றேன்
பெருவூர் மொன்றியலும் வருவூர்க்கு வழியாமோ? கற்பக
தருவூரான் என் சந்ததியும் நோர்வேயில் நிலைத்து - நீள்
துருவவூரிற் திரிபடைந்த வாழ்வாமோ? திசைகாட்டாய் புலம்புகிறேன்! 3

புலம் பெயர்ந்தேன் பெருமானைப் பிரிந்தேன் முன்னாள்
நலம் நிறைந்த நீற்றை நுதலிட்ட நின்னடியார் நெடுங்கழுவேற்றி
வலம் குறைத்து நந்தேச நலத்தை இன்றளவும் குழியிட்ட
வலங் குறைந்தார் சந்ததி வாழிடம் புக்கேன் இலண்டனிலே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் நகராமோ இனியானைப் பிரிந்த எனக்கு நரகாமோ!
செருமெனியின் செல்வமெலாம் திருவாமோ அன்றி எருவாமோ!
திருமேனிப் பொடியுடையாய் திருவருளைத் தாராயோ! சிவகாமி
கருமேனித் தாயே! திருவையாற்றின் தமிழே! கரைசேராய்! 5

கரைதெரியா நானும் கலக்குற்று அருளுக்கும் பொருளுக்கும்
திரைதெரியா மயங்கித் திக்கிழந்தேன்! திக்கரைவேல்
வரையேற வாழ்வளித்த தாதையே! வயதாகி வளைந்து
நரைமேவுமுன் நாதியிலியெனக்கு வழிகாட்டு வடகாடே! 6

வடகாட்டில் நடமாடும் கபாலி! கண்டத்தில் திருவோட்டு
வடமாட விதிர்த்தாடும் வேணியனே! தடங்கொண்ட புலித்தோலா!
விடநாகமாட வெருண்டு விரிசடையிற் கங்கையும் மதியுமாட
படநாகம் பழகும் பதியாம் திண்ணபுரச் சோதியனே! 7

சோதியனே ஆதியிலாய்! சூரிக் குழந்தைக்குச் சுடரீந்தாய்!
ஓதியும் உணரேன் சுவிஸில் சூரிக்கில் சுழியிலுற்றேன்
பாதியும் விரும்புகிலேன் பாசலில் பெயண் நகரில் வாழ்வு
பாதிக் கிணறு கடந்திளைத்தேன் கைதாராயோ பாராயோ? 8

பார்த்தொருகால் பரிந்தென்னைப் போக்காயோ திண்ணபுரத்
தேரடிக்கால் பெருந்தடத்து அடியழிக்க! திருக்கோயிற் குளமதனில்
நீர்வறற்கால் சிறகடித்துப் புறமேகும் நாரைபோல் ஊர்ப்பிரிந்து
போருறுங்கால் பேய்களிடை என்தாயேயுனை விடுத்து நீங்கினேனே! 9

நீங்கினேன் தங்கோடை கோவளம் கருங்காலி நின்
பாங்கியுறை பாலாவோடை பிட்டியெல்லை வலந்தலை நினைந்து
ஏங்கினேன் கார்த்திகையான் தாதனே! தாங்கா வலிபொறுத்து எனைத்
தாங்கியீந்த பூம்பாவை கன்னித் தமிழினி சாதல் சரியோ சாற்று! 10

சாற்றெனக்கு சங்கரனே சரியோ என் செய்கை - ஆழ்கடலில்
காற்றிலிடைப்பட்ட கலந்தான் கவிழ்கையிலே கீச்சொலியோடு
கூற்றம் பயந்து கரையொதுங்கும் எலியானேன் - கூற்றுவர்தாம்
நேற்றெம் பதி காடாக்கப் பார்த்திருந்து கூசிநிதம் சாகின்றேன்! 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகின்றேன் சிங்கை மலேசியா ஆசியென்று அலைந்து பாவியேன் - நீயோ
பாய்கின்ற வைகை மண்விட்டோடாமல் செம்மனத்தாய் மண்சுமந்தாய்
காய்சினத்துப் பாண்டியன் பிரம்படித் தழும்புற்றாய் தாயுமானாய்!
நோகின்றேன் நாணிநிதம்! நடுநிசியில் நந்தியூர்ந்தவுனை நினைந்து! 12

நினையாததொரு பொழுதோ நின்னை நினைக்குங்கால்
நனையாததொரு விழியோ! பெண்ணை சூழும் திண்ணபுரம்
நிலையானவொரு ஒளியே! அன்னை வீழக் கேழ்ச் சினைகட்கு
முலையானவொரு மருந்தே! எனை மண்ணுக்கு அழையாததேன் தலைவா! 13

தலை கிழக்கில் பொன்னாலை மைத்துனன் முன் வைத்தாய்!
அலை மேற்கில் அவனுறங்கத் திருவரங்கம் நீ அளித்தாய்!
தொலை தெற்கில் தீயபெருமரக்கர் திறம்குலைத்தாய்! திரைகடந்து
தலை வடக்கில் மறைக்காட்டில் மறைந்தொளித்தாய்! 14

மறைந்தோனே மறைந்து மக்கள் மனமிருக்கும் மாயவனே!
நிறைந்தோனே நிறைந்தும் நிறைகாக்கும் நிறைபொருளே!
உறைந்தோனே ஊர்நினைந்த உத்தமர்தம் உள்ளத்தில்!
நறுந்தேனாம் திருவாசகத்தில் உறைந்தவோர் கருவே! 15

கருவேயென் கருத்தெலாம் கனிந்த கருணையுருவே காரைநகர்த்
திருவேயென் திருப்பதியாம் திண்ணபுரத்துறையும் திரவியமே
மருவேயென் மணியே! மக்கள் சேவையொன்றே மதிப்பளிக்கும்
குருவேயென் குறைகள் குறையாயோ குருந்தைக் கீழமர்ந்த கோனே! 16

கோனேயென்றும் வானும் வங்கமும் வரையும் வளியும் பரந்து
தானேயன்னும் அரக்கர் செருக்கொழித்தாய்! இன்றெங்கொளித்தாய்!
கானேயென்றும் கதித்த கடலருகே கழுதுகள் தாம்கரித்த - பிணக்குவியல்
ஊனேயுண்ண ஊமத்தையுறும உறுநரியுமூளையிட ஆடினாய் உருக்கொண்டு! 17

கொண்டாயொருகால் ஆகாயம்! கொடுவிடத்தைக் கண்டத்தில்
விண்டாயொருகால்! கண்டமெலாமதிரப் படைநான்கு மொன்றாய்க்
கண்டாயொருகால் கரிகால் பனையும் கற்தாழையும் சவுக்கும்
உண்டாயொருகால் திரள் ஆலும் திகழ் திண்ணபுரத் திருவே நீ காப்பு! 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாயே காலச்சுழியில் கருந்தமிழின் கவினும் காத்திரமும்!
சேர்ப்பாயே கரையெம்மைச் சீரழிந்த மேற்குல் ஆட்பட்டோம்
தீர்ப்பாயே தீன்தமிழர் குறை! நிறையழிந்து நிற்கின்றோம் - ஐந்
தேர்ப்பாயும் திண்ணபுரத்தாய்! திரிபுரமெரித்தாண்ட தீன்தமிழே! 19

தீன் தமிழே நாணிலியாய் நானகன்றேன் நற்தமிழூரை!
கூன் பிறை கேசத்துடையாய் குருதேவா! விழலூரில் - ஐயோ
வீண் பொழுதைக் கழிக்கின்றேன் விரைந்தென் ஊர்சேராய்!
தான் நிகரில் தலைவா! திண்ணபுரம் அமுதூட்டும் தாயே! 20

சொற்பொருள்

பாட்டு 1: திண்ணையிலிப் பேரேறாய் - கட்டுத்தறியற்ற எருதாய்: மலக்குற்றேன் - கலங்கித் திகைப்புற்றேன்.
பாட்டு 2: பரிசில் பரிசில் - பாரிஸ் நகரில் சிறப்பற்ற: அடிக் கரும்பன்ன – கரும்பில் அதிக சுவையுடைய அடிப்பகுதியைப் போன்ற.
பாட்டு 3: வருவூர்க்கு – மரணத்தின் பின் வருபிறப்பில்: கற்பக தருவூரான் - எல்லாச் செல்வங்களும் தரும் ஊர் அல்லது பனைவளம் நிறைந்த ஊர்.
பாட்டு 4: வலம் - பலம்: நுதலில் - நெற்றியில்.
பாட்டு 5: செருமெனியின் - ஜேர்மனியின்: திருவாமோ – செல்வமாகுமோ.
பாட்டு 6: திரைதெரியா – வேறுபாடு தெரியாமல்: திக்கரைவேல் வரைமேவ – முருகன் மலையேற: தாதையே – தந்தையே: நாதியிலி – தலைமையற்ற நான்.
பாட்டு 7: கபாலி – கபால மாலை அணிந்த சிவன் (காபாலிக சைவத்தின் பெருங்கடவுள்): கண்டத்தில் - கழுத்தில்: திருவோட்டு வடம் - மண்டையோட்டு மாலை: வேணியனே – கங்கையைச் சடையிற்கொண்டவனே: தடங்கொண்ட – வரிகளையுடைய: பழகும் - வதியும்.
பாட்டு 8: சூரிக் குழந்தைக்கு – தவளும் சூரியனுக்கு: சூரிக், பெயண், பாசல் - சுவிஸ் நாட்டில் காரை மக்கள் அதிகம் வாழும் நகரங்கள்.
பாட்டு 9: தேரடிக்கால் - தேரின் சக்கரங்களின்: நீர்வறற்கால் - நீர் வற்றுங்காலம்: புறமேகும - வெளியேறும்: போருறுங்கால் - போர் சூழ்ந்த காலத்தில்.
பாட்டு 10: தாதனே: தந்தையே: பூம்பாவை - ஞானசம்பந்தர் பாடலால் உயிர்த்தெழுந்த பெண்: சாற்று – சொல்.
பாட்டு 11: கலந்தான் - கப்பல்: கூற்றம் - இயமன் அல்லது மரணம்: கூற்றுவர் - கொடியவர்: பதி – வாழிடம்.
பாடல் 12: செம்மனத்தாய் - செம்மனச்செல்வி: காய்சினத்து – கடுங்கோபமுடைய: நடுநிசியில் - நள்ளிரவில்: நந்தியூர்ந்த – எருதேறிய.
பாடல் 13: பெண்ணை சூழும் - பனைகள் நிறைந்த: அன்னை வீழக் கேழ்ச் சினைகட்கு முலையானவொரு மருந்தே – தாய்ப் பன்றி வேடனால் கொல்லப்பட்டது கண்டு அதன் குட்டிகளுக்குப் பாலூட்டி உயிரளித்தவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் தொடர்ச்சி:

பாடல் 14: மைத்துனன் - விஷ்ணு: திரை – கடல்: மறைக்காட்டில் - தமிழ்நாட்டின் வேதாரண்யம்.
பாடல் 16: குருந்தைக் கீழமர்ந்த - குருந்தமர நிழல் அமர்ந்த.
பாடல் 17: வங்கமும் வரையும் வளியும் - கடலும் மலையும் காற்றும்: கானேயென்றும் கதித்த – எப்போதும் காடு நிறைந்த: கழுதுகள் - பேய்கள்: கரித்த – கருக்கிய: ஊமத்தை - கூகை:
பாடல் 18: கண்டத்தில் - கழுத்தில்: விண்டு – கொண்டு: உண்டாயொருகால் திரள் ஆலும் திகழ் - ஒருதடவை பாற்கடலிற் திரண்ட ஆலகாலத்தை உண்டாய அல்லது பருத்த அடியையுடைய ஆலமரமுடைய: காப்பு – அடைக்கலம்.
பாடல் 19: கருந்தமிழின்: நிறைவான நிலையான தமிழின்: கவினும் காத்திரமும் - அழகும் உறுதியும்: நிறையழிந்து – சிறப்பழிந்து:
பாடல் 20: நாணிலியாய்: வெட்கமில்லாதவனாய்: கேசத்துடையாய்: தலைமுடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Few Words! Wo/men in Social Service

**K**ARAINAGARANS are all kith and kin! Children
**A**ren't we all hailing from same cauldron?
**R**espect and love! All but a single united soul!
**A**h wo/men in social service you as a whole,
**I**n earnest, have I a few words! Life is a mirage!
**N**either are we sealed with eternity in marriage!
**A**nimosity, ego, vengeance, petty and personal
**G**rievances lead to chaos! Accept peers' rationale!
**A**miable and amicable are we; the Karainagarans!
**R**ight from Toronto to Sydney a phoenix like resurgence!
**A**ll unions in all continents, in this hour of miseries,
**N**oble solidarity we have, Karainagarans of all galleries!
**S**o are we, with all Eelam Tamils of ancient glories!

A poem composed honouring the attempt, in December 2015, for a consolidated development program in Karainagar.

***By Dr. Kennedy Vijayaratnam***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைப்பிட்டி, காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்ட கவிஞர் திரு.தம்பிப்பிள்ளை நந்திவர்மன், தற்போது சிட்னி, அவுஸ்திரேலியாவில் தலைமை நிதி அலுவலராக (Chief Financial Officer) பணியாற்றிக் கொண்டிருந்தாலும் தமிழிலும் சைவத்திலும் தணியாத பற்றுடையவர். புலவர் சிவங்கருணாலய பாண்டியனாரிடமும் அறிஞர் இ. இரத்தினம் அவர்களிடமும் இளமையிலே தமிழ் கற்றவர். பின்னர் பேராசிரியர் இராச வடிவேலு அவர்களிடம் முறையாக யாப்பிலக்கணம் கற்றவர். தொண்ணூறுகளில் ஒக்லண்ட், நியூசிலாந்தில் தமிழ்த்தென்றல், வைகறை ஆகிய தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை வழங்கி மக்களை மகிழ்வித்தவர். சைவ சித்தாந்தத்திலே ஆர்வம் கொண்ட இவர் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கும் 'சித்தாந்த இரத்தினம்' பட்டம் பெற்றவர். யாப்பிலக்கணத்திற்கு அமைய மரபுக் கவிதைகள் படைக்கும் இவரது இரண்டு கவிதைகள் இங்கே எடுத்து வரப்பட்டுள்ளன. தமிழ் வாழ வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து முயன்று வருகின்ற இவரது இலட்சியம் வெல்லட்டும்.

## சும்மா இருப்பீர்

(எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

இவ்வா நிலத்தில் ஓடி ஆடி
எங்குந் திரிந்து சோர்ந்து வாடி
பெம்மான் நினைவும் இன்றி வாழ்ந்து
பெரிதாய்ப் பிழைகள் நாளுஞ் செய்து
நம்மால் எல்லாம் நடக்கும் என்று
நாளும் நினைந்து அயர்தல் விட்டுச்
சும்மா இருக்குஞ் சுகத்தைக் காண்பீர்
சூழும் உலகில் அமைதி காண்பீர். -1

உம்பர் நிலைப்ப தேதும் இல்லை
உண்மை இதுவாய் ஏற்றுக் கொண்டு
கைம்மா உரிவை போர்த்துக் காதல்
காட்டும் இறையோன் கழலை ஏந்தும்
எம்மான் எளியன் எல்லா உயிரும்
ஏத்துந் தலைவன் ஈசன் எங்கள்
அம்மான் அணிசேர் பாதஞ் சேர்ந்து
அலையும் உலகில் அமைதி காண்பீர். -2

நாளும் பொருளைச் சேர்த்துக் கொள்ளும்
நாட்டம் மிகுந்து ஆவி சோரக்
கோளுங் குறியும் பார்த்துக் கொண்டு
கொள்கை எதுவும் இன்றி வீணே
மாளும் மயக்கந் தன்னை விட்டு
மன்னன் மறைபோல் உலகம் எல்லாம்
ஆளும் இறைவன் பாதஞ் சேர்ந்து
அலையும் உலகில் அமைதி காண்பீர். -3

சிட்னி, அவுஸ்திரேலியா
சித்திரை 2014
அயர்தல் - சோர்தல் கைம்மா - யானை

## நம்பிக்கை வேண்டும்

(எண்சீரடிக் குறள் வெண்செந்துறை)

மண்ணுலகில் வாழ்க்கையினை வனப்புடனே வாழ
மனதினிலே நம்பிக்கை மாந்தருக்கு வேண்டும்
எண்ணரிய குணமென்றே எல்லோருஞ் சொல்வார்
ஏற்றத்தைத் தருகின்ற ஏணியது என்பார். - 1

எடுத்துவிட்ட காரியங்கள் என்னவோ நன்றாய்
இலக்கெய்துமென் என்கின்ற பேர்வேட்கை
வேண்டும்
தடுத்திடவே வருவதனை நம்பிக்கை யாலே
தகர்த்திடுவேன் என்கின்ற தளராமை
வேண்டும். - 2


வீழ்ந்திடினும் விதையாய்நான் வீழ்ந்திடுவேன்
என்னும்
வீரமிக்க நம்பிக்கை வைராக்கியம் வேண்டும்
சூழ்ந்துவரும் சோதனைகள் யாவையுமே வென்று
சூடிடுவேன் வெற்றியென்று சூளுரைக்க
வேண்டும். - 3

சிட்னி, அவுஸ்திரேலியா
பங்குனி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் கூட்ட மேளம்......!!



கதிரவன்
விழித்து காட்சிகள் தெளிவான
ஒரு இளம் காலை

பள்ளிசோலையில்
அறிவுத்தேனை பருக
ஆவலுடன் பறந்து வந்த
அழகான வண்டுகளாய்
சீருடை சிட்டுக்கள்

அப்பள்ளிச்சோலைப் பணிமனையில்
முதுமையின் வரவைக்கூறும்
கட்டியக் காரரைவிட
வறுமையின் நிலையை
முரசறைவித்தபடி
முதல்வர் முன்னிலையில்
முதுமைக்குள் கால்வைத்த
பெண்மணியின் கண்களில்
மௌனக்கண்ணீர்

முதல்வர்
காரணமறிய முனைகையில்
அழுகைக்கடலினில்
வார்த்தை கப்பல்களை
மிதக்கவிடுகின்றாள்
அந்த குடும்பதலைவி

"ஐயா !
கூலிப் பணம்
கிடைக்கவில்லை
மகனின் தனியார் கல்வி
கற்றலுக்கான பணத்தை
செலுத்த முடியவில்லை
பத்து நாட்களுக்குள்
கொடுத்து விடுவேனென்று
நான் சொல்ல
பத்து மாதம்
சுமந்து பெற்ற மகன்
நான் பதறிதுடிக்க பேசுகின்றான்
கண்டதெல்லாம் வீசுகின்றான்
உடைக்கின்றான்"

ஐயா !
"அடிக்காமல் அவனை தண்டியுங்கள்
தகப்பனில்லா பிள்ளை
அடிக்காதீர்கள்
நான் போறன் ஐயா"
நதியாக அழுதவள்
நடக்க முனைகின்றாள்

அதிபர் பணியிடத்தில்
அலுவல் வேண்டிச்சென்ற
ஒரு ஜோடி கண்களுக்கு
என்ன நடக்குமென அறியும் ஆவல்
ஏனெனில்
பள்ளிகூட முதல்வரிடம்
தனியார் கல்விக் கூடத்திற்கு
பணம் செலுத்த முடியாததை
சொல்லியழுகின்றாளே
இக்குடும்பத்தலைவி

நடக்கமுனைந்த
அழுகை நதியை நோக்கி
முதல்வர்
"அம்மா நில்லுங்க" என்றவர்
அலைபேசியை அழுத்துகின்றார்

மறுமுனையில்
கல்விகூட நிர்வாகி போலும்
அவரிடம் பிரச்சனை பகிரப்பட்டு
பணம் கிடைத்ததும் தருவதாக
உறுதி தரப்பட்டு
அத்தாயிடம்
அலைபேசி கொடுக்கப்பட்டு
அம்முடிவு சொல்லப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டும் மழையிடையே
தோன்றிய மின்னலாக
நன்றி கூறினாள் அத்தாய்
முதல்வரிடமும்
நன்றியை
மனதாலும் மொழியாலும்
விழியாலும் சொல்லி
மழை ஓய்ந்த வானமாக
செல்கின்றாள் அத்தாய்

அச்சேயின் விழிகள்
அதிசயம் பார்த்த விரிப்புடன்
இச் செய்கையில்
முதல்வர் உண்மையில் முதல்வரே
முதல்வரையே பார்த்தபடி
நின்றுவிட்டு
அத்தாயை அடியொற்றி சென்று
நின்றது

அம்மா!
"எவ்வளவு பணம் கட்ட வேண்டும்" என்றது
அவ் விழிகள்

"ஆயிரத்து ஐநூறு"
என்றது தெளிந்த வானம்

ஓ...

"என்னிடம் ஆயிரம் இருக்கின்றது தருகின்றேன்"
என்று நீட்டியது அவ் விழிகள்

"ஏன்? வேண்டாம் வைத்துக்கொள்"
அச்சிறுமையிலும் பெருமை காக்கும்
அத்தாய்

"பரவாயில்லை" என்று
மீண்டும் நீட்ட

"நன்றி"
சிறு புன்னகை
மின்னலாக வந்து மறைந்தது

ஆயிரம் ரூபா
கொடுத்த அவ்விழிகளில்
அடையமுடியா ஆனந்தம்
ஆண்டிகேணி ஐயனாருக்கு

ஆயிரம் கூட்ட மேளம்
அழைத்து வந்து அடித்த சந்தோசம்

எம் மண்ணில்
இப்படி தினம் அழுகையில்
பலர் இருக்கையில்

அதே மண்ணில்
திருவிழாக்களில் மட்டுமே
மலிந்து வாசம் செய்யும்
கோவில்களை புதுப்பிப்பதும்
திருவிழா காலங்களில்
குவியலாக மேளம் அடிப்பதுவும்
இன்னும் எத்தனை எத்தனையோ....

ஆடம்பரமான செலவில்
சிறு பகுதியை
ஏழைகளுக்காகவும் ஒதுக்குங்கள்
ஒரு காலத்தில்
உங்கள் மனமே
கேட்கும் கேள்விக்கு
பதிலுக்கு பக்கபலம் தேடுவதாயும்
இருக்கலாமல்லவா?
என்ன தேவையென அறிந்து
உதவிடுங்கள்
தாகத்தோடு இருப்போருக்கு மட்டுமே
தண்ணீர் அமிர்தமாகும்

அத்துடன்
ஒருவன் பசித்து வரும் பொழுது
அவனிடம் நெல்லை கொடுங்கள்
உழைத்து உண்ணென்று
நாளை அவன் உங்களைப்போல்
இன்னொருவனுக்கு கொடுப்பான்
ஆனால் நீங்களோ
சோற்றைதான் கொடுக்கின்றீர்கள்
நாளையும் அவன் உங்களிடமே
வருவான் மீண்டும் பசியோடு

ஆக்கம்:
தவராஜா பரமேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் மணற்காட்டு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த அமிர்தேஸ்வரசர்மா மனோகரன் ஆரம்பக்கல்வியை சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். மேலும் சைவப்புலவர், இந்து தர்மாசிரியர் பட்டங்களையும் பெற்றுக்கொண்டவர். 1998ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட மனோகரன் தற்போது யாழ்ற்ரன் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். சென்ற ஆண்டிலும் 'காரை வசந்தம்' சஞ்சிகையில் இவரது ஆக்கம் வெளிவந்திருந்தது.



# காரைநகரின் அண்மைக்கால கல்விப்போக்கு

**- அமிர்தேஸ்வரசர்மா மனோகரன் -**

அலைகடலும் பசுமை வயலும் உயர்மரங்கள் சூழ் இயற்கை எழில் கொஞ்சும் அற்புதத்தீவு காரைநகர். சைவமும் தமிழும் இரு கண்ணெனப் போற்றி உயர் சைவ விழுமியங்களுடன் ஒப்புரவாளராய் வாழும் மக்கள் உதயசூரியன் பயணம் போன்றே ஒவ்வொரு பொழுதும் தத்தம் கருமத்தில் ஓய்வின்றி உழைப்பவர் வாழும் ஊர். இவ்வூரின் பழமை என்பதும் பண்பாடு என்பதும் கி.மு. 500 இற்கும் முற்பட்டது என்றே தொல்லியலாளர் குறிப்புக்கள் கூறுகின்றன. ஈழத்து தொல் திராவிடப் பழங்குடியின் வரலாற்று ஆய்வுகள் உயர் தொழில்நுட்பத்துடன் ஆராயப்படுமிடத்து காரைதீவிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். காரைநகரின் பிரதான வீதியாக வலந்தலையில் இருந்து தொடங்கி மேற்காக நகரும் பாதையின் உட்புறமாக கிழக்கு, தெற்கு, மேற்கென இருக்கும் குடியிருப்புகளும் வயல் நிலங்களும் "வேரப்பிட்டி" என அழைக்கப்படும் மண்மேடு வரை ஆய்வுக்குரிய பிரதேசமாகின்றது. ஒரு இனத்தின் பண்பாட்டு எச்சங்கள் என்பது அகழ்வாராய்வின் மூலமே வெளிக் கொணர முடியும் என்பது வரலாற்று உண்மையாகும். இவ்வாறு பழமை கொண்ட ஒரு கிராமத்தின் பண்பாட்டுக் கூறுகளின் பகுதிகள் சந்ததி நிலையாக தொடருகின்ற போது அறியப்பட்ட வரலாற்றுப் பகுதியிலிருந்து பார்க்கின்ற போது காரைநகர் பிரதேசம் என்பது உயர்கல்வி விழுமியங்கள் கொண்ட ஒரு பிரதேசமாக அமைகின்றது.

பழம் பெருங் கல்விமான்களாக புலவர்கள், அறிஞர்கள், மகான்கள், ஞானிகள் நடமாடிய பிரதேசம் இது. முறைப்படுத்தப்பட்ட கல்வி மரபிலும் பெரும் புலவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வானசாஸ்திர நிபுணர்கள், சோதிடர்கள், கணிதப் பேராசிரியர்கள், பல்கலை வல்லுனர்கள், ஆசிரியர்கள், பெரும் தனவந்தர்கள், தேர்ச்சிமிகு தொழிலாளர்கள் ஆகியோரை உருவாக்கியது நமது ஊர். பன்நெடுங்காலமாகவே திரைகடலோடி திரவியம் தேடிய நமது மக்கள் தம் குழந்தைகளைக் கல்வியிலும் கேள்வியிலும் சிறந்த விற்பன்னராக்குவதில் ஊக்கமுடையோராய்த் திகழ்ந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளில் தமது சொந்த வாழ்விடங்களிலிருந்து அகன்று சென்ற போது தமது மரபுகள், சம்பிரதாயங்கள், பண்பாடுகளுடன் கல்வியைக் கண்ணெனப் போற்றிக் காத்து வெற்றி கண்டனர்.

தமது ஊருக்கு மீளக் குடியமரும் வாய்ப்புக் கிட்டியபோது தக்கவாறு பயன்படுத்தி மீளக்குடியமர்ந்தவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றது கல்வி எனும் சொத்தையே. இடைப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கூட தமது ஊரில் தங்கியிருந்த சொற்ப எண்ணிக்கையுடையவர்களுக்கு ஒரு கல்விக்கூடத்தை இயக்கிய பெருமை நமது ஊரையே சாரும்.

நவீன கல்விச் சிந்தனைகளுக்கேற்ப நமது மாணவர்கள் கற்றல் வசதிகளைப் பெறுதல் என்பது மீளக் குடியமர்வுக் காலத்தில் (1996 – 2002) மிகுந்த சவாலாகவே இருந்தது. செம்மையான போக்குவரத்து வசதிகள் இன்றி பௌதீக வள வசதிகளின்றி இணைக்கப்பட்ட கல்விக் கட்டமைப்புகளூடாக பல சவால்களுடன் பாடசாலைகள் மீளத்திறந்து ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் பற்றாக்குறை மிகப்பெரும் சவாலாக இருந்தது. ஆயினும் அப்போது இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மிக அர்ப்பணிப்புடன் தமது பணிகளை முன்னெடுத்தனர். அதன் பயன் (2002 – 2005) காலகட்டத்தில் கல்விப் பெறுபேறுகளாக வெளிப்பட்டது.

காரைநகர்ப் பிரதேசத்தில் க.பொ.த. (உயர்தரம்) வரையான இரு பாடசாலைகளும் சாதாரண தரம் வரை இரு பாடசாலைகளும் நான்கு ஆரம்ப பாடசாலைகளுமே ஆரம்பத்தில் இயங்கின. பின்னர் படிப்படியாக ஏனைய ஆரம்பப் பாடசாலைகள் இயங்கத் தொடங்கின.

இக்கால கட்டத்தில் மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டின. மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் எமது பிரதேச மாணவர்கள் பங்குபற்றினர். அக்காலத்தில் தரைவழிப் பாதைகள் அடைக்கப்பட்டிருந்தும் கடல்மார்க்கமாக பிற மாவட்டங்களில் நடைபெற்ற நிகழ்வுகளிலும் கொழும்பில் நடைபெற்ற (தேசியமட்ட) நிகழ்வுகளிலும் எமது ஆசிரியர்கள் மாணவர்களை அழைத்துச் சென்று பங்குபற்றச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். யுத்தத்தின் நெருக்கடியான கால கட்டத்திலும் சில மாதங்கள் பாடசாலைகள் இயங்காத காலத்திலும் (2009 க்கு முன்) மாணவர்களின் பெறுபேறுகள் சிறந்த மட்டத்திலேயே அமைந்திருந்தன. யுத்தம் நிறைவடைந்த பின்னர் கல்வி வளர்ச்சி என்பது சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்புக்களில் சில காலங்களில் சிறப்பாகவும் சில காலங்களில் தளர்வுற்றும் காணப்படுகின்றது. இவ் ஒப்பீட்டுக்கு சில நியாயங்களை முன்வைக்க முடியும்.

* யுத்த சூழலும் வளங்களும் வாய்ப்புகளும் அருகி இருந்த போதும் கல்வி ஒன்றையே அனைவரும் நம்பியிருந்தனர்.
* மாணவர்களை வேறு திசை திருப்புங் காரணிகள் இல்லாத நிலையில் கல்வியில் அதிக நாட்டங் கொண்டிருந்தனர்.
* "தேவைகள் அதிகரித்துச் செல்ல தேடல்கள் அதிகரித்துச் செல்லும்" என்ற கூற்றின்படி மாணவர்கள் கல்விக்கு அப்பால் தேடல்களை மேற்கொள்ளுதல்.
* நவீன தொடர்பாடல் சாதனங்களை எவ்வாறு, ஏன், எப்படிப் பயன்படுத்துவது என்ற தெளிவின்மை.
* பாடசாலைக் கல்வியை நாட்டமுறச் செய்யாத புற ஊக்குவிப்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குடும்பம், சகநட்பு வட்டம், உறவினர்கள், சமூகச்சூழல் என்பன கல்வியில் தாக்கம் செலுத்துதல்.
* சுயமுடிவு எடுத்தலில் தளர்வு
* ஏனைய காரணிகள்.

என்பவற்றின் அடிப்படையில் ஒப்பீடு செய்யும் போது பொதுவாக வடக்கு கிழக்கு பிரதேச மாணவர் கல்வி நிலை பின்தங்கியே உள்ளது. இதில் எமது பிரதேசமும் சிக்கிக் கொண்டுள்ளது என்பதுதான் உண்மை. தொடர்ச்சியான கல்வி அடைவு மட்டப் பகுப்பாய்வு அறிக்கைகள் எமது ஊரைப் பொறுத்தவரையில் தீவக வலயத்தில் உயர் நிலையிலுள்ளன. ஆயினும் மாவட்ட நிலையில் சிறப்பாக இல்லை எனலாம். தரம் 5 புலமைப் பரிசில் அடைவு மட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையுள்ளது. க.பொ.த (சா.த.) மாணவர்களின் சித்தி வீதம் உயர்தர வகுப்புகளுக்கான தகுதி 60% - 70% இலும் க.பொ.த. உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்விக்கான தகுதி சராசரியாக 60% ஐ அண்மித்தும் காணப்படுகின்றது. 2004, 2005 ஆண்டு காலப்பகுதியில் சாதாரண தரத்தில் எமது பிரதேச மாணவர்களின் உச்சப் பெறுபேறு உயர்வான நிலையில் அமைந்தது. அதே அணியினரின் உயர்தரத்தின் பெறுபேறு 2008, 2009 காலங்களில் சிறந்த நிலையில் 80% ஐ அண்மித்ததாக உள்ளமை காரைநகரின் இரு பெரும் பாடசாலைகளின் பரிசுத்தின அறிக்கைகளூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. 2013,2014 ஆண்டுகளில் சாதாரண தரப் பெறுபேறுகள் அளவு ரீதியாக அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உயர்தரத்திலும் பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்விக்கான தகுதி பெறுபவர்கள் சற்று ஏற்ற இறக்கமான நிலையைக் காட்டுகின்றன.

இணைப்பாட விதானங்களில் காரைநகர்ப் பிரதேச மாணவர்கள் தேசிய கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவான பல்வேறு போட்டிகளிலும் தேசியமட்ட வெற்றிகளை பெற்று வருகின்றனர். இணைப்பாட விதானத்தை வீத அடிப்படையில் ஒப்பிடமுடியாவிடினும் அண்மைய ஆண்டுகளில் புத்தாக்கப் போட்டிகள், கலைத்திறன் போட்டிகள், மொழித்திறன் போட்டிகள் என்பவற்றில் தேசிய மட்டத்திலும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாகாண மட்டத்திலும் விளையாட்டுத் துறையில் மாகாண மட்டத்தில் சிறந்த நிலையினைப் பெற்று தேசியரீதியிலும் பங்குபற்றியுள்ளனர். இணைப்பாட விதான செயற்பாடுகளூடாக எமது பிரதேசம் தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு அப்பால் எமது பிரதேச மாணவர்களின் ஆற்றல் வெளிப்பாடுகள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றன. பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற கட்டுரைகள், பேச்சு, பண்ணிசை, நடனம் பொதுத்திறன் போட்டிகளிலும் சிறந்த சாதனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றிய குறிகாட்டிகள் இருந்தபோதும் மாணவர்களில் பண்பாட்டு ரீதியான வீழ்ச்சி காணப்படுகின்றது. குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் கல்வியிலும் ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் நாட்டமின்றியே உள்ளனர். இடைநிலை வகுப்புகளில் சராசரிக் கல்வி அடைவுமட்டம் திருப்திகரமாக இல்லை. ஒவ்வொரு பாடசாலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தரங்களிலும் கற்றலில் இடர்படும் மாணவர் கணிசமாகக் காணப்படுகின்றனர். ஆரம்பப் பிரிவிலும் தேசிய கல்விக் குறிகாட்டியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதிப் புள்ளியான 70% புள்ளியைப் பெறாத மாணவர்கள் பலர் உள்ளனர். உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடையாத மாணவர்கள் உள்ளனர். இவ்வாறு கல்வி அடைவு நிலை வீழ்ச்சிக்கு, முன்பு குறிப்பிட்ட சில காரணிகள் பின்னணியாக இருக்கலாம். ஆயினும் நகரப்புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர் மீது பெற்றோரின் அதீத ஈடுபாடு, பிள்ளைகள் மீதான அக்கறை அவர்களின் அடைவு மட்டத்தின் உயர்நிலைக்கு உந்துசக்தியாக உள்ளதை மறுக்க முடியாது. எமது பிரதேசத்தில் மாணவர்களில் பலர் மீள் கற்றலில் (மீட்டல்) ஈடுபடுவதில்லை. பாடசாலை முடிவடைந்த பின்னர் வீடுகளில் பல்வேறு காரணங்களால் கற்றலில் ஈடுபடுவதில்லை. ஒரே வகுதியைச் சார்ந்த மாணவர்களே கல்வியிலும் இணைப்பாட விதானத்திலும் முன்னிலை வகிக்கின்றனர். ஏனைய மாணவர்கள் முன்னிலைக்கு வருவதும் இல்லை, பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இல்லை. பாடசாலைக்கு வெளியில் சிலர் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றாலும் அடைவு மட்டத்தில் எத்தகைய மாற்றமும் இல்லை. உயர்தர வகுப்பு மாணவர்கள் நகர்ப்புற தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்கின்றனர். மாதாந்தம் பெருமளவு பணம் செலவு செய்கின்றனர். இருந்தும் பரீட்சை அடைவுகள் திருப்தியாக இல்லை.

கற்றல் அடைவும் இணைப்பாட விதான அடைவுகளும் உயரிய நிலைக்குச் செல்வதற்கான தேவைகளாக உள்ளன. உயர் இலக்கினை அடைய சில விடயங்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

* மாணவர்கள் தாம் உயர் நிலை அடைய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கல்.
* பெற்றோர் மாணவர்களைக் கண்டிப்புடன் அரவணைத்து மீட்டல்/கற்றல் நடவடிக்கைக்கு ஊக்கப்படுத்துதல்.
* மாணவர்கள் ஒவ்வொரு நாளும் கிரமமாக மீளக்கற்றலில் ஈடுபடுதல்.
* மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் (பணம்) கண்காணிக்கப்படுதல். புலமைப் பரிசில்கள் ஆயினும் வேறு உதவி நன்கொடை ஆயினும் தவணை ரீதியாக மீளாய்வு செய்வதன் மூலம் உயரிய இலக்கை அடையச் செய்தல்.
* இலத்திரனியல் சாதனங்கள் பாவனை முறையில் தமது பிள்ளைகளிடத்தில் பெற்றோர் விழிப்புடன் இருத்தல்.
* புலம் பெயர்ந்தோர் உட்பட எவராயினும் மாணவர் கல்வியை ஊக்குவிக்காத எவ்வித உதவிகளையும் வழங்காதிருத்தல்.
* தமது உறவினர் என்ற தத்துவத்தை நீக்கி காரைநகர் மக்கள் என்ற வகையில் தேவையற்ற பொருட்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதோ அவர்களைப் புலம்பெயர் நாடுகளுக்கு அழைப்பதாகக் கூறுவதோ வெளிநாடுகளிலிருந்து வரும் உறவுகள் உத்தரவாதம் கொடுக்காதிருத்தல்.

இவை போன்று பல விடயங்கள் இருக்கின்றன. பெற்றோராயினும் பிற உறவினராயினும் மாணவர்கள் முன்னிலையில் பேசக் கூடாத விடயங்களைப் பேசாது நேர்மனப்பாங்கானவற்றை மட்டும் பேசுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் மாலை நேரங்களில் அல்லது மேலதிக கற்பித்தல் நடவடிக்கைகளில் புலம் பெயர் நாட்டு உறவுகள் உதவுவது விரும்பத்தக்கது. கல்விக்காக அரசு பெரும் தொகைப்பணத்தை வருடா-வருடம் அதிகரித்துச் செலவிடுகின்ற போது நாமும் உரிய இலக்கை அடைய முயல வேண்டுமல்லவா?

பிரதானமாகக் காரைநகரின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் கல்விக்கான அபிவிருத்தியை அடையக் காத்திருக்கின்றன. புலம் பெயர் அமைப்புக்கள் ஆரம்பப் பிரிவுகளை நவீன மயப்படுத்துவதிலும் அவற்றுக்கான உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் அதிக கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.

கற்றல் கற்பித்தல் முறைகள், பாடவிதானங்கள், நிர்வாக முறைமைகள் எப்படி இருப்பினும் எப்படி மாறினும் எத்தகைய புதிய அணுகுமுறைகளைக் கொண்டிருப்பினும் ஒருவர் எவ்வாறு கற்பித்தல் நுட்பங்களையும் நவீன கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலாலும் இறுதி இலக்குகள் பொதுப்பரீட்சை அடைவு மட்டத்தில் தீர்மானிக்கப்படும் நிலையில் மாணவர்களின் எதிர்கால நலன் சார்ந்து செயற்பட வேண்டியது அவசியம்.

மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் கவனஞ் செலுத்தாது கல்வியிலும் தமது உடல் உள ஆரோக்கியத்துக்கான விளையாட்டிலும் தமது பண்பாட்டு விழுமியங்களுக்கான சமயம் மற்றும் கலைத்திறன்களை மேம்பாடடையச் செய்வதிலும் கவனஞ் செலுத்த வேண்டும்.

புலம் பெயர் உறவுகள் தமது ஊரில் பொதுப் பணிகளுக்கான நன்கொடைகளை வழங்கினாலும் மாணவர் கல்வி அபிவிருத்திக்காக அதிகம் கவனஞ் செலுத்துவது விரும்பத்தக்கதாகும். எதை? எப்படி? எவ்வாறு? செய்ய வேண்டும் என்பதை நன்கு சிந்தித்து உரிய வழிமுறைகளூடாகச் செய்வார்களாயின் இன்னும் சில ஆண்டுகளில் காரைநகரின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான அடைவுகள் மாவட்ட நிலையிலாயினும் குறிப்பிடத்தக்க முன்னிலை அடையும். அதிலிருந்து தேசியம் நோக்கிய சாதனைகளைத் தொடர முடியும்.

நாம் எப்போதும் நூறு வீதமான பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாது. ஆயினும் எமது பிரதேச மாணவர்கள் கல்விக்கான தேசிய குறிகாட்டிகளான தேசிய பரீட்சை அடைவுகளை 80% க்கு மேல் பெறுவது அவசியம். ஏனைய இணைப்பாட விதான செயற்பாட்டிலும் இத்தகைய உயர் நிலையை அடைய வேண்டும். எல்லாவற்றிலும் மேலான நமது ஊரின் உயர் பண்பாட்டு விழுமியங்களிலிருந்து விலகாது இருத்தல் வேண்டும். சிறந்த சமயப்பற்றும் சமூகப்பற்றும் உடையவர்களாக வாழ வேண்டும்.

குறிப்பு :-

* இக்கட்டுரைக்கான தகவல்களில் 2015ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் எடுக்கப்படவில்லை. 2015 உயர்தரப் பெறுபேறுகள் வெளிவரவில்லை.
* தூய்மையையும் நம்பிக்கையையும் வளர்க்கும் எளிமையான புனிதமான இடங்களாக ஆலயங்கள் இருக்கட்டும். நம்பிக்கையையும் ஆளுமையையும் ஒழுக்க விழுமியத்தையும் அறிவையும் திறனையும் வளர்க்குமிடங்களாக வித்தியாலயங்கள் அமையட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பு அம்பலவாணர் துறைமுக அதிகார சபையில் அதிகாரியாகப் பணி புரிந்து சிறந்த நிர்வாகி என்ற பெயர்பெற்றவர். சமூக அக்கறை கொண்ட பாரம்பரியத்ததைச் சேர்ந்தவர். ஊருக்கான பணிகளில் அக்கறையுடன் ஈடுபட்டுவரும் இவர் கனடா - காரை கலாச்சார மன்றத்தின் போசகர் சபை உறுப்பினராகவும் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் கணக்காய்வாளராகவும் பணியாற்றி வருபவர். அமரர் கே. கே.சுப்பிரமணியத்தின் இளைய சகோதரர்.



# சமய சமூகப் பணியாற்றிய அமரர் கே. கே. சுப்பிரமணியம்

- க. க. அம்பலவாணர் -



மனிதப் பிறவியில் சிலர் மறைவு சிலருக்கு திகைப்பை ஏற்படுத்துகிறது. மரணத்தை வெல்லும் முயற்சியில் இன்று வரையும் மனிதனுக்கு வெற்றி கிடைக்கப்பெறவில்லை. ஆனால் புகழுடலை நிலை நிறுத்தும் முயற்சியில் மனிதர் சிலர் பெரும் வெற்றியை அடைந்துள்ளனர். அத்தகைய சில மனிதர்களுள் சமய, சமூகப் பணியாற்றிய அமரர் கே.கே.சுப்பிரமணியம் அவர்களும் ஒருவர். **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என அமரர் கே.கே.சுப்பிரமணியம் சமய சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி எல்லோரையும் மகிழ்வித்தார்.

ஆலய விழாக்கள், பொது வைபவங்களில் எல்லோரையும் சிறப்புச் செய்பவர். சந்நியாசிகள், ஞானிகள், கற்றவர்கள் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்தவர். அதனால் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர். அவரை ஆதீனங்கள், ஆலயங்கள், நிறுவனங்கள் பல பட்டங்களைக் கொடுத்துக் கௌரவித்தன. சமாதான நீதிபதி, இரசிககலாமணி, அருள்நெறித்தொண்டர், பரோபகாரமணி, சிவதர்மசுரபி முதலிய விருதுகளைப் பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவர்.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே"** என கே.கே இறைபக்தியுடனும் ஆன்மீகச் சிந்தனையுடனும் பல தொண்டுகள் செய்து வாழ்ந்தார்.

இவர் காரைநகர், தங்கோடை, சின்னாலடியைச் சேர்ந்தவரும் சிவபூசை செய்தவரும் சிறந்த தொண்டரும் பெரு வள்ளலுமாகிய பெரியார் கணபதிப்பிள்ளை கந்தப்பு, வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வர் ஆவார்.

காரைநகரில் 06.10.1929 இல் பிறந்து உயர் கல்வி கற்று சுங்க இலாகாவில் உதவி ஆணையாளராக 40 ஆண்டுகள் உயர்பதவி வகித்தவர். பின் 5 ஆண்டுகள் இலங்கை முதலீட்டுச்சபையில் பணி புரிந்தார். இந்துசமய அலுவல்கள் அமைச்சின் ஆதரவில் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலக மாநாடு சிறப்பாக நடைபெற அமைப்பாளராக இருந்து செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கே.கே. தமது குலதெய்வமாகிய மணற்காடு முத்துமாரி அம்மனிலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆனந்தக் கூத்தனிலும் அளவற்ற பக்தி பூண்டவர். அக்கோவில்கட்கு அளவற்ற தொண்டுகள் செய்தார். பலமுறை தலைமன்னார், திருகோணமலைக்கு கடமை நிமித்தம் மாற்றலாகிச் சென்றபோதெல்லாம் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் பல சேவைகள் செய்திருந்தார்.

**"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே"** என்பதற்கு அமைய பிறந்த பொன்னாடாம் காரைநகரின் அபிவிருத்திக்குப் பணி ஆற்றிய கொழும்பு காரை அபிவிருத்திச் சபையின் செயலாளராக 25 ஆண்டுகள் பணி ஆற்றினார்.

உயர் பதவி வகித்த சுங்கத் திணைக்களத்தில் கலை கலாச்சாரம் சமயம் வளர இந்து ஊழியர் சங்கத்தை நிறுவிச் செயற்பட்டவர். இன்றும் அச்சங்கம் சிறப்பான பணி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

நாதஸ்வர தவில் இசையில் அதீத நாட்டம் கொண்டு விளங்கிய இவர் நாதஸ்வர தவில் கலைஞர்களை பலவகையிலும் ஆதரவளித்து ஊக்கிவித்தவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஆணைச் செயலாளராக இருந்து நாவலர் உருவச் சிலையை கொழும்பிலிருந்து பவனியாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்வதற்கு முன்னின்று உழைத்ததுடன் நாவலர் மாநாடு சிறப்பாக நடைபெற அரும்பணி ஆற்றியவர். அகில இலங்கை இந்து மாமன்ற துணைச் செயலாளராகவும் செயற்பட்டார். கொழும்பு ஈழத்து திருநெறித் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து சிறந்த செயல்களை முன்னெடுத்ததுடன் கொழும்புத் தமிழ்ச் சங்கம், வெள்ளவத்தை இராமகிருஷ்ணமடம், அகில இலங்கை கம்பன் கழகம், கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றின் ஆட்சிக்குழு உறுப்பினராக பதவி வகித்து இவர் ஆற்றியிருந்த பணிகள் அளப்பரியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hari. M. Kasippillai in

# HARI FOREX CENTRE INC.

## துரித பணமாற்று சேவை



Hari. M. Kasippillai யின் தனிப்பட்ட நிர்வாகத்தில் Hari Forex Centre துரித பணமாற்று சேவையில் இரண்டாவது ஆண்டில் தடம் பதிக்கிறது. தந்தையார் தனது துரித பணமாற்று சேவையின் கிளை நிறுவனமான Markham & Steeles இல் 5 ஆண்டுகளாக நடாத்தி வந்த அதே இடத்தில் மீண்டும் புதுப்பொலிவுடன் Hari Forex Centre எனும் பெயரில் தொடர்ந்தும் அதே தரத்துடன் சேவையாற்றுகிறார்

Hari. M. Kasippillai


2nd Year in Business

3351 Markham Road. Suite 109
Scarborough, Ontario M1X 0A6

**416-293-1091**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.royalbanquetservices.com

At Royal Catering and Banquet Services, we are devoted to providing our customers with quality food that has been created with passion and expertise. We ensure to make each event, from small gatherings to large corporate events, a memorable one. We provide a range of spectacular venues to choose from which complements your taste and style. Our exquisite cuisine and superior customer service make our catering the best choice for your event. Our friendly and personalized attention is what gives us a reputation of excellence. Since all of our clients are unique, we ensure that each package is individualized to match your preferences.

ROYAL
CATERING & BANQUET
SERVICES





**Facebook:**
www.facebook.com/
Royal-Catering-Banquet-Services-

**Call:**
(416) 937-1145

328 passmore Avenue unit 45 Toronto, Ontario



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா-காரை கலாச்சார மன்றம்
## பெருமையுடன் வழங்கும்

# காரை வசந்தம்
# 2015

## வெற்றி விழாவாக அமைய
## எம் நல்வாழ்த்துக்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்புக் கலைப்பட்டதாரியான (B.A.(Hons.) சண்முகநாதன் இரமணீகரன் ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி (MATE) பட்டத்தினையும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவினையும் பெற்றுக்கொண்டவர். ஆசிரியர் கல்வியியலாளரான இவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராகவும் ஆசிரியர் நிலைய முகாமையாளராகவும் பணியாற்றியவர். தமிழரின் பாரம்பரியக் கலையாகிய நாட்டுக் கூத்துக் கலைஞரான இரமணீகரன் இக்கலை வாழவேண்டும் என்ற நோக்குடன் செயற்படுபவர். தாயகத்திலும் கனடாவிலும் பல நாட்டுக்கூத்துத் தயாரிப்புக்களை அரங்கேற்றி பெயர்பெற்றவர். சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் திருகோணமலைய வதிவிடமாகவும்கொண்டு தற்போது கனடாவிற்கு புலம்பெயர்ந்துள்ள இவரது புகுந்த இடம் காரைநகராகும்.

## தமிழ் மொழி கற்றல்—கற்பித்தலில் உள்ள இடர்பாடுகளும் தீர்வுகளும்

சண்முகநாதன் இரமணீகரன்

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் தமது இனத்தைப் பாதுகாக்கும் நோக்கில் தமது தாய் மொழியையும், கலை கலாசாரங்களையும் வளர்த்து எடுப்பதற்கு பல்வேறு வழிகளிலும் முயற்ச்சிகளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. இவ்வாறு இனத்தின் இருப்பைத் தக்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும்போதும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதை நாம் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக, கனடா நாட்டின் ரொறொண்டோ கல்விச்சபையில் 12270 தமிழ் மாணவர்கள் கல்வி பயிலுகின்ற போதும் கிட்டத்தட்ட 45% மான மாணவர்களே தமிழ் மொழியை கற்பதற்காக தமிழ் கல்வி நிறுவனங்களில் தம்மை பதிவு செய்து கற்று வருகின்றனர். இது ஒப்பீட்டளவில் குறைவானதாகும். மேலும், சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தமிழர் கல்விசார் அதிகாரிகளால் கூறப்படுகிறது. இந்நிலையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் தாமும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயங்களைக் கருத்தில் கொள்ளும்போது தமிழ் மொழி கற்பித்தல்-கற்றலில் உள்ள இடர்பாடுகளை கண்டறிந்து, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கும் ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளதனை உணர முடிகின்றது. இதனைச் சுட்டிக்காட்டும் ஒரு சிந்தனைப் பகிர்வுக் கட்டுரையாக இது அமைகிறது.

தமிழ் மொழி கற்பித்தல்-கற்றலில் உள்ள இடர்பாடுகளை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காக இதனை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம். ஆனாலும் இவை தனித்தும், ஒன்றோடொன்று இணைந்தும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவை என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1) ஆசிரியர்கள்
2) மாணவர்கள்
3) பெற்றோர்கள்
4) பாடத்திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்கள்

மொழியை கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோரும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் நியமனம் பெற்றவர்களாகவோ, அல்லது மொழிசார் கல்வித் தகைமை உடையவர்களாகவோ இருப்பது ஒப்பீட்டளவில் பார்க்கும்போது குறைவாக இருப்பதையே காணமுடிகிறது. கல்விச் சபைகளிலும், கல்விசார் அமைப்புகளிலும் கற்பித்தலில் முன்னனுபவம் இல்லாத பலர் ஆரம்ப காலங்களில் தேவை கருதி நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களால் மாணவர்களின் உடல், உள தன்மைகளுக்கும், பாடத்திட்டதிற்கும் ஏற்ப உச்ச மட்ட கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் போனதை இங்கு குறிப்பிடலாம்.

மேலும் இவர்களுக்கு அவ்வப்போது பயிற்சிகள் வழங்கப்பட்டாலும், எல்லா ஆசிரியர்களும் இதில் கலந்து கொள்ளவில்லை. அவ்வாறு கலந்து கொண்டவர்களும் தாம்பெற்ற பயிற்சிகளை எந்தளவிற்குப் பயன்படுத்தினார்கள் என்பதுபற்றி மேற்பார்வை செய்யப்படதா என்றால் திருப்தியான விடை இல்லை.

இதற்கான தீர்வுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

* கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குப் போதியளவு பயிற்சிகள், மாதாந்த கலந்துரையாடல்கள், ஆசிரியர் மேற்பார்வை என்பன மேற்கொள்ளப்பட்டு போதியளவு பின்னூட்டல்கள் வழங்கப்பட வேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் பட்டம் பெற்றவர்களாகவோ அல்லது போதிய ஆசிரியர் பயிற்சியினை பெற்றவர்களாகவோ இல்லாததால் மேற்கூறிய விடயங்களில் அதிக கவனம் செலுத்துதல் சிறப்பானது.

* நேர முகாமைத்துவம், வகுப்பறைக் கட்டுப்பாடு, பல்தரக் கற்பித்தல், பல்வேறுபட்ட கற்பித்தல் முறைகள் தொடர்பான செயலமர்வுகளை நடாத்தி ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அதிகரிக்க முடியும்.

* மாதாந்தம் ஒரு முறையேனும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு மிகவும் பயனுள்ள வகையில் அமைதல் வேண்டும்.

* நுண்கலைகளில் ஆசிரியர்களுக்கு ஓரளவு பயிற்சி வழங்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் விரும்பும் ஆசிரியராகவும், மாணவர்கள் விரும்பும் வகையில் தமது கற்பித்தல் செயற்ப்பாடுகளை முறையாகவும் திட்டமிட முடியும்.

* ஒரு விடயத்தை சிறப்பாக கற்பிக்கத் தெரிந்த ஆசிரியர் மற்றைய ஆசிரியருக்கும் அதைச் சொல்லிக்கொடுக்க வேண்டும் மாறாக சிறப்பாக கற்பிக்கத் தெரியாதவர்கள் அனுபவம் பெற்ற ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

* வகுப்பறையில் தமிழ் மொழியை மட்டும் பேசுவோம் என அன்பாகக் கேட்டுக்கொள்வதுடன் அவ்வாறு தமிழ் மொழியில் பேசும் மாணவர்களை பாராட்டிப் பேசும்போது அது மற்றைய மாணவர்களுக்கு ஊக்கம் தருவதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள்

தமிழ் மொழியை கற்கும் பெரும்பாலான மாணவர்கள் தமிழ் மொழியை ஏன் கற்க வேண்டும்? என்பதற்கான சீரான விளக்கத்தை கொண்டிருக்கவில்லை என்பதும், தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் ஆங்கில மொழியுடன் ஒப்பிடுகையில் மிக அதிகளவாக உள்ளதும், மற்றைய பாடங்களின் அதிக வேலைப்பளு, தமிழ் மொழி பாடத்திட்டத்தின் சில கடினமான பகுதிகள், வாரத்திற்கு ஒருமுறை மட்டும் நடைபெறும் வகுப்புகள், மற்றும் சனிக்கிழமை வகுப்புகள் என்பன மாணவர்களை உடல் உளரீதியாக பாதிப்பதாக அமைகிறது.

மேலும், மாணவர்களுக்கான ஓய்வுநேரம் மிகக்குறைவாக இருப்பதனால் சனிக்கிழமைகளில் நடைபெறும் வகுப்புக்களுக்கு வேண்டாவெறுப்பாகவும், பெற்றோர்களின் வற்புறுத்தல் காரணமாகவுமே செல்கின்றனர். இவ்வாறு வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்களின் (சாதரணமான, மெல்ல கற்கும், மீள்திறனுடைய) தன்மைக்கேற்ப அவர்களை கவர்ந்திழுக்கும் வகையில் வினைத்திறன் மிக்க கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் பயன்படுத்தாதபோது அந்த கற்றல்-கற்பித்தல் செயற்பாடு மாணவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது.

இதற்கான தீர்வுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

* ஆசிரியர் கற்பிக்கும் விடயங்கள் விளங்காதபோது, திரும்பவும் அவரிடம் கேட்டுப் படிக்கலாம்.
* வகுப்பறை விடயங்களை பெற்றோருடன் கலந்துரையாடுதல்
* சகமாணவர்களிடம் கேட்டுப் படிக்கலாம்
* தாய்மொழியின் அவசியத்தை மாணவர்கள் உணர்வுபூர்வமாக ஏற்று விரும்பிக் கற்பதற்க்காக ஆசிரியர்கள் பல்வேறு வரலாற்றுக் கதைகளையும், கலை நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்வதோடு இவற்றில் மாணவர்களையும் கலந்து கொள்ளச்செய்தல் வேண்டும்.
* மாணவர்கள் விரும்பும் வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் அமைவதை மேற்பார்வையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
* மாணவர்கள் ஆசிரியர்களிடத்திலும் பெற்றோர்களிடத்திலும் நம்பிக்கை மிக்கவர்களாக இருப்பதோடு சக மாணவர்களிடத்தில் தமது எண்ணக்கருக்களை பகிர்ந்துக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.
* வீட்டிலும், வகுப்பிலும் தமிழ் மொழியில் உரையாடுவதை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## பெற்றோர்கள்

தமிழ் மொழியை தமது பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் எல்லாப் பெற்றோர்களும் கரிசனை காட்டுவதில்லை. சில நாட்டுப்பற்றாளர்களும், மொழிப்பற்றாளர்களும் மட்டுமே தமது பிள்ளைகளின் தாய்மொழிக் கல்வியில் அதிக அக்கறை செலுத்துகின்றனர். இவர்களிலும் தமது வேலைப்பளு காரணமாக பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை பற்றி கேட்டறிந்து உதவ முடியாதவர்களும் உள்ளனர். ஆனால் தமிழ் மொழி வகுப்புக்களுக்கு தவறாது கூட்டிச்சென்று வருவார்கள். இன்னும் சில பெற்றோர்கள். வீட்டிலே தமது பிள்ளைகளோடு தமிழ் மொழியில் கதைக்காமல் ஆங்கில மொழியில் பேசுவார்கள். இன்னும் சிலர் தாம் தாய் மொழியில் பேசினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசும்போது அதை பொருட்படுதாதாமல் விட்டு விடுகிறார்கள். அதாவது தாய் மொழியில் பேசவேண்டும் என வலிந்து கூறுவதில்லை. மாறாக "அவங்களின்ட காலத்தில தமிழையே கதைக்க போகுதுகள் அதுகளுக்கு கஷ்டம் குடுக்காம படிக்கிறத படிச்சிட்டு போகட்டும்" என்று அசட்டையாக இருந்துவிடுகிறார்கள். மேலும் சிலர் ஆசிரியர்களையே முற்று முழுதாக நம்பி இருப்பதோடு அவர்களை குறைகூறி வருகின்றமையையும் அவதானிக்க முடிகிறது.

இதற்கான தீர்வுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்

* பிள்ளைகள் மீதான கண்காணிப்பு எல்லா வேளைகளிலும் இருப்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
* ஒருநாளைக்கு ஒருமணித்தியாலம் கட்டாயம் தமிழ் படிப்பதை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் தமிழ் மொழிக் கற்றலில் ஓரளவு விருத்தியை ஏற்படுத்தலாம்.
* வீட்டிலும், கலாசார நிகழ்வுகளிலும் தமிழ் மொழியில் பேசுவதை கட்டாயமானதாக்கிக் கொள்ள வேண்டும்.
* பிள்ளைகள் தமக்கிடையிலே ஆங்கிலத்தில் உரையாடுவதைக் குறைத்து தமிழில் உரையாடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். இதற்காக சில பரிசில்களை வழங்கலாம்.

## பாடத்திட்டம்:

பாடத்திட்டம் என்பது வயது, தரம், சூழல், காலம், தேவை போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாக கொண்டு திட்டமிடப்படுகின்ற விடயமாகும். ஆனால் தாய்மொழியாம் தமிழ்மொழிப் பாடத்திட்டமானது மொழி அறிவை அதிகம் விருத்தி செய்யும் பாடத்திட்டமாகவும் மாணவர்களின் தேவை, வயது, தரம் என்பவற்றிற்கு அமைய இலகுவான பாடத்திட்டமாகவன்றி கடினத்தன்மையுடையதாக இருப்பதாகவும் பல பெற்றோர்களும், சில ஆசிரியர்களும் வருத்தம் தெரிவிக்கின்றனர். எனவே தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களும் ஆசிரியர்களும் இடர்படுவதை அறியமுடிகிறது.

இவ் இடர்பாடுகளுக்கான தீர்வுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

* பாடத்திட்டமானது இலகுவாக்கப்பட வேண்டும்.
* மாணவர்கள் விரும்பி கற்கும் வகையில் கலை, கலாசார அம்சங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.
* இவ்வம்சங்கள் தமிழர் நாட்காட்டியில் இடம்பெறும் விஷேட மாதங்களில் சிறப்பாக கொண்டாடப்படும் வகையில் அமைய வேண்டும்.

எடுத்துக்காட்டாக, தை மாதத்தில் பொங்கல் விழா, தை மரபுத் திங்கள், ஆடி மாதத்தில் - ஆடிப்பிறப்பு. இவ்வாறு முக்கிய மாதங்களில் இடம்பெறும் கலை, கலாசார விழாக்கள் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருந்தாலும் அவை அந்தந்த மாதங்களில் எல்லா மாணவர்களும் பங்குபற்றும் வகையில் அமைதல் வேண்டும். வருட இறுதியில் ஒரே நாளில் இடம்பெறும் கலைவிழாவில் எல்லா மாணவர்களும் பங்குபற்ற முடியாத நிலைமை ஏற்படும். அந்தந்த மாதங்களில் நிகழவிருக்கும் கலை, கலாசார நிகழ்வுகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்களிற்கும், பாடல்களுக்கும் நடிப்பதை விடுத்து மாணவர்கள் தாமாகவே வசனங்களைப் பேசி நடிக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான அனுபவத்தைப் பெறலாம்.

மேற்படி விடயங்களைக் கருத்தில் கொள்ளும்போது தமிழ் மொழி கற்பித்தல்-கற்றலில் உள்ள இடர்பாடுகளை முழுமையாகக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கும் ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளவேண்டியது அவசியமானதும், அவசரமானதுமாகும் என்பது புலனாகின்றது. முழுமையான ஆய்வின் மூலமாகவே உண்மையான இடர்பாடுகளையும், தீர்வுகளையும் கண்டறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் வைத்தலைவை பிறப்பிடமாகக்கொண்ட திரு.முருகேசு ரவீந்திரன் வீரகேசரி நிறுவனத்தில் ஒப்புநோக்குனராக தமது பணியினை ஆரம்பித்தார். 1994ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நாடகக் கலைஞராக தெரிவுசெய்யப்பட்ட இவர் பின்னர் பகுதிநேர அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் நியமனம்பெற்று முதல்தர அறிவிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். அதேவேளை பாராளுமன்ற செய்தியாளராகவும் பணியாற்றியிருக்கின்றார். தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவையான யாழ் F.M இல் கட்டுப்பாட்டாளராக பணிபுரிந்து வருகின்றார். ஒலிபரப்பாளர், எழுத்தாளர் என்ற இரு தளங்களில் தமது ஆளுமையை வெளிப்படுத்தி வரும் இவர் எழுதிய பல படைப்புக்களில் 'நிலவு நிழலும் தெரியும்' என்ற சிறு கதைத் தொகுப்பு வடமாகாண சபையினால் 2014ல் வெளிவந்த சிறந்த சிறு கதைத் தொகுப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அகில இலங்கை சாகித்திய விழாவில் முதல்மூன்று சிறு கதைத் தொகுதிகளில் ஒன்றாகவும் இது தேர்வுசெய்யப்பட்டிருந்தது. இச்சிறு கதைத் தொகுப்பிலுள்ள சில கதைகளில் தான் பிறந்த காரை மண்ணின் வாசனையையும் இடையிடையே கசிய விட்டுள்ளார். அத்தகைய கதைகளுள் ஒன்றும் கலை நேர்த்தி மிக்கதுமான இக்கதை இங்கே தரப்படுகிறது.

# துளிர்ப்பின் வாட்டம்

-முருகேசு ரவீந்திரன்-

யாழ் நகர வீதிகள் ஊடாக அந்த 'ரோசா' மினிபஸ் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. ஓட்டுமடம் சந்தியைத் தாண்டும் வரை இப்படி ஊர்ந்து போகும் என்பது அவனுக்குத் தெரியும் அறிவு. இந்த வழியால் அடிக்கடி பஸ்ஸில் பயணிக்கின்றான். ஓட்டுமடம் சந்தியை அடைவதற்குள் எவ்வளவு பேரை ஏற்ற முடியுமோ அவ்வளவுக்கு ஆட்களை ஏற்றி விடுவார்கள். மினிபஸ் ஒரு பக்கம் பிதுங்கி வழிந்தவாறுதான் செல்லும். இந்த விடயத்தில் சாரதியும் நடத்துனரும் மனிதாபிமானம் பார்ப்பதில்லை. அவர்களுக்கு பணம் வேண்டும். பணம் அவர்களுக்கு மட்டுமா தேவைப்படுகிறது? அது எல்லோருக்கும் தேவையானது. அதற்காக இப்படியா நடப்பது என இவன் எண்ணுவதுண்டு.

அறிவுக்கு சத்திரசிகிச்சை செய்த இடத்தில் வலித்தது. ஆசன இருக்கையின் பின்பக்கம் தலையணையை வைத்து அதன் மீது சாய்ந்திருந்தான். மூலவியாதிக்கான சத்திர சிகிச்சை சிறியதாக இருந்தாலும் வேதனை அதிகமாக இருந்தது.

மூலவியாதி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். கொதியர்கள் பற்றியும் அறிந்திருக்கிறான். அறிவுக்கு அந்த வியாதி வந்த போதுதான் மூலக்கொதியை உணர்வுபூர்வமாக அறிய முடிந்தது. தலையிடியும் காய்ச்சலும் வந்தால் தான் தெரிகிறது.

மரணம் எப்படியிருக்கும் என எவராலும் சொல்ல இயலாது. அதை அநுபவித்தால் தான் அது பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அந்த அநுபவத்தைப் பெற்றவர்கள் எவராலும் அது பற்றி எழுத முடியாது. மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இயலாது. அதனால்தான் சாவின் அநுபவம் எனச் செத்துப் பிழைத்தவர்களின் அநுபவத் தொகுப்பாக சில நூல்கள் வெளியாகியுள்ளன. அதில் எந்தளவுக்கு உண்மை இருக்கும் என யாருக்கும் தெரியாது. சிலவேளை இறப்புக் குறித்த அநுபவம் வேறுவிதமாகவும் இருக்கலாம் என அறிவு நினைத்தான்.

மினிபஸ் ஓட்டுமடம் சந்தியைத் தாண்டிய போது 'கோம்பயன் மணல்' சுடலை தெரிந்தது. சுடலையில் நின்ற மரங்களில் ஆடு, மாடுகளின் நஞ்சுக் கொடிகள் அடங்கிய பைகள் கட்டப்பட்டிருந்தன. யாழ் நகரில் வாழ்ந்தோரில் பலர் கடைசியாக இங்கேதான் வந்திருக்கிறார்கள். கோம்பயன் மணல் சுடலையில் தான் அவர்கள் ஒரு பிடி சாம்பலாகியிருக்கிறார்கள். இந்த இடத்தைத் தாண்டி வீதியில் பயணிக்கும் போதெல்லாம் அறிவு வாழ்வின் நிலையாமை பற்றி யோசித்திருக்கிறான். ஆனால் அதன் பின்பு அது பற்றி சிந்திப்பதில்லை. இதைத்தான் எம்மவர்கள் சுடலை ஞானம் என்கிறார்கள்.

பஸ்ஸிலே சனநெருக்கமாக இருந்தது. அருகில் நின்றவளின் இடுப்புப் பகுதி அறிவின் இடப்பக்கத் தோளை நெருக்கியது. அந்த நெருக்கத்தை அவன் இரசித்தான். அவன் அந்த நெருக்கத்துக்குரியவளின் முகத்தைப் பார்த்த போது "சொறி" எனச் சொன்னாள்.

"பரவாயில்லை" என்றவன் அப்படிச் சொல்லியது தவறோ என எண்ணினான். அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கம் அவனுக்கு இன்பம் தந்தது. சத்திர சிகிச்சையின் வேதனை அவளின் நெருக்கத்தில் சற்றுக் குறைந்திருந்தது. உண்மையில் அந்த நெருக்கத்திற்குரியவளுக்கு நன்றி சொல்ல விரும்பினான். பெண்மையைத் தாயாக, சகோதரியாக, நண்பியாக நோக்காது உடலிச்சைக்குரியவளாக நோக்கியது அறிவுக்கு வெட்கத்தைத் தந்தது. சனநெருக்கத்தில் அவள் நிற்க முடியாது அவதிப்பட்டு அவனை நெருக்கியிருக்கிறாள். அவளின் துன்பம் அறிவுக்கு இன்பத்தைத் தந்திருக்கிறது. மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காண்பது எவ்வளவு கேவலமானது. தனக்கும் மிருகங்களிற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியுமென எண்ணினான். மிருகங்கள் இனப்பெருக்க காலத்தில் மட்டுமே இணை சேருகின்றன. ஆனால் மனிதர்களுக்கு எல்லா நாட்களுமே இணை சேரக்கூடிய நாட்களாகவே உள்ளன. இந்த இயற்கை நியதியை எப்படி மீற முடியும். மனிதர்களை விலங்குகளில் இருந்து வேறுபடுத்துகின்றோம். ஆறறிவு படைத்தவர்கள் எனப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் உடலிச்சையைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறோம்.

உடலிச்சையை ஏன் கேவலமானதாகக் கருதவேண்டும்? இயல்பானதொன்றாக ஏன் நோக்கக் கூடாது? உடலிச்சை இன்றிய வாழ்க்கை, வரண்ட பாலை நிலம் போன்று இருக்காதா? வாழ வேண்டுமென்ற உந்துதலே அதனால்த்தானே ஏற்படுகின்றது. இதனை இல்லையென்று யாரும் கூறிவிட முடியுமா? என அறிவு நினைத்தான்.

அவள் இப்போது அவனை இயல்பாகப் பார்த்தாள். அவள், இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அறிவும் பதிலுக்கு புன்னகைத்தான்.

"கையில் வைச்சிருக்க கஸ்டமாய் இருக்கும். தாங்கோ நான் வைச்சிருக்கிறன்." அவள் தந்த பையை வாங்கி மடியில் வைத்துக் கொண்டபோது திருப்தியாக இருந்தது.

கறுப்பு 'ஸ்கேட்டும்' இளஞ்சிவப்பு 'பிளவுசும்' அவளுக்கு அழகு சேர்த்தன. வெள்ளைக்குக் கறுப்பு என்பார்களே அது அவளுக்குத்தான் பொருந்தும். முகத்திலே பருக்கள் வந்து மாறியதன் தழும்புகள். அந்தக் குறையை ஈடுசெய்வது போன்று அழகிய வளைந்த புருவங்கள். அவளின் கூந்தல் கருநாகம் போன்று நீண்டு இருக்காது கிளைப்பிரி போன்று இருந்தது.

நிலவு என்றால் குறைகள் இருக்கத்தானே செய்யும். அந்தக் குறைகள் இருப்பதே அதற்கு அழகூட்டுகிறதென்றுதானோ. அப்படித்தான் அவள் முகத்தில் காணப்பட்ட வடுக்களும் அந்த முகத்திற்கு மேலும் அழகு சேர்ப்பதாக நினைத்தான். அவளிடம் வடுப்பான வசீகரம் இருப்பதாக உணர்ந்தான்.

மின்டன் ஆறுகால் மடத்தடியில் நின்றபோது சிலர் இறங்கப் பலர் ஏறிக்கொண்டனர்.

அன்றைக்கு ஆரம்பத்தில் மலங்கழிக்கும் போது மலவாசல் வலித்தது. இன்னும் சில நாட்களில் வலி அதிகரித்தது. மலத்துடன் இரத்தம் வெளியேறியபோது பயப்பிட்டான்.

காரைநகரில் பிரபலமான அப்போதிக்கரியான யோகநாதனிடம் காட்டினான். அவரது மருத்துவ நிலையம் சயம்பு வீதியில் இருந்தது. தனது வீட்டின் முன்புற அறையை சிகிச்சை நிலையமாக பயன்படுத்தினார். ஊரில் உள்ளபலரும் அவரிடம் சிகிச்சைகள் பெற வருவார்கள். அவர்களிடம் யோகநாதன் அதிக பணம் அறவிடுவதில்லை. வறியவர்கள் என்றால் யோகநாதன் பணம் வாங்காமலேயே மருந்து கொடுத்து விடுவார். அவன் வசித்த பண்டித்தாழ்வுக்குக் கிட்டவாகத்தான் அப்போதிக்கரி யோகநாதனின் மருத்துவ நிலையம் இருந்தது. அறிவிடம் நோய் பற்றிக் கேட்டவர் தனது சிகிச்சை அறையில் இருந்த கட்டிலில் குப்புறப்படுக்கச் சொன்னார். அவன் கட்டிலில் ஏறிப்படுத்தான்.

"உப்பிடிப்படுத்தால் நான் எப்படிச் சோதிக்கிறது"

அறிவுக்கு அவர் கூறியது விளங்காமலில்லை. அந்த அறையில் அப்போதிக்கரி யோகநாதன் மட்டும் இருந்திருந்தால் அப்படிப் படுத்திருக்கமாட்டான். அவருக்கு உதவியாக நிற்கும் அந்தப் பெண்ணைப் பார்த்தபோது சங்கடமாக இருந்தது.

அறிவு, வேலைக்குப் போகும் போது அவளைப் பார்த்திருக்கின்றான். சயம்பு வீதியால் நடந்து போகும் போது உப-தபால் நிலையத்துக்கு அருகிலோ, சயம்பு சிலைக்குப் பக்கத்திலோ அவளைச் சந்திப்பதுண்டு. அப்படி சந்திக்கும் போதெல்லாம் அவன் அவளைப் பார்க்காமல் சென்றதில்லை. அறிவு பார்க்கும் போது அவளும் பார்த்திருக்கிறாள். அவை வெறும் பார்வைகளாகவே அமைந்தன. அதற்கப்பாலான புன்னகையோ நெருக்கமோ அவர்களிடம் இருந்ததில்லை. அறிவு, அவளைப்பார்த்து புன்னகைக்க விரும்பியிருக்கிறான். அப்படி விரும்பிய போதெல்லாம் இனம் புரியாத பயம் அவனைப் பற்றிக்கொண்டுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவன் எண்ணம் நிறைவேறாமலேயே போனது. தான் புன்னகைக்க, அவள் பதிலுக்கு முறைத்தால் என்ன செய்வது என எண்ணிப் பயந்தான். அதற்காகவே அவள் முகத்தைப் பார்ப்பதை தவிர்த்து கால்களைப் பார்த்திருக்கின்றான்.

'ஸ்கேட்டு'க்கு கீழே அவளது கால்கள் வடிவமாகவும் அழகாகவும் தெரிந்தன. அறிவுக்கு அவள் வசீகரமானவளாகத் தோன்றினாள்.

அறிவு, அவள் வரும் நேரமாகப் பார்த்தே வேலைக்கு வெளிக்கிடுவான். அதனால் அவளைச் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அவளை நேராகப் பார்க்கும் துணிவு அவனிடம் இருக்கவில்லை. இப்படித்தான் அன்று அவன் அவளைக் கடந்து சென்ற போது அறிவு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவள், ஏதோ உள்ளுணர்வுக்கு உட்பட்டவளாக திரும்பியபோது, இவன் தன்னைப் பார்ப்பதைக் கண்டாள். அறிவு, தன்பார்வை இயல்பானது என வெளிப்படுத்த அவள் பதிலுக்கு சிரிக்கா விட்டாலும் முறைக்காமல் சென்றது நிம்மதியை தந்தது. அப்போதிக்கரி யோகநாதனிடம் காட்டப்போய், இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே என எண்ணினான்.

“டவுசரை கீழே இறக்கிப் போட்டுக் குப்புறப்படும்”

அறிவு, வேறு வழியின்றி அவர் சொன்னவாறு செய்தான்.

“சுவேதா, அந்த சிறிஞ்சை எடுத்துத் தாரும்”

அவளது பெயர் சுவேதா என்பது அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது. அது அவளுக்குப் பொருத்தமாக இருப்பதாக எண்ணினான். அப்போதிக்கரி யோகநாதன், மலவாசலில் ஊசியை வைத்து அழுத்திய போது அவனுக்கு அழுகை வந்துவிட்டது. வலி பொறுக்க முடியாத நிலையில் கத்த முற்பட்டவன், சுவேதா, அங்கே நிற்பதைக் கண்டு வாயை மூடிக் கொண்டான். ஆனால் அந்த அதீத வேதனை கண்களின் வழியே கண்ணீராக வெளிப்பட்டது. குப்புறப் படுத்திருந்ததால் அவனுக்கு சுவேதாவின் கால்களைப் பார்க்க முடிந்தது. நகங்களுக்கு அடிக்கப்பட்டிருந்த சாயத்தால் அந்தப் பாதங்களின் அழகு இன்னும் அதிகமாகி இருப்பதாக நினைத்தான். அந்த நினைவு, அவனை வேதனையிலிருந்து விடுவிப்பதாக உணர்ந்தான்.

மினிபஸ், சங்கானையில் நின்றபோது பலர் இறங்கினர். அறிவிடமிருந்து பையை வாங்கியவள், அவனுக்கருகில் வெறுமையாகியிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

இப்போது சங்கானையில் வங்கிகளும் கடைகளும் அதிகமாகக் காணப்பட்டன. அங்கு எஞ்சியிருந்த பழைய கட்டடங்கள் அந்த நகரின் தொன்மையை பிரதிபலித்தன.

அறிவு, சங்கானைச் சந்தையில் மரக்கறி வாங்கியிருக்கிறான். வெள்ளரிப்பழக் காலத்தில் அந்தப் பழங்களை மாட்டு வண்டில்களில் சந்தைக்குக் கொண்டு வருவார்கள். இந்த வெள்ளரிப்பழ வண்டில்களைச் சுற்றி சனக்கூட்டம் காணப்படும். வெள்ளரிப் பழங்களை பனையோலைகளால் சுற்றிக்கட்டிக் கொண்டு வருவார்கள். வெடித்த வெள்ளரிப் பழங்களில் இருந்து வரும் வாசனை வாயில் நீர் ஊற வைப்பதாக இருக்கும். மூல வருத்தத்துக்கு வெள்ளரிப்பழம் நல்லதென அம்மா சொல்லக் கேட்டிருக்கிறான்.

மினிபஸ்ஸிலே அறிவுக்கு விருப்பமான பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. “மருதாணி நான் வந்து பூசட்டுமா மகாராணி பாதத்திலே” என ஜேசுதாஸின் குரல் மனதை வருடியது. அவன் அருகிலிருந்தவளைப் பார்த்தான். அவளும் பார்த்தான். அறிவு புன்னகைத்தான். அவளும் பதிலுக்குப் புன்னகைத்தான். அவன், அவளது கால்களைப் பார்த்தான். அவை சுவேதாவின் கால்களைப் போல அழகாக இருந்தன.

அவள், இறங்கும் இடம் அவனுக்குத் தெரியாது. அடுத்து வரும் பண்டத்தரிப்பு நிலையத்தில் கூட இறங்கலாம். ஆனால் அதற்கு முன் அவளோடு கதைக்க வேண்டும். என்ன கதைப்பது, எப்படித் தொடங்குவது. கதைப்பதற்கு ஆயிரம் விடயங்கள் உள்ளன. அவளுக்கு எது பிடிக்கும். எது பற்றிக் கதைத்தால் பிடிக்காது. எதுவும் அவனுக்குத் தெரியாது.

சுவேதாவுக்கு எது பிடிக்குமோ அது அவளுக்கும் பிடிக்கலாம். பெண்கள் எல்லோருக்கும் ஒரே விடயத்தில் ஆர்வம் இருக்கும் என எப்படிச் சொல்ல முடியும். சுவேதாவைப் பற்றி அவனுக்கு அதிகம் தெரியாது. அப்படி இருக்க இவளைப் பற்றி அறிந்து கொள்வது மட்டும் இலகுவானதாக இருக்குமா? அவன் மனம் எண்ணங்களில் அலைக்கழிந்தது.

அப்போதிக்கரி யோகநாதனிடம் சிகிச்சை பெற்றதற்குப் பின்பு வேலைக்குப் போகும் நாளில் சுவேதாவை வழியில் சந்தித்தான். தியாகராசா மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா வித்தியாலயத்துக்கருகில் அவள் வந்த போது அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அவளது முகத்தைப் பார்க்க முன்பை விடவும் அதிகம் வெட்கப்பட்டான்.

"வேலைக்குப் போறியள் போல"

"ஓம்" என ஒற்றையாக பதிலளித்தவன்,

இதுவெல்லாம் ஒரு கேள்வியா என்ற நோக்கில் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான். இதற்கு முன்னரும் வேலைக்குப் போகும்போது அவளைப் பல தடவைகள் பார்த்திருக்கிறான். அப்போதெல்லாம் அவன் பார்த்தாலும் பார்க்காதது போல் போகும் இவள், இன்று ஏன் கதைக்கிறாள், மருத்துவமனைக் கட்டிலில் குப்புறப்படுத்ததை கேலி செய்யப் போகிறாளோ? அவள், அப்படி எல்லாம் எண்ணக் கூடியவளாகத் தெரியவில்லை.

"வருத்தம் இப்ப சுகமோ?"

"பரவாயில்லை"

"மருந்தெல்லாம் ஒழுங்கா குடிக்கிறினியளே"

"குடிக்கிறன்"

"உங்களைப் பார்த்தால், ஆரும் மூல வருத்தக்காரன் என்று சொல்ல மாட்டினம்"

"ஏன் அப்படிச் சொல்லுறியள்"

"மூல வருத்தக்காரர் கோபப்படுவினம் எனச் சொல்லுவினம். ஆனால் நீங்கள் அமைதியானவராக இருக்கிறியள்"

சுவேதா, இப்படிச் சொன்னது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அறிவு, பாடசாலையில் நடராசா மண்டபத்தைப் பார்த்தான். நீதியரசராக இருந்த நடராசா தான் வழங்கிய தண்டனையால் ஒருவன் தூக்கில் தொங்கப் போகிறானே என எண்ணிக் கவலைப்பட்டார். அந்தக் கவலையே நீதியரசர் நடராசாவின் இறப்புக்கு காரணமாகியது. அவரை நினைவுபடுத்தும் வகையில், அந்த மண்டபம் கட்டப்பட்டது.

ஆரம்பத்தில் சயம்பு பள்ளிக்கூடம் என்றும் பின்னர் காரைநகர் இந்துக் கல்லூரி எனவும் அழைக்கப்பட்ட பாடசாலை, இன்று தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

அறிவு, அந்தப் பாடசாலையில் தான் படித்தான். நடராசா போன்ற கனவான்கள் பிறந்த மண்ணில் தான் பிறந்ததை எண்ணி அவன் பெருமைப்பட்டிருக்கிறான்.

அவன், சுவேதாவின் வார்த்தைகளால் ஈர்க்கப்பட்டான். அறிவுக்கு மூலவருத்தம் அதிகரித்தது. மருந்து மாத்திரைகள் பயனற்றுப் போயின. யாழ் பெரியாஸ்பத்திரியில் காட்டியபோது சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள்.

நேற்று முன்தினம் அவனுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இன்று பிற்பகல் அவன் வீடு போகலாம் என வைத்தியர் கூறினார். மத்தியானம் அவனைப் பார்க்க வந்த அம்மாதான், துண்டு வெட்டிக் கூட்டிக் கொண்டு வாறா. தனக்கொரு திருமணம் நடந்திருந்தால் இப்படி நாற்பதைத் தாண்டிய பின்பும், அம்மாவுக்கு பாரமாக இருக்க வேண்டி வந்திருக்காது என நினைத்தான்.

திருமணம் என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் நிறைவேறாமல் போவதுண்டு.

அறிவு, இருந்த இருக்கைக்கு முன்னால் அம்மா இருந்தா.

"தம்பி நோகுதே"

"இல்லையம்மா"

"தலையணையை முதுகுக்கு சாய்வாய் வைச்சுக்கொண்டிரு"

அம்மாவின் வார்த்தைகளால், அருகிலிருந்தவள் சற்று விலகியிருந்தாள். அறிவுக்கு அம்மாவின் மீது கோபம் வந்தது.

அவள், இறங்குவதற்கு முன் ஏதாவது கதைக்க வேண்டும். ஆனால் அம்மா முன்னால் இருப்பது இடைஞ்சலாக இருந்தது. அறிவு, அவளின் முகத்தை கூர்ந்து நோக்கினான். அவளுக்கும் தம்மையொத்த வயதிருக்கும் என நினைத்தான். கீரைப்பிடி போன்று காணப்பட்ட அவளது கூந்தலை கிட்டத்தில் பார்த்தபோது வெள்ளிக் கம்பிகளாக அரும்பிய மயிர்கள் அவனுக்கு ஆர்வத்தை தூண்டின. நெற்றியில் அவள் வைத்திருந்த கறுத்தப் பொட்டு நம்பிக்கையை வலுப்படுத்தியது.

ஆண்களைப் போன்று பெண்கள் உளறுவதில்லை. அவர்களைப் பற்றி அறிவது கடினம். அறிவு, பல பெண்களோடு உரையாடியிருக்கிறான். ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்து இருக்கிறான். ஆனால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சுவேதா. காதலித்தே கலியாணம் முடித்தாள். அவள் காதலித்த விடயம், அப்போதிக்கரி வேலைகூடத்துக்கு கூட தெரியாதாம். இதை அவளே, தன் நண்பர் ஒருவரிடம் கூறியதாக அறிந்தான்.

அறிவு, தனக்கருகில் இருப்பவளை ஆசையோடு பார்த்தான். அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது. இவளோடு எப்படியாவது கதைக்க வேண்டும் என விரும்பினான். அம்மா, அடிக்கொருதரம் திரும்பிப் பார்த்து இருக்கையில் சாய்ந்திருக்குமாறு கூறியது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

அம்மா அவனோடு உரையாடிய பின் அருகில் இருந்தவளின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது. அவள், முன்பை விட இன்னும் விலத்தி இருந்தாள். முகத்திலே புன்னகை இல்லை. அருவருப்போடு அவள் தன்னைப் பார்ப்பதாக நினைத்தான்.

மினிபஸ், மூளாய் வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள தரிப்பிடத்தில் நின்ற போது, பயணிகளோடு ஒருத்தியாக அவளும் பஸ்ஸை விட்டு இறங்கினாள். இறங்கும் போது அவள், தன்னைப் பார்த்துப் புன்னகைப்பாள் என எண்ணினான். ஆனால் அவள், அவனைத் திரும்பிப் பார்க்காமலேயே போனாள். அறிவு, அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். தனது இதயம் அவள் கேட்காமலேயே கழன்று அவளின் காலடியில் விழுந்துவிட்டது போல் உணர்ந்தான். அதனை அவள் தன் அழகிய கால்களால் தட்டிவிட்டுச் செல்வது போல் இருந்தது. ஏன் அவள் அப்படி நடந்து கொண்டாள். அந்த அழகிய கால்களால் தன் இதயத்தை மிதித்திருக்கலாம். மூச்சுக்காற்றை நிறுத்தியிருக்கலாம் என அவன் நினைத்தான்.

அறிவுக்கு இப்போது உடலும் வலித்தது. மூலம், முன்பைவிட வேதனை தருவதாக உணர்ந்தான்.

"என்ன தம்பி நோகுதே"

அவனுக்கு அருகில், வெறுமையாகிப் போயிருந்த இருக்கையில் வந்தமர்ந்த அம்மா அறிவின் தலையை ஆதரவாக தடவிவிட்டா. அவனுக்கு, அம்மா மீது இப்போது எரிச்சல் வரவில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கமாக வியாபித்திருக்கும், பெண்மையின் உன்னதத்தை அவனால் இப்போது உணர முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளானை, களபூமியைச் சேர்ந்த தம்பையா அம்பிகைபாகன் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றி நல் ஆசிரியர் என்ற பெயர்பெற்று விளங்குபவர். அகில இலங்கை சமாதான நீதிவானாகிய இவர் கொழும்புக் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றிய சிறப்புக்குரியவர். கலைமாணிப் பட்டமும் கல்வியில் டிப்ளோமாப் பட்டமும் பெற்றவர். கனடா-காரை கலாச்சார மன்றத்தின் நிர்வாகத்தில் அங்கம் வகித்தும் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகப் பதவி வகித்தும் முனைப்புடன் செயலாற்றி வந்ததுடன் அச்சங்கங்களுடன் இன்றுவரை தொடர்பிலிருந்து அக்கறையுடன் பணியாற்றி வருபவர்.

# இன்றைய காரைநகர்

**- தம்பையா அம்பிகைபாகன் -**

காரைநகர் என்று அழைக்கப்படும் நாம் பிறந்து வளர்ந்து கல்வி கற்று ஆசிரியராகப் பணிபுரிந்த கிராமம் என்றால் அது மிகையாகாது. நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட இயற்கை அழகுள்ள பிரதேசத்தில் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுகின்ற காரைநகர்ச் சிவன்கோவில் முதல் தெய்வீகக் கோவில்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது. காரைநகரின் உட்பிரிவுகளான வலந்தலை, களபூமி, மொந்திபுலம், மாப்பாணவூரி, பழையகண்டி, புதுறோட்டு, வேம்படி, ஆலடி தங்கோடை, கோவளம், கருங்காலி, பலகாடு, வாரிவளவு, துறைமுகம், தோப்புக்காடு, பாலாவோடை, விளானை, திக்கரை, பொன்னாவளை, சத்திரந்தை, 12ஆம் கட்டையடி, ஊரி போன்ற பெரும் பிரிவுகளுடன் இன்னும் பல சிறு பிரிவுகளும் அமையப்பெற்றுள்ளன.

இங்கு வாழும் மக்கள் தமது படிப்பாற்றல் பணவசதி நாட்டு நிலைமைக்கேற்ப பல்வேறு தொழில்களைச் செய்து வருகின்றனர். ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், விவசாயிகள், மீனவர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள, கூலி வேலை செய்பவர்கள் என பல்துறையும் சார்ந்து தொழில் செய்வோரை இக்கிராமம் கொண்டுள்ளது. இவர்கள் தமக்குக் கிடைக்கும் வருமானம் மூலமாக தமது குடும்பத்தைக் காப்பாற்றுவதுடன் வயது முதிர்ந்த தமது பெற்றோரையும் காப்பாற்றி வருகின்றனர். எமது கிராமத்தில் தற்போது அமைந்துள்ள பன்னிரண்டு பாடசாலைகளில் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் (காரைநகர் இந்துக் கல்லூரி) யாழ்ற்ரன் கல்லூரி ஆகிய இரு பெரிய கல்லூரிகளும் 1AB தர பாடசாலையாகவும் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், வியாவில் சைவ வித்தியாலயம் ஆகிய இரண்டும் 1B தர பாடசாலைகளாகவும் ஏனைய பாடசாலைகள் 1C தர பாடசாலைகளாகவும் இயங்குகின்றன. தங்கோடை அ.மி.த.க. பாடசாலை யாழ்ற்ரன் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு யாழ்ற்ரன் கனிஷ்ட வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காரைநகரில் பனங்கூடல்களை விட வயல் நிலங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெரும்போகப் பயிராக நெல்லினை விதைக்கின்றனர். ஆவணி, புரட்டாதி மாதங்களில் பெய்யும் மழையை நம்பி வயலை உழுது பண்படுத்தி இயற்கைப் பசளையை இட்டு விதைக்கப்படும் நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று அல்லது மூன்றரை மாதங்களில் விளைச்சலைத் தரக்கூடியதாகும். போதிய நீர் வளம் இல்லாத காரணத்தால் சிறுபோகத்தில் நெல் விதைக்கப்படுவதில்லை. சிறுபோகப் பயிராக எள், குரக்கன், பயறு போன்ற தானியங்களை விதைத்துப் பயன் பெறுகின்றனர்.

மக்களின் இடப்பெயர்வினால் காரைநகரின் பெரும்பகுதி மக்கள் நடமாட்டமற்று வெறிச்சோடிக் காணப்படுகிறது. இதனால் மக்கள் தொகையில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது நிவர்த்திசெய்யப்படும் போது காரைநகர் மக்கள் வளம் உள்ள பிரதேசமாக மாறும்.

காரைநகரின் நன்நீர் வளத்தையும், கல்வி வளத்தையும், தொழில் வளத்தையும் உயர்த்த அப்பகுதியைச் சார்ந்த அரச அதிகாரிகளும், அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்"
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற வள்ளுவர் வாக்கு நோக்கற்பாலது. காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய அக்கறை காட்ட வேண்டும்.

"கற்க கசடறக் கற்றவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவர் வாக்கை மனதில் கொண்டு செயற்படவேண்டும். எமது கிராமம் முன்னர்போல மக்கள் செறிவுள்ள பிரதேசமாக மாறுவதுடன் எல்லாவகையான செல்வச் செழிப்புக்களும் மிளிர்ந்து விளங்க ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி பந்தவோடையில் பிறந்தவர். கணினித் துறையில் பணிபுரியும் இவர் Mani National Corporation என்னும் நிறுவனத்தின் ஊடாக 'MANI' Brand வானொலிகளைத் தயாரித்து வருபவர். ஊடகத்துறையிலும் ஆர்வமுள்ளவர். சமூக அக்கறை கொண்ட இவர் நண்பர்களுடன் இணைந்து நிர்வகிக்கப்படுகின்ற பிரணவம் என்ற அறக்கட்டளையினூடாக தாயகத்தில் கல்விக்கான உதவிகளைச் செய்து வருகின்றார்.

# தலைமுறைகளை தலைமுழுகும் ஓர் தானம்?

- சிவாணி -

அவசரங்களை அரவணைத்தவாறே ஆரம்பித்தது அந்தப் பனிக்காலை. பொழிந்தும் வெண்பனியில் பட்டுத் தெறித்த காலைப் பொழுதுடன் புணர்ந்து கொண்டிருக்க "பீப்பா" வண்டியுள் ஊர்ந்து சென்ற வேலையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது எரிபொருள் குடிக்கும் இயந்திர ஊர்தி.
உள்ளிருந்த வானொலிப் பெட்டி:

"அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்
அந்த நினைவுகள் நெஞ்சினில் திரும்பித் திரும்பி
ஏக்கங்கள்
அது ஒரு அழகிய நிலாக்காலம்
கனவினில் தினம் தினம் உலாப் போகும்
அது ஒரு அழகிய நிலாக்காலம்
கனவினில் தினம் தினம் உலாப் போகும்
நினைவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம்"

என்னும் பாட்டை இசையமைப்பாளர் பரத்வாஜின் குரலில் பாண்டவர் பூமி திரைப்படத்தில் இருந்து ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. குரலும் இசையும் வரியும் ஆழ மனங்களுக்குள் புதைந்து ஊரும் இந்த அகதி மனிதனின் கண்கள் வழியே கண்ணீரை வழியனுப்பி வைத்தது. சில வேளை நான் நெடுநாளாக பேச மறுக்கும் அல்லது மறந்து விட வேண்டும் என நினைக்கும் கேள்வியின் வேள்விக்கு திரிபடுத்தது. அந்தக் கேள்வி 'நான் என் தலைமுறையை தலைமுழுகிவிடப் போகிறேனா?

சுதந்திரத்தின் பின் இலங்கைத் தீவிற்குள் எத்தனையோ இனரீதியான துயரங்கள் வீசப்பட்டிருந்தாலும் எண்பதுகளின் ஆரம்பமே இலங்கை வாழ் தமிழர்களுக்கு அவலங்களின் முகவுரையுடனேயே ஆரம்பித்தது எனலாம். 1983ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் மூட்டப்பட்ட இனக்கலவரத்தின் பொருட்டு பல்லாயிரக்கணக்கான வட-கிழக்கு இளைஞர்களையும் யுவதிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு போராளிகளாக அனுப்பி வைத்தது. அதேபோல் பல்லாயிரக்கணக்கான வட-கிழக்கு இளைஞர்களையும் யுவதிகளையும் அகதிகளாக மேற்குலக நாடுகளுக்கும் அனுப்பி வைத்தது. பணத்தின் பட்டினியில் இருந்தவர்கள் மட்டும் இந்தியாவை தங்களது தஞ்ச மடமாக்கிக் கொண்டார்கள்.

பதின்ம வயதின் ஈரம் காயமுன்பே வான் ஏற்றுமதி மூலம் வந்த இடம் தான் இந்தப் புண்ணிய பூமி. தமிழோடு மட்டும் பயந்தினால் கனேடியப்படுத்தலின் ஆரம்பமாக ESL (English As a Second Language) முறை மூலம் ஆங்கிலம் செலுத்தப்பட்டது. ஆங்கில அறிவின் அளவு அதிகரிக்க அதிகரிக்க கனேடிய பாடசாலைகளின் கற்றல்முறைகளும் வேலை பெற்றுக்கொள்ளும் முறைகளும் இலகுவாக்கப்பட்டது. இளமையும் இதுவல்லவோ நாடு என வசதிவாய்ப்புக்களை கொண்டாடி மகிழ்ந்தது. இளையவர்களாக கூடி வாழ்ந்ததனால் செலவுகள் கூட மாதக்கடைசியில் கட்டப்படும். அதுவும் தலைக்கணக்கின் படி பிரிக்கப்படுவதால் செலவு சிறுபான்மையாகி சொர்க்க லோகம் சொற்பதூரத்தில் தான் இருக்குமோ என்று நினைக்க வைத்த நாட்களும் உண்டு.

எங்களின் காலம் அடுத்த தளத்திற்கு நகர்ந்த போது அடுக்குமாடிக் குடியிருப்புக்களின் சமூகவாழ்க்கையின் காட்சிகள் மாற்றம் பெறத்தொடங்கியது. மனம், வருமானம் விஸ்தீரணமான வாழ்வு என்ற நோக்கத்துடன் அதற்கு உகந்த பிரதேசத்திற்கு நாங்கள் நகரத் தொடங்கினோம். குட்டி யாழ்ப்பாணம் என மிடுக்குடன் எழுந்து நின்ற Wellesley and Parliament கூட தமிழர் பிரசன்னத்தை இழந்து கொண்டது. இது நாம் பிறந்த கிராமத்தை விட்டு பட்டின வாழ்வை நோக்கிப் புலம் பெயர்ந்தது போல் பொருளாதார பக்கத்தில் இங்கே நாம் இணைந்து கொண்டதால் Wellesley and Parliament இல் இருந்தும் இடப்பெயர்வு ஏற்பட்டது எனலாம். இதில் Scarboroughவும் அதற்கு கிழக்கு வடக்கான மாநகரசபைகளும் தமிழர்களை அதிகமாக தம்வசப் படுத்திக் கொண்டன.

காலம் தன் மாறுதலின் வேகத்தை அதிகரித்துக் கொண்டே இருந்தது. வருடங்கள் வருவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதுமாக பொழுதுகள் போகத்தொடங்கியது. வாழ்க்கை தாயகத்தின் யுத்தத்தின் காரணமாக உலகின் திசையிலும் புலம் பெயர் தேசத்தில் சக்கிரதிசையிலும் மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருந்தது. இங்கே படித்து முடித்தவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் பல நிலைப் பதவிகளிலும், மற்றவர்கள் பகுதரப்பட்ட வேலைகளிலும், ஏராளமானவர்கள் சொந்தமான தொழில் என்றும் தமிழர்கள் பொருளாதாரம், கல்வி, பண்பாடு என வளர்ச்சி பெற்றார்கள்.

கலைகள் பயிலகம், தமிழ் சினிமா கொட்டகைகள், தமிழ் அங்காடிகள், வானொலி-தொலைக்காட்சி நிலையங்கள், பத்திரிகைகள், ஆலயங்கள், கனேடிய அரசியலில் தமிழர்கள் என நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட வளர்ச்சி எமது சமூகத்தை மற்றைய இனங்களின் மத்தியில் பிரகாசிக்க வைத்தது. இந்த பரிணாம வளர்ச்சி தமிழர்களுக்கு இந்த மண்ணில் தமிழ்-கனேடியர்கள் என்ற அந்தஸ்தையும் வழங்கியுள்ளது. இதன் துணையுடன் தாயகத்தின் இறுதிப்போர் 2009ம் ஆண்டு முடிவடைந்த பின்னும் சர்வதேச புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து தமிழ்- கனேடியர்களான நாங்களும் எங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் தாயகத் தமிழர்களுக்காக தெரிவித்து வருவது இன்னும் எமது ஊரின் எண்ணங்களும் அபிலாசைகளும் எம்மோடு இணைந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.

எங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய சில மாற்றங்கள் நாங்கள் அகதியாகவே காலாவதியாகி விடுவோமோ என்ற அச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. அது அவ்வப்போது கேட்கும் "I don't want go to Tamil class", "எங்கடை பிள்ளைகள் எங்களை மாதிரி இல்லை அவையள் Canadians", "இந்த நாட்டில அவைக்கு தமிழ் கதைக்கத் தெரிஞ்சா காணும் தானே" அல்லது ஒரு சிறுபிள்ளை தமிழில் சரளமாக பேசிவிட்டால் அதை உலக அதிசயமாக கொண்டாடுவது போன்ற விடயங்களில் ஆரம்பித்து பலவகையில் மாற்றம் பெறும் நகர்வுகள் எங்களுக்கு என்ன வகையான எதிர்காலம் இருக்கப் போகிறது என்ற கேள்விகளை நெஞ்சில் வரிப்பூட்டிக் கொண்டே இருக்கிறது.

அகதிகளாக வந்தபோது அணைக்கிறேன் என்று கைகொடுத்த நாடு. பட்டப்படிப்பை முடித்துவிட்டு புள்ளிகளின் அடிப்படையில் குடிபெயர்பவர்களுக்கு தகுந்த வேலை கிடைக்கும் என கனவுகள் கொடுத்த நாடு கனடா. ஆனால் அது தனது பொருளாதார போராட்டத்திற்கு கனேடிய குடியுரிமை என்னும் சயனைட் குப்பி கட்டி எங்களை போராளிகளாக்கி விட்டுவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. கனேடிய பொருளாதாரத்தின் ஒரு பங்காளியாக நாங்களும், எதிர்கால கனேடியர்கள் என்ற எண்ணத்துடன் எங்கள் இளம் பருவத்திலிருந்தும் வாழ்க்கை பயணித்துக்கொண்டிருந்தாலும் இவை அனைத்தும் சாத்தியமான மாற்றம் தானா? இல்லை ஒரு பலமான பொருளாதாரத்தை உலகமட்டத்தில் தக்க வைத்திருக்கும் ஓர் நாடு தான் போட்டுவைத்திருக்கும் கணக்கில் எங்களை ஓர் இலக்காக பாவித்து விட்டு அழித்து விடப்போகிறதா? என்னும் கேள்வியும் பின்னலாய் தெறிக்கிறது.

உழைப்பின் வரிப்பணமும், குடியிருப்புகள் வணிக வளாகங்களின் வரிகள், போக்குவரத்துச் சாதனங்களின் தீர்வை, நுகர்வுகளும் செலவுகளும் என பலவகையில் கனேடிய பொருளாதாரத்துக்கு வட்டிக்காக பணம் கொடுத்த பின் சேகரித்த சொத்துக்கள் எங்களின் கனேடிய தலைமுறையிடம் கையளித்து விட்டு காலமாகிவிடப்போகிறோம் என்னும் பயமும் இல்லாமலில்லை. தொடரப்போகும் தலைமுறையினர் நிதானமாக தான் எந்த சந்ததியைச் சார்ந்தவன் தன் Family Name இற்கான பூர்வீகம் என்ன என்ற நிலைப்பாட்டுடன் முன்னேறுவார்களா? இல்லை எந்த முட்டு மோதல்கள் வந்தாலும் நானும் கனேடியன் என ஜெயிப்பார்களா? அல்லது எங்களுக்கு பல்கலாச்சார நாட்டில் வாழ்கின்றாய் என்னும் போதையைத் தந்த கனேடிய அமைப்பு முறையானது நீ கனேடியன் என்னும் மந்திரச் சொல்லை கொடுத்து அவர்களையும் தனது பொருளாதார வர்த்தகத்துக்கு ஓர் போதைப் பொருளாக பாவிக்கப் போகின்றார்களா? எங்களை பல்கலாச்சாரம் என்னும் புதைகுழியுள் பாசமாக பாவிப்பது போல் எங்கள் எதிர்கால சந்ததிகளை நீ கனேடியன் என ஆசையூட்டி அவர்களின் பல்லைப் பிடுங்கி விடப்போகிறதா? எங்களுக்கு மூடுதல் போட்ட பின்னர் அவர்களை தனது பொருளாதார systemத்தின் புதிய applicationஆக மாற்றிக் கொள்ளப் போகிறதா? தமிழ்-கனேடியனில் இருந்து நீ கனேடியன் என்பதுவும் ஒரு வகையில் விடுதலைப் போராட்டத்தில் பிள்ளைகளை காவு கொடுத்தவர்கள் போல் நாங்களும் கனேடிய பொருளாதார யுத்தத்தில் எமது அடுத்த தலைமுறையையும் தானமாகக் கொடுத்து விட்டு எல்லாக் கேள்விகளையும் தலைமுழுகி விட வேண்டியது தானா? ஒரு முறை இழந்தோம் சரி! ஒருமிக்க இழப்பது என்பது??? விடைகள் தேடி அலைந்த போது மனம் ஓலமிடத் தொடங்கியது.

மனதை சமரசம் செய்ய மூளை மீண்டும் "அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்" பாடலை அசை போடத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்த திருமதி கலாசக்தி றொபேஷன் யாழ்ற்ரன் கல்லூரியில் பயின்று யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இசைத்துறைக் கல்வியை மேற்கொண்டு 'நுண்கலைமாணி' பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவர். அத்துடன் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்றவர். வவுனியா தமிழ்ச் சங்கம், காரை கலாசார விழா உள்ளிட்ட பல அரங்குகளில் இசைக் கச்சேரியை நிகழ்த்திய இவர் தற்போது கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இசை ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். சயம்பு மலர், காரைநகர்ப் பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடான கலங்கரை ஆகிய சஞ்சிகைகளுக்கு ஆக்கங்களை எழுதியுள்ளார்.



# காரைநகரின் கலை வளர்ச்சியில் கிழவன்காடு கலா மன்றத்தின் பங்களிப்பு

**நுண்கலைமாணி திருமதி. கலாசக்தி றொபேஷன்** (B.F.A, P.G.D.E)

திருவும் கல்வியும் சீரும் தழைத்தோங்கும் புண்ணிய ஊராக விளங்குவது காரைநகர். இவ்வூரில் கலையானது அன்றும் இன்றும் என்றும் தழைத்தோங்கி வரும் என்று கூறுவதில் எதுவித ஐயமுமில்லை. இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழையும் வளர்த்து வருகின்ற காரைநகரிலே அகிலத்திற்கும் ஆடற்கலைக்கும் அரசனாக விளங்கும் நடராஜப் பெருமான் ஈழத்துச்சிதம்பரத்தில் அருளாட்சி செய்யும் இவ்வூரில் பிறந்த அனைவரும் பாக்கியசாலிகளே. அப்படிப்பட்ட இவ்வூரில் கலையை வளர்க்கும் நிறுவனங்களாக ஆலயங்கள், பாடசாலைகள், மன்றங்கள் திகழ்வது மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும். இந்த வகையில் கலை வளர்க்கும் மன்றங்களாக கிழவன்காடு கலாமன்றம், முத்தமிழ்ப் பேரவை மன்றம், களபூமிக் கலையகம், வெடியரசன் கலாமன்றம் போன்றன ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட மன்றங்களின் சேவைகள் பாராட்டப்படக் கூடியதாக உள்ள நிலையில் கிழவன்காடு கலாமன்றத்தின் பணிகள் அளவிட முடியாதவை. அந்தவகையில் கிழவன்காடு கலாமன்றத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

இம்மன்றமானது காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த திரு. நடராசா சோதிநாதன் என்பவரது சிந்தனையில் தோன்றி, காரைநகர் வாழ் மாணவர்கள் இசையுடன் பஜனை செய்து இறைவனை வழிபடவேண்டும் என்ற நோக்கிலும், கலைமீது கொண்டுள்ள ஆர்வத்தினாலும், அனுபவத்தினாலும், மாணவர்களின் திறன்களை வளர்த்துக் கொள்ளும் அர்ப்பணிப்புடனும் 2002 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 01ஆம் திகதி கிழவன்காடு என்னும் சூழலில் காரைநகரைச் சேர்ந்த நுண்கலைமாணி செல்வி. லீலாவதி என்பவரை முதல் ஆசிரியராகக் கொண்டு **"கலைவளம் பெருக்கி நிலை இன்பம் பெறுவோம்"** என்ற மகுட வாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்டதே கிழவன்காடு கலாமன்றம் ஆகும்.

பண்ணிசையில் பயிற்சி பெற்றுவந்த மாணவர்கள் இசையோடு பஜனையினை சிறப்பாக செய்வதனை அவதானித்ததன் ஊடாக அம்மாணவர்களின் திறமையினை வெளிப்படுத்தும் வகையில் முதன்முதலாக 2002 ஆம் ஆண்டு காரைநகர் மருதடிப் பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் பண்ணிசை வழங்கி பலரது பாராட்டுக்களைப் பெற்று ஊக்கப்படுத்தப்படுத்தப்பட்டார்கள். அத்துடன் காலப்போக்கில் கலைத் தேவையின் அடிப்படையிலும் மாணவர்களின் விருப்பத்தின் பேரிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசையுடன் அறநெறி, சங்கீதம், மிருதங்கம், நடனம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும், யோகாசனமும் தியானமும், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் செய்தல், போன்ற 12 பயிற்சி நெறிகளில் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு மிகவும் சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் எழுந்த சிந்தனையின் அடிப்படையில் காரைநகர் மாணவர்களது கலைகள் மீதான விழிப்புணர்வையும் போட்டித் தன்மையினையும் ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதே வேளை தற்பொழுது இம்மன்றத்தில் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் கலைகளைப் பயில்வதோடு 15 ஆசிரியர்களும் 02 பதிவாளர்களும் 01 கணினி இயக்குனரும் கடமையாற்றி வருகின்றனர்.

இம்மன்றத்தினை அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பதிவு செய்வதற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஸ்தாபகரினால் 2004 ஆம் ஆண்டு 1வது பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டு நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து வருடாவருடம் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் வருடாவருடம் கணக்கறிக்கை மற்றும் செயற்பாட்டறிக்கையினை வெளிப்படையாகவும் தெளிவாகவும் வெளியிட்டு வருவது ஏனைய பொது அமைப்புக்களுக்கு முன்மாதிரியான செயற்பாடாக அமைகின்றது.

இம்மன்றத்திற்காக காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த திரு. சண்முகம் சிவஞானம் அவர்கள் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக காணி கட்டிடங்களைப் புனரமைத்து அன்பளிப்பாக வழங்கியதோடு மனோன்மணி கலையரங்கினையும் அமைத்துத் தந்துள்ளார். அத்துடன் மன்றச் செயற்பாட்டிற்கென நிதிப்பங்களிப்பினையும் வழங்கியுள்ளார். மாதாந்த ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவின் ஒரு பகுதியினை தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் அவர்கள் தொடர்ச்சியாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கலாமன்றத்தின் மாணவர்கள் யாழ் மாவட்டத்தில் ஆலயங்கள், மற்றும் பொது அமைப்புக்களினால் நடாத்தப்படுகின்ற போட்டிகள் மற்றும் பரீட்சைகளில் விருப்போடு கலந்து கொண்டு தங்கப்பதக்கங்களையும் பெறுமதி வாய்ந்த பரிசில்களையும் பெற்று எம்முடைய மண்ணுக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். அத்துடன் பிரதேச செயலகம், திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களினால் நடாத்தப்படுகின்ற போட்டிகள், பரீட்சைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், ஆகியவற்றில் மட்டுமல்லாது தேசிய மட்டத்திலும் 1ஆம் இடத்தினைப் பெற்று எமது காரை மண்ணுக்கு மேலும் பெருமை சேர்த்து வருவது பாராட்டிற்குரியதாகும். அதேவேளை வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் மாணவர்களைத் தோற்றச் செய்து அதில் 1ஆம் தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

இம்மன்றத்தில் வருடாந்த பரிசளிப்புவிழா, கலைவிழா, ஸ்தாபகர் விழா, ஆறுமுக நாவலர் குருபூசை, திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு தெய்வீகக் கலையரங்கு, இந்தியக் கலைஞர்களின் கலைநிகழ்வு என்பன மிகவும் சிறப்பாகவும் மக்களுக்கு விழிப்பூட்டுவதாகவும் பலராலும் பாராட்டத்தக்க வகையிலும் அமைந்து வருவது சிறப்பம்சமாகும். அத்துடன் மாணவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டு காரைநகர்ப் பிரதேசம், யாழ் மாவட்டம் மற்றும் வெளியிடங்களில் உள்ள ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வெளிக் கலைவிழாக்களில் கலந்து கொள்ளச் செய்வதன் ஊடாக மாணவர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டு ஊக்கிவிக்கப்பட்டு வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு கலாமன்றத்தின் 1வது மிருதங்க அரங்கேற்றம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாமன்ற மிருதங்க ஆசிரியர் திரு. மா. சிதம்பரநாதன் அவர்களுக்கு **"லயஞானசுரபி"** என்ற கௌரவப் பட்டமும் இந்நிகழ்விற்கு வாய்ப்பாட்டு வழங்கிய யாழ் பல்கலைக்கழக இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் காரை பரமேஸ்வரி கணேசன் அவர்களுக்கு **"இராகசுரபி"** என்ற கௌரவப் பட்டமும் வழங்கி கௌரவித்ததோடு மிருதங்க அரங்கேற்ற மாணவனும் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கலாமன்றத்தின் வெளியீடாக இராகசுரபி காரை பரமேஸ்வரி கணேசன் அவர்களினால் பாடப்பட்ட **"சிதம்பர தரிசனம்"** என்னும் இறுவட்டு வெளியிடப்பட்டது.

இவை மட்டுமல்லாது மக்களைத் தாக்குகின்ற நோய்கள் பற்றிய விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதோடு, ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவத் தேர்த்திருவிழா காலத்தில் மன்றத்தினால் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு தாகசாந்தி வழங்கி அடியவர்கள் வழிபாட்டினை மேற்கொள்ள வழி சமைக்கின்றது.

இம்மன்றத்தின் ஸ்தாபகரான திரு. நடராசா சோதிநாதன் அவர்களின் கலைச்சேவையினைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக காரைநகர்ப் பிரதேச செயலக கலாசார விழாவில் **"கலைச்சுடர்"** என்ற கௌரவப் பட்டமும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்வில் **"சாமஸ்ரீ தேசகீர்த்தி"** என்ற கௌரவப் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

இவ்வகையில் மன்றத்தின் கலைப்பணியானது மேன்மேலும் வளரும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**"வாழ்க மன்றம் வளர்க அதன் கலைப்பணி."**

குறிப்பு :- குறுகிய காலத்தினுள் ஆக்கத்தினை நிறைவு செய்ய வேண்டிய காரணத்தினால் காரைநகரின் ஏனைய மன்றங்களினது கலைப்பணிகள் இவ் ஆக்கத்தினுள் இடம்பெறவில்லை. எதிர் காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் அனைத்து மன்றங்களினதும் பணிகள் பற்றிய ஆக்கத்தினை எழுதுவேன் என கூறுகின்றேன்.

உசாத்துணை:

1. நேர்காணல்
2. மன்ற அறிக்கைகள் (2002 – 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘காரை வசந்தம்’ தரும் சுகந்தம்

-கனக. சிவகுமாரன்-

அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் கடல்சூழ் நன்நகரான காரைநகரானது எந்தக் கிராமத்திற்கும் இல்லாத சிறப்புக்களைக் கொண்டு விளங்குகிறது. உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற எமது கிராமத்தின் பாரிய இடப்பெயர்வானது ஊரின் அனைத்து வளங்களையும் பாதித்தது. ஊரின் வனப்பும் பொலிவிழந்து போனது.

எனினும் பிறந்த மண்மீது ஆழமான பற்றினைக் கொண்டுள்ள புலம்பெயர்ந்த காரைநகர் மக்களது உணர்வுமிக்க தொடர் செயற்பாடுகளினால் கிராமம் துரிதகதியில் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு அதன் புகழும் பெருமையும் என்றுமில்லாதவாறு சர்வதேசமெங்கும் பறைசாற்றப்பட்டு இத்துணை சிறப்பு மிக்க கிராமமா காரைநகர்? என பலரும் வியக்கும் வண்ணம் சிறப்புற்றிருக்கின்றது. இவ்வூரில் நாம் பிறந்தோம் என்ற உணர்வும் உரிமையும் எம்மைப் பேருவகை கொள்ளவைக்கின்றது.

புலம்பெயர் காரை அமைப்புக்களினதும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வதியும் ஊர்ப்பற்றும் சமூக உணர்வும் மிக்க தனவந்தர்களினதும் உதவிகள் ஊருக்குக் கிடைக்கின்றன. இவ்வுதவிகளால் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முனைப்பான பணிகள் முன்பிருந்ததைக் காட்டிலும் வளமும் வனப்பும் மிக்க முன்னுதாரணமான கிராமமாக மாறி வருவதைக் கட்டியம் கூறுவதாகவுள்ளன.
மலேசியா நாட்டிற்கு வேலைவாய்ப்பின் நிமித்தம் புலம்பெயர்ந்து சென்ற காரைநகர் மக்கள் 1919ஆம் ஆண்டு Karai Union Of Malaya என்ற அமைப்பினை நிறுவி காரையின் மேம்பாட்டிற்கு உதவினார்கள். தொண்ணூற்றாறு ஆண்டுகளிற்கு முன்பாகவே புலம்பெயர்ந்தோராக வாழ்ந்து தாம் பிறந்த ஊருக்கு உதவி முன்னுதாரணமாகத் திகழ்ந்தோர் காரைநகர் மக்களாகவே இருக்கமுடியும் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். தற்போது புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொருவருக்கும் தம்மண்ணை மறவாது அதற்கு உதவவேண்டும் என்கின்ற வரலாற்றுக் கடமை உண்டு என்பதையும் இச்செய்தி உணர்த்துகின்றது.

அக்காலகட்டத்தில் காரைநகர் இருந்த நிலைமை வேறு தற்போது இருக்கின்ற நிலைமை வேறு. இடர்மிகுந்த காலகட்டத்தில் நிம்மதியிழந்து நம்பிக்கையற்ற அவலவாழ்வு வாழ்ந்து பலவற்றையும் இழந்துவிட்ட உறவுகளிற்கு அவர்களின் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கான மனோ பலத்தினை புலம்பெயர்ந்த அமைப்புக்களும் ஊர்ப் பற்றாளர்களும் வழங்கி வருகின்ற உதவிகளும் ஊக்கிவிப்புக்களும் ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் சேவையுள்ளம் கொண்ட பெரியோர்களினால் ஈழத்துச் சிதம்பர திருத்தொண்டர் சங்கம் என்ற பெயரில் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு 1992ஆம் ஆண்டு கனடா-காரை கலாசார மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தாயக உறவுகளுக்கு உதவும் சேவையில் முழுமனதோடு ஈடுபட்ட இவ்வமைப்பு, தன் பணியில் 25ஆண்டுகளைக் கடந்து 26வது ஆண்டில் தடம் பதிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகரில் வாழும் உறவுகளிற்கு உதவுவதுடன் மட்டுமல்லாது கனடாவில் வாழும் காரை மக்களுக்கிடையேயான உறவினைப் பேணி அவர்கள் மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. எமது கிராமத்திற்கே உரித்தான தனித்துவம் மிக்க கலை கலாசார சமய பண்பாட்டு அடையாளங்களையும் பாரம்பரியங்களையும் பேணி எமது அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்லக்கூடியவாறான பணிகளையும் செய்து வருகின்றது. கடந்த 25 ஆண்டுகளாக கனடா-காரை கலாசார மன்றம் முன்னெடுத்து வரும் அளப்பரிய பணிகள் அனைவராலும் விதந்து பாராட்டப்படக்கூடியதாகும்.

மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வருடாந்த நிகழ்வு செயற் திட்டங்களுள் **'காரை வசந்தம்'** என்கின்ற சிறப்பு மிக்க பெரும் கலைவிழா முதன்மை பெற்று விளங்குகின்றது. காரைநகர் மக்களின் கலை ஈடுபாடும் பங்களிப்பும் அக்கிராமத்திற்கு பெரும் புகழ் சேர்ப்பனவாகவுள்ளன. கலைத்துறையில் காரை மக்கள் ஆற்றிய, ஆற்றிவருகின்ற சாதனைகள் வரலாற்றுப் பதிவாகி வருகின்றன. காரைநகர் மக்கள் தமிழ்க் கலை உலகிலே பதித்த, பதித்து வருகின்ற தடங்கள் அவர்களின கலை ஆற்றலிற்கும் கலை உணர்விற்கும் சான்று பகர்வனவாக அமைந்துள்ளன. அந்த வரிசையில் கனடா-காரை கலாசார மன்றத்தினால் 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று 16வது ஆண்டில் பாதம் பதிக்கின்ற 'காரை வசந்தம்' என்கின்ற பெரும் கலைவிழா றொறன்ரோவில் ஊர்களின் பெயரால் நடாத்தப்பட்டு வருகின்ற நூற்றுக்கணக்கான கலைவிழாக்களுள் பிரபல்யம் மிக்க தலைசிறந்த ஒன்றாக மிளிர்வடைந்துள்ளது.

வளர்ந்து வருகின்ற காரையின் இளம் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களது திறமைகளை வளர்ப்பதற்குக் காரை வசந்த அரங்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பல திறமை மிக்க கலைஞர்களை அறிமுகம் செய்து அவர்களிற்கும் அவர்களது படைப்புக்களிற்கும் மதிப்பளிக்கின்ற அரங்காகவும் அமைந்து விளங்குகின்றது. றொறன்ரோவில் பல நவீன வசதிகளுடன் அமைந்த முதற்தர கலாசார மண்டபத்தில் பெரும் பொருட்செலவில் நடத்தப்பட்டு வருகின்ற இப்பெருவிழாவைக் கண்டு களிப்பதற்கு ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்து வருகின்ற காரைநகர் மக்களால் மண்டபம் நிரம்பி வழிவது விழாவின் உன்னதத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. கலை வாசனையுடன் காரை மண்ணின் வாசனையும் பரப்பி வருகின்ற இவ்விழா காரைநகர் மக்களிற்கும் கலா ரசிகர்களிற்கும் மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். ஊர் உணர்வோடும் கலை உணர்வோடும் காரை மக்கள் சங்கமித்து வருகின்ற இவ்விழா அவர்களை காரை மண் பற்றி சிந்திப்பதற்கு தூண்டுவதாகவும் கனடா-காரை கலாசார மன்றத்தின் நிதி வளத்தினை ஏற்படுத்துகின்ற உறுதியான ஊற்றாகவும் அமைந்து விளங்குகின்றது.

இவ்விழா ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் காரைச் சிறுவர்கள் மத்தியில் தமிழ்மொழித் திறன், மற்றும் பண்ணிசைப் போட்டிகளை நடத்தி வெற்றிபெற்றவர்களிற்கும் பங்குபற்றியவர்களிற்கும் இவ்வரங்கில் பரிசளித்து வருகின்றமையும் பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெறும் சிறுவர்கள் இவ்வரங்கில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கின்ற முறைமையும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றமை சிறுவர்கள் மத்தியில் தமிழ்மொழி ஆர்வம் ஏற்படவும், சமய ஒழுக்கம் மேம்படவும் வழி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாகக் கனடாவில் வாழும் எமது பிள்ளைகள் எமது மொழி, கலாசாரம், பாரம்பரியம் பற்றி எதுவும் அறியாமலே கனடா நாட்டுக் கலாசார நீரோட்டத்தில் கலந்துகொள்வது தவிர்க்க முடியாதது போல் தோன்றினாலும் எமது கலாசாரத்தையும் மொழியையும் தக்கவைக்கும் முயற்சியில் 'காரை வசந்தம்' கலைவிழா ஆற்றிவரும் பங்களிப்பு குறிப்பிடக்கூடியதாகும்.

கனடாவின் நான்கு பருவ காலங்களுள் ஒன்றான இலைதளிர் காலமே வசந்த காலம் எனப்படுகின்றது. கடும் குளிர்காலம் முடிவடைந்து மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் நிலவுவதே வசந்தமாகும். இந்தப் பருவ வசந்தமும் எமது ஊரும் இணைந்து அனைவரையும் வசீகரிக்கின்ற அழகிய பெயராக மலர்ந்த 'காரை வசந்தம்' கலை விழாவினை வசந்த காலத்தில் கொண்டாடுவதே பொருத்தமானதாக அமையும் என்பதுடன் அதனை ஏன் குளிர்காலத்தில் கொண்டாட வேண்டும்? என்கின்ற கேள்வி முன்வைக்கப்படுவதும் உண்டு. உண்மையில் வசந்தம் என்கின்ற பருவத்தைக் கொண்டாடாது அதன் பண்புக் கூறுகளாக விளங்கும் பொலிவு, உற்சாகம், மகிழ்ச்சி, பூரிப்பு, குதூகலம் ஆகியனவே முதன்மைப்படுத்தப்படுகின்றன. வசந்த காலத்தில் பெறுகின்ற சுக அனுபவத்தினைக் குளிர்காலத்தில் கொண்டாடப்படுகின்ற 'காரை வசந்தம்' மூலம் காரை மக்கள் பெற்று இன்புறுகின்றனர் என்றால் அது மிகையாகாது.

கனடாவின் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்கள் அனைத்தினாலும் தரம் மிக்க சிறந்த கலை விழா எனப் பதிவுசெய்யப்பட்ட 'காரை வசந்தம்' குறித்து கனடாவின் முன்னணி வாராந்தப் பத்திரிகையான 'கனடா உதயன்' 'கடும் குளிரை விரட்டியடித்த காரை வசந்தம்' எனத் தலைப்பிட்டு ஒரு முறை விமர்சனம் வெளியிட்டிருந்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

இவ்விழாவின் சிறப்பு அம்சமாக 'காரை வசந்தம்' என்ற சஞ்சிகை ஒன்றும் வரலாற்று ஆவணமாக விழா ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை வெளியிடப்பட்டு வருகின்றது. தொன்மை மிக்க காரைநகரின் வரலாற்றுப் பெருமைகள் கலை, கலாசாரம், கல்வி, சமயம், பண்பாட்டுப் பாரம்பரியங்கள் என்பனவற்றை வெளிப்படுத்தும் வகையில் காரைநகர் சார்ந்த விடயங்களை முதன்மைப்படுத்திய ஆக்கங்களையும் காலவோட்டத்திற்கு ஏற்ப சமூகத்திற்கு பயனளிக்கக் கூடியதான பல்துறை சார்ந்த ஆக்கங்களையும் தாங்கிய சிறந்த வரலாற்று ஆவணமாகவும் தமிழ் வாசனையையும், காரை மண்ணின் வாசனையையும் நுகருவதாகவும் இக் 'காரை வசந்தம்' சஞ்சிகை அமைந்துள்ளது. படைப்பாளிகளின் படைப்பாற்றலை ஊக்கிவித்து மேம்படுத்துகின்ற களமாகவும் இச்சஞ்சிகை அமையப்பெற்றுள்ளது. அத்துடன் காரைநகர் சார்ந்த சமய சமூக கல்வி கலாசார அமைப்புக்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள், ஊர்ச்சான்றோர்கள் வழங்கி வருகின்ற வாழ்த்துச் செய்திகள் எழுச்சியை ஏற்படுத்தி வலுச்சேர்ப்பனவாகவுள்ளன. மன்றப் பணிகளிற்கு உதவிடவேண்டும் என்ற நல்நோக்குடன் விளம்பரங்களை வழங்கி வரும் வர்த்தகத்துறை சார்ந்தோர் இச்சஞ்சிகையின் தொடர்ச்சியான வெளியீட்டில் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இங்குள்ள காரைச் சிறார்கள் உள்ளிட்ட அனைத்து காரைநகர் மக்கள் நெஞ்சங்களிலும் நிலைத்து அவர்கள் உச்சரிக்கின்ற ஒரு சொல்லாக 'காரை வசந்தம்' என்ற நாமம் உள்ளது. காரைநகர் மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளும் இவ்விழாவில் வசீகரிக்கின்ற சிறந்த கலை நிகழ்வுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்டு களிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் வெளியிடத்தைச் சேர்ந்த பலரும் கலையுணர்வுடன் கலந்துகொண்டு வருகின்றனர்.

காரைநகர் மக்களின் அடையாளம் 'காரை வசந்தம்' என்று கூறுமளவிற்கு இச்சொல் அனைவர் நெஞ்சங்களிலும் வியாபித்து நிற்கின்றது. அவ்வப்போது அமையப்பெற்று வருகின்ற நிர்வாகங்களின் செயற்திறனும் அர்ப்பணிப்பும் மிக்க உழைப்பு, கலைஞர்களின் உற்சாகமான பங்களிப்பு, அனுசரணையாளர்கள் விளம்பரதாரர்கள் ஆகியோரின் பேருதவி காரைநகர் மக்கள் மற்றும் கலாரசிகர்களின் அமோக ஆதரவு என்பவற்றின் இணைந்த செயற்பாட்டின் விளைவே காரை வசந்தத்தின் வெற்றியின் இரகசியமாகும்.

காரை வசந்தத்தின் சிறப்பிற்கும் பொலிவிற்கும் நிறைவான பல அம்சங்கள் இருந்தாலும் ஒரு சில குறைபாடுகளும் இருக்கவே செய்கின்றன. விளம்பரப்படுத்தப்பட்ட நேரத்திற்குப் பதிலாக சில மணித்துளிகள் தாமதித்த நிகழ்ச்சிகளின் ஆரம்பமும் இதன் காரணமாகப் பின்தள்ளப்பட்டு இடம்பெறும் இறுதி நிகழ்சியின்போது ரசிகர்கள் மண்டபத்திலிருந்தது கலைந்து செல்லுதலும் அவ்வப்போது நிகழும் குறைபாடுகளாகும். ஒரு சில சந்தர்ப்பங்களில் நேரப் பற்றாக்குறை காரணமாக இறுதி நிகழ்வு இடம்பெறாமல் போனதால் படைப்புக்களைத் தயார் செய்து வந்த கலைஞர்கள் ஏமாற்றமடைந்தமை துரதிஷ்டவசமானதாகும். இவற்றினை நீக்கி வைப்பதில் ஏற்பாட்டாளர்களுடன் ரசிகர்களும் ஒத்துழைக்கவேண்டியதன் அவசியத்தை புரிந்துகொண்டு செயற்பட்டால் கரையிலா 'காரை வசந்தத்தின்' தரம் மேலும் மேன்மையுற்று கரை புரண்டோடும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

*&*

*Best Wishes*



**லிங்கராஜன் நாகலிங்கம்**

**பலகாடு, காரைநகர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments & Best Wishes



Dr. Sivadevi Balasingam

MBBS, LRCP MRCP (UK), DCH (UK), MCFP (Canada)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா–காரை கலாச்சார மன்றத்தின் இதம் கனிந்த நன்றிக்குரியவர்கள்!

16வது காரை வசந்தம் கலை விழாவினை கண்டு களிக்க வருகை தந்துள்ள கனடா வாழ் காரைநகர் மக்கள் கலா ரசிகர்கள்

இவ்விழாவின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவிற்கு சிறப்புச் சேர்த்து காரைநகர் மக்களைப் பெருமைப்படுத்திய மருத்துவகலாநிதி திருமதி. சிவதேவி பாலசிங்கம்

இன்றைய விழாவினை மங்கள விளக்கேற்றி மங்களகரமாக ஆரம்பித்து வைத்த பெருமக்கள்
கலை நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தயாரித்து வழங்கிய கலைஞர்கள், இந்நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட கலைஞர்கள், கலை மாணவர்கள், காரைச் சிறார்கள்

விழாவிற்கான அனுசரணையை வழங்கி உதவிய கலை உணர்வும் ஊர்ப்பற்றும் மிக்கவர்களான குழந்தைவைத்திய நிபுணர் மருத்துவ கலாநிதி வி.விஜயரத்தினம் பிரபல Olimpic Wood Work Inc. நிறுவனத்தின் அதிபர் கரன், பிரபல வீடியோ படப் பிடிப்பு நிறுவனம் KK Electronics அதிபர் பொன்னம்பலம் குழந்தைவேலு பிரபல பூஜைப் பொருட்களின் களஞ்சியம் அர்ச்சனாஸ் & கோ அதிபர் P.S.சுதாகரன், Double Seal Insulating அதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம், பல் வைத்தியநிபுணர் ஆதிகணபதி சோமசுந்தரம், பிரபல வீடு விற்பனை முகவர் ராஜ் நடராசா, பிரபல வீடு விற்பனை முகவர் ரவி ரவீந்திரன்

தமிழ்மொழித் திறன் பண்ணிசை ஆகிய போட்டிகளிற்கு நடுவர்களாகப் பணியாற்றிய பெரியோர்கள்

விழா நிகழ்ச்சிகளை அமைத்து ஒழுங்கமைப்பதற்கு சிறப்பாகப் பணியாற்றிய விழா அமைப்புக் குழுவின் இணைப்பாளர் கலைஞர் P.S.சுதாகரன்

விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி அதற்கு அழகு சேர்த்த அறிவிப்பாளர்களான பல் கலாசார வானொலியின் செய்தி வாசிப்பாளர் திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் கனடிய தமிழ் வானொலியின் அறிவிப்பாளர் திரு.T.S.கோகுலன்

இவ்விழாவின் வெற்றிக்கு அயராது உழைத்த மன்ற உறுப்பினர்கள் தொண்டர்கள் நலன் விரும்பிகள் மற்றும் பல்லாற்றாலும் உதவி ஆதரவளித்த நல்லுள்ளங்கள்

இவர்கள் அனைவர்களது ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் கனடா- காரை கலாச்சார மன்றம் பாராட்டி நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best wishes*

*from*

# Dr. V. Vijayaratnam, M.D.

FRCP, M.R.C.P.(UK), D.C.H.(Lond.), D.C.C.H.(Edin.)
Pediatrics, Gastroenterology and Nutrition

**Two Locations to serve you**

**Downtown**

600 Sherbourne Street, Suite 711
Toronto, Ontario M4X 1W4
Telephone: 416-929-0929

**Scarborough**

3430 Finch Avenue East
Scarborough, ON, M1W 2R5
Telephone: 416-496-1990

brightsun print 416-845-6565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org